

கல்கி
KALKI 31-8-1958
30 நயா பைசா


Breeze
ப்ரீஸ்
மேனியின் அழகையும் ஆரோக்கியத்தையும் ஓங்கச்செய்யும் சாதனம்!
ஆரோக்கியத்துடன் மிளிரும் மேனியே பெண்மை யழகின் இலட்சணம். மணங்கமழும் ப்ரீஸ் சோப்பில் ஆக்டமர் அடங்கியுள்ளது; சருமக் களங்கங்களுக்குக் காரணமான கிருமிகளிடமிருந்து உங்கள் சருமத்தை விடுவிக்கும் பொருளே ஆக்டமர். மேனி யழகின் பராமரிப்பையும், புதுமலர்ச்சி யையும் விரும்புவோர் தேர்ந்தெடுக்கும் சோப் ப்ரீஸ்தான்.
Breeze
ப்ரீஸ் டாய்லெட் சோப்
சரும நலனுக்கான ஆக்டமர்
கலந்துள்ள சோப்
BZ. 8-50 TM

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.




பஞ்சாலை நுட்பக் கலையின் உயர்படிப்புக்காக இங்கிலாந்து சென்று, லங்காஷயரில் உள்ள ஓல்ட்ஹாம் நுட்பக் கலை கல்லூரியில் படிப்பை முடித்துக் கொண்டு, ஸ்ரீ வி. சுப்பிரமணியமும், ஸ்ரீ எஸ். ராஜேந்திரனும் தாயகம் திரும்பினர்.

ஸ்ரீ வி. சுப்பிரமணியம், காலம்சென்ற ஸ்ரீ என். வீராசாமி செட்டியாரின் குமாரர். ஸ்ரீ எஸ். ராஜேந்திரன், கோபால்ட் மோட்டார் சர்வீஸ் (பிரைவேட்) லிமிடெட், கோபால்ட் டெக்ஸ்டைல் (பிரைவேட்) லிமிடெட், B. M. S. (பிரைவேட்) லிட். மற்றும் கோவை ஜில்லாவில் உள்ள கோபால்ட் தியேட்டர்ஸ் இவைகளின் மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ என். ஷண்முகம் செட்டியாரின் குமாரர்.


தண்ணீர் சப்ளை விஷயமாக உங்கள் தேவை எதுவானாலும் சரி,

அதற்கென்றே டெமிங் பம்புகள் உள்ளன.




டெமிங் மார்வெல்
வீடுகளுக்கு





டெமிங் ஆயில்ரைட்
தொழிற்சாலைகளுக்கு



டெமிங் டுப்ளே
கிராம தண்ணீர் சப்ளைக்கு





வீடு, தொழிற்சாலை, ஹோட்டல், ஆஸ்பத்திரி அல்லது கிராம தண்ணீர் தேவைகளுக்கு நம்பகரமான உழைப்புடன் நயமான விலையில் பம்பு செட்டுகள் உள்ளன.

- கைவசம் உள்ள ஸ்டாக்கிலிருந்தும், வந்துகொண்டிருக்கும் ஸ்டாக்கிலிருந்தும் எந்த மாடல்களையும் விரைவில் சப்ளை செய்யமுடியும்.
- ஸ்பேர் சாமான்களுக்கு நீங்கள் கவலைப்படவேண்டியதே இல்லை. அவை எப்பொழுதும் கிடைக்கும்.
- எங்கள் பொறுப்பு, சப்ளை செய்த பம்புகளை பொருத்துவதுடன் நின்றுவிடுவதில்லை. உள்ளூரானாலும் சரி, வெளியூரானாலும் சரி, பம்புகளை அவ்வப்போது சரிபார்த்து ஓடச்செய்வதும் எங்கள் பொறுப்பே. இதற்குவேண்டிய எல்லா வசதிகளும் எங்களிடம் உண்டு.
- ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்து நேரில் எல்லா பம்பு செட்டுகளையும் பார்க்கவும். டெமிங் பம்புகளைப்பற்றிய ஆலோசனை எப்பொழுதும் எங்களிடம் எளிதில் கிடைக்கும்.

தண்ணீர் சப்ளை விஷயங்களை சுலபமாக தீர்த்துவைக்கக்கூடிய நிபுணர்கள்

EEC **ஈஸன் என்ஜினியரிங் கம்பெனி லிமிடெட்.**

5-7 செகண்ட் லைன் பீச், மதறாஸ்.

பயனீர் சைக்கிள் ஹவுஸ்

மேலக் கோபுர வீதி, மதுரை



மலர் 18 | இதழ் 5

தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

விளம்பி௵ ஆவணி 15உ.

நிபந்தனைகள் எதற்கு?

அமெரிக்காவும் பிரிட்டனும் சோதனை வெடிகளை நிறுத்தப் போவதாக அறிவித்திருக்கின்றன.

எந்தக் காரியத்தையும் காலத்தில் செய்ய வேண்டும். காலம் கடந்து தாமதப் பட்டுச் செய்யும் நல்ல காரியத்துக்கு வேகமில்லை. அமெரிக்கா எடுத்துள்ள இந்த முடிவுக்கு எவ்வளவோ பாராட்டுதல்களும், மகிழ்ச்சியும் உலகத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். அவ்வளவும் ஏற்படாததற்குக் காரணம் தயங்கித் தயங்கித் தாமதித்தது தான். எனினும் இப்பொழுதாகிலும் செய்ய வேண்டியதைச் செய்ய முன்வந்தது நமக்குத் திருப்தி யளிக்கிறது.

சோதனைகளைப் பிடிவாதமாக நிறுத்தாமல் போயிருந்தால் உலகத்துக்கு எவ்வளவு ஹானி ஏற்பட்டிருக்கும்! அதை நினைத்துக் காலந் தாழ்ந்தாகிலும் இம் முடிவு செய்ததற்கு நாம் அமெரிக்காவைப் பாராட்டுகிறோம்.

அமெரிக்கா போட்டிருக்கும் நிபந்தனைகள் நமக்கு வேடிக்கையாக இருக்கின்றன. அந்த நிபந்தனைகள் எதற்கு என்று புரியவில்லை.

ருஷ்யா, ஒருதலைபட்சமாகத் தன் சோதனைகளை நிறுத்திற்று. அதை அறிவித்த பின்னர் அமெரிக்கா பல ஜலஜ குண்டுகளை வெடித்துச் சோதனைகள் நிகழ்த்தியிருக்கிறது. அதைக் கண்டு எரிச்சல் அடையாமல், ருஷ்யா தான் செய்த முடிவிலிருந்து இதுவரை வழுவாமல் இருந்து வந்திருக்கிறது. இதை உணர்ந்து, அமெரிக்காவும் தன் சோதனைகளை எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக நிறுத்துவதை விட்டு, நிபந்தனைகள் போட்டது அர்த்தமற்ற செய்கையாகும்.

அமெரிக்கத் தலைவரும் ருஷ்யத் தலைவரும் கூடிப் பேச விஷயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றைப் பற்றிப் பேசுவது சோதனை நிறுத்த விஷயத்துக்கு ஒன்றும் சம்பந்தமில்லை. அணுசோதனைகளை நிறுத்தினாலே போதும் என்று உலகம் சொல்லி வந்தது! உலகத்தின் அந்தக் கூக்குரலுக்கு ருஷ்யா செவிசாய்த்துச் சோதனைகளை நிறுத்தியதிலிருந்து, அமெரிக்காவும் ருஷ்யாவைப் பின்பற்றும் என்று நாம் எதிர் பார்த்தோம். அது இன்று நிகழ்ந்து விட்டது! ஆனால் இப்பொழுது உலகம் வேண்டுவது இது மட்டுமல்ல. இனி யுத்தம் மூண்டாலும், 'ஜலஜ குண்டுகள் உபயோகப்படுத்தப்பட மாட்டா' என்ற முடிவுக்கு அணு ஆயுத வல்லரசுகளின் மூன்று தலைவர்களும் வரவேண்டும். இதுதான் உலகத்தைப் பேரபாயத்திலிருந்து மீட்கும். கைவசமுள்ள எல்லா ஜலஜ குண்டுகளையும் பிரித்து அழித்து எங்கேயாகிலும் போட்டுவிட்டு, அணு ஆயுத உற்பத்தி சாலைகளையும் மூடிவிட வேண்டும். இனி எக்காரணம் கொண்டும் ஜலஜ குண்டுகள் உற்பத்தி செய்யப்படமாட்டாது என்று வல்லரசுகள் அறிவித்தால் உலகம் மகிழ்ச்சியடையும்.

ருஷ்யா மேற்கண்ட முடிவுக்கு ஏற்கனவே ஒப்புக்கொண்டிருக்கிறது. ஜலஜ குண்டுகளைப் பரிபூரணமாக ஒழித்துக் கட்டத் தயாராக இருப்பதாகப் பல முறை சொல்லி விட்டது. அமெரிக்கா இனியும் காலந் தாழ்த்தாமல் ருஷ்யாவுடன் விஷகுண்டு பகிஷ்கரிப்புக்கு ஓர் உடன்படிக்கை செய்துகொண்டால் உலகம் மனமாரப் பாராட்டும்!

முதன் மந்திரியின் நல்லுபதேசம்

"சாதி இரண்டொழிய வேறில்லை" என்றாள் அவ்வை. "சாதிகள் இல்லையடி பாப்பா!" என்று பாடினார் பாரதி.

சுயராஜ்யம் வந்தவுடன் காங்கிரஸ் ஆட்சியில் சாதி வித்தியாசங்கள் ஒழியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலோ காங்கிரஸ் ஆட்சியில் சாதி வித்தியாசங்கள் தலைவிரித்து ஆடுகின்றன. தேர்தல் சமயத்தில் இந்தச் சாதி அந்தச் சாதி என்று சாதியை விற்றுத்தான் டிக்கட்டுகள் வாங்கப்படுகின்றன. செட்டியார்கள் அதிகமிருக்கும் தொகுதியில் செட்டியாருக்கும், முதலியார்கள் பெருவாரியாக இருக்கும் தொகுதியில் முதலியாருக்கும், நாடார்கள் செல்வாக்குப் பெற்றிருக்கும் தொகுதியில் நாடாருக்கும் காங்கிரஸ் 'டிக்கெட்' வழங்கப்பட்டது. முன்பெல்லாம் சாதிகளைப் பற்றி வெளியில் சொல்லிக் கொள்ளக் கூச்சப்பட்டவர்களெல்லாம் பகிரங்கமாகத் தங்கள் தங்கள் சாதிகளை வெளியிட்டு வோட்டுக்கள் தேடும் காலமாகச் செய்து விட்டார்கள்! இப்படிச் சாதியின் பெயரால் தேர்தல்கள் நடத்தியும் சலுகைகள் அளித்தும் வந்தால் சாதி எப்படி ஒழியும்?

பிற்போக்குச் சாதியினர் என்று சில சலுகைகள் கொடுத்தவுடன் பல சாதிகள் பிற்போக்குப் பதவிக்குப் போட்டியிட்டு வருகின்றன. பிற்போக்குச் சாதிகளின் எண்ணிக்கை வரம்பு கடந்து போனதினால் மிகப் பிற்போக்கு என்று ஒரு புதிய வகுப்பைச் சர்க்கார் உண்டாக்கினர். அதற்கும் நம்மவர்கள் போட்டியிடுகிறார்கள்.

முன்பெல்லாம், ஒவ்வொரு தாழ்ந்த சாதியானும், தான் உயர்ந்த சாதிக்காரன் என்று சொல்லிக் கொள்ளவும், நடை உடை பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளவும் முயன்று வந்தான். சௌராஷ்டிரர்களும், வன்னிய குலத்தவர்களும் தங்கள் பழக்க வழக்கங்களைச் சீர்திருத்திக் கொண்டு வந்தார்கள்.

இன்றையக் காங்கிரஸ் ஆட்சியில் ஒவ்வொருவரும், தாங்கள் தாழ்ந்த சாதி, அதி தாழ்ந்த சாதி என்று சொல்லிக் கொள்வதில் போட்டி போடும் பரிதாபத்தைப் பார்க்கிறோம்.

சாதிகள் ஒழிய வேண்டியதுதான். ஆனால் சாதிகள் இருக்கும் வரையில் வெறுப்பும் துவேஷமும் இன்றி, பொறுக்க வேண்டியது அனைவருடைய கடமையுமாகும்.

"சாதிகள் பல இருப்பது பற்றிக் கவலைப் பட வேண்டியதில்லை. இவற்றை யெல்லாம் சகிக்கும் தன்மைதான் வேண்டும்" என்று முதன் மந்திரி சமீபத்தில் உபதேசித்ததைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

ஜில்லாப் பிரிவினை

சில விஷயங்களைப் பற்றி நமது கருத்துக்களைத் தெரிவிக்காமல் இருக்கலாம் என்றாலும் நேயர்கள் விடுவதில்லை.

"நமது மாகாண சர்க்கார் இரண்டு ஜில்லாக்கள் தவிர மற்ற எல்லா ஜில்லாக்களையும் இரண்டு இரண்டாகப் பிரிப்பதாய் ஒரு தினப் பதிப்புப் பேப்பரில் பார்த்தேன். அது அவசியந்தானா? அல்லது கலெக்டர் பதவிகளை அதிகரிப்பதற்காக மந்திரி சபை யாரும் சம்பந்தப்பட்டவர்களும் செய்யும் காரியமா? இவைகளுக்குத் தங்கள் விளக்கம் தேவை!" என்று குமாரபாளையத்திலிருந்து ஒரு அன்பர் எழுதிக் கேட்டிருக்கிறார்.

இந்த நண்பர் எழுதிய கடிதம் நம் கைக்கு வந்து சேர்ந்த மறுநாளே இவ்விஷயம் பற்றி விவரமான சர்க்கார் அறிவிப்பு தினப் பத்திரிகைகளில் வெளியாகியது. அதில் சர்க்கார், ஜில்லாக்களில் கலெக்டரின் நிர்வாக அலுவல்கள் அதிகமாகி விட்டதால், அவர்களால் சமாளிக்க முடிவதில்லை என்று ஜில்லாக்களைப் பிரிப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள். கிராம அபிவிருத்தித் திட்டங்களினாலும் ஜனநாயக ஆட்சி முறையில் மக்களின் விழிப்பு அதிகமானதினாலும் ஜில்லா கலெக்டரின் வேலை பெருகி விட்டது என்கிறார்கள். அதற்குப் பரிகாரம் இப்பொழுதிருக்கும் ஜில்லாக்களைக் கூறு போட்டு இரட்டிப்பது என்று சொல்லுகிறார்கள். புது ஜில்லாக்களுக்குப் புது ஆபீஸ்களைக் கட்ட வேண்டியதாகும். குமாஸ்தாக்கள், பியூன்கள் இவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். செலவைப்பெருக்கு தராத செலவுகள் ஏராளமாக ஏற்படும்.

ஏற்கெனவே ராஜ்யப் பிரிவினைகளால் நாட்டில் எழுந்த குழப்பங்கள் அடங்கிய பாடில்லை. இப்பொழுது ஜில்லாக்களைக் கூறு போட்டால், எல்லையிலிருப்பவர்கள் எங்கள் கலெக்டர் அந்த ஊரில் இருக்க வேண்டும், இந்த ஊரில் இருக்க வேண்டும் என்று புதுப் போராட்டம் ஆரம்பிப்பார்கள். எங்கள் கிராமத்தைப் பக்கத்து ஜில்லாவில் சேர்க்க வேண்டும் என்றும் தாலூக்காவைப் பிரித்துத் தாருங்கள் என்றும் சொல்வார்கள். இன்னும் இம்மாதிரி எத்தனையோ பிரச்னைகள் எழும்.

'உங்கள் செலவுகளைச் சிக்கனப்படுத்தி, பணத்தைச் சேகரித்துத் தாருங்கள்' என்று உத்தியோகஸ்தரிடம் சொல்லும் வியாபாரிகளையும் மற்றவர்களையும் வற்புறுத்தி, யுத்த காலத்து பலாத்கார முறைகளைக் கையாண்டு, 'ஸ்மால் ஸேவிங்ஸ் ஸ்கீம்' நடத்தி வருகிறார்கள். இது மக்களிடையே அருவருப்பு உண்டாக்கி வருகிறது. திட்டச் செலவில் பாதி அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்காகவும், புது இலாக்காக்கள் ஏற்படுத்துவதிலும் செல வழிந்து போகிறது என்று சாதாரணமாக மக்கள் அனைவருமே பேசி வரும்போது, ஜில்லாப் பிரிவினைத் திட்டத்தைச் சென்னை சர்க்கார் மேற்கொள்வது உசிதமாகத் தோன்றவில்லை. சிறு ஜில்லாவாக இருந்தால் நிர்வாகம் சிறப்பாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு, சட்டசபை அங்கத்தினர்கள் தங்கள் அக்கிரமச் செல்வாக்கை விருத்தி செய்து கொள்ளப் பார்க்கிறார்கள்.


சட்டசபை அங்கத்தினர்கள் நிர்வாகத்தில் பிரவேசிப்பது நியாயமல்ல என்று கேரள ராஜ்ய நிர்வாகத்தைப்பற்றிக் குறை சொல்லிக் கொண்டிருக்கும்போதே அது காங்கிரஸ் நிர்வாகத்தில் தலைவிரித்தாடுகிறது.

"நீ அழ ஆரம்பித்து விட்டாயா!"



மத்திய ஆசிய நெருக்கடி ஓய்ந்தது; ஆனால் தூரக்கிழக்கில் நிலைமை மோசமாகி வருகிறது. செஞ்சீனா, தேசீய சீனர்கள் வசமிருக்கும் க்மோய்த் தீவின் மீது குண்டுகளைப் பொழிகின்றது.

"விஷமம் செய்தது போதும், என்னுடன் வாருங்கள்!"



உலக மக்களின் கண்டனம் அமெரிக்காவையும் இங்கிலாந்தையும் அணு ஆயுத சோதனைகளை நிறுத்தும்படி செய்து, ஆயுதப்பரிகரணப் பாதையில் அழைத்துச் செல்லுகிறது.

அகடிதகடனா சாமர்த்தியம்?

தென்னாட்டில், ஆங்கிலம் கற்றவர்களை விட இந்தி கற்றுக்கொண்டு விட்டவர்கள் எண்ணிக்கையில் அதிகம் என்று, ஒரு கடிதம் தினசரி ஒன்றில் வெளியாகி யிருக்கிறது. இந்த அபாண்டத்தை யார் நம்புவரார்கள்?

சென்ஸஸ் கணக்கில் ஆங்கிலம் படித்தவர்களின் தொகையையும், தட்சிண பாரத ஹிந்தி பிரசார சபையின் அறிக்கையின்படி இந்தி படித்தவர்களின் தொகையையும் ஒப்பிட்டு இந்த *அகடிதகடனா சாமர்த்தியம் நடத்தப் பார்க்கிறார்கள். இந்தி படித்தவர்களின் எண்ணிக்கை தென்னாட்டில் அதிகமாக இருந்திருப்பின், என்னத்துக்காகத்தமிழ் நாட்டினர் இந்திக்கு ஆட்சேபிக்கப் போகிறார்கள்? இந்தக் கணக்குச் சூழ்ச்சிக்கு யாரும் ஏமாந்து போகமாட்டார்கள்.

இந்தி பிரசார சபை கொடுத்த கணக்கை ஆழ்ந்து சோதித்துப் பார்த்தால், வெறும் புகையாக முடியும்!

ஹிந்தி பிரசார சபையினர், ஓர் ஊரில் ஹிந்தி பிரசாரம் செய்ய வந்தால் முதல் மூன்று மாதம் அந்த ஊர் ஜனங்கள் மிக உற்சாகமாக இந்தி படிக்க வருவார்கள். மூன்று மாதம் சொல்லிக் கொடுத்து விட்டு, ஒரு சிறு பரீட்சை நடத்தி அதில் தேறியதற்கு ஒரு பத்திரத்தைக் கொடுப்பார்கள்.

இதற்குப் பிறகு வரும் பரீட்சை சற்றுக் கடினமாக இருக்கும். அதில் முதல் பரீட்சை எழுதியவர்களில் பாதிப்பேர்கூட பரீட்சை எழுதமாட்டார்கள்.

இப்படி இந்தி பிரசார சபை நடத்தும் நான்கு ஐந்து பரீட்சைகளில் தேறினால்தான் ஓரளவு ஹிந்தி தெரிந்ததாகும்.

ஆனால் இந்தி தெரிந்தவர்களின் கணக்குக் கொடுப்பதற்கு இந்தக் கடைசி பரீட்சை எழுதியவர்கள் கணக்குத்தான் கொடுக்க வேண்டும். அது கொடுத்தால் மிகச் சொற்பமாக இருக்கும். அதனால் மூன்று மாதம் ''ஹைறம் ஹறாங்'' என்று ஹிந்தி படித்தவர்களின் எண்ணிக்கையையும் சேர்த்து, ''தென்னாட்டில் இந்தி தெரிந்தவர்கள் இத்தனை பேர் இருக்கிறார்கள்'' என்று தொகையை மிகைப்படுத்திக் காட்டுகிறார்கள்.


ஆனால் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை எழுதுகிறவர்கள் ஆறு வருஷம், ஏழு வருஷம் ஆங்கிலம் படித்துவிட்டு பரீட்சை எழுதுகிறார்கள். அப்படியே பி. ஏ., எம். ஏ. படித்தவர்களின் ஆங்கில ஞானம் எவ்வளவு அதிகமானது.

இந்தப் பரீட்சைகளுக்கு வருஷத்தில் எத்தனை ஆயிரம் மாணவர்கள் போகிறார்கள். அவர்களுடன் இந்தி பரீட்சை எழுதுகிறவர்களின் கணக்கை ஒப்பிட முடியுமா?

இதையெல்லாம் சற்றும் சிந்தித்துப் பார்க்காமல் தென்னாட்டில் இந்தி தெரிந்தவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பது எவ்வளவு பேதமை!

* இல்லாததை இருப்பது போலக் காட்டுகின்ற மாயைக்கு 'அகடிதகடனா சாமர்த்தியம்' என்று பெயர்.

புதிய சுமை!



சென்னையில் கைவண்டிகளைக் குறைத்துவிடப் போவதாகத் திரு சி. சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.


TOILET POWDER
SANDAL
Padmini Priyadarsini
டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்

நேரு-நூன் சந்திப்பு

அயல்நாடுகள் மிகுந்த கவலை கொள்ளும் நிலைக்கு நமது பொருள்நிலை வந்து விட்டது.

இங்கிலாந்து, மேல ஜெர்மனி, ஜப்பான், அமெரிக்கா, கனடா முதலிய நாடுகள் உலக பாங்கியின் ஆதரவில் ஒன்றுகூடி இந்தியாவை நெருக்கடியிலிருந்து காப்பாற்ற ஆலோசிக்கின்றன. நமது தேவை சுமார் 500 கோடி ரூபாய்க்கு அதிகம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் ஏறக்குறைய பாதிக்குமேல் அடுத்த ஆறு மாதங்களுக்குள் தேவைப்படும். இதுவே நெருக்கடி. ஆகையினால்தான் கடன் கொடுத்தவர்களின் கூட்டு ஆலோசனை.

நமது நெருக்கடியை அனுதாபத்துடன் புரிந்துகொண்டு அயல் நாடுகள் நமக்கு உதவி அளிப்பதில் இவ்வளவு அக்கறை காட்டுவது பாராட்டத் தக்கதே. அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

ஆனால் நாட்டின் நாணயத்தையும் கௌரவத்தையும் பெரிதாக மதிக்கும் எவரும் இம்மாதிரி நிலை ஏற்பட்டதற்கு வருந்தவே செய்வார்கள். முன்பின் யோசனையின்றி, நம்முடைய நிதி வசதிகளுக்கும் சௌகரியங்களுக்கும் அப்பாற்பட்ட லட்சியங்களை ஏற்படுத்திக் கொண்டு, திட்டங்கள் போட்டு, பண நெருக்கடி ஏற்படுத்திக் கொண்டு தத்தளிப்பதும், அயல்நாடுகளுக்குத் திரும்பத் திரும்பக் காவடி எடுப்பதும் சந்தோஷப்படக் கூடிய விஷயங்களல்ல.

மேற்கு ஜெர்மனியும் ஜப்பானும் அதிசயிக்கத்தக்க முறையில் முன்னேற்றமடைந்து விட்டன. இரண்டு தேசங்களும் யுத்தத்தில் தோல்வியுற்றநாடுகள். யுத்தத்தின் பயங்கரத்தையும் பொருள் சேதத்தையும் உயிர்ச் சேதத்தையும் அனுபவித்த நாடுகள். இப்போது இதர நாடுகளுக்குக் கணிசமான அளவுக்குக் கடன் வசதிகள் செய்து கொடுக்கும் நிலைமையில் இருக்கின்றன. நமக்கு உதவியளிப்பதற்காகக் கூடும் அயல் நாட்டுக் குழுவிலும் இடம் பெற்றிருக்கின்றன.

இப்படி மேல ஜெர்மனியும் ஜப்பானும் இன்று இந்த நிலைக்கு வந்ததற்குக் காரணம் அவைகளுக்கு ராணுவச் செலவுகள் பெருவாரியான அளவில் ஏற்படாததுதான்.

ஆனால் நாமோ நமது வருவாயில் பாதி ராணுவத்துக்குச் செலவு செய்து விட்டு, பிட்சாபாத்திரம் எடுத்துக் கொண்டு அலைகிறோம்! பிச்சையும் தருவாரில்லை. கடன்தான் கேட்கிறோம். கடனுக்கு வட்டியும் உண்டு. என்ன ஏற்றுமதி செய்து கடனைத் தீர்க்கப் போகிறோம்? இன்றைய நிலையில், ராணுவச் செலவைக் குறைத்துக் கொள்வதே வழி. இது ஒன்றுதான் பாரதத்தின் கௌரவத்தை நிலைநாட்டும்.

உலகாந்திரக் கொள்கை சுதந்திரத்தைக் காத்துக் கொள்ள வேண்டுமானால் இதைச் செய்ய வேண்டும். நம்முடைய ராணுவத்தை என்னத்துக்காகப் பெருக்குகிறோம்? பாகிஸ்தானைக் கண்டு கவலைப்பட்டு இதைச் செய்கிறோம். அதேசமயத்தில் அவர்களுக்கு நெருங்கிய நண்பர்களானவர்களிடம் கடன்பட்டுச் சிக்கிக் கொள்ளவும் வழி தேடுகிறோம். நம்முடைய தளவாடங்களில் எந்தக் குறை ஏற்பட்டாலும் அந்த நாடுகளிலிருந்து அவ்வப்போது இறக்குமதியாக வேண்டும். போர் துவங்கினால் அந்த இறக்குமதி நடக்குமா? இரு தேசத்தாரும் இந்தச் சிக்கலிலிருந்து விடுவித்துக் கொண்டு ராணுவச் செலவைக் குறைத்துக் கொள்வதே இரு தேசத்தாருக்கும் நன்மையாகும். சமீபத்தில் பாகிஸ்தான் பிரதம மந்திரியும் பாரதப் பிரதமரும் கூடிப் பேசப் போகிறார்கள். இந்த விஷயத்தைப் பற்றிப் பேசினால்தான் இருதேசங்களுக்கும் விமோசனம். இல்லாவிடில் இரு தேசங்களும் பொருளாதார வலைக்குள் சிக்கி அலைந்து கொண்டிருக்க வேண்டியதாகும்.

அருள் வாக்கு

பஞ்சசீலம் என்று அடிக்கடி நேரு சொல்லிக் கொண்டிருக்கிறாரே, அந்தச் சீலம் என்ற வார்த்தையைப் பௌத்தர்கள்தான் அடிக்கடி சொல்வார்கள். புத்தமதக் கொள்கைப் பிரகாரம் முடிவான பொருள் ஒன்றுமில்லை. முடிவில் சூன்யம்—நிர்வாணம் என்று அதற்குப் பெயர். அவர்களுடைய அர்த்தத்தில், எரிந்து கொண்டிருக்கிற விளக்கு அணைந்தால் நிர்வாணம் ஆகிவிட்டது என்று சொல்லலாம். எரிந்து கொண்டிருக்கிற உயிர் அணைந்தால் நிர்வாணம் என்று பெயர். திரும்பவும் ஏற்ற முடியாமல் பூர்த்தி ஆகிவிட்டால் அதற்கு நிர்வாணம் என்று பெயர். பௌத்தமதக் கொள்கைப் பிரகாரம் கடைசியில் எல்லாம் சூனியமாகப் போகின்றன.

அந்த மாதிரி ஒன்றும் இல்லாத தன்மை வருவதற்கு நல்ல குணங்கள் வேண்டும். நல்ல சீலங்கள் வேண்டும். சீலங்கள் இருந்தால் ஒன்றும் இல்லாத தன்மை கிடைக்கும். இதுதான் பௌத்த சமயம். சில சீலங்களை மட்டுமே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நமது யோக சாஸ்திரத்திலே இதை வரிசையாக இயமம், நியமம், ஆசனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தியானம், தாரணம், சமாதி என்று எட்டு அங்கங்களாகச் சொல்லியிருக்கிறது. இவற்றில் முதலாவது இயமம். இயமம் என்றால் அடக்கம்; தன்னையே அடக்கிக் கொள்ள வேண்டும்.

அடக்கம் வேண்டும் என்றால் என்ன பண்ண வேண்டும்? அடக்கத்துக்குச் சில குணங்கள் சொல்லியிருக்கின்றன. அகிம்சை, சத்தியம், பிரும்மசரியம் என்று பல குணங்கள் உள்ளன. நல்ல சீலம், நல்ல குணங்கள் வரவேண்டுமென்றால் நல்ல ஆசாரங்கள் இருக்க வேண்டும். மனசு நன்றாக இருந்தால் மட்டும் சீலம் வரும். எல்லோருக்கும் நல்ல மனதாக இருக்க முடியாது. கெட்டது என்பதே மனத்தில் புகாதபடி நல்லது முழுவதும் நிரம்பியிருந்தால் தான் சீலம் வரும்.

கண்ணாடியில் பார்க்கிறோம். அழுக்காக இருந்தால் பார்க்க முடிகிறதா? சுத்தமாகத் துடைத்து விட்டுப் பார்த்தால் நன்றாகத் தெரியும். அது சுத்தமாக இருப்பதோடு அசையாமல் நிலையாகவும் இருக்க வேண்டும். அப்போது உண்மை பிரகாசிக்கும். சித்தம் என்பது கண்ணாடி போன்றது. பரம் பொருள்தான் உண்மை.

இந்த உலகத்தை யெல்லாம் படைக்கிறவன் யார்? அவனைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நம்முடைய சித்தத்தை அழுக்கில்லாமல் ஆடாமல் வைத்துக்கொள்ள வேண்டும். கெட்ட எண்ணம் வந்து அழுக்குப் படிந்தால் ஒன்றும் தெரியாது.

தாமிரச் செம்பு ஒன்று கிணற்றில் பத்து வருஷங்கள் மூழ்கிக் கிடந்தது என்றால் அதைப் பளபளப்பாக்க எவ்வளவு தேய்க்க வேண்டும். தேய்க்கத் தேய்க்க அது சுத்தமடைந்து வெளுக்கிறது. இவ்வளவு வருஷ காலம் எத்தனை கெட்ட காரியங்களைச் செய்து நம்முடைய சித்தத்தில் அழுக்கை ஏற்றிக் கொண்டு விட்டோம். அந்த அழுக்கைப் போக்க அவ்வளவு நல்ல காரியங்களைச் செய்து மனத்தைச் சுத்தப் படுத்த வேண்டும். அப்போதுதான் சித்த சுத்தி வரும். நல்ல சீலங்கள் உண்டாகும்.

மற்ற மதத்தினர்கள் நமது மதக் கொள்கைகளில் ஒன்றை மட்டும் தனியாக எடுத்துக் கொண்டு தனி மதமாக ஆரம்பித்தார்கள். "சீலம் தான் பிரதானம். அது வந்தால் போதும். மற்றது வேண்டாம்" என்றது ஒரு மதம். "சித்த சுத்தி பண்ணிக் கொண்டு ஏகாக்கிர சித்தத்தோடு உன் உள்ளே ஆண்டவனைப் பார். கோயிலில் இருக்கும் ஆண்டவன் உன் உள்ளும் இருக்கிறான்" என்கிறது நமது மதம். இதையே ஆதாரமாகக் கொண்டு, "கோயிலுக்குப் போக வேண்டாம்; கோயிலே வேண்டாம்; விக்கிரக ஆராதனை தப்பு; கடவுள் நம் உள்ளத்துக்குள் இருக்கிறார்" என்று சொல்வது ஒரு புது மதம். ஆக எல்லா மதங்களும் ஒரு கொள்கை இல்லாவிட்டால் மற்றொரு கொள்கையை எடுத்துக் கொண்டன. மொத்தமாக எடுத்துக் கொள்ளவில்லை. அப்படித்தான் புதுப்புது மதங்களை உண்டாக்கினார்கள். எப்படியிருந்தாலும் யாரை வழிபட்டாலும், முடிவான இறைவனை நினைந்து வழிபடு.

ஸ்ரீ சங்கராச்சாரியார் ✤ காஞ்சி காமகோடி பீடம் ✤

மௌனப் பிரார்த்தனை

கொழும்பு, ஆகஸ்டு 22உ.

தமிழ் அரசுக் கட்சியினர் சிங்களத்துடன் தமிழ்மொழிக்குச் சரிசம அந்தஸ்து பெறுவதற்காக ஆகஸ்டு 20-ந் தேதி பிரும்மாண்டமான சட்டமறுப்புப் போராட்டத்தை ஆரம்பிப்பதென்று வவுனியா மகாநாட்டில் தீர்மானித்திருந்தார்களல்லவா? அந்தத் தீர்மானத்தின்படி தமிழ்த் தலைவர்களெல்லோரும் வீட்டுக் காவலில் இருக்கையில் பொறுப்பற்ற சிலர் போராட்டத்தைத் துவக்கி நிலைமையைக் குழப்பி விடுவார்களோ என்று பலரும் அஞ்சி வந்தார்கள். இப்படி அஞ்சுவதற்கு அனுசரணையாக யாழ்ப்பாணக்குடா நாட்டில் பொறுப்பற்ற பல துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டு வந்தன. நல்லவேளையாக ஆகஸ்டு 20-ந் தேதி அவ்விதப் போராட்டம் ஏதும் நடக்கவில்லை. கடைசி நேரத்தில் தலைவர்கள் இல்லாமல் சத்தியாக்கிரகம் நடத்தக் கூடாதென்றும் சத்தியாக்கிரகத்துக்குப் பதில் ஆகஸ்டு 20-ந் தேதி தமிழ்ப் பிரதேசம் முழுவதும் பிரார்த்தனை தினமாக அனுஷ்டிக்க வேண்டுமென்றும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. அதை அனுசரித்து சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டது. தமிழ் மக்கள் அன்று ஆலயங்களுக்கும் இருச் சபைகளுக்கும் திரளாகச் சென்று பிரார்த்தனைகள் நடத்தினர்.

இதைத் தவிர, யாழ்ப்பாணத்தில் இன்னொரு மாதிரியான புதிய இயக்கமும் ஆரம்பமாகி யிருக்கிறது. வாரத்தில் ஒரு மணி நேரம் மௌனப் பிரார்த்தனை நடத்தும் இயக்கத்தைச் சிலர் ஆரம்பித்திருக்கிறார்கள். இதன்படி பல பெரியார்கள் வாரத்தில் ஒரு மணிநேரம் பகிரங்க ஸ்தலத்தில் அமர்ந்து மௌனப் பிரார்த்தனை நடத்துகின்றனர். மனிதன் கொடியவனாகிப் பொறுக்க முடியாத அளவு கொடுங்கோலாட்சி நடத்தும்போது, எல்லாம் வல்ல இறைவனிடம் அல்லாது வேறு யாரிடம் முறையிடுவது?

சேர்ந்தாற்போல் மூன்றுமாத காலத்துக்கு ஒரு அங்கத்தவர் பார்லிமெண்டு சபைக்கு வரத் தவறினால் அவருடைய பார்லிமெண்டு ஸ்தானம் காலியாகி அந்த ஸ்தானத்துக்கு உபதேர்தல் நடத்தவேண்டும். இது இலங்கை அரசியல் சட்ட நியதி. பார்லிமெண்ட் அங்கத்தவர்களான தமிழ் அரசுக் கட்சித் தலைவர்கள் வீட்டுக்காவலில் உள்ளபடியால் சென்ற மூன்று மாத காலமாகப் பார்லிமெண்ட் சபைக் கூட்டத்துக்கு வர முடியவில்லை. அவர்கள் வர முடியாததால் புதிய உபதேர்தல் நடக்க வேண்டிய நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக அவர்களுக்கு ரஜா அளிக்கும் தீர்மானம் ஒன்றைச் சபை இவ்வாரம் நிறைவேற்றியிருக்கிறது. வீட்டுக் காவலில் இருக்கும் தலைவர்களின் வேண்டுகோளின்படி எதிர்க்கட்சித் தலைவர் இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்தார். தமிழ்த் தலைவர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளபோதிலும் அரசியல் நெருக்கடியை உண்டுபண்ண விரும்பாததால் தான் ரஜா கோரும் தீர்மானத்தைக் கொண்டுவரும்படி எதிர்க்கட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டார்கள். இல்லாத பட்சத்தில் முதல் நம்பர் அரசியல் நெருக்கடி உருவாகியிருக்கும். காவலில் இருக்கும்போதுகூட நெருக்கடியை உண்டுபண்ண விரும்பாத தலைவர்களை விடுதலை செய்தால் நெருக்கடி ஏற்பட்டு விடுமென்று வாதிக்கிறார் இலங்கைப் பிரதமர்.

பிரதம மந்திரி இலாகா மானியங்களைப் பற்றி பார்லிமெண்ட் சபை இவ்வாரம் பரிசீலனை நடத்தியபோது இந்தியப் பிரச்னையைப் பற்றியும் குறிப்பாக நாடற்ற நிலைமைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் ஏழரை லட்சம் இந்திய வம்சாவளியினர்களின் பிரச்னைகளைப் பற்றியும் காரசாரமான விவாதம் நடைபெற்றது. இப்பிரச்னையைச் சமாளிக்கப் பலர் பல மாதிரியான யோசனைகளைச் சொன்னார்கள். சகல இந்தியர்களையும் இந்தியா திருப்பியெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் இலங்கையிடம் நேருஜிக்கு உண்மையான அன்பும் பரிவும் இருக்குமானால் அதற்கு இதுவே அறிகுறியென்றும் எல்லா இந்திய வம்சாவளியினர்களையும் நேருஜி திருப்பி யெடுத்துக் கொள்ள மறுத்தால் அப்படிப்பட்டவரின் நட்பு இலங்கைக்குத் தேவையே இல்லையென்றும் சில அங்கத்தவர்கள் வாதித்தார்கள். நாடற்றவர்களுக்கு வேலைகொடுக்க மறுத்து அவர்களைப் பட்டினி போட்டு விரட்ட வேண்டுமென்று சில புண்ணியவான்கள் சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவரான டாக்டர் என். எம். பெரைரா என்பவர் விவேகமானதும் அனுபவ சாத்தியமானதுமான ஒரு யோசனையைச் சொன்னார். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாடற்றவர்களாக்கப்பட்ட இந்தியர்கள் இலங்கையில் நீடித்திருக்கத்தான் போகிறார்கள். அவர்களை வெளியேற்ற யாராலும் முடியப் போவதில்லை. அவர்களை இந்தியா திருப்பியழைத்துக் கொள்ளப் போவதுமில்லை. இந்த நிலைமையில் இந்த மக்களை இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளுவதுதான் பிரச்னை தீர ஒரே வழி. ஏற்கெனவே இலங்கையிலுள்ளவர்கள் அனைவரையும் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொண்டு மேற்கொண்டு யாரும் இங்கு வந்து குடியேறாதபடி தீவிரமாகத் தடுக்கலாம். இப்படி ஒரு யோசனை சொன்னார் டாக்டர் பெரைரா. ஆனால் இந்த விவேகமான யோசனை வகுப்புவாத வெறியாட்டம் ஆடுகிறவர்கள் காதில் எப்படி ஏறப் போகிறது?

பிரதம மந்திரி விவாதத்துக்குப் பதிலளிக்கையில் நாடற்றவர்கள் இலங்கையிலிருப்பதாலும் அவர்களை இந்தியா திருப்பி அழைத்துக் கொள்ள மறுப்பதாலும் அந்த மக்களைக் கடலில்தள்ளிப் படுகொலைசெய்துவிட முடியாதென்றும் பொறுமையுடனும் நேசபாவத்துடனுமே இவர்களது பிரச்னையைத் தீர்க்கவேண்டும் என்றும் இது சம்பந்தமாக இந்திய அரசாங்கத்துடன் பேச்சுகள் நடத்திவருவதாகவும்சொன்னார். நாடற்ற நிலைமையிலுள்ளவர்கள் திரிசங்கு சொர்க்கத்தில் வர்ணிக்க முடியாத கஷ்டங்களை அனுபவித்து வருவதாக ஓலமிடுகிறார்கள்.

— ரஜனி



45

செல்வம் சம்பாதிப்பது அவனவன் தான்மட்டும் சுகமாக இன்ப வாழ்க்கை வாழ்வதற்கு அல்ல. பிறருக்கு உபகாரம் செய்வதற்குச் செல்வம் வேண்டும். செல்வத்தை ஒரு கருவியாகப் பாவித்து ஆள வேண்டும்.

தாளாற்றித் தந்த
பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற்
பொருட்டு.

[தாள்—முயற்சி]

பாடுபடுவதும் பாடுபட்டுப் பொருள் சம்பாதிப்பதும் எதற்காக? வேளாண்மை செய்தற் பொருட்டு. தக்கார் இவ்வாறு கருதிப் பாடுபட்டுச் சம்பாதிப்பார்கள்.

'வேளாண்மை' என்றால் பிறருக்கு உதவுவது கடமை என்று எண்ணி நடத்தப்படும் உபகார வாழ்க்கை; கைம்மாறு வேண்டாமல் கடமை என்று எண்ணி உபகாரம் செய்யும் பண்பு.

தகாதார் தம் சிற்றின்பத்துக்காகவே பொருள் சம்பாதிப்பார்கள். தக்கார் வேளாண்மைக்கென்று சம்பாதிப்பார்கள்.

வேளாளன் என்றால் உபகாரி என்று பொருள். சாதிப் பெயர் மட்டும் அல்ல. அந்தச் சாதிக்குச் சிறப்பாக உரிய பண்பு வேளாண்மை.

உன் அருகில் இருக்கும் மக்களுக்கு உதவி செய்வதினால் உண்டாகும் மகிழ்ச்சியைப் போல் வேறு இன்பம் கிடையாது. இந்த மகிழ்ச்சியை அடையும் சந்தர்ப்பத்தை வீண் செய்யாதே என்கிறார் முனிவர். மேல் உலகத்தில் வேறு இன்பங்கள் இருக்கலாம். ஆனால் இந்த இன்பம் அங்கே இல்லை; அங்கே உதவி வேண்டுபவர் இல்லையான படியால். வேறுலகத்தில் உதவி செய்வதற்கு இடம் இல்லை. இவ்வுலகத்தில்தான் இந்த இன்பம் அடைய முடியும். உயிர் உள்ளபோது அதை அடையாமற் போகாதே. ஒப்புரவறிந்து வாழ்.

புத்தேள் உலகத்தும்
ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற

[புத்தேள் உலகம்—தேவர்கள் உலகம்.]

இவ்வுலக வாழ்க்கையில் அடையக் கூடிய சுக போகங்களில், பிறருக்கு உதவி செய்வதால் உண்டாகும் மகிழ்ச்சிக்குச் சமம் வேறு ஏதுமில்லை. வேறு எந்த மகிழ்ச்சியும் தேவர்கள் உலகத்தில் அடையக்கூடிய மகிழ்ச்சியுமே. இந்த மகிழ்ச்சிக்குச் சமம் ஆகாது.

[ஒப்புரவின்—ஒப்புரவைவிட: நல்ல பிற—சிறந்த வேறு மகிழ்ச்சிகள்]

மனிதப் பிறப்பு பிறருடனே கூடி வாழவே உண்டானது. கூடி வாழும் மனிதனே, உண்மை மனிதன் ஆவான். அவனே உயிர் வைத்துக் கொண்டு வாழ உரிமை பெற்றவன். பிறருக்கு உதவி செய்து வாழத் தெரியாதவன் செத்தவரில் வைக்கப்படுவான்.

ஒத்தது அறிவான்
உயிர் வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்
படும்.

எதற்காக உனக்கு உயிர் தரப்பட்டது? மனிதனாக வாழ ஏன் பிறந்தாய்? பிறருக்கு உதவி செய்து அவர்களுடன் கூடி வாழப் பிறந்தாய். அதைச் செய்யாமல் போனால் நீ செத்தவன்.

[ஒத்தது அறிவான்—ஒப்புரவு அறிந்து வாழ்பவன்.]

விலைவாசிகள் உயர்வது ஏன்?

என். ஒய். கிருஷ்ணசுவாமி

''சிங்கப்பூருக்குப் போகிறேன்'' என்கிறார் ஒருவர்.

''எனக்கு ஒரு ஜதை ஜப்பான் செருப்பு, ஆறு ஹாங்காங் டவியல், ஒரு 'டேப் ரிகார்டர்' வாங்கி வாருங்கள்'' என்று அவரை வற்புறுத்துகிறோம். ''அமெரிக்கா போகிறேன்'' என்கிறார் மற்றொருவர். ''ஒரு கை ரேடியோ வாங்கி வாருங்கள்'' என்று கேட்கிறோம். '' 'ஸ்விட்சர்லண்டு' வழியாகத் திரும்புவேன்'' என்கிறார் வேறொருவர். ''கையிலிருக்கும் கடிகாரத்தைக் கழற்றி இங்கேயே வைத்து விட்டுக் கையில் ஒன்று பெட்டியில் ஒன்றாக இரண்டு கடிகாரங்கள் வாங்கி வர வேண்டும்'' என்று பிரார்த்திக்கிறோம். பாங்காக்கில் துணி மலிவு, டோக்கியோவில் எல்லாம் மலிவு, பாக்டாடில் சுங்கம் இல்லை என்று எதை எங்கே வாங்கலாம் என்று அலையும் நிலை நம்மவர்களுக்கு வந்திருக்கிறது.

உள்ளூரில் என்ன பேச்சு? ''போன வாரத்துக்கு இந்த வாரம், கடுகு விலை ஏற்றம், எண்ணெய் விலையேற்றம், கிரைக்குமா கிராக்கி'' என்கிறாள் மனைவி. ''ஹார்லிக்ஸ் பாட்டில் பன்னிரண்டு ரூபாயாம். டாக்டர் எழுதிக் கொடுக்கும் மருந்தில் பாதியும் கிடையாது'' என்று வருந்துகிறான் கணவன்.

கடைகளில் சாமான் இல்லை, இருந்தாலும் யானை விலை என்ற நெருக்கடி நம் நாட்டுக்கு விளைந்து, மேன்மேலும் வளர்ந்து வருகிறது. இதற்கு என்ன காரணம்? 'பொது மனிதருக்கு' இதை எடுத்துரைப்பதே இந்தக் கட்டுரையின் கருத்து.

என்னுடைய சிறு வயதில் கிராமத்தில் நாணயப் புழக்கம் அரிதாக இருந்தது. நெல்லைக் கொடுத்துப் பண்டங்களை வாங்குவது தான் வழக்கம். நெல் அனைவருக்கும் தேவை. யாவருக்கும் எது தேவையோ அதை நாணயமாக வைத்துக் கொள்ளலாம். லாக்கடிவ் தீவுகளில் தேங்காய்தான் நாணயம்.

' ஆனால் சமூகம் பெருகப் பெருகக் கொடுக்கலும் வாங்கலும் கூடவே பெருகி வருகின்றன. வெவ்வேறு பண்டங்களின் மதிப்பை ஒன்றோடு ஒன்று இணைத்துக் கூறுவது சாத்தியமில்லாமல் போய் விடுகிறது. பத்துப் படி அரிசிக்கு எத்தனை கஜம் துணி, ஒரு கஜம் துணிக்கு எத்தனை தேங்காய், நூறு தேங்காய்க்கு எத்தனை படி நெய் என்றெல்லாம் பரிவர்த்தனையைப் பெரிய சமூகம் செய்ய முடியாது. அதற்காகவேதான் அனைவருக்கும் தேவையான ஒரு பொதுப் பொருள் மூலமாக ''விலை'' என்ற அபிப்பிராயத்தைக் கையாண்டு வருகிறோம். ஆனால் உண்மையில் நடப்பது நம்மிடம் இருக்கும் சாமானைக் கொடுத்து மற்றவரிடம் நமக்கு வேண்டியதை மாற்றிக் கொள்வதுதான். உழைப்பும் ஒரு விற்கக்கூடிய பொருள்தான். பொதுவான ஒரு பொருளைப் ''பணம்'' என்று பெயரிட்டு அதனுடைய விலையை மற்ற எல்லாச்சாமான்களுடனும் ஒப்பிட்டு, அதற்கு ''விலை'' என்று பெயர் வழங்குகிறோம்.

இந்தப் ''பொதுப் பொருள்'' வேதாந்தத்தில் ஆத்மாவைக் குறிக்கும் பல குணங்களைப் படைத்ததாக இருக்க வேண்டும். மதிப்பு உயர்ந்திருக்க வேண்டும். எங்கும் பரவி இருக்க வேண்டும். அனைவரும் விரும்புவதாக இருக்க வேண்டும். அழியாமலும் இருக்க வேண்டும். கையாளுவதற்கு வசதியாக இருக்க வேண்டும். திடீரென்று பெருகவோ, குறையவோ கூடாது. இத்தனை நற்குணங்கள் வாய்ந்தது எது? முதலில் பொன், இரண்டாவதாக வெள்ளி. ஆகவே இவ்விரண்டையும் ''நாணயம்'' என்று கௌரவித்து, அவைகளின் விலையை ஆதாரமாக வைத்துக் கொண்டு, மற்ற எல்லாப் பண்டங்களின் விலையையும் நாணயத்தின் விலை மூலம் கணக்குச் சொல்லுகிறோம்.

நாணயம் பெருகினால் விலை ஏறும். நாணயம் குறைந்தால் விலை இறங்கும். இது பொருளாதாரத்தில் ஒரு நீதி. ஒரு நாட்டில் கோடி ரூபாய் நடமாடி வருகிறது என்று வைத்துக் கொள்வோம். இதை வைத்துக் கொண்டு சம்பளம் கொடுக்கிறோம், சாமானை வாங்குகிறோம். சம்பளமும் சாமானும் முன்னிருந்தபடியே இருந்து, நாணயம் மட்டும் இரண்டு கோடியாகப் பெருகி விட்டால், அப்பொழுது, ஒரு கோடி ரூபாயை வைத்துக் கொண்டு செய்த நடவடிக்கைகளை இரண்டு கோடியை வைத்துக் கொண்டு செய்வோம். ஒரு ரூபாய்க்கு வாங்கின பண்டத்துக்கு இரண்டு ரூபாய் கொடுப்போம். கூடவே பண்டங்களும் இரண்டத்தனையாகப் பெருகி விட்டால் விலை ஏறாமல் முன்னிருந்த நிலையில் நிற்கும்.

ஆகவே நாணயத்துக்கு ''இரை'' போட்டுக் கொண்டே வரவேண்டும். இல்லாவிடில் அது சமூகத்தைத் தின்று விடும்.

நாணய நிபுணர்கள் மற்றொரு யோசனை செய்தார்கள். பணத்தைப் புசிக்க முடியாது. பணம் கொடுத்து வாங்கும் பண்டங்களைத் தான் அனுபவிக்க முடியும். பணம் ஒரு வெறும் எண்ணிக்கை. இதற்காக விலை உயர்ந்த பொன்னும் வெள்ளியும் எதற்கு? வெறும் காகிதத்தில் இத்தனை பவுன், இத்தனை ரூபாய் என்று எழுதி, அந்தக் காகிதங்களை உபயோகித்தால் போதும் என்று கருதி ''நோட்டு''களை அச்சிட்டுக் காகிதத்தைப் பணமாகக் கையாள ஆரம்பித்தார்கள். காகிதத்தில் பவுனையும் ரூபாயையும் ''ஆவாகனம்'' செய்தால் போதுமா? அதைப் பவுன் என்று சமூகம் மதிக்குமா? என்று நமக்கு உடனே ஒரு சந்தேகம் தோன்றுகிறது. இதற்காக அரசாங்க பாங்கியில் ஓரளவு தங்கத்தைச் சேமித்து வைத்துக் கொண்டு, ''எப்பொழுது வேண்டுமானாலும் காகிதத்துக்குப் பொன் கொடுப்போம்'' என்று தெரிவித்தார்கள். கிடைக்கும் என்ற நம்பிக்கை பவுனுக்குச் சமானம். இவ்வாறு காகிதம் பவுனாக மாறியது.

முதல் அவதாரத்தில் தானாகவே நின்று' இரண்டாவது அவதாரத்தில் காகிதமாக மாறின போதிலும் பாங்கியில் பவுன் இருந்த பலத்தினால், பவுன் (அல்லது வெள்ளி) நாணயத்துக்கும், காகித நாணயத்துக்கும் ஒருவிதமான பேதமும் உண்டாகவில்லை. ஆனால் காகிதம் மூன்றாவதாக ஒரு அவதாரம் எடுத்தது. சமூகத்தின் செலாவணியைக் கவனிப்பது அரசாங்கத்தின் கடமை. ஓரளவுக்கு நாணயம் நாட்டில் நடமாடினால், அதன் கௌரவம் அரசாங்கத்தின் அமைதியை ஒட்டியிருக்கும். தொழிலும், ஆலையும், விவசாயமும் நன்றாக நிலவும் நாட்டில் நாணயத்தின் மதிப்பு மட்டும் குன்றாது. விலைவாசிகள் அதிகமாக ஏற்றத்தாழ்வு அடையாமல், நிலைத்து நிற்பதற்கு நாட்டின் திறமையும் செல்வாக்கும் பெற்ற அரசாங்கமே பாதுகாப்பு. ஆகையால்காகிதத்துக்கு உள்நாட்டில் பொன் பலம் தேவை இல்லை. வெளி நாட்டு நாணயங்களுடன் மதிப்பிடுவதற்கு மட்டும் வேண்டிய தங்கத்தை மூலதனமாக வைத்துக் கொண்டால் போதுமானது என்று ஒரு புதுக் கொள்கை தோன்றியது.

இது தான் இன்றைய நிலை. இறக்குமதிக்குப் பின்பலமாகத்தான் தங்கமும் வெளி நாட்டுப் பத்திரங்களும் ரிசர்வ் பாங்கியில் இருக்கின்றன. உள் நாட்டு நாணய நிலை தொழிலையும், ஆலை உற்பத்தியையும் தழுவி நிற்கிறது.

ஏராளமாகப் புதுத் திட்டங்களைப் போட்டு நமது நாட்டை முன்னேற்றுவதற்குப் பின்னாலிருந்து அரசாங்கம் தள்ளுகிறது. முன்னேற்றம் என்பது பலவிதம். ஆலைகள் தேவை, மின்சார உற்பத்தி தேவை, எஃகும் இரும்பும் சிமெண்டும் பெருக வேண்டும், ஆற்றில் அணையிட்டு நிலத்துக்கு நீர் வசதியைப் பெருக்க வேண்டும். இதற்கு வேண்டிய இயந்திரங்களை வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறோம். நம் நாட்டிலே அனேகருக்கு வேலை அளித்துக் கூலியும் வழங்குகிறோம். இரும்பும் சிமெண்டும் வேறு ஆலைகளை அமைக்க உதவுமே அல்லாமல் தின்னும் பண்டங்கள் அல்ல. அணையிட்டு நீர்வளம் பெருக்கிப் பயிர் வளரப் பல்லாண்டு பிடிக்கும். மின்சாரத்தை வேறு ஆலைகளுக்குத்தான் உபயோகிக்கலாம். ஆகையால் நம்முடைய திட்டங்களின் பயனாக வேலையின் பெருக்கமும், இயந்திரங்களின் மிகுதியும் தான் இன்றைய கதி. வேலைக்குக் கூலியும் இயந்திரத்துக்கு விலையும் கொடுக்கப் பணம் தேவை. இதை வரிகள் மூலமாயும், பொதுக் கடன் மூலமாயும் அரசாங்கம் வாங்குகிறது.

ஆனால் அத்துடன் அரசாங்கம் நிற்பதில்லை. காகிதப் பணத்தையும் அச்சிடுகிறது. மொத்தத்தில் பணம் பெருகிப் பணத்துக்கு '' இரை '' இல்லாமல் இருக்கும் நிலை நிகழ்கிறது. அதன் காரணமாக ஒரு ரூபாய் செய்த வேலையை இரண்டோ மூன்றோ ரூபாய்கள் செய்கின்றன. விலை ஏறுகிறது.

இதனின்று ஒரு பொருளாதார நீதி வெளிவருகிறது. அதாவது பண்டங்கள் பெருகும் போக்கை விடப் பணம் பெருகினால், விலை ஏறும் என்பதுதான். ஆகையால் இவ்விரண்டையும் கவனித்துத்தான் முன்னேற்றத் திட்டங்களின் வேகத்தைக் குறைக்கவோ, கூட்டவோ வேண்டும். இது தான் சமூக சுகத்தின் தராசு. இல்லாவிட்டால் விலையின் ஏற்றம் எல்லாம் காகித முன்னேற்றமாக முடியுமே தவிர, பணத்துக்கு வாங்கப் பொருள் போதுமான அளவு பெருகாமல் சிக்கலை மூட்டும்.

கல்கி

சந்தா விகிதம்

	ஒரு வருஷம் ரூ. ந. பை	ஆறு மாதம் ரூ. ந. பை
இந்தியா இலங்கை	15—00	7—50
பர்மா, மலேயா வெளி நாடுகள்	18—00	9—00

தனிப் பிரதி விலை 30 நயா பைசா

சந்தா தொகை முன்னதாக அனுப்பப்பட வேண்டும். வி.பி.பி. கிடையாது. இலங்கை நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தா தொகையைச் செலுத்தலாம்.

மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை-10

இவ்வாறு சிக்கலைச் சிருஷ்டித்து விட்டுத் திணறுவது பேதைமை. ''கடன் வாங்கியும் நெய் அருந்து'' என்று ஒரு வடமொழிச் சொல் உண்டு. நாம் கடன் வாங்கியும் சாம்பலைப் பூசிக் கொண்டு ''தியாகம்'' என்று அனைவரையும் வருத்துகிறோம். உணவு தான் ஏழைகளின் வருமானத்தில் பெரும் செலவு. உணவு உற்பத்தியைத்தான் முதலில் கவனிக்க வேண்டும். பிறகு நீண்ட காலத்தில் உதவும் ஆலைகளை (இரும்பு போன்றவை)க் குறைத்து ஓரளவு உடன் உபயோகமாகும் பொருள்களைச் செய்யும் ஆலைகளை (சைக்கிள், மருந்து, துணி) அதிகரிக்க வேண்டும். மூன்றாவதாக, நாட்டுப்புறத் தொழிலாளிக்கும் நகரத் தொழிலாளிக்கும் அதிக வித்தியாசமில்லாமல் கூலியைக் கூடியவரை இணைக்க வேண்டும். ஆலையில் பத்து ரூபாயும், வயலில் ஒரு ரூபாயும் கூலி ஒரு சமூகத்திலும் நாம் கண்டதில்லை. பாரதத்தில்தான் காண்கிறோம்.

பணம் பெருகினால் விலை ஏறும் என்ற நீதி ஓரளவுதான் கட்டுக்கு அடங்கும். ஏனென்றால் சமூகத்தில் எல்லாருக்கும் ஒரே மாதிரி வரும்படி ஏறாது. 1946ம் ஆண்டில் அரசாங்கக் கடன் பத்திரம் வாங்கி அதில் வரும் வட்டியை வைத்துக் காலம் கழிப்பவருக்கு இப்பொழுது ஒன்றுக்குப் பாதி தான் உண்மை வரும்படி. வீட்டை வாங்கினவர்களுக்கு விலை ஏற்றத்தில் லாபம் உண்டு. ஆகவே விலை ஏறிக் கொண்டே போனால் மூலதனங்களின் வருமானம் குன்றி, அநேக இன்னல்கள் விளைந்து, ஒரு நாள் காகிதப் பணத்துக்கு மதிப்பே இல்லாமல் போகும். இந்த விபத்து சைனா, ஜெர்மனி முதலிய நாடுகளில் இதற்குமுன் தோன்றியிருக்கிறது. ஒரு காலத்தில் ஜெர்மனியில் ஒரு சாப்பாட்டுக்கு லட்சம் மார்க்கு கொடுக்க வேண்டி வந்தது. காகிதம் காகிதமாகவே மாறிவிட்டது.

இத்தகைய இடையூறுகளும் ஆபத்துகளும் நம்முடைய நாட்டுக்கு வராமல் காப்பதுவே இன்றைய '' அபாய அறிவிப்பு!''

நவீன உத்தர காண்டம்

ராஜாஜி

காட்சி 1

[இலங்கைக் கோட்டை எதிரே ராமசந்திரனுடைய பாசறை. அக்கினி தேவன் எரியும் நெருப்பிலிருந்து தோன்றி சீதாதேவியை ராமனிடம் தருகிறான்.]

ராமன்: புடமிட்ட பொன்னாக நீ திரும்புவாய் என்று நான் எண்ணிய படியே வந்து விட்டாய்! அன்புக்குரியவளே, வருவாய்!

சீதை: பிரபுவே! நான் அக்கினிப் பிரவேசம் செய்தது சோதனையில் தேறித் திரும்பி வருவதற்காக அல்ல. என்னை அக்கினிக்கு ஆஹுதியாகச் செலுத்தி நான் போய்ச் சேர வேண்டிய இடத்துக்குப் போகவே தீயில் குளித்தேன். ஏனோ அக்கினி தேவன் என்னை மீண்டும் அழைத்து வந்து விட்டான். இம் மண்ணுலகில் எஞ்சியுள்ள நாட்களை வனத்தில் ரிஷிபுங்கவர் ஒருவருடன் கழிக்க விடை தாருங்கள்.

ராமன்: உன்னை விட்டு நான் எப்படிப் பிரிந்திருப்பேன்? நீ கோரும்



வரத்தை என்னால் எப்படிக் கொடுக்க இயலும்? என் அன்பே! நான் செய்ததை மன்னித்து என்னுடன் அயோத்திக்கு வா.

சீதை: பிரபுவே! அது சாத்தியமல்ல. தங்களுடன் நான் வாழும் நாள் தீர்ந்தது. யுத்தம் முடிந்ததும் தங்களைக் காண என்னை அழைத்து வரச் செய்து, என்னைப் பார்த்து ஒரு பாமரனைப்போல் பேசி விட்டீர்கள். அதன் பின்னரும் தங்களுடன் கூடி வாழ்வது என்னால் கூடாத காரியம்.

ராமன்: உலகத்தைத் திருப்தி செய்யும் பொருட்டு அப்படிச் செய்தேன். நானோ அரசன். ஒரு பெண்ணின் மோகத்தில் மூழ்கிப் போய்ச் செய்யத் தகாததைச் செய்தேன் என்று உலகம் என்னை ஏச இடந் தரலாகாது அல்லவா? உலகில் மனிதன் கடைப் பிடிக்க வேண்டிய தருமத்தை எனது வாழ்க்கையில் நான் நடத்திக் காட்ட வேண்டுமல்லவா?

சீதை: அது ரொம்ப சரியே. தாங்கள் என்னமோ அப்படித்தான் செய்ய வேண்டும். ராவண வதத்துடன் தங்களுடைய அவதாரம் முடிந்து விட்டது. மிதிலையிலிருந்து திரும்பும் போது தங்களைக் கண்டதும் பரசுராமரிடமிருந்து விஷ்ணு அம்சம் மறைந்தது போலவே இப்போது தாங்கள் ஒரு நர புருஷன் - அரசன். அவதாரம் முடிந்து விட்டது. என் விஷயம் அப்படி அல்ல. நான் யாரென்பதை நான் அறிவேன். இனி நான் தங்களுக்கு உரிமைப்பட்டவள் அல்ல. தேவர்கள் வாழும் உலகுக்குப் போய்த் திரும்பினேன்; ஆதியும் அந்தமும் இல்லா என் ஆண்டவனுடன் ஒன்றுவதற்கு முன்— இன்னும் சிறிது காலத்தைக் கழிக்க இந்த மண்ணுலகுக்கு மீண்டும் வந்திருக்கிறேன். இவ்வளவே.

ராமன்: பிரியே! உண்மையிலேயே இப்படி யெல்லாம் சொல்லுகிறாயா, அல்லது என்னைச் சோதிக்க



வேண்டி இப்படி! விளையாட்டாகப் பேசுகிறாயா?

சீதை: ஆரிய புத்திரனே! விளையாட்டு முடிந்துவிட்டது. இனி தாங்கள் அயோத்தி அரசனாகத்தான் இம் மண்ணில் வாழ வேண்டும். தேவாம்சம் முடிந்து விட்டது. ஆனால் என்னுடைய தேவாம்சம் அப்படியே இருக்கிறது. இனி நான் தங்களுடன் வாழ இயலாது. அனுமானே, லக்ஷ்மணனே—இருவருமே புண்ணிய ஆத்மாக்கள்—என்னை வால்மீகி ஆசிரமத்துக்கு அழைத்துப் போகட்டும். அங்கு போனபின், நிகழ்ந்த நினைவுகளை எண்ணியெண்ணி என் காலத்தைக் கழிப்பேன். என்னைப் போல் ஒரு பிரதிமையை செய்து வைத்துத் தங்கள் அன்பை யெல்லாம் அதனிடம் செலுத்துங்கள். அன்பு செய்தாலும், உதாசீனம் செய்தாலும், புன்மொழி பேசினாலும் எதையும் அது தாங்கிக்கொள்ளும். எந்தப் பாவியும் பதுமையைத் தங்களிடமிருந்து திருடிக்கொண்டு போக விரும்பமாட்டான்.

ராமன்: [தேவர்களைத் துதித்து வணங்கி] இப்படித்தான் நடக்கவேண்டுமா? விதி விட்ட வழி இதுவோ, புண்ணிய புருஷர்களே!

வசிஷ்டர்: ஆம், ஆம்! அப்படியே ஆகுக!

ராமன்: லக்ஷ்மணா! தேவியின் விருப்பத்தை நிறைவேற்றுவாய்!

சீதை: ஐயனே! எங்கு வெளிச்சத்துக்கு மூடுபனி இல்லையோ, எங்கு இருளின்றி ஒளி வீசுகிறதோ, எங்கு தீதின்றி நல்லதே நிலவி நிற்கிறதோ அங்கு நாம் மறுபடியும் சந்திக்கும்வரையில் எனக்கு விடை தாருங்கள்.

காட்சி 2.

வால்மீகி ஆசிரமம்

சீதை: முனிபுங்கவா! இவர்களா அந்தப் பாலகர்கள்?

வால்மீகி: ஆம், சீதையே! இந்தப் புண்ணிய பாலகர்கள் உன்னால் சுவீகரிக்கப்பட்டு, உலகில் அவர்கள் உன்னுடைய மைந்தர்கள் என்று சொல்லப் படுவார்கள்.

சீதை: ஆகா! உத்தம குழந்தைகள், இவர்களைக் கண்டதுமே என் நெஞ்சம் நெகிழ்கிறது. தாங்கள் அவர்களுக்குப் பாடிக் காட்டிய புண்ணிய கதையை இந்த என் மைந்தர்கள் நன்றாகக் கற்றுப் பாடுவார்களாக.

(லவனையும் குசனையும் தழுவி, உச்சி முகர்கிறாள்.)

வால்மீகி: உன் சரித்திரத்தை இவர்கள் பாடி ஆடவர் பெண்டிர் கேட்போர் உள்ளமெல்லாம் புனிதமாகுக. பரத கண்டம் எல்லாம் சுற்றி நடந்து பாட அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பேன்.

சீதை: என்னுடைய ஆசியையும் அவர்களுக்குத் தந்தேன்.....ஆம், சந்தேகமில்லை. அவர்கள் அப்படியே செய்வார்கள்......எஞ்சி நிற்பது என் கதை ஒன்றே.

வால்மீகி: சீதையே! நீ பட்ட கஷ்டத்தையெல்லாம் இந்தக் குழந்தைகள் பாடுவார்கள். அந்தக் கதையைக் கேட்கும் பாபிகளும் நெஞ்சு உருகி நன்னெறி அடைவார்கள். புண்ணிய சீலர்கள் பசாந்தி அடைவார்கள். இவர்களை உன் குழந்தைகளாகவே இது முதல் நீ பாவிப்பாயாக! அப்படியே உலகமும் கருதும்.

சீதை: ஆம், ஆம், அயோத்தியில் அரசாளும் அந்த ராமசந்திரன் உள்ளத்தையும் இவர்களுடைய பாட்டு உருக்குவதாகுக. அவரது பிரஜைகளின் உள்ளத்தையும் உருக்குவதாகுக.

காட்சி 3.

வால்மீகி ஆசிரமம்

வால்மீகி: சீதையே! உனக்குத் திருப்திதானே!

சீதை: மிக திருப்தி, புண்ணிய புருஷரே! பிள்ளைகள் ஆனந்த மயமாகப் பாடுகிறார்கள்.

(லவனையும் குசனையும் அன்போடு அணைத்துத் தழுவிக் கொள்கிறாள்.)

இனி இந்த உலகத்தில் எனக்கு ஆற்ற வேண்டிய பணி ஏதும் இல்லை. ஹே தாயே! பூமாதேவி! என்னை உனது மடியில் ஏற்றுக்கொள்.

(சீதை பூமிக்குள் மறைந்து போகிறாள்)

வால்மீகி: ஹா! நீ மறைந்தாயா? தாயே! ஐயோ, அருமை முனிவர்களே, என் மனம் துக்கப்படுகிறது.

ரிஷிகள்: துயரப்படலாகாது, முனிவரே!

வால்மீகி: துயரப்படவில்லை. இருந்தாலும் எனக்குப் பொறுக்கவில்லை. மனம் வேதனைப்படுகிறது: அந்த வேடன் ஆண் பறவையை அம்பு எய்திக் கொன்றதைப் பார்த்தபோது நான்

பட்ட வேதனையை விட அதிகமாகப் படுகிறேன்.

காட்சி 4

அயோத்தியில் அரண்மனை

ராமன்: இப்படி கந்தர்வ கானம் செய்யும் இந்தப் பாலகர்கள் யார்?

வசிஷ்டர்: வால்மீகி மகரிஷியின் ஆசிரமத்திலிருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் உன்னுடைய கதையைப் பாடுவார்கள். மன்னனே! உன்னுடைய தேவியின் புண்ணிய கதையைப் பாடுவார்கள்.

ராமன்: என் கதை! என் தேவி! அவளை நான், மதியீனன், இழந்தேன்.

[புலம்புகிறான்]

வசிஷ்டர்: புலம்ப வேண்டாம், இன்னும் வெகுகாலம் நீ வாழவேண்டியிருக்கிறது. அவ்வளவு காலமும் உனக்கு ஆறுதல் அளித்து அவ்வப்போது இம் மண்ணுலகை மறக்கச் செய்து அதனின்றும் உன் மனத்தை இழுத்துச் செல்லும்சக்தி சீதையின் இந்தத் தங்கப் பதுமைக்கு இருக்கிறது. ராமாயணத்தைக் கேட்க ஜனங்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரையும் வரச் சொல்லலாமா?

ராமன்: குருதேவா, அப்படியே செய்யுங்கள்.

காட்சி 5

அயோத்தி அரண்மனை

[லவனும் குசனும் ராம கதையைப் பாடுகிறார்கள்.]

ஸர்வா பூர்வாம் இபம்......

[ராமன், பரதன், மற்றும் சுற்றத்தார் யாவரும், குழுமியுள்ள ஜனங்களும் பரவச நிலையில் ராமாயண கானத்தைக் கேட்கிறார்கள்.]

காட்சி 6

கிஷ்கிந்தை

தாரை: ருமா! சீதையின்மேல் சிறிதும் தவறு இல்லை. அவள் செய்ததுதான் சரி என்பது என் அபிப்பிராயம்.

ருமா: உடன் இருக்கவேணும் என்று புருஷன் விரும்பும்போது, அதை மறுத்துத் தங்கப் பதுமையை வைத்துக் கொண்டு திருப்தி அடை என்பதாகப் பண்பாடுடைய எந்த மனைவியாவது புருஷனைப் பார்த்துச் சொல்லலாமா?

தாரை: சீதையின் பிரபு வைகுண்டத்தில் இருக்கிறான். அவள் பிரபு இனி ராமசந்திரன் அல்ல. ராவணன் மாண்டதோடு திரு அவதாரம் முடிந்தது. புவியிலிருந்து அரக்கன் ஒழிந்ததுமே நாராயணனது அவதார வேலை தீர்ந்தது. ராவணனுடைய உயிரை மாய்க்க ராமனது அம்பு கிளம்பியதும், அவனது வைஷ்ணவ அம்சமும் அம்புடனே சென்று விட்டது.

ருமா: எனக்கு இது ஒன்றும் விளங்கவில்லை.

தாரை: உனக்கு விளங்காதுதான், ருமா! ஆனால் அருமை சீதையைக் குறை கூறாதே. அந்த இரட்டைக் குழந்தைகள் பாடும்போது ராமாயண கதை செவிக்கு என்ன அமிர்தமாக இருக்கிறது. என் அருமை வாலியை எண்ணி நான் அடையும் துயரத்தைக் கூட மறக்கச் செய்கிறது இந்தக் குழந்தைகளின் கானம்.

ருமா: அக்கா! உன் மன நிலை மிக உயர்ந்தது. முனிவர்களை விட உயர்ந்தவள் நீ.

தாரை: என்னைப் புகழ்ந்து என்னைக் குழப்பாதே. என் குடிசைக்கு நான் போக வேண்டும். அங்கு நாராயணனைப் பற்றியும் அவனது லீலைகளைப் பற்றியும் மேலும் ராமசந்திரன் செய்ததைவிட அதிசய லீலைகளைப் புரிந்து, மண்ணுலகில் மானிடர்கள் எப்படிக் காலம் கழிக்க வேண்டும், எப்படிக் கருமத்தைச் செய்ய வேண்டும், செய்து கொண்டே செய்யாமை விரதத்தை எப்படிக் காப்பது என்பதையெல்லாம் காட்ட வரப் போகும் ஆயர்குலத்துப் பாலகனைப் பற்றியும் எனக்குச் சொல்ல, ஜாம்பவான் காத்துக் கொண்டிருக்கிறார். நான் போய் வருகிறேன்.



செங்கோலும் ஜனநாயகமும்

க. சந்தானம்

3. பலாத்காரம்

எல்லா அரசாங்கத்துக்கும் ஆணி வேர் பலாத்காரம். அஹிம்சையை முற்றிலும் மேற்கொள்ளும் சமூகத்தில் எவ்வித ஆட்சியுமிருக்க முடியாது. இக் காரணத்தாலேயே காந்தியடிகள் அரசாங்கமில்லாத சமூக வாழ்க்கையைத் தமது அந்திம லக்ஷியமாகக் கருதினர்.

செல்வமே பலாத்காரத்துக்குக் காரணமென்றும், அதைப் பொதுமயமாக்கி விட்டால் பலாத்காரத்துக்கும் அதை வேராகக் கொண்ட அரசியலுக்கும் இடமிராது என்றும் பொது உடைமை மதஸ்தாபகர் கார்ல் மார்க்ஸ் போதித்தார்.

பிரஜைகள் சாதாரணமாகத் தங்களுக்குள் பலாத்காரத்தைப் பிரயோகிக்க லாகாது. அவர்களுக்காக அரசாங்கமே நன்கு விசாரணை செய்து பலாத்காரத்தை உபயோகித்துக் குற்றவாளிகளைத் தண்டித்தும், சட்ட திட்டங்களை அமுல் செய்தும் ராஜ்யத்தை நடத்த வேண்டும் என்பது நல்ல அரசியலின் மூல சூத்திரங்கள். இதற்கு ஒரே விதிவிலக்கு தத்துவரீதியில் ஒப்புக் கொள்ளப்படுகிறது. அக்கிரமமாக ஒருவன் மற்றொருவன் மீது பலாத்காரம் செய்யும்பொழுது அதைச் சர்க்கார் மூலம் தடுப்பதற்குச் சாவகாசமில்லாமலிருந்தால் தற்காப்புக்காகப் பலாத்காரத்தை உபயோகிக்கலாம். ஆனால் இந்த விதிவிலக்கை அடிக்கடி பிரயோகிக்க வேண்டி யிருப்பின், அந்த நாட்டின் அரசு பலமற்றதென்பது தெளிவாகும். தனி நபர்கள் மட்டுமின்றி, கட்சிகளும், ஜாதிக் கூட்டத்தாரும் தற்காப்பின் பெயரில் பலாத்காரத்தைப் பிரயோகித்தால் அந்த சமூகம் விரைவில் கலைந்துவிடும்.

பலாத்காரத்தை உபயோகிப்பது மனிதத் தன்மைக்கு விரோதமானது, அதைக் கருவியாகக் கொண்ட அரசியலால் நிலைபெற்ற நன்மை கிட்டாது என்று வாதிக்கலாம். மகத்தான பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அஹிம்சை மூலம் எதிர்த்துச் சுதந்திரம் பெற்ற பாரதம் ஏன் சைனியத்துக்காகவும், போலீஸ் படைகளுக்காகவும் நாட்டின் வரி வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு வீண் செலவு செய்ய வேண்டுமென்று சிலர் வினவுகின்றனர். இதெல்லாம் நியாயமான வாதமன்று. நூறு பேர்களில் ஒருவன் துஷ்டனாக இருந்து பலாத்காரப்படுத்தினால் அதை மற்றவர் சாத்விகமாகவே எதிர்க்க வேண்டுமென்பது சாத்தியமல்ல. தவிர, சமூகம் வயது வந்த ஆண்களை மட்டும் கொண்டதல்ல. குழந்தைகள், பெண்கள், வயோதிகர் அனைவரும் அடங்கியது. காமத்தாலும், குரோதத்தாலும், இதர துர்க்குணங்களாலும் மதியிழந்த முரடர்கள் அவர்கள் மீது பலாத்காரம் செய்தால் அதைப் பலவந்தமாகத் தடுக்கக் கூடாது என்ற சமூகம் நிலைத்திராது. பாரதத்தில் ஜைனர்கள் இல்லையா, அமெரிக்காவில் ரேகாபார் என்ற சிறிய சமூகத்தினர் இல்லையா என்று கேட்கலாம். இவர்களை அந்த நாட்டு அரசாங்கங்களும், இதர சமூகங்களும் காத்து வந்திருக்கின்றன.

பலாத்காரம் செய்பவர்களை அரசாங்கம் தண்டிக்கும் என்ற விதி இருந்தால் மட்டும் போதாது. பலாத்காரம் செய்வது மிருகத்தனமென்று உணர்ந்து பெரும்பாலோர் அதைப் பிரயோகிக்காமல் இருக்கும்பொழுதே, சர்க்கார் சிறுபாலரின் பலாத்காரத்தைத் தடுக்க முடியும். குழந்தைகளைப் பெற்றோர் அடிப்பதும், மனைவிகளைக் கணவர்கள் துன்புறுத்துவதும் பலநாடுகளில், சகஜமாக இருந்து வந்திருக்கிறது. அதைச் சர்க்கார் தடுக்க முடியவில்லை. அப்படிச் செய்வதற்குப் பெற்றோருக்கும், கணவர்களுக்கும் உரிமையுண்டு, அரசாங்கம் குடும்பத்தில் தலையிடக் கூடாது என்று இப்பொழுது கூடப் பலர் வாதிக்கின்றனர். இங்கிலாந்தில் பிரசித்தமான ரக்பி பள்ளிக்கூடத்தில் ஒரு காலம்பிரதம ஆசிரியராக இருந்து புகழ்பெற்ற ஆர்னல்ட் என்பவர் மாணவர்களைப் பிரம்பால் அடிப்பது கல்வியின் ஓர் முக்கிய சாதனமென்று நம்பினதாக பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் கூறியிருக்கிறார். ஐரோப்பாவில் மானபங்கம் செய்தவர்களுடன் நேரில் கத்தி அல்லது துப்பாக்கியோடு துவந்த யுத்தம் செய்வது சமீப காலம் வரையில் வழக்கத்திலிருந்து வந்தது.

ஒரு சமூகத்தின் அங்கத்தினர்கள் தனிமையில் பலாத்காரத்தைத் துறந்து அதை அரசாங்கத்திடம் மனப்பூர்வமாக விட்டுவிடுவதே மனித வளர்ச்சியில் பெரிய கட்டமாகும். தனியாக மட்டுமின்றி, மதம், ஜாதி, தொழில் முதலிய ஸ்தாபனங்களின் சார்பாகவும் அதைத் துறப்பது அடுத்தபடியாகும். எல்லா அரசாங்கங்களும் பரஸ்பரம் பலாத்காரத்தை உபயோகிப்பதில்லை என்று ஒப்பந்தம் செய்து, அதை ஓர் உலக ஸ்தாபனத்தினிடம் ஒப்புவிக்கும்பொழுது மனித சமூகம் உச்ச நிலையை அடைந்து விட்டதாகக் கூறலாம்:

அரசாங்கத்திடம் பிரஜைகள் பலாத்காரத்தை ஒப்புவிப்பது நியாயம், அவசியம். ஆனால் அதை அரசாங்கம் அக்கிரமமாகப் பிரயோகித்தால் என்ன செய்வது? அரசாங்கம் மனிதர் மூலமாகவே நடைபெற வேண்டும். அதில் சேவகம் செய்வோரில் சில 'துஷ்டர்களும், சுயநலக்காரர்களும் இருந்தே தீருவார்கள். சர்க்கார் வசமுள்ள பலாத்காரத்தை அக்கிரமமாகத் தமது காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளுவார்கள். தமக்கு வேண்டாதவர்களைத் துன்புறுத்துவார்கள். இதைத் தடுப்பதற்கு வழி என்ன வென்பதே அரசியல் சாஸ்திரத்தின் முக்கிய பாகம்?

ஏதேச்சாதிகாரத்தில், பிரஜைகள், சர்க்கார் சேவகர்கள் அனைவருக்கும் ஏதேச்சாதிகாரியிடம் பயமிருக்கும். அவன் நல்லவனாக இருந்தால், பிரஜைகள்மீது அக்கிரமம் நடப்பதைத் துரிதமாகத் தடுத்து அதற்குக் காரணபூதர்களை உடனே தண்டிக்க முடியும். பண்டைக் காலத்தில், தினந்தோறும் மன்னர்கள் சபை கூட்டிக் கொலுவிருப்பதும், அப்பொழுது பிரஜைகள் நேரில் தமது கஷ்டங்களைத் தெரிவித்துக் கொள்ளுவதும் வழக்கமாக இருந்தது. ஆனால் மன்னர்கள் வசிக்கும் நகரவாசிகளுக்குத்தான் இந்தச் சௌகரியம் இருக்கும். அது கூட மன்னனின் மனப்போக்கைப் பொருத்திருக்கும். இதற்குக் கோவலன் கதை நல்ல உதாரணம். பாண்டிய மன்னன் கோவலனைத் திருடனென்று என்



மைசூர் பாங்கின் ஜெனரல் மானேஜராகச் சிறப்பாகப் பணியாற்றி ஓய்வு பெறும்
ரு பி. வி. நாராயண ரெட்டி அவர்களைப் பாராட்ட ஆகஸ்ட் மாதம் நாலாம் தேதி ஒரு தேநீர்
ருந்து நடைபெற்றது. திரு ராம்நாத் கோயங்கா, திரு பி. நாகி ரெட்டி முதலிய பல பிரமுகர்
ளைக் கொண்ட பாராட்டுக் குழு இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தது. பிரதம நீதிபதி திரு
. வி. ராஜமன்னார் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி திரு நாராயண ரெட்டி அவர்களின் சேவை
யைப் பாராட்டினார். திரு கிருஷ்ணசாமி சர்மா, திரு சித்ரா நாராயணசாமி ஆகியோர் பேசி
னர்கள். திரு நாராயண ரெட்டி அவர்கள் உபசாரங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.
மாரி லலிதா ராவின் நடன நிகழ்ச்சியுடன் விழா இனிது முடிவடைந்தது. படத்தில் திரு ராஜ
ன்னார் அவர்களுக்கு அருகில் அமர்ந்திருப்பவர்தான் திரு பி. வி. நாராயணரெட்டி அவர்கள்.

ரியே கொலை செய்வித்தான். சரிவர லோசிக்காமல் உத்தரவிட்டதே அவன் வறு. சரியான விசாரணை பலர் கூடியிருக்கும் சபைகளில் சாத்தியப்படாது. வழக்கு, ாக்ஷியம், குற்றம் சாற்றப்பட்டவர்களின் திர் வாதம் முதலியவைகளை முறைப்படி சாரித்த பின்னரே சரியான தீர்ப்பு கூறுது நியாயமாகும்.

சட்டத்தை அனுசரித்தே அரசாங்கம் லாத்காரத்தை உபயோகிக்க வேண்டுமென்து அரசியல் முறை. ஆனால் சட்டங்கள் க்கிரமமாக இருந்து, அதை அமுல் செய்பவர்ளும் தீயவர்களாக இருந்தால் சர்க்காருக்கும் காள்ளைக்காரக் கூட்டத்துக்கும் வித்தியாச ல்லாமல் போய்விடும். ஹிட்லர், முசோனி முதலிய எதேச்சாதிகாரிகளின் அரசாங்ங்கள் முதலில் நல்ல முறையில் ஆரம்பித்த போதிலும் படிப்படியாகப் பலாத்காரப் பாதை மிகுந்த கொடுங்கோலாக முடிந்தன.

ஜனநாயகத்தில் அரசாங்கங்களுக்குப் பலாத்காரத்தைப் பிரயோகம் செய்வதில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. ரு கொலையாளியைக் கூட அடித்தோ, த்திரவதை செய்தோ துன்புறுத்தலாகாது. றையில் வைத்து, பட்சபாதமற்ற நீதிபதியின் மூலம் விசாரணை செய்த பிறகே ண்டிக்கப்பட வேண்டும். முற்காலங்களில் ால் கைகளை வெட்டுவது, கண்களைத் தோண்வது, காது மூக்குகளை அறுப்பது போன்ற காடிய தண்டனைகள் விதிக்கப்படுவதுண்டு. ப்பொழுது அவையெல்லாம் வெறுக்கப்பட்டு, சிறையில் அடைத்து வைப்பதும், அபராதமுமே சாதாரணத் தண்டனைகளாக இருக்கின்றன. கொலைக்கு மட்டுமே தூக்கு, அல்லது மின்சாரத்தால் மரண தண்டனை விதிக்கப்படுகிறது. அதுகூடத் தவறு, கொலையாளிக்குக் கூடத் தன் தவறை உணர்ந்து நல்லவனாவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமென்ற இயக்கம் வலுத்து வருகிறது.

தனிப் பிரஜையைப் பொருத்தவரையில், ஜனநாயகத்தில் பலாத்காரப் பிரயோகம் மிகவும் குறைக்கப்பட்டு, நாகரிக முறையில் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. வெளிநாடுகளோடும் பிரஜைகளின் குதூகலமான ஆதரவில்லாமல் ஜனநாயகம் போரில் இறங்குவது துர்லபம். ஆதலால் ஜனநாயகத்தின் முக்கிய பிரச்னை, அரசியல், மத, ஜாதி ஸ்தாபனங்களுக்கெதிராக எப்பொழுது, எவ்வளவு, எம்முறையில் பலாத்காரமான அடக்குமுறை பிரயோகிக்கலாமென்பதே. இது மிகவும் சிக்கலானதென்பதில் ஐயமில்லை. அதிகமாகப் பிரயோகித்தால் ஜனநாயகம் திரிந்து எதேச்சாதிகாரமாக மாறிவிடலாம். சரியான சந்தர்ப்பங்களில் போதுமளவில் பிரயோகிக்காவிட்டால் எதேச்சாதிகாரத்தில் நம்பிக்கையுள்ள கூட்டங்கள் ஜனநாயகத்தைக் கவிழ்த்துவிட்டு அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டு, தங்களுக்கு விரோதமான கட்சிகளையும், கூட்டங்களையும் பலாத்காரமாக அடக்கிக் கொடுங்கோல் அரசு புரியக்கூடும்.

ஜனநாயகத்தில் ஒரு கட்சியோ, கூட்டமோ, ஸ்தாபனமோ பலாத்காரத்தைப் பிரயோகித்

தால் அதை அடக்குவது நியாயமென்று பொதுவாக ஒப்புக் கொள்ளப்படும். ஆனால் அவ்விதம் எங்கும் செய்வதில்லை. சாத்விக வேஷம் போட்டுக் கொண்டு மறைமுகமாகப் பலாத்காரத்தை உபயோகிப்பதும், பலாத்காரத்தை உபயோகிப்போம் என்ற மிரட்டலாலே தம் காரியத்தைச் சாதிப்பதும் சகஜமாக இருக்கிறது. சந்தேகத்தின்பேரில் ஒரு கட்சியையோ, சங்கத்தையோ கலைப்பது நியாயமாகாது. பலாத்காரத்தை உபயோகிப்பதற்குத் தயார் செய்யும் வரையில் விட்டு வைக்கவும் முடியாது. நடுத்தரமாக சமயோசித நீதியைக் கடைப்பிடிக்க வேண்டும். பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்ட கட்சிகளால் ஏற்படக்கூடிய அபாயத்தை ஜனங்களுக்கு வற்புறுத்தி அவைகளுக்கு எதிராக அபிப்பிராயத்தைத் திரட்டுவது எவ்வித நடவடிக்கைக்கும் அவசியமான முதற்படியாகும். அதன்பின் ஆயுதங்களைத் தரிப்பதற்குத் தடை விதித்தும், சைன்ய ரீதியில் வாலிபர்களைப் பழக்குவதைத் தடுத்தும் பலாத்காரத்தை உபயோகிப்பது சிரமசாத்தியமாகச் செய்யப்பட வேண்டும். வேறு வழியில்லை என்று நிச்சயமான பிறகே கட்சிகள், ஸ்தாபனங்கள் மீது பலாத்கார நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

எவ்வளவு நேர்மையாக அரசாங்கம் நடைபெற்றாலும், ஜனநாயகத்தில் பலர் அதிருப்தி கொண்டிருப்பர். அதிகமான வரிச் சுமையால் பாதிக்கப்பட்டவர்கள், விசேஷச் சலுகைகள் பெற முடியாதவர்கள், அதிகாரம் செலுத்துவோர் மீது துவேஷம் கொண்டவர்கள் முதலியவர் அரசாங்க முறைகளை எதிர்க்கும் கட்சிகளில் புகுந்து கிளர்ச்சி செய்வார்கள். இதைத் தடுக்க முடியாது. அவர்கள் பலாத்காரத்தைப் பிரயோகிக்காத வரையில், தடுக்கவும் அவசியமில்லை. ஆனால் சமாதான பங்கம் விளையும் வகையில் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தி, அவற்றைத் தடுக்கும்படியாக சர்க்காரைப் பலவந்தப்படுத்தி, அப்பொழுது போலீசார் பலாத்காரத்தை உபயோகித்தால் பெரிய கூக்குரல் போடுவது அநியாய எதிர்க்கட்சிகளின் சாதாரணச் சூழ்ச்சி. இதற்கு ஓர் சரியான முறை கையாளுவது அவசியமாகும். எவ்வித ரயில்வே விபத்தையும் பற்றி விசாரணை செய்ய ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். விபத்தில் பிரயாணிகளோ ரயில்வே தொழிலாளர்களோ மாண்டால் ஓர் நீதிபதியைக் கொண்டு பொது விசாரணை நடத்துவதும் சம்பிரதாயமாகி விட்டது. அவ்வாறே போலீசார், குண்டு வீச்சாலோ தடியடியாலோ, புகையாலோ கூட்டங்களைக் கலைக்க வேண்டியிருந்தால் உடனே விசாரணை செய்வது, உயிர்ச்சேதம் ஏற்பட்டால் நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்துவது என்ற முறையைச் சட்டபூர்வமாக விதிப்பது நலம்.

வெளிப்பட்ட பலாத்காரத்தைக் காட்டிலும் அதனால் ஏற்படும் பயமே ஜனநாயகத்தில் அபாயகரமானது. முக்கியமாகத் தேர்தல் காலங்களில் வாக்காளர்களைப் பயமுறுத்தித் தங்கள் வாக்குகளை இஷ்டமில்லாத அபேட்சகர்களுக்குப் போடவோ, அல்லது வாக்குப் போட வராமல் இருந்து விடவோ செய்வது பல நாடுகளில் பழக்கமாக இருக்கிறது. தனக்கு வெற்றி சந்தேகமென்று தோன்றினால், ஆளும் கட்சி இவ்வித வழி தேடக் கூடும். எதிர்க் கட்சிகளும் அதைப் பின்பற்றும்; முடிவில் ஜனநாயகம் குலைந்து விடும். மக்களின் அறிவையும், தைரியத்தையும் தவிர்த்து இதற்கு மாற்று இல்லை.


வி. எல். நரசு



'' உங்களுக்கு முதன் மந்திரி பதவி வேண்டுமா? காலையில் எழுந்ததும் சுடச்சுட நல்ல காப்பி ஒரு டம்ளர் வேண்டுமா?'' என்று கேட்டால் தமிழ் நாட்டில் முக்கால்வாசிப் பேர்கள் '' இரண்டாவது சொன்னதுதான் வேண்டும் '' என்று சற்று சங்கோஜத்துடன் சொல்லி விடுவார்கள். காப்பிக்கும் தமிழ் நாட்டுக்கும் அப்படிப்பட்ட நீங்காத் தொடர்பை உண்டுபண்ணிய பெருமையில் ஒரு பெரும் பகுதி திரு வி. எல். நரசு அவர்களுக்குப் போய்ச் சேரும்.

சின்ன வியாபாரமாக ஆரம்பித்து அதைப் பிரமாதமாகப் பெருக்கிப் பெருஞ் செல்வந்தரானவர் திரு வி. எல். நரசு. காப்பிப் பொடி வியாபாரத்திலிருந்து சினிமா உலகத்திலும் பிரவேசித்து அதிலும் ஒரு நிலையான இடத்தை ஏற்படுத்திக் கொண்டவர்.

தமிழ்ப் பண்பும் இலக்கியப் பண்பாடும் உள்ளவர். 1944ம் ஆண்டில் தமிழ் நாட்டையே உயர்த்திய மகாகவி பாரதியார் ஞாபகார்த்த நிதி ஆரம்பித்த போது அந்த நிதிக்கு இரண்டாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கியதன் மூலம் பாரதியிடம் அவருக்கு இருந்த பக்தியை உணர்ந்து எல்லோரும் வியந்து போனார்கள். இப்படிப்பட்ட சிறந்த குணங்களைப் படைத்த திரு வி. எல். நரசு அவர்கள் சென்ற பதினேழாம் தேதி தமது அறுபத்திரண்டாவது வயதில் காலமானார் என்பதை அறிந்து வருந்துகிறோம். அவருடைய குடும்பத்தினருக்கும் சுற்றத்தாருக்கும் நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


ஆகஸ்டு 29ம் தேதி
அருணாசலம் ஸ்டுடியோ
ஆரம்ப
விழா
செப்டம்பர் 16 முதல்
அருணாசலம் பிக்சர்ஸ்
பெரிய
கோயில்
டைரக்ஷன் சங்கீதம்
A.K.வேலன் • K.V.மஹாதேவன்
P.கண்ணாம்பா..V.K.ராமசாமி
பிரேம் நசீர்..M.N.ராஜம்..T.R.நடராஜன்
எமது அடுத்த தயாரிப்பு
அருணாசலம் பிக்சர்ஸ்
அம்பலத்து
அதிசயம்
டைரக்ஷன்.. A.K.வேலன் சங்கீதம்.. K.V.மஹாதேவன்

பாரதத்தின் இன்றையப் பொருள் நிலையும் அதன் முக்கிய அம்சமாகிய அன்னியச் செலாவணி நெருக்கடியும் என்ற ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளைப் படித்து ரசித்த அன்பர்களிடமிருந்து வந்துள்ள நூற்றுக்கணக்கான கடிதங்களில் சிலவற்றைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். —ஆசிரியர்

அந்நியக் கடன்களும் அவற்றின் விளைவும்

அன்புள்ள சதாசிவம்,

உங்கள் பத்திரிகையில் வெளியாகிய அன்னியச் செலாவணி ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளை ஆங்கிலப்படுத்தச் சொல்லிப் படித்து மகிழ்ந்தேன். இந்த ஆராய்ச்சி அரங்கத்தை ஏற்பாடு செய்து நடத்தியதன் மூலம் நாட்டுக்குக் கல்கி பத்திரிகை மகத்தான சேவை செய்திருக்கிறதென்று நிச்சயமாகக் கூறுவேன். இதற்கு உங்களை மிகவும் பாராட்டுகிறேன்.

22, கர்ஜன் ரோட்
புது தில்லி

லர் ஸ்ரீராம்

★

ஆராய்ச்சிக் கட்டுரைகள் வடக்கே எங்கள் வர்த்தக சமூகத்தினரிடையே மிகுந்த பரபரப்பை உண்டாக்கி விட்டன. ஆங்கிலப் படுத்திப் படித்து மகிழ்ந்த எங்களுக்கே இப்படி இருந்ததென்றால் தமிழிலேயே படித்த தென்னிந்தியத் தமிழ் மக்களுக்கு இன்னும் எவ்வளவு உற்சாகத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியிருக்கும் என்பதை என்னால் ஊகிக்க முடிகிறது.

பம்பாய் - 1
18—8—58

ஆர். ஜி. ஸரய்யா
நவ்சாரி சாம்பர்ஸ்,
அவுட்ராம் ரோட்.

[திரு ஆர். ஜி. ஸரய்யா அகில இந்திய வர்த்தகசங்கத்தின் முன்னாள் தலைவர். இந்தியத் தொழிலதிபர்கள் வரிசையில் முன்னணியில் நிற்பவர். தொழில் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர். —ஆசிர்]

★

கல்கி பத்திரிகை அன்னியச் செலாவணி ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகள் மூலம் நாட்டுக்கும் வர்த்தக சமூகத்துக்கும் உயர்ந்த பணியைச் செய்திருக்கிறது. கட்டுரைகள் அனைத்தையும் நானும் என் தகப்பனாரும் படித்து மகிழ்ந்தோம். எங்கள் இருவரின் பாராட்டுதல்களையும் இத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எஸ். எம். ராமகிருஷ்ணராவ்

[ஸ்ரீ எஸ். எம். ராமகிருஷ்ணராவ் பங்களூரில் தொழில் பிரமுகர். மைசூர் பாங்கிலும், லைப் இன்ஷுரன்ஸ் கார்ப்பரேஷன், பங்களூர் டெலிபோன் இன்டஸ்ட்ரீஸ் முதலிய அரசாங்க ஸ்தாபனங்களில் டைரக்டர். அவரது தந்தை ஸ்ரீ மன்னுஜிராவ் அவர்களும் பங்களூரில் வர்த்தகத் துறையில் பெரிய பிரமுகர். —ஆசிர்]

உங்கள் ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளைப் படித்து மகிழ்ந்தேன். இந்த அரங்கத்தின்மூலம் தமிழ் மக்களுக்குக் கடினமான இவ் விஷயத்தைப் பற்றி உண்மையான அறிவைப் புகட்டியிருக்கிறீர்கள். இதை மக்கள் எல்லோரும் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்றே எண்ணுகிறேன். இதன் பயனாகத் தனியார்த் தொகுதியிலிருந்தும் அரசாங்கத்தின் நெருக்கடியைத் தீர்க்க ஒத்துழைப்பு பூரணமாகக் கிடைக்கும் என்பது என் நம்பிக்கை.

இந்த அரங்கத்தை நடத்தியதற்குக் கல்கியைப் பாராட்டுகிறேன். அவ்வப்போது மக்களுக்கு அறிவூட்டுவதற்காக நாட்டின் முக்கியமான இதர பிரச்னைகளைப் பற்றியும் இதே போல் ஆராய்ச்சி அரங்கங்கள் நடத்த வேண்டுமென்பது எனது விருப்பம்.

கல்கியின் சிறந்த சேவை மென்மேலும் உயரட்டும்; அதன் வளம் பெருகட்டும்.

அவினாசிரோட்
கோயமுத்தூர்

ஜி. கே. தேவராஜுலு

★

கல்கியில் சென்ற ஜூலை 13ந் தேதி இதழிலிருந்து வெளிவந்த ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளைப் படித்து மிக மகிழ்ச்சியுற்றேன். நமது நாட்டை எதிர்நோக்கியுள்ள அன்னியச் செலாவணிப் பிரச்னையை அலசி ஆராய்ந்துள்ளது இக் கட்டுரைகள். ஒவ்வொரு கட்டுரையும் ஒவ்வொரு வகையில் சிறப்புற்று விளங்குகிறது.

சாதாரண மக்களுக்கு அறிவூட்டும் வகையிலும், கொள்கைகளை உருவாக்கும் மேலிடத்தார்களுக்குப் பயன்படும் வகையிலும் பிரச்னைகளைத் தெளிவுடன் சரிவரப் புரிந்து கொள்வதற்கு ஏற்ற முறையிலும் அமைந்துள்ளது கல்கியின் ஆராய்ச்சி அரங்கம்.

கல்கி ஆராய்ச்சி அரங்கத்தில் தெளிவுடன் விளக்கப்பட்ட உயர்ந்த உண்மைகள் அனைத்தும் அரசாங்க வர்க்கத்தினர்கள் எல்லோரும் கவனிக்க வேண்டும். முக்கியமாக மத்திய சர்க்கார் நிதி இலாகா கவனித்து அவர்களுடைய கொள்கைகளைத் தகுந்த முறையில் மாற்றிக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

'கல்கி'க்கு என் மனமார்ந்த பாராட்டுகள்

பி. மருதப் பிள்ளை

1/17 நால்ஸ்ரோட்
கீழ்ப்பாக்கம், சென்னை

நிர்வாக டைரக்டர்,
செஞ்சுரி மாவுமில்
லிமிடெட்.

நான் பல சஞ்சிகைகளைப் படிக்கிறேன். பொருளாதாரத்தைப் பற்றிய முக்கிய கருத்துக்களை நமது தாய்மொழியில் சரிவரச் சொல்லுவது முற்றிலும் முடியாது என்று நினைத்திருந்தேன். முயன்றாலும் மிகவும் கடினம் என்றே எண்ணியிருந்தேன். உங்கள் ஆராய்ச்சி அரங்கத்தின் வாயிலாக ''இது அப்படி ஒன்றும் கடினமான விஷயமல்ல'' என்று நிரூபித்து விட்டதுடன், கடினமான விஷயங்களை எளிய நடையில், தெளிவாகவும் சாதாரண மக்களுக்குப் புரியும்படியாகவும் விளக்கி வைத்ததை நான் மிகவும் பாராட்டுகிறேன். பொருளாதார விஷயங்கள் பண்டிதர்கள் மட்டுமே பேசப்படும் விஷயம் என்பதைப் பொது மக்கள் யாவரும் பேசக்கூடிய விஷயமாக ஆக்கிவிட்ட உங்கள் பெருமையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

ராமாயணத்தையும் பாரதத்தையும் தந்து, குறளையும் அருள்வாக்கையும் பொழிந்து, இப்போது பாகவதத்தையும் பிழிந்து தருவதாக இருக்கும் உங்கள்—இல்லை எங்களது-'கல்கி'யைப் பாரதப் பண்பின் சின்னம் என்றேதான் கூறுவேன்.

பல்லாண்டுகளாகச் செய்து வரும் கல்கியின் சேவை மேலும் உயர்ந்து விளங்கட்டும்.

தேவகரன் நான்ஜி பாங்கிங்கம்பெனி பம்பாய்

எஸ். வி. சுப்ரமணியம்
பிரதம அகௌண்டெண்ட்

★

இந்த ஆராய்ச்சி அரங்கத்தின் வாயிலாகப் பல்வேறு துறைகளில் உழன்று கொண்டிருக்கும் தமிழ்மக்களுக்கு அறிவூட்டிச் சிறந்த பணியாற்றி இருக்கிறது உங்கள் பத்திரிகை. முன்னைக்காட்டிலும் சாதாரணத் தமிழனுக்கு இப்போது நமது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பற்றி அதிகமாகத் தெரியும்.

சமீபத்தில் நான் பேசிக் கொண்டிருந்த ஒருவர் ''கல்கி செய்த நற்பணியினால் நமது நெருக்கடி எத்தகையது? அதற்குப் பரிகாரங்கள் என்ன? என்பதைப் பற்றியெல்லாம் இப்போது எனக்குத் தெரியும்'' என்று மகிழ்வுடன் சொன்னார்.

''இட்டத்தைக் குறைத்துக் கொள்; ஏற்றுமதி செய் அல்லது அழிந்து போ; துணிக்குத் தகுந்தாற் போலத்தானே சட்டை தைக்க வேண்டும்'' என்றெல்லாம் சாதாரண மக்கள் இப்போது பேசுகிறார்கள்.

செலாவணி நெருக்கடி என்பது நிபுணர்களும் பாங்கர்களும் அரசியல்வாதிகளும் அறைக்குள் விவாதிக்கும் விஷயம் அல்ல. இதைத் தெருவில் போகும் மனிதனும் விவாதிக்கலாம் என்று செய்து விட்டது கல்கி பத்திரிகை.

இந்த மறுமலர்ச்சிக்கு உங்கள் பத்திரிகைதான் காரணம்; இம்மாதிரி நாட்டின் முக்கிய பிரச்னைகளைப் பற்றி மக்களுக்கு அறிவூட்டும் பணியில் உங்கள் முயற்சி எப்போதும் வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை.

கல்கிக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கி, தலைமை அலுவலகம், சென்னை

வி.பி. துரைக்கண்ணு
ஜெனரல் மானேஜர்

ஆராய்ச்சி அரங்கத்தில் வெளியான கட்டுரைகள் எல்லாம் முதல்தரமானவையாக இருக்கின்றன. சிந்தனையைத் தூண்டுபவை. இந்த முக்கியமான பிரச்னையை மக்களின் கவனத்துக்குக் கொண்டு வந்ததன் மூலம் தென்னிந்தியாவுக்குக் 'கல்கி' உன்னதமான சேவை செய்திருக்கிறது.

சென்னை
19-8-58

டி. எஸ். சாஸ்திரி
சென்ட்ரல் பாங்கி
ஆப் இந்தியா லிமிடெட்

★

நான் பொருளாதாரத் துறையில் பண்டிதன் அல்ல. பத்திரிகை நுணுக்கங்களும் தெரிந்தவனல்ல. எனினும் உங்கள் ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகள் ஒவ்வொன்றையும் நான் ஆங்கிலத்தில் மிகக் கவனத்துடனும் அக்கறையுடனும் படித்து மகிழ்ந்தேன். இக்கட்டுரைகளை நீங்கள் வழங்கியிருக்கும் மாதிரியே இவற்றின் சிறப்பை மேலும் உயர்த்தி யிருக்கிறது.

சென்னை-1
16—8—58

கே. டி. பேகர்
மானேஜர், லாயிட்ஸ் பாங்க், லிட்.

★

அன்னியச் செலாவணி நெருக்கடியைப் பற்றிக் கல்கி ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் படித்து மிகவும் மகிழ்ந்தேன்.

இந்தக் கட்டுரைகள் அனைத்தையும் ஒரு புத்தக வடிவில் அச்சிட்டு வினியோகித்தால் மிகவும் பயனளிக்கும்.

பம்பாய்-1
16—8—58


போத்தன் பிலிப்
இந்திய விளம்பரதாரர்கள் சங்கம்

[ஆகஸ்டு கடைசியில் புத்தகங்கள் - தமிழிலும், ஆங்கிலத்திலும் - தயாராகும். விலை பிரதி ஒன்று 75 நயா பைசா. — ஆசிரியர்]

★

ஜனநாயக நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் ஒரு அரசியல்வாதி. நாட்டின் பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளை அவர்கள் ஒவ்வொருவரும் அறிய வேண்டுவது அவசியம். அதற்கு உதவும் வகையில் பொருளாதாரக் கட்டுரைகள் வெளியிட்ட 'கல்கி'யின் சேவை சிறந்தது. அதிலும், அன்னிய நாட்டுச் செலாவணியில் ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் செய்யப்பட்ட இந்தச் சேவை, காலம் அறிந்து செய்த சேவை ஆகும். எனவே இதன் சிறப்பு இரட்டிப்பு மடங்கு ஆகிறது.

கட்டுரைகள் வழங்கிய அறிஞர்கள் அனைவரும் மிகவும் சிரமமான விஷயத்தை எல்லோருக்கும் புரியும்படியான எளிய நடையில் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். இதற்காகக் 'கல்கி'யும், 'கல்கி' வாசகர்களும்



பாரகன் துணி ஆலையின் அதிபர் திரு எஸ். எம். மேத்தா ஐரோப்பாவுக்கும், இங்கிலாந்துக்கும் தொழில் நிமித்தமாக ஏர் இந்தியா இண்டர் நேஷனல் விமானத்தில் தம் குடும்பத்தாரோடு சென்றிருக்கிறார்.

இந்த அறிஞர்கள் ஒவ்வொருவருக்கும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இறக்குமதி இயந்திர சாதனங்களின் விலை எதிர்பார்த்ததைவிட உயர்ந்து விட்டது. நம் நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களான தேயிலை, சணல், துணி ஆகியவற்றுக்கு, இதர நாடுகளின் போட்டி காரணமாக, போதுமான வரவேற்பு இல்லை. இந்த நிலைமை சமீபத்தில் மாறும் என்று தோன்றவில்லை. எனவே, அனாவசியமான இறக்குமதிகளைக் குறைத்து, வெளிநாட்டில் கிராக்கி ஏற்படுத்தக் கூடிய ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்து, ஏற்றுமதியைப் பெருக்குவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

உள்நாட்டு உணவு உற்பத்தியைப் பெருக்கினால், இந்த இனம் சம்பந்தப்பட்டவரை இறக்குமதியை அடியோடு தவிர்த்து விடலாம். நான் அறிந்தவரை விவசாயம் லாபகரமான தொழிலாக என்றும் இருந்ததில்லை. அதோடு அரசாங்கத்தின் நிலச் சீர்திருத்தக் கொள்கைகளும், விவசாயிக்கு உதவுவதாக நினைத்துக் கொண்டு செய்யப்பட்ட அவசரச் சட்டங்களும், இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களை உற்சாகம் இழக்கச் செய்து விட்டன. இந்த நிலைமை நீடிப்பது விரும்பத் தக்கதல்ல. இவற்றையெல்லாம் கவனித்துத் தேவையானவற்றைச் செய்வதுடன், விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உற்சாகம் ஏற்படும் வகையில் உதவிகள் செய்ய வேண்டும். டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் கூறியிருப்பதைப் போல நல்ல விதை, ரசாயன உரம்; மற்றும் இவை போன்ற விவசாய உற்பத்திப் பெருக்குக்கு வேண்டிய பொருள்களை விவசாயிகளுக்குக் கொடுத்து உதவ வேண்டும். கட்சி நலனுக்காக விவசாயிகள் பிரச்னைகளைச் சிருஷ்டித்து விடும் அரசியல் கட்சிக்காரர்களும் நிலைமையின் தன்மையை உணர்ந்து நாட்டு நலனுக்கான வழிகளில் ஈடுபட வேண்டும். பாதுகாப்பு இனத்துக்காக அதிகம் செலவாகிறது என்பதையும் காண்கிறோம். நாம் வளர்த்துவிட்ட பாகிஸ்தான் பூதம் நம்மீது எப்பொழுது பாயுமோ என்று பயந்து கொண்டிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதுதான் பாதுகாப்புச் செலவு அதிகமானதற்குக் காரணம். அதோடு நாட்டில் அடிக்கடி தோன்றும் தேவையற்ற கிளர்ச்சிகள், குழப்பங்களும் காரணம். பாகிஸ்தான் படிப்பினையிலிருந்து நாம் பாடம் கற்றதாகத் தெரியவில்லை. பழுத்த ராஜ தந்திரிகள் முதல் நேற்று தோன்றிய அரசியல்வாதி வரை, சுயலாபம் காரணமாக; இன, மொழி, வர்க்க உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, வேண்டாத வேலைநிறுத்தங்கள், கலவரங்களுக்கு வித்திட்டுக் கொண்டிருப்பது நம்முடைய நாட்டின் துரதிர்ஷ்டமாகும்.

டாக்டர் பி. ஜே. தாமஸ் கூறும், ''அதிகமாகப் பேசுவதைக் குறைத்துக் கொண்டு செயலில் அதிகமாக ஈடுபட வேண்டும்'' என்ற யோசனையை ஒவ்வொருவரும் நினைவில் நிறுத்திக்கொள்வது நல்லது.

''ஏற்றுமதிப் பெருக்கத்துக்கு வியாபாரிகள் மூலம் ஏற்றுமதியைப் பெருக்க வேண்டும். அதற்கு இந்தியாவில் தயார் செய்யும் சாமான்களின் விலையைக் குறைக்க வேண்டும். குறைப்பதற்கு வழியின்றிக் குறுக்கிடுவது தொழிலாளரின் பிடிவாதம். தங்களுடைய எதிர்கால முன்னேற்றத்தையும் பாராமல், தங்கமுட்டை இட்ட வாத்தைக் கொன்றவன் போல், அன்னியர் பேச்சில் மயங்கி நிற்கின்றனர் தொழிலாளர். தொழிலாளருடைய தலைவர்கள் தொழிலாளிகளாகவே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அரசியல் முறையில் உழலாத நல்ல தொழிலாளர் தலைவர்கள் தோன்றுவார்கள்'' என்று ஸ்ரீ எஸ். ஒய். கிருஷ்ணசாமி கூறியிருப்பது எல்லாரும் சிந்திக்க வேண்டிய விஷயமாகும்.

அன்னிய நாடுகளின் போட்டியைச் சமாளிக்க நம் நாட்டுப் பொருள்களைப் பற்றி வெளிநாடுகளில் தகுந்த முறையில் விளம்பரம் செய்ய வேண்டுவதும் அவசியம்.

உள்நாட்டுப் பொருளாதார அபிவிருத்திக்காக ஸ்ரீ எஸ். என். ஹாஜி கூறியுள்ள கரையோரக் கப்பல் வர்த்தகப் பிரச்னையும் கவனிக்கத் தக்கதாகும்.

நம்மால் இயன்ற முயற்சிகள் அனைத்தையும், பொருளாதார அறிஞர்கள், தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் மேற்கொள்வதுடன், தேவையான அன்னிய நாட்டு உதவியையும் பெற்றால் நெருக்கடியைச் சமாளித்து விடலாம்.

'கல்கி' கடந்த ஆறு வாரங்களாக மேற்கொண்டு செய்த சேவை மகத்தானது.


நாட்டு நலனுக்கான இத்தகைய சேவைகளைத் தொடர்ந்து செய்துவர 'கல்கி' நீடூழி வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன்.

சென்னை
18—8—58

எஸ். ராமசந்திரன்
எபிஷியண்ட் பப்ளிசிட்டிஸ் லிமிடெட்



நான் பீ. ஏ. பரீக்ஷையில் அதிக மார்க்குகளுடன் தேர்ச்சி பெற்றேன்



போர்ன்-விடாவுக்கு எனது நன்றி

படிப்பில் என்னால் கவனமே செலுத்தமுடியாமலிருந்தது. உற்சாகமற்று களைப்புடன் இருந்தேன். நான் பீ. ஏ. பரீக்ஷையில் பாஸ் செய்யமாட்டேன் என்று எனது உபாத்தியாயர் சொன்னார். எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போய்விடும்போல் இருந்தது. அதுசமயம்தான் என் தாய் **போர்ன்-விடா**வைப் பற்றி என்னிடம் சொன்னாள். தினந்தோறும் இரவில் படுக்கப்போகுமுன் **போர்ன்-விடா** சாப்பிட்டு வந்தேன். வெகுசீக்கிரத்தில் என் உடம்பில் சக்தி ஊற ஆரம்பித்தது. நான் பீ. ஏ. பரீக்ஷையில் அதிக மார்க்குகளுடன் தேர்ச்சி பெற்றேன். அத்துடன் வெளிநாட்டுக்கு சென்று மேல் படிப்புக்கான ஸ்காலர்ஷிப்பையும் பெற்றேன். **போர்ன்-விடா**வுக்கு எனது நன்றி. எங்கள் குடும்பத்தில் எல்லோரும் தினமும் இரவில் படுக்கப் போகுமுன் **போர்ன்-விடா** சாப்பிடுகிறோம்—உங்களுக்கும் பலத்தையும், வலிமையையும் **போர்ன்-விடா** கொடுக்கும் என்பதை நாங்கள் நிச்சயமாக அறிவோம்.




For Strength and Vigour

BOURN-VITA

MADE BY *Cadbury's*


வாழ்க



திரு நடராஜனுக்கும் சௌ. ராஜலக்ஷ்மிக்கும் சென்னையில் ஜூலை மாதம் 6-ந் தேதி வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.




மேட்டூர் மின்சார சூப்பரின்டென்டிங் இன்ஜினியர் திரு எஸ். பத்மநாபன் அவர்களின் புதல்வி சௌ. ரமாமணிக்கும் திரு குஞ்சிதபாதத்துக்கும் விவாகம் நடந்தது.



திரு எஸ். எஸ். கல்யாண சுந்தரம் அவர்களின் புதல்வர் திரு சங்கரனுக்கும் சௌ. மங்களாம்பாளுக்கும் திருவையாற்றில் திருமணம் நடந்தது.



சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர் அவர்களின் பேத்தி சௌ. கமலாவுக்கும் திரு நடராஜனுக்கும் விவாகம் வெகு விமரிசையாக நடந்தேறியது.



திரு வி.என். ராவ் அவர்களின் மருமான் சௌ. ராதாவுக்கும், திரு ராஜாராமனுக்கும் மைசூரில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.




திருப்பூர் போஸ்ட் மாஸ்டர் திரு விஸ்வநாதனுக்கும் சௌ. மீனாக்ஷிக்கும் சிதம்பரத்தில் வெகு விமரிசையாக விவாகம் நடந்தேறியது.


மணமக்கள்




பம்பாய் விமானப் படையைச் சேர்ந்த திரு ஏ. எஸ். சீனிவாசன் அவர்கள் சௌபாக்கியவதி விஜயலக்ஷ்மியை மணம் புரிந்து கொண்டார்.



பம்பாய் திரு எஸ். சீனிவாசய்யர் புதல்வி சௌ. வனஜாவுக்கும் திரு ராமமூர்த்தி பி. எஸ்ஸி. க்கும் திருவண்ணாமலையில் திருமணம் நடைபெற்றது.



திரு ஏ. சீனிவாசன் அவர்களின் புதல்வர் திரு ஏ. எஸ். ராமரத்தினத்துக்கும் சௌ. சுசீலாவுக்கும் விவாகம் சிறப்பாக நடைபெற்றது.



பாரி கம்பெனி உதவி மானேஜர் திரு ராமலிங்கத்தின் புதல்வி சௌ. வத்ஸலாவுக்கும், திரு எம். வி. சோமசுந்தரத்துக்கும் கடலூரில் திருமணம் நடந்தது.



திரு எம். நாகராஜன் அவர்களின் சகோதரர் திரு கே. எம். சுப்பிரமணியத்துக்கும், சௌ. மீனாக்ஷிக்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.



திரு வரதராஜுலு நாயுடு அவர்களின் புதல்வி சௌ. செல்வராணிக்கும், திரு எஸ். வி. தீனதயாளனுக்கும் சென்னையில் திருமணம் நடந்தது.

அத்தியாயம் 17

தளபதிக்குப் புரியாதது!

நாராயணன் சேந்தனும், மகாமண்டலேசுவரரும், விளக்கோடு, தான் நின்று கொண்டிருந்த பக்கமாகத் திரும்பியபோது, "ஐயோ! இப்போது இங்கே இவர்கள் பார்ப்பதைக் காட்டிலும் இந்தச் சுரங்கத்துக் கற்பாறைகள் மேலிருந்து மொத்தமாக இடிந்து விழுந்து என்னை இப்படியே அமுக்கி விட்டாலும் பரவாயில்லையே! அகப்பட்டுக் கொண்டால் மகாமண்டலேசுவரர் என்னைப் பற்றி எவ்வளவு கேவலமாக நினைப்பார்? நான்தான் அவர் முகத்தில் எப்படி விழிப்பேன்? எதற்காக, எந்த விதத்தில், இந்தச் சுரங்கப் பாதைக்குள் இறங்க நேர்ந்ததென்று சமாதானம் சொல்லிச் சமாளிப்பேன்? நான் என்ன சொன்னாலும் தான் என்ன? அவர் நம்பவா போகிறார்?" என்று இப்படி எத்தனை எத்தனை எண்ணங்கள் தளபதி வல்லாளதேவனின் மனத்தில் தோன்றின தெரியுமா?

இவ்வளவு தூரத்துக்கு அவர்கள் நெருங்கி வந்து விட்டபின் தான் தப்ப முடியுமென்ற நம்பிக்கையே செத்துவிட்டது, அவன் மனத்தில். அந்த நிலையிலும் மனிதனுக்கு இயற்கையாக ஏற்படுகின்ற தற்காப்பு உணர்ச்சியும், பயத்தின் தூண்டுதலும் தருகின்ற சுயபலம் அவனைக் கைவிட்டு விடவில்லை.

தன்னையறியாமலே மெல்ல மெல்லப் பின்னுக்கு நகர்ந்து கொண்டிருந்தான் அவன். பத்துப் பன்னிரண்டு பாக தூரம் பின்னுக்கு நகர்ந்த பின் ஒரு பாறை இடுக்கில் வல்லாளதேவன் ஒட்டிப் பதுங்கிக் கொண்டான்.

சுரங்கப் பாதைத் திருப்பத்துக்கு வந்ததுமே நாராயணன் சேந்தனும், மகா மண்டலேசுவரரும் நின்று விட்டனர். "இந்த இடத்தில் தான் யாரோ நிற்பது போலத் தெரிந்தது. இப்போது பார்த்தால் ஒருவரையும் காணோம். ஒருவேளை என் கண்களுக்கு மட்டுமே தெரிந்த வெறும் பிரமையோ?" என்றார் இடையாற்றுமங்கலம் நம்பி.

"சுவாமி! அப்படி நம்மைத் தவிர வேற்றவர் எவரும் இந்த மாளிகையில் நுழைந்திருக்க வழியில்லையே!" என்று நாராயணன் சேந்தன் அவருக்குப் பதில் கூறினான்.

"எனக்கொரு சந்தேகம் உண்டாகிறது, சேந்தா! தளபதி வல்லாளதேவனை விருந்தினர் மாளிகைக்குக்



பாண்டிமா தேவி



நா. பார்த்தசாரதி

கொண்டு போய்த் தங்கச் செய்தாயே? அவன் நீ அங்கிருக்கும்போதே படுத்து உறங்கத் தொடங்கி விட்டானோ? அல்லது விழித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தானா?'' என்று இருந்தாற் போலிருந்து எதையோ நினைத்துக் கொண்டு கேட்பவர் போலக் கேட்டார் இடையாற்றுமங்கலம் நம்பி.


''சுவாமி! தளபதி வல்லாள தேவனைப் பற்றி நீங்கள் சிறிதும் சந்தேகப் படவேண்டாம். அவர் இந்நேரத்தில் விருந்து மாளிகையில் சுகமாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருப்பார்!'' என்று நாராயணன் சேந்தன் பதில் கூறியபோது மறைவாகப் பதுங்கியபடி அவர்களுக்குள் நிகழ்ந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த தளபதிக்குச் சிரிப்பு பொங்கிக் கொண்டு வந்தது.

''சரி! அப்படியானால் இங்கே தளபதி வந்து நிற்பதுபோல் என் கண்களுக்குத் தென்பட்ட தோற்றம் வெறும் பிரமையாகத்தான் இருக்கும். வீண் மனச் சந்தேகத்தால் ஏற்பட்ட நிழல் உருவம்தான். அப்படியே இங்கே ஆள் வந்திருந்தாலும் அதற்குள் நம் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு எங்கே ஓடியிருக்க முடியும்?'' என்று கூறிவிட்டு அவனையும் அழைத்துக் கொண்டு திரும்பி நடந்தார் மகா மண்டலேசுவரரான இடையாற்றுமங்கலம் நம்பி.

அவர்கள் அந்தச் சுரங்கப் பாதையின் திருப்பத்திலிருந்து திரும்பி முன்பு நின்று கொண்டிருந்த இடத்துக்குப் போனபோதுதான் அசுர வேகத்தில் அடித்துக் கொண்டிருந்த தளபதியின் நெஞ்சு சுபாவ நிலைக்கு வந்தது. ''இந்த நாராயணன் சேந்தன் நீடூழி வாழ்க! நான் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருப்பதாக இவன் மட்டும் சொல்லியிரா விட்டால் மகா மண்டலேசுவரரின் சந்தேகம் இலேசில் அவரை விட்டு நீங்கியிருக்காது. சுரங்கப்பாதை முழுவதும் விளக்கோடு தேடி என்னைக் கண்டிருப்பார்!'' என்று தனக்குள் எண்ணிக் கொண்டான்.

இப்படி மகிழ்ந்து பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும்போதே இன்னொரு சந்தேகமும் பீதியும் அவன் மனத்தில் கிளம்பி அவனைப் பயமுறுத்தத் தொடங்கி விட்டன. 'இடையாற்றுமங்கலம் நம்பி முதலியவர்கள் இந்தப் பாதாள மண்டபத்திலிருந்து மேலே ஏறிப் போவதற்கு நீ நின்று கொண்டிருக்கும் இதே வழியாகத்தானே திரும்பி வருவார்கள்! அப்போது என்ன செய்வாய்? அதற்குள் நீ வந்தவழியே திரும்பி மேலே போகாவிட்டால் நிச்சயமாக அவர்கள் உன்னைப் பார்த்துவிடப் போகிறார்கள். நீ அவர்களிடம் நிச்சயம் அகப்பட்டுக் கொள்ளத்தான் போகிறாய்' என்று தளபதி வல்லாள தேவனுடைய உள் மனம் அவனை எச்சரித்தது.

'அடாடா! இதுவரை இந்த யோசனையே நமக்கு ஏற்படவில்லையே! நான் நின்று கொண்டிருக்கும் இடத்துக்கு அவர்கள் திரும்பி வருவதற்குள் நான் மேலே ஏறிப்போய்விட வேண்டும்' என்று எண்ணியவனாய்ப் பதுங்கிக் கொண்டிருந்த இடத்திலிருந்து மெல்ல எழுந்தான் தளபதி வல்லாளதேவன்.



அவன் அப்படி எழுந்திருந்து திரும்புவதற்குத் தயாரான நிலையில் கடைசி முறையாக அவனுடைய விழிகள் பாதாள மண்டபத்துப் பக்கமாகத் திரும்பிப் பார்த்தன. அப்போது சிறிது நேரத்துக்கு முன் தன் மனம் எண்ணியதற்கு மாறாக அவர்கள் வேறோர் புதுப் பாதை வழியே மேலே ஏறிச் சென்று கொண்டிருப்பதை அவன் கண்டான்.

அவன் நின்று கொண்டிருந்த இடம் பாதாள மண்டபத்தின் கிழக்குக் கோடி மூலை. அந்த மூலையில்தான் மேலே பளிங்கு மேடையில் கொண்டு போய்விடும் சுரங்கப் பாதை ஆரம்பமாகிறது.

மறுபக்கம் மேற்குக் கோடி மூலையில் அதேபோல் ஒரு படிக்கட்டு சரிவாக மேலே நோக்கி ஏறிச் சென்றது. அந்தப் படியில் நாராயணன் சேந்தன் தீபத்தைப் பிடித்துக் கொண்டு முன்னால் செல்ல அவனுக்குப் பின் இடையாற்றுமங்கலம் நம்பி, குமார பாண்டியர், அவருக்கு அருகில் சிரித்துப் பேசிக் கொண்டு செல்லும் குழல்மொழி,—ஆக நால்வரும் மேலே ஏறிச் சென்று கொண்டிருப்பதைத் தளபதி வல்லாள தேவன் பார்த்தான்.

மேல்கோடியிலிருந்து உயரச் செல்லும் அந்தப் படிக்கட்டு வழி எங்கே கொண்டு போய்விடுவதாயிருக்கும் என்று அவனால் தீர்மானிக்க முடியவில்லை. அந்த ஒரு கணத்தில் அவனுடைய மனம் முழுவதும் நிறைந்திருந்த ஆவல் ஒன்றே ஒன்றுதான். அங்குள்ள மர்மங்களையும் இரகசியங்களையும் ஒரே மூட்டாகப் புரிந்து கொண்டுவிட வேண்டுமென்ற ஆசைதான் அது.

அவர்கள் கண் பார்வைக்கு மறைகின்றவரையில் பொறுத்திருந்து விட்டு அடக்க முடியாத ஆசையுடன் பாதாள மண்டபத்துக்குள் அடியெடுத்து வைத்தான் அவன். ஆனால் அவன் நினைத்தபடி அப்போது அங்கே எதையும் பார்க்க முடியவில்லை. அங்கே இருந்த ஒரே ஒரு தீபத்தையும் நாராயணன் சேந்தன் போகும்போது மேலே எடுத்துக் கொண்டு போய் விட்டதனால் மண்டபம், அதிலிருந்து கிழக்கேயும் மேற்கேயும் செல்லும் வழிகள் யாவும் பழையபடி பயங்கர அந்தகாரப் போர்வையில் மூழ்கி விட்டிருந்தன.



'இந்த மகாமண்டலேசுவரர் மாளிகையில் வந்து என்னுடைய மூளையே குழம்பிப் போய்விட்டதா? முன்யோசனையோ, விளைவோ தெரியாமலே ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே போகிறேனே! பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காக அல்லவா முடிந்து விட்டது? வெளியேறுவதற்கு வழி கூடத் தெரியாத மையிருட்டில் இந்த மண்டபத்துக்குள் நுழைந்து மாட்டிக் கொண்டேனே!' என்ற மனத் தவிப்புடன் இருட்டைத் துழாவினான் வல்லாள தேவன்.

ஒரு முறை அங்கே குவிந்திருந்த கேடயங்களின் குவியலில் மோதி நிலை குலைந்து தடுமாறி விழுந்தான் அவன். அப்போது நூறு வெண்கலக் கடைகளில் ஆயிரமாயிரம் மத யானைகள் புகுந்து அமளி செய்தாற் போன்ற அவ்வளவு ஒலியும் எதிரொலியும் அங்கே உண்டாயின. தளபதி நடுங்கிப் போனான். இவ்வளவு பெரிய ஓசை மேலே இருப்பவர்களுக்குக் கேட்காமலா போகும்? அவன் மனக்கண்களுக்கு முன்னால் அவனாகவே ஒரு காட்சியைக் கற்பனை செய்து கொண்டு பார்த்தான்.

அந்த ஓசையைக் கேட்டு நாராயணன் சேந்தனும், எமகிங்கரர்களைப் போன்ற நாலைந்து வீரர்களும் கையில் உருவிய வாள்களோடு சுரங்கத்துக்குள் இறங்கி ஓடி வருகிறார்கள். அவர்களைப் பார்த்ததும், "ஐயோ! நான் ஒரு குற்றமும் செய்யவில்லை. தெரியாமல் இதற்குள் இறங்கி வந்து விட்டேன். என்னை ஒன்றும் செய்யாதீர்கள். விட்டு விடுங்கள். தயவுசெய்து இது மகா மண்டலேசுவரருக்குத் தெரிய வேண்டாம்!" என்று நாராயணன் சேந்தனின் கைகளைப் பிடித்துக் கொண்டு அபயக் குரலில் கெஞ்சுகிறான் அவன்.

குட்டைக் கரும் பேய் போல் குரூரமாகத் தன் பெரிய கண்களை விழித்துப் பார்க்கும் நாராயணன் சேந்தன், "அதெல்லாம் முடியாது! தளபதியாயிருந்தால் என்ன? யாராயிருந்தால் என்ன? உரிமைகளைத் தவறாகப் பயன் படுத்திக் கொண்டவர்களை, அவர்கள் யாராக இருந்தாலும் சரி, இங்கிருந்து உயிரோடு தப்ப விடுகிற வழக்கம் எங்கள் மகா மண்டலேசுவரரிடம் இடையவே கிடையாது!" என்று தீர்த்தாட்சண்யமான கடுமை நிறைந்த குரலில் பதில் சொல்லுகிறான்.

அந்தப் பாதாள மண்டபத்தில் ஊசி நுனி இடமும் விடாமல் சுற்றிப் பார்த்து எல்லா மர்மங்களையும் தெரிந்து கொண்டுவிட வேண்டுமென்று அவன் மனத்தில் பொங்கி எழுந்த ஆவல் இப்போது இருந்த இடம் தெரியாமல் வற்றிப் போய் விட்டது.

ஆனால் என்ன துரதிர்ஷ்டம்? அந்த வழியின் படிக்கட்டு இருந்த திசை புரியாமல் மண்டபத்துக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான் அவன். "சரி! விடிகிறவரை இப்படியே சுற்றி அலைக்கழிந்து கொண்டிருக்க வேண்டியதுதான். விடிந்தால் மட்டும் என்ன; இதற்குள் வெளிச்சமா வரப்போகிறது? இதற்குள் பகலானாலும், இரவானாலும் ஒரேமாதிரிதான் இருக்கப் போகிறது"— என்று எண்ணிப் பரிதவிப்பின் எல்லைக்கு அவன் மனம் வந்து விட்ட போதில் அந்த வழி கால்களில் இடறியது. "அப்பா! பிழைத்தோம்!" என்று எண்ணி மேலே ஏறிச் சென்றான்.

அந்தச் சுரங்கப் பாதையில் தவித்துத் தடுமாறி இறுதியாக வசந்த மண்டபத் துத் தோட்டத்திலுள்ள இடிபாடடைந்த கோவிலுக்குள் வந்து நின்றான். அந்த வழி அவனை அங்கேதான் கொண்டு வந்து விட்டது.

தனக்கு முன்னால் மகாமண்டலேசுவரர், இளவரசர் ஆகியோர் ஏறி வந்த வழி அதுதானா? அல்லது அவர்கள் ஏறிச் சென்ற வழி வேறொன்றா? என்று சந்தேகமாயிருந்தது அவனுக்கு. அங்கு நின்று சிந்தனைகளில் லயித்துத் தடுமாறியது அவன் உள்ளம்.

"எதற்காக இந்த ஏற்பாடுகள்? இவ்வளவு மறைவாக ஆயுதங்களையும் போர்க்கருவிகளையும் சேகரித்து வைக்க வேண்டிய அவசியம் என்ன? தென்பாண்டி நாட்டுக் கூற்றத் தலைவர்களுக்கும், படைகளுக்கெல்லாம் பொறுப்பாளியாக இருக்கும் எனக்கும், மகாராணியாரைப் போன்று நாட்டின் உரிமையைச் சொந்தமாகக் கொண்டிருப்பவருக்கும் தெரியாமல் இவ்வளவு மறைவான காரியங்களை எந்த ஒரு அந்தரங்க நோக்கத்துடன் இவர் செய்து கொண்டிருக்க முடியும்? இவைதான் போகட்டும்! இவற்றுக்காகவெல்லாம்கூட இந்த மனிதரை மகாராணி வானவன்மாதேவியாரின் பெருந்தன்மை மிகுந்த உள்ளம் மன்னித்து விடுவதற்குத் தயங்காது.

"ஆனால் மகாராணியாரின் உயிருக்குயிரான புதல்வராகவும் எதிர்காலத்தில் முடிசூடி இந்த நாட்டை ஆள வேண்டியவராகவும் இருக்கும் குமாரபாண்டியர் ஈழத் தீவுக்கு ஓடி விட்டதாகப் பொய்ச் செய்தியைப் பரவவிட்டு அதைத் தாமும் நம்புவது போல் நடித்துக் கொண்டிருக்கும் இந்த மனிதர்

அதே இளவரசரை உலகத்துக்குத் தெரியாமல் தம்முடைய மாளிகையில் ஒளித்து வைத்துக் கொண்டு ஏமாற்றுவதின் மர்மம் என்ன? இளவரசர் மகா மண்டலேசுவரருக்குக் கட்டுப்பட்டு விருப்பத்தோடு இங்கே தங்கியிருக்கிறாரோ? அல்லது பயந்த சுபாவமுடையவரான இளவரசரைப் பயமுறுத்திச் சிறைப்படுத்தி வைத்திருப்பது போல் இவர் தம்முடைய வசந்த மண்டபத்திலும், பாதாள மண்டபத்திலும் அடைத்து வெளியேற விடாமல் தடுத்திருக்கிறாரோ? உண்மை எதுவோ?

"ஐயோ! வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பும் இயல்புடையவராகிய நம் மகாராணியார் இந்த இடையாற்று மங்கலம் நம்பியின் மேல் எவ்வளவு நம்பிக்கையும், பயபக்தி விசுவாசமும் கொண்டிருக்கிறார்? இவரோ, உண்ட வீட்டுக்கே இரண்டகம் நினைக்கிறாரே! இவரையே நம்பியிருக்கும் மகாராணியாருக்கு இவர் செய்து கொண்டிருக்கிற துரோகம் எவ்வளவு பெரியது? இது தெரிந்தால் மகாராணியின் மனம் என்ன பாடு படும்? எவ்வளவு வேதனை ஏற்படும்? என்னுடைய மனமே இந்தப் பாடு படுகின்றதே?

"ஆகா! பசுத் தோல் போர்த்துக் கொண்டு திரியும் வேங்கையைப் போல் இந்த மனிதர் மகாராணியாரைப் புறத்தாய நாட்டுக் கோட்டைக்கு அழைத்து வந்ததும், ஆதரவளித்ததும் இதற்குத் தானா? இது தெரியாமல் ஊர் உலகமெல்லாம் அது இவருடைய ராஜ பக்தியைக் குறிப்பதாக எண்ணிப் பெருமை கொண்டாடுகிறதே? பேருக்கு மகாராணியைப் 'பாண்டிமாதேவி' என்று இங்கே கொண்டு வந்து உட்கார்த்தி விட்டு, ஈழத் தீவுக்கு ஓடி விட்டதாக நாட்டிலுள்ளவர்கள் எண்ணிக் கொள்ளும்படிசெய்த குமாரபாண்டியனைப் பயமுறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறார். வடதிசைப் பேரரசர்களுக்கு உதவி செய்து இந்தத் தென்பாண்டி நாட்டையும் அவர்களிடம் பறித்துக் கொடுத்து விட்டு அவர்கள் தயவால் தாமே இந்நாட்டுக்கு மன்னராகி விடலாம் என்று இவர் கனவு காண்கிறாரா?

"இல்லையானால் இவர் செயல்களுக்கு என்னதான் பொருள்? இவர்தான் மர்மமாக இருக்கிறார் என்றால் இவரிடம் வருகிற ஆட்களும் அப்படித்தான் இருக்கிறார்கள். நம்மோடு படகில் வந்தானே, அந்தத் துறவி: அந்த மனிதன் வாய் திறந்து பேசவிடாதபடி அவனைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தது கூட மகாமண்டலேசுவரரின் சாகஸம்தான். அந்தத் துறவி யாராவது ஒற்றனோ? வடதிசை மூவரசரால் இவருக்குத் தூதனுப்பப்பட்ட கபட சந்நியாசியோ? அவன் எவ்வளவு அழுத்தமான ஆள்? சிரித்துச் சிரித்துக் கழுத்தை அறுத்தானே ஒழிய ஒரு வார்த்தையாவது பேசினானா? உண்மையில் அவன் யாரோ முக்கியமான ஆளாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கன்னிகைப் பருவத்துப் பெண்ணை தம் புதல்வியிடம் அவ்வளவு நெருங்கிப் பழக அனுமதிப்பாரா? அவன் தங்குவதற்கு இடவசதி செய்து கொடுப்பதற்காக நடு இரவில் அவனோடு தம் பெண்ணையே உடன் அனுப்பினாரே! அடடே! அவன்கூட இந்த வசந்த மண்டபத்தில் தானே தங்கப் போவதாகச் சொன்னார்? இங்கே அவன் எப்பகுதியில் தங்கியிருக்கிறானோ, தெரியவில்லையே? பார்க்கலாம்" என்று வெகு நேரமாக அந்தப் பாழுங் கோவில் வாசலில் இவ்வளவும் சிந்தித்த தளபதி வல்லாளதேவன்



வசந்த மண்டபத்தின் உட்பகுதியை நோக்கி விரைந்து நடந்தான்.

அவன் மனத்தில் புதிய தெம்பும், எல்லா உண்மைகளையும் உடைத்துத் தெரிந்து கொண்டு விடும் ஆத்திரமும் உண்டாகி யிருந்தன. மலைச் சிகரம் போல் பெருமிதமாக யாரைப் பற்றி எண்ணி வந்தானோ அந்த இடையாற்று மங்கலம் நம்பி இப்போது அவனுக்கு ஒரு குரூரமான சூழ்ச்சியே முதிர்ந்த சுயநலவாதியாகத் தோன்றினார். எத்தனையோ ஆண்டுகளாக எண்ணி வந்த மதிப்பான எண்ணத்தைச் சில நாழிகை நேரத்துச் சம்பவங்கள் மிகவும் எளிதாக மாற்றி வைத்து விட்டன.

சிற்பங்களும், ஓவியங்களும், செய்குன்றங்களும், பூங்கொடிப் பந்தல்களும் நிறைந்த அழகான வசந்த மண்டபம் இரவின் நிலா ஒளியில் மயன் சமைத்த வித்தியாதர உலகத்து மணி மண்டபம் போலக் காட்சியளித்தது. அதற்குள் நுழைந்த வல்லாளதேவன் நடு மையத்தில் இருந்த அலங்காரக் கிருகத்துக்

குள்ளேயிருந்து தீப ஒளி தெரிவதைக் கவனித்தான். தூபப் புகையின் நறுமணமும் காற்றில் கலந்து வந்தது. அவன் மெதுவாக நடந்து சென்று அலங்காரக் கிருகத்தில் பலகணி வழியே உள்ளே எட்டிப் பார்த்தான்.

பொன் தகடுகள் பதிக்கப்பெற்று ஒளி நிறைந்த முத்துச் சர விதானமும் பட்டு மெத்தையுமாக விளங்கிய சப்ரமஞ்சக் கட்டில் ஒன்றில் அந்த இளம் துறவி நிம்மதியாகப் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். தலைப் பக்கத்தில் வைரக் கற்கள் இழைத்த பிடியோடு கூடிய கவரி, ஆலவட்டம், தண்ணீர்க் குடம் முதலியன இருந்தன.

"சந்நியாசிக்கு இவ்வளவு சுகம் கேட்கிறதா?" என்று எண்ணிய தளபதி வல்லாள தேவனின் மனத்துக்கு அந்தத் துறவியைப் பற்றிப் பூரணமாக எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை.

அத்தியாயம் 18

கூற்றத் தலைவர் கூட்டம்

இருட்டில் திடீரென்று பின்புறமிருந்து யாரோ தன் கையை இறுக்கிப் பிடித்ததைக் கண்ட மகாராணி பயந்து கூச்சலிட்டு விடுவதற்கிருந்தாள். "மகாராணீ! நான்தான் பகவதி!" என்று பகவதி மெல்லக் கூறியதைக் கேட்ட பின்பே வானவன்மாதேவியின் அதிர்ச்சி நீங்கியது. தலைவிரிகோலமாக அழுது கொண்டு நீராழி மண்டபத்துக்கருகே இருந்த பாழுங்கிணற்று விளிம்பில் உட்கார்ந்து கொண்டிருந்த வானவன்மாதேவி சற்றும் எதிர்பாராத நிலையில் பகவதியை அங்கே கண்டதும் சிறிது நாணமடைந்து விட்டாள்.


"பெண்ணே! நீ எப்போது இங்கே வந்தாய்? நான் எழுந்திருந்து வந்தது உனக்கு எப்படித் தெரியும்? நீதான் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தாயே?" மகாராணியின் குரலில் வெகு நேரம் அழுது கொண்டிருந்ததைக் காட்டும் கரகரப்பு இருந்தது.

"தேவி! இன்றைக்கு உங்கள் மனநிலை சரியில்லை. இப்படி ஏதாவது செய்ய முற்படுவீர்கள் என்று எதிர்பார்த்தே உறங்காமல் இருந்தேன். என்னையும் மீறிக் கண்கள் சிறிது அயர்ந்துவிட்டன. நான் விழித்துக் கொண்ட போது உங்களைப் படுக்கையில் காணவில்லை. எழுந்திருந்து ஓடி வந்தேன். இங்கே வந்து பார்த்தால் நீங்கள் பெரிய அநியாயத்தைச் செய்வதற்கு இருந்தீர்கள். இப்படிச் செய்யலாமா? தாயே! இந்தத் தென்பாண்டி நாட்டு மக்கள் பாமன்னரான பராந்தகச் சக்கரவர்த்தியை இழந்து விட்டார்கள். குமார பாண்டியர் எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. மக்களெல்லாம் கைகூப்பி வணங்கத்தக்க, தென்பாண்டி மாதேவியாக, கண்கண்ட தெய்வமாக விளங்கி வருகிறீர்கள். தாங்களும் எங்கள் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டு இந்த மாதிரி போக முயற்சி செய்தால் நாங்கள் யாரைத் தாயே கைகூப்பி வணங்கிப் பெருமைப் படுவோம்?" என்று உருக்கமாகப் பேசினாள் பகவதி.

"குழந்தாய்! சாகத் துணிந்து விட்டவளுக்குச் சமுத்திரத்தின் ஆழத்தைப் பற்றி என்ன கவலை? மனத்தில் அளவற்ற வெறுப்பு ஏற்பட்டு விட்டால் எதைச் செய்யவும் துணிவு வந்து விடுகிறது. இதோ, இன்னும் சில நொடிப் போது நீ இங்கே வராமலிருந்தால் என்னுடைய துன்ப உடல் கூடு நாளை இந்தப் பாழுங் கிணற்றில் மிதந்து கொண்டிருப்பதைப் பார்ப்பீர்கள். ஆனால் எவற்றை வேண்டுமானாலும் இவ்வுலகில் நம் விருப்பப்படியே செய்து கொண்டு போவதற்கு இடமில்லை. 'இறைவன் சித்தம்' என்று ஒன்றிருக்கிறது. சாவதோ, பிழைப்பதோ அந்தச் சித்தப்படித்தான் நடக்கிறது. இதோ, என் சொந்த அனுபவத்தைத்தான் பாரேன்! இன்று மாலையிலிருந்து நான் படும் கவலைகளுக்கு ஒரு முடிவும் காண முடியாமல் இந்த முடிவுக்கு வந்தேன். நீ பின் தொடர்ந்து வந்து இதையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் செய்து விட்டாய்!"

"எவ்வளவு புண்ணிய பலன் இது? நான் மட்டும் விழித்துக் கொண்டு தேடிப் பின்தொடர்ந்து வந்திருக்கவில்லையானால் நாளைக் காலை இந்த நாடு முழுவதுமே கதிகலங்கிப் போய் அலறிப் பதைபதைக்கும்படியான காட்சியையல்லவா காண நேர்ந்திருக்கும்?"


"உனக்குப் புண்ணியமாக இருக்கலாம். என்னைப் பொறுத்தவரையில் இது பாவக் கணக்குத்தான். தண்ணீர் தேங்கத் தேங்க அழுகி நாறுவதைப் போல இந்த உலகத்தில் வாழும் நாட்கள் பெருகப் பெருகப் பாவச் சுமையை அதிகமாகக் கட்டிக் கொள்கிறோம்."



சென்னை நகருக்கு விநியோகஸ்தர்கள்: சுராஜ் ஏஜன்ஸீஸ், 18, ராயப்பேட்டை ஹைரோடு ★ மதுரைக்கு: மோஹன்லால் மீனாக்ஷி எண்டர் பிரைஸஸ், 4, கூட்ஸ் ஷெட் தெரு, மதுரை ★ கோயமுத்தூர், பாலக்காடு & ...க்கு பூரண விநியோகஸ்தர்: B. பாலபட்டாபி (ஸ்தாபிதம் 1932) வைசியாள் தெரு, கோயமுத்தூர்



41P/G/3


"உங்கள் பற்களை பாதுகாறுங்கள்!"
விஸ்டம் பல் வைத்தியர் எப்படி என்று கூறுகிறார்
பற்களை மூலைமுடுக்குகளுள்பட துப்புர துலக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. அது தான் கீழ் காட்டிய விதம் நல்ல 'விஸ்டம்' டூத் ப்ரஷால் துலக்குவது ....
வெளிப்பாகங்களில்: படத்தில காட்டியபடி ப்ரஷ் தலையை ஈறுகளில் வைத்து, கையை வளைத்து கீழாகத் தேய்க்கவும். கீழ் பற்களுக்கு மேல்புறமாக தேய்க்கவும். மேலுக்கும் கீழுக்குமாக ஆறுதடவை தேய்க்கவும்.
முன் பற்களின் உள்புறம்: (இந்த இடம் தான் அலட்சியம் செய்யப்படுகிறது!) ப்ரஷ் தலை முனையை காட்டியபடி ஈறுகளில் வைத்து கீழாகவும் கீழ் பற்களுக்கு மேலாகவும் இப்படியாக ஆறு தடவை தேய்க்கவும்
பல்முனைகள்: குச்சங்கள் பல் முனைகளில் சமமாகப் படியும்படியாக ப்ரஷைப் பிடித்து இரு திசைகளிலும் தேய்க்கவும். (இதைப்போல் இந்த ஒரு தடவை தான் செய்ய வேண்டும்!) பின்னாலுள்ள பற்களின் முனைகளை மறக்காதீர்கள்!
விஸ்டம் ப்ரஷின் விறைப்பான நைலான் குச்சங்கள் ஈறுகளை தடவிக் கொடுத்து பற்களின் இடுக்குகளையும், சுற்றிலும் சுத்தம் செய்கிறது. விஸ்டம் உபயோகிப்பதற்குசுலபம். ஏனெனில் அதன் தலை சிறியது; கைப்பிடி சாஸ்திரோக்தமான அமைப்பு பெற்றது. இவை காரணமாக விஸ்டம் பொருத்தமான வடிவம் கொண்ட டூத் ப்ரஷ் என்று பிரசித்தி பெற்றது:
காலாகாலத்தில் உங்கள் பல் வைத்தியரைக் காணுங்கள்
Wisdom REGD.
நீடித்து உழைக்கும் டூத் ப்ரஷ்

''தேவி! தாங்கள் அறியாத ஞான நூல்களையும், கருத்துக்களையும் நானு உங்களுக்குச் சொல்லப் போகிறேன்? இந்த உலகில் பிறருக்குப் பயன் படுமாறு வாழ்வதனால் பாவமோ, துன்பமோ பெருகுமானால் அத்தகைய துன்பத்தை விலை கொடுத்தாவது வாங் கிக் கொள்ள வேண்டும்'—என்று நம் முடைய திருவள்ளுவப் பெருமான் கூறி யருளிய கருத்து தங்களுக்குத் தெரியாததல்லவே?

ஒப்புரவினல் வருங்கேடு எனின் அஃதொருவன் விற்றுக்கோள் தக்க துடைத்து.—

என்று குறளின் கருத்தால் மகாராணி யைச் சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டு போக முயன்றாள் பகவதி. சிறிது நேரத்துத் தர்க்க விவாதங்களுக் குப் பின், ''வா! குழந்தாய், உன் னுடைய சாமர்த்தியமான பேச்சினால் என்னையே சரியானபடி மடக்கி விட் டாய் நீ. போகலாம் வா'' என்று பகவதியின் கைையைப் பற்றி அழைத்துக் கொண்டு அந்தப்புரத்துக்குத் திரும்பி னாள் மகாராணி வானவன்மாதேவி.

* * *

அரண்மனை நிகழ்ச்சியை இவ்வள வில் நிறுத்திக் கொண்டு எல்லா வகை யிலும் முக்கியத்துவம் வாய்ந்த அந்த ஒருநாள் மாலைப் போதுக்குப் பின் வந்த இரவில் வேறோர் பகுதியிலே நடந்த எதிர்பாராத சில நிகழ்ச்சிகளைக் கொஞ்சம் கவனிப்போம்.

யாத்திரீகர்களை அழைத்துக் கொண்டு கன்னியாகுமரியிலிருந்து திரும்பிய அண்டராதித்த வைணவன் முன் சிறைக் குத் திரும்பும்போது இரவு வெகுநேரம் ஆகிவிட்டது. அவர்களெல்லோரும் சத் திரத்து வாசலை அடைந்தபோது அங்கே மடைப்பள்ளியில் வேலை செய்யும் பணிப் பெண்கள் கையைப் பிசைந்து கொண்டு நின்றார்கள். அவ்விருவர் முகத்திலும் கவலையும், பரபரப்பும் தோன்றின.

''பெண்களே! என்ன நடந்தது? ஏன் இப்படிக் கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறீர்கள்? கோதை எங்கே? அதற் குள் தூங்கிவிட்டாளா? எனக்குத் தெரி யுமே, அவள் சோம்பேறித்தனம்!''— என்று தன் வழக்கப்படி வேடிக்கை யாகப் பேச்சை ஆரம்பித்த அண்ட ராதித்த வைணவன் அந்தப் பெண் களின் முகம் போன போக்கைப் பார்த் துத் திடுக்கிட்டான். ஏதோ நடக்கத் தகாதது நடந்திருக்கிறதென்று அவன் மனத்தில் பட்டுவிட்டது.

''ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்? என்ன நடந்தது? சொல்லுங்களேன். வாயில் கொழுக்கட்டையா அடைத் திருக்கிறது?''—என்று இரைந்தான். அவனோடு நிற்கும் யாத்திரீகர்களின் கூட்டத்தைப் பார்த்து அந்தப் பணிப் பெண்கள் சிறிது தயக்கமடைந்தனர்.

அந்தக் குறிப்பைப் புரிந்து கொண்ட அண்டராதித்தன் வாயிற் கதவு முழு வதையும் நன்றாகத் திறந்துவிட்டு, ''நீங்கள் உள்ளே செல்லுங்கள். நான் இதோ, இவர்களிடம் என்னவென்று விவரம் கேட்டுக் கொண்டுவருகிறேன்'' என்று அருகில் இருந்தவர்களிடம் கூறி அவர்களை உள்ளே அனுப்பினான்.

அந்தப் பணிப் பெண்கள் அவன் பக்கத்தில் வந்து நெருங்கி நின்று கொண்டு பயத்தால் ஒடுங்கிப் போன குரலில், ''ஐயா! திடீரென்று அம்மா வைக் காணவில்லை. இருட்டி இரண்டு நாழிகை இருக்கும். தீபங்களை ஏற்றி விட்டு இங்கே சத்திரத்துக் குறட்டில் உட்கார்ந்து கொண்டு ஓலையில் படித் தரக் கணக்கு எழுதிக் கொண்டிருந்தார் கள். சிறிது நேரம் கழித்து நாங்கள் வந்து பார்த்தபோது அம்மாவைக் காணவில்லை. இங்கிருந்த ஓலை, எழுத் தாணி ஆகியவற்றையும் காணோம். தீபம் அணைக்கப்பட்டு இருளடைந்திருந் தது. மறுபடியும் தீபத்தை ஏற்றிக் கொண்டு வந்து இங்கே பார்த்தபோது இந்த உடைந்த வளையல் சில்லுகள் தான் கிடந்தன'' என்று அவனிடம் அவற் றைக் காட்டினர் பணிப்பெண்கள்.

அவன் திகைத்தான்! துணுக்குற்றான். கோதை காணமற் போய் விட்டாள் என்றபோது அவன் மனத்தில் பலவித மான ஐயப்பாடுகள் உண்டாயின.

அண்டராதித்தன் உணர்ச்சிமயமான வன். இம்மாதிரி சமயங்களில் நிதான மாகச் சிந்தித்து என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியாது. 'தம்பி நாராயணன் சேந்தனைப் போய்ச் சந் தித்தால் அவன் ஏதாவது உருப்படி யான வழியைக் கூறுவான், உதவியும் செய்வான். தம்பியைத் தவிர வேறு யாரிடமும் இந்தச் செய்தியைச் சொல்லி உதவி கேட்கப் போவதே வெட்கக் கேடு'—என்று நினைத்தான்.

''பெண்களே! இந்தச் செய்தி உங்க ளோடு இருக்கட்டும்! வேறு யாருக்கும் தெரிய வேண்டாம். யாராவது கேட் டால் கோதையை அழைத்துக்கொண்டு நான் அவசர காரியமாக இடையாற்று மங்கலம் போயிருக்கிறேனென்றும், திரும்பி வருவதற்குச் சில நாட்கள் ஆகுமென்றும் சொல்லுங்கள்! இப் போது நான் அவளைத் தேடிக் கொண்டு போகிறேன். சத்திரத்துக் காரியங்களை

ஒன்றும் குறைவில்லாமல் நீங்கள்தான் இன்னும் சில நாட்களுக்குக் கவனித்துக் கொள்ள வேண்டும்.''

''நீங்கள் சாப்பிடவில்லையே! சாப்பிட்டுவிட்டுப் போங்கள்'' என்று பணிப் பெண்கள் கூறினர்.

''இல்லை. யாத்திரீகர்களைக் கவனியுங்கள். நான் புறப்படுகிறேன்'' என்று சத்திரத்துக்குள்ளே காலை வைக்காமல் அப்படியே திரும்பி நடந்தான் அண்டராதித்த வைணவன். அவன் நிலை பரிதாபத்துக்குரியதாக இருந்தது. என்ன செய்யலாம்? உலகத்தில் எந்தப் பொருள் காணமற்போனால் மற்றவர்களிடம் சொல்லிக் கொள்வதற்குக்கூட வெட்கப்பட வேண்டுமோ, அந்தப் பொருளைக் காணவில்லையென்றால் மனவேதனையை என்னவென்று சொல்ல முடியும்! ஏற்கெனவே நடந்து நடந்து ஓய்ந்து போயிருந்த அவன் கால்கள்



அந்தக் களைப்பையும் மறந்து இடையாற்றுமங்கலத்துக்குச் செல்லும் கிளை வழியில் வேகமாக நடந்தன. சுசீந்திரம் வரையில் வழி ஒரே சாலையாகச் சென்று பாதிரித் தோட்டத்துக்குத் தெற்கே விழிஞம், குமரி, இடையாற்று மங்கலம் என்று மூன்று இடங்களுக்கும் தனித் தனியே பிரிகிறது.

ஜனசஞ்சாரமற்ற, ஓசை ஒலிகள் அடங்கிப் போன அந்த நீளிரவில் தன்னந் தனியனாய் மனத்தில் கவலைகளையும், குதிகாலில் களைப்பையும் சுமந்து கொண்டு நாராயணன் சேந்தனைக் கண்டு ஒரு வழி செய்யலாம் என்ற ஒரே நம்பிக்கையோடு அண்டராதித்தன் நடந்து கொண்டிருந்தான்.

பாதிரித் தோட்டத்தை நெருங்கிய போது சாலையில் அவன் மேலே நடந்து செல்ல முடியாத நிலை ஒன்று ஏற்பட்டது. யாரோ ஒரு ஆள் அசுர வேகத்தில் குதிரையை விரட்டிக் கொண்டு வந்தான். குதிரை பாய்ந்தோடிச் சென்ற வேகத்தில் அதன்மேல் உட்கார்ந்து கொண்டிருந்தவனின் தோற்றத்தைக் கூடச் சரியாகப் பார்க்க முடியவில்லை. அடுத்து அந்தக் குதிரைக்குப் பின்னால் தலை தெறித்துப் போகிறாற் போன்ற வேகத்தில் இரண்டு மூன்று ஆட்கள் துரத்திக் கொண்டு ஓடுவதையும் அவன் பார்த்தான். சாலையோரத்தில் ஒரு மரத்தடியில் ஒதுங்கி நின்று கொண்டு அவர்கள் செல்கிறவரை தாமதித்தான் அண்டராதித்த வைணவன்.

சாலையில் ஏற்பட்ட புழுதி அடங்குவதற்காகக் கண்களை மூடிக் கொண்டு ஓரமாக ஒதுங்கி நின்றவன், 'சரி யார் குதிரையில் போனால் என்ன எனக்கு என்ன வந்தது?' என்று நினைத்தவனாய் அந்த இடத்திலிருந்து புறப்பட்டு மேலே நடப்பதற்காக அடி எடுத்து வைத்தபோது சாலையோரத்து மரத்தடியில் யாரோ முனகுவதுபோல் ஈனக் குரலில் ஒலி எழுந்தது.

''யார் அங்கே?'' என்று ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டே மரத்தடிக்குத் திரும்பிச் சென்றான் அண்டராதித்தன். அவன் உடல் நடுங்கியது. மனத்தில் பயமும் பதற்றமும் ஏற்பட்டன. பக்கத்தில் சென்றபோது வாயில் துணியை அடைத்து யாரோ ஒரு ஆளை அடிமரத்தோடு சேர்த்துக் கட்டி வைத்திருப்பது போல் தெரிந்தது. இன்னும் நெருங்கிச் சென்று உற்றுப் பார்த்ததில் அப்படிக் கட்டி வைக்கப்பட்டிருந்தது ஒரு பெண்பிள்ளை என்று அறிந்தான். மரக்கிளைகளின் அடர்த்தியாலும், இலைகளின் செறிவாலும் அந்த இடத்தில் நிலா ஒளி படரவில்லை.

''என்ன அக்கிரமம்? பெண்பிள்ளையை மரத்தில் கட்டிப்போட்டுத் துன்புறுத்திக் கொள்ளையடிக்கிற அளவுக்கு இந்த நாட்டில் கொள்ளைத் தொழில் கேவலமான முறையில் வளர்ந்து விட்டதா?'' என்று எண்ணிக் கொண்டே பரபரப்படைந்து அந்தப் பெண்ணை அவிழ்த்து அவனுடைய மென்மையான உடலைத் தன் கைகளால் தாங்கிக் கொண்டு வந்து வெளிச்சத்தில் வைத்தான். நிலா ஒளியில் அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்ததும் அவன் வாயிலிருந்து ''ஆ! கோதை! நீயா?'' என்ற அலறல் கிளம்பிப் பாதிரித் தோட்டத்துப் பிரதேசமெங்கும் எதிரொலித்தது. ஆம்! அவள் அவனுடைய மனைவி காணமற் போன கோதையேதான்!

அண்டராதித்தன் பதறிப் போய் அவளுடைய வாயை மூடிக் கட்டப்பட்டிருந்த துணியை அவிழ்த்து எடுத்

னான். தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளித்து மயக்கத்தைப் போக்கினான். கோதைக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிரக்ஞை வந்தது. தன் பக்கத்தில் கணவனைப் பார்த்தபோது அவளுக்கு ஆறுதலாக இருந்தது. "கோதை! என்ன நடந்தது? எப்படி இங்கு வந்தாய்? யார் உன்னை இந்த மரத்தில் கட்டிப் போட்டார்கள்?" அண்டராதித்தன் கொதிப்படைந்த உள்ளத்துடன் இந்தக் கேள்வியை அவளிடம் கேட்டான். அவள் கண்களில் நீர் துளித்தது. தான் சத்திரத்துக் குறட்டில் கணக்கெழுதிக் கொண்டிருந்தபோது நடந்தது மட்டும்தான் அவளுக்கே தெளிவாக நினைவு இருந்தது. அதைக் கணவனிடம் கூறினாள்.

"அப்படியானால் உன்னிடமிருந்து அவர்கள் ஆபரணங்களைத் திருடவில்லை. வேறு எந்த விதத்திலும் உன்னைத் துன்புறுத்தவில்லை. உன் கையிலிருந்த ஓலைகளையும் எழுத்தாணியையும் மட்டும் கைப்பற்றிக் கொண்டார்கள் என்று தானே சொல்கிறாய்?"

"ஆமாம்! அப்போது நான் கூச்சலிட முயன்றேன். அவர்கள் என் வாயில் துணியைத் திணித்துத் தூக்கிக்கொண்டு வந்து விட்டார்கள். நான் மூர்ச்சையடைந்து விட்டதால் அதற்குப் பின் நடந்ததொன்றும் தெரியாது. இப்போதுதான் தெளிவடைந்து இங்கே உங்களை என் கண்முன்னால் காண்கிறேன்" என்றாள் கோதை.

"அப்படியானால் அந்த ஆட்கள் உன்னை அநாவசியமாக இவ்வளவு தூரம் தூக்கி வந்து இந்த மரத்தில் ஏன் கட்டிப் போட்டிருந்தார்கள்?"

"அதுதான் எனக்கும் விளங்கவில்லை! ஓலைகளையும், எழுத்தாணியையும் திருடுவதற்காகக் கூடச் சில ஆட்கள் கிளம்பியிருக்கிறார்கள் போலிருக்கிறது. ஆனால் வேறொரு சந்தேகமும் உண்டாகிறது!" என்று கோதை சொல்லவும், "என்ன சந்தேகம்? சொல்லேன்" என்று கேட்டான் அண்டராதித்தன்.

"விளக்கை வாயால் ஊதி அணைத்து விட்டார்கள். அதனால் அந்தத் தடியர்களை இருட்டில் என்னால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஒருவேளை அன்றொரு நாள் இரவு சத்திரத்துக் கதவை அடைக்கிற நேரத்துக்கு வந்து வம்பு செய்தார்களே, அவர்களாக இருக்கலாமோ?"

"இருந்தாலும் இருக்கும்! நீ செய்ததும் வம்புதானே? கதவை அடைத்து. 'இடம் கொடுக்க மாட்டோம்' என்று சொன்னது சரி. அதோடு போகாமல் நின்று கொண்டு சாணத்தை வேறு கரைத்துக் கொட்டினாய். எல்லாம் உன்னால் வருகிற வினைதான். உன் துடுக்குத்தனத்தால் எனக்கு இல்லாத வம்பையெல்லாம் விலைக்கு வாங்கிவைக்கிறாய்."

"சரி! நீங்கள் எப்படி இவ்வளவு கணக்காக இந்தஇடத்துக்குத் தேடி வந்தீர்கள்?" என்று கேட்டாள் கோதை.

நடந்ததையெல்லாம் அவளுக்கு விவரித்துக் கூறினான்.

"எப்படியானால் என்ன? எப்படியோ என்னைக் கண்டு பிடித்து விட்டீர்கள். உங்கள் தம்பியின் ஆலோசனையும், உதவியும் இல்லாமலே நீங்கள் பெற்ற முதல் வெற்றியாகட்டும் இது. வாருங்கள், சத்திரத்துக்குப் போகலாம்! இந்த இரவில் இப்படி நடுக்காட்டில் உட்கார்ந்து கொண்டிருப்பானேன்?" என்று அவனையும் கூப்பிட்டுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டாள் கோதை.

* * *

மறுநாள் காலை புறத்தாய நாட்டுக் கோட்டையில் நாஞ்சில் நாட்டின் கூற்றத் தலைவர்கள் வந்து கூடிவிட்டனர். தோவாழைக் கூற்றத்து நன்கணிநாதர், பொன்மனைக் கூற்றத்துக் கழற்கால் மாறனார், அருவிக் கரைக் கூற்றத்து அழகிய நம்பியார், பாகோட்டுக் கூற்றத்துப் பரிமேலுவந்த பெருமாள் முதலிய நாஞ்சில் நாட்டுப் பெருமக்களின் முதன்மையாளர்களெல்லாம் மகாராணி வானவன்மாதேவியாரின் அவசரக் கட்டளையை மதித்து ஓடோடியும் வந்து கூடியிருந்தனர்.

அவ்வளவு அவசரமாக மகாசபையைக் கூட்டுவதின் நோக்கம் என்னவாக இருக்குமென்று புரிந்து கொள்ளும் ஆவல் நிரம்பிய மனத்தோடு காத்திருந்தனர் அவர்கள்.

ஆனால் மகாசபைக் கூட்டம் எந்த இருவர் இல்லாவிடில் நிச்சயமாக நடக்க முடியாமல் போய்விடுமோ, அந்த இருவரும் அதுவரையில் வந்து சேரவே இல்லை. முடிந்தால் முதல் நாள் இரவே வந்து விடுவதாகச் சொல்லிவிட்டுப் போயிருந்த தளபதி வல்லாளதேவன் மறுநாள் காலை விடிந்து பத்து நாழிகைக்கு மேலாகியும் இடையாற்றுமங்கலத்திலிருந்து திரும்பி வரவில்லை. மகாமண்டலேசுவரரான இடையாற்றுமங்கலம் நம்பியும் வரவில்லை. கூற்றத் தலைவர்களும், மகாராணியும், பவழக்கனிவாயர், அதங்கோட்டாசிரியர் முதலியோரும் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். (தொடரும்)

பி.ஓ.ஏ.ஸி.

தங்களுடைய

சர்வீஸ்களில்

இந்திய

பணிப்

பெண்களை


நியமித்திருப்பதை

பெருமையுடன்

அறிவிக்

கின்றனர்





விமானப் போக்குவரத்துகளில்
உலகிலேயே முன்னணிவகிப்பது

B·O·A·C

பி. ஓ. ஏ. ஸி.
உங்கள் நலனைப் பேணுகிறது

பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேஸ் கார்பரேஷன்

திருமலையில் ஆனந்த நிலையம்



நமது பெரிய கோயில்களைக் காணும் போது, நமக்கு ஒரு பெரிய மலைப்பு ஏற்படும். இவ்வளவு பெரிய கோயில்களும் கோபுரங்களும் இந்தக் காலத்தில் யாரால் கட்ட முடியும் என்று தோன்றும். சிதம்பரத்தில் நடராஜர் ஆனந்த நர்த்தனமிடும் அம்பலத்துக்குப் பொன் வேய்ந்திருப்பதைக் காணும்போது, நம் மலைப்பு இருமடங்கு மும்மடங்காகி, 'இது இந்த யுகத்தில் காரிய சாத்தியமே இல்லை' என்று தோன்றும்.

இப்படி யெல்லாம் நமக்குத் தோன்றுவதற்குக் காரணம், நம்நாட்டில் பொதுவாக எங்கும் பரவியுள்ள வறுமை. இரண்டாவது நமது நாட்டில் முன்னளவு தெய்வ பக்தி இல்லை என்பது. நாஸ்திகம் பரவி வருகிறது. அதனால் இந்தக்காலத்தில் இது எல்லாம் சாத்தியமில்லை என்ற எண்ணம் வலுப்படுகிறது. இவை யெல்லாம் வெறும்அபத்தக்களஞ்சியம் என்று நிரூபிப்பதற்காகவே இந்த யுகத்தில் ஏழுமலையான் திருப்பதி திருமலையில் கண்கண்ட தெய்வமாக எழுந்தருளியிருக்கிறான் என்ற எண்ணம் எழும்.


நாஸ்திக வாதம் பரவியுள்ள இந் நாட்களில்தான் திருப்பதி வேங்கடேசப் பெருமானின் உண்டியில் செலுத்தப்படும் காணிக்கையும்பெருகியிருக்கிறது.

நமது பேரரசர்கள் சாதித்த வியக்கத்தக்க சாகசச் செயல்கள் இன்றும் நம் மக்களால் சாதிக்க முடியும் என்பதை நிரூபிப்பது போல, திருமலை வேங்கடேசப் பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயத்தின் விமானம் 'ஆனந்த நிலயம்.' மீண்டும் புதிதாகப் பொன்வேயப்பட்டு, இம்மாதம் 27-ம் தேதி மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

திருவேங்கடம் மிகப் புராதானமான ஸ்தலம். அதுவும் சிலப்பதிகார நாட்களுக்கு முன்பிருந்தே தமிழர் நாவில், தமிழர் துதிகளில் கலந்துவிட்ட தெய்வம். இந்தத் தெய்வத் திருக்கோயிலின் விமானத்தின் உச்சியில் கி. பி. 1099-ல் பல்லவ அரசன் நந்திவர்மன் தங்கக் கலசம் வேத முறைப்படி வைத்தான். அதற்குப் பிறகு கி.பி. 1359-ல் ஜடாவர்ம சுந்தர பாண்டியன் அந்த ஆனந்த விமானத்துக்கு முழுதும்பொன் வேய்ந்தான். பிற்காலத்தில் பதினைந்தாவது நூற்றாண்டில் விஜயநகர சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து, பல போர்களில் வெற்றிபெற்று வெகு சிறப்பாக ஆண்ட கிருஷ்ண தேவராயர் இந்த விமானத்துக்குப் பொன்வேய்ந்தார். அது மட்டுமன்றி, தாம் ஒவ்வொரு தடவை போரில் வெற்றிபெற்றுத் திரும்பும் போது எல்லாம் தம்முடைய எடைக்கு நிகரான



விமான வேங்கடேசுவரர்



ஆனந்த நிலைய விமானம்

தங்கத்தை (துலா புருஷதானம்) கோவிலுக்கு அளித்தார். இப்படிச் சுமார் அறுநூறு வருஷங்களுக்கு முன் வேயப்பட்ட ஆனந்த விமானம் நாளடைவில் பொன்னெல்லாம் தேய்ந்தும் அழுக்குப் படிந்தும், சிதில மடைந்திருந்தது. இதை மீண்டும் புதுப்பிக்கும் மகத்தான பணியை, தற்காலம் தேவஸ்தானப் பொறுப்பை நிர்வகிக்கும் அதிகாரிகள் ஏற்றுக் கொண்டது பாராட்டப்படவேண்டிய விஷயமாகும்.

இந்தப் பொறுப்பை 1953ம் வருஷம் தேவஸ்தான அதிகாரிகள் ஏற்றுக் கொண்டார்கள்.

கோபுரத்தில் பொன் வேயப்படும் பணி எப்படிச் செய்கிறார்கள் என்பது இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிந்து கொள்வது நலம். விமானத்தில் உள்ள ஒவ்வொரு பகுதியையும் செப்புத் தகடுகளால் செய்து கொள்ளுகிறார்கள். விமானத்திலுள்ள விக்கிரகங்கள் எல்லாம் அந்தச் செப்புத் தகடுகளில் அதே அளவுக்குச் செய்து கொள்கிறார்கள். பின்னர் பொன்னை, மெல்லிய இலைகளாக வடித்து எடுத்துக் கொண்டு செப்புத் தகடுகளில் தேய்த்து ஏற்றுகிறார்கள். இப்படித் தங்க ரேக்குகளை எட்டு அல்லது ஒன்பது முறை ஏற்றுகிறார்கள். அப்போது, அந்தச் செப்புத் தகடு பொன் தகடாக ஜொலிக்கிறது. இதற்கு எவ்வளவு பொன் பிடித்திருக்கும் என்று அறிய நேயர்களுக்கு ஆவலாக இருக்கும். ஏற்கனவே, விமானத்திலிருந்த பொன்னைத் தவிர, சுமார் இருபதுலட்ச ரூபாய் பெறுமானமுள்ள தங்கம் அதிகமாகப் பிடித்திருக்கிறது இந்த விமானத்துக்கு!

இந்தத் தங்கம் ஏது?

ஏற்கனவே தேவஸ்தான கஜானாவிலிருந்த தங்கத்தையும், உண்டியில் பக்தர்கள் செலுத்தி வந்த தங்கத்தையுமே பெரும்பாலும் உபயோகித் திருக்கிறார்கள்.


இந்த மகத்தான தெய்வத் திருப்பணியைச் செய்வதற்குத் தமிழ் நாட்டிலிருந்து பொற்கொல்லர் வரவழைக்கப் பட்டனர்.

மதுரையைச்சேர்ந்த திரு எஸ். எம். சொக்கலிங்காசாரியும், அவரைச் சேர்ந்தவர்களும் இந்தப் பணியில் இரவும் பகலும் ஈடுபட்டு மிகச் சிறப்பாகச் செய்து முடித்திருக்கிறார்கள்.


ஆனந்த நிலையத்தின் வடமேற்கு பாகத்தில் ஒரு வெங்கடேசப் பெருமான் பிம்பம் இருக்கிறது.

சாதாரணமாக, பக்தர்கள் மூலஸ்தானத்தில் தெய்வ தரிசனம் செய்து கொண்டு, கோவில் வலம் வருபவர்கள் தவறாமல் விமான வேங்கடேசவரையும் தரிசனம் செய்து நமஸ்கரித்து விட்டுத் தான் போவார்கள். இன்றும் சிலர் மூலவர் தரிசனம் கிடைப்பது அரிதானால், அல்லது கால தாமதம் ஏற்படும் போல் தோன்றினால் விமான வேங்கடேசவரரைத் தரிசனம் செய்து விட்டு, மூலவரைத் தரிசித்ததைவிட அதிக மன நிறைவு பெற்றுத் திரும்புவதுண்டு. அவ்வளவு புனிதமும் விசேஷமும் வாய்ந்தவர் விமான வேங்கடேசவரர். அதனால் தற்சமயம் அவர் இருக்கும் தகட்டை மாத்திரம் எதுவும் செய்யப் போவதில்லை என்று சொன்னார்கள்!

இவ்வளவு சிறப்புவாய்ந்த தெய்வத் திருப்பணியை, இக்காலத்தில் செய்து முடித்த தேவஸ்தான அதிகாரிகளுக்குப் பக்தர்கள் நன்றி செலுத்துவார்கள்.


ZENITH
விலைகள் வெகுவாகக் குறைந்துள்ளன
எல்லா ரக தையல் மிஷின்களுக்கும் (இந்திய மற்றும் ஐரோப்பியத் தயாரிப்புகள்) ஸ்பேர் பார்ட்கள் எல்லாம் கிடைக்கும்
ஸோல் ஏஜண்டுகள் தி பிரிட்டிஷ் மெஷினரி சப்ளேஸ் கம்பெனி
73, பிராட்வே, மதராஸ்-1 (போன் 55752) சிம்லா - 1, டெல்லி - 6, பம்பாய் - 4


LICHENSA
படைசிரங்கு
(ECZEMA)
முதலிய சர்ம வியாதிகளுக்கு
லிச்சென்ஸா
உபயோகியுங்கள்
ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டது
எங்கும் கிடைக்கும்
சிலோன் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
மகாராஜா டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிமிடெட்
54, பேங்க்ஷால் தெரு, கொழும்பு


வெளி வந்து விட்டது!
கவர்ச்சியுள்ள அழகிய மாடல்
குறைந்த விலையில் சிறந்த
G.E.C.
5 வால்வ் 3 பாண்ட்ஸ் ரேடியோ
B. C. 5151 A. C.
நிகர விலை ரூ. 295
12 மாத உத்தரவாதத்துடன் மாதத் தவணைகளில் வாங்கும் சலுகை உண்டு
வயர்லெஸ் சேல்ஸ் & ஸர்வீஸ் கம்பெனி
1/11-A, மவுண்ட் ரோடு, சென்னை - 2
போன்: 86506 தந்தி: "RADSALES"
கிளைகள்: ○ பெஸண்ட் ரோடு, காந்தி நகர் விஜயவாடா ○ 28, கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி ரோடு, வேலூர் ○ செரி ரோடு, சேலம் (காலேஜ் எதிரில்)



மன்னும் மலையும்

ரவீந்திரநாத தாகூர்

இத்தனை காலத்துத் தாம்பத்திய வாழ்க்கையில் இன்று தான் முதல் தடவையாக வேணி குடும்பத்தின் கட்டுத் திட்டங்களிலிருந்து விடுபட்டு வெளியே வந்திருந்தாள்.

வானத்தைக் கூரையாகக் கொண்ட 'பூமி, புத்தொளி பிரகாசிக்கப் புதுத் தம்பதிகளான எங்களை வியப்புடன் பார்த்தது. நோயினால் நலிந்து விட்ட வேணியின் முகத்திலே, குழி விழுந்த குவளைகளுக் குள்ளே கரிய பெரிய விழிகள் அழகுறச் சமைந்திருந்தன.

முதன் முறையாக முகத் திரையை அகற்றி வியப்பினால் விழிகள் விரிய வேணியும் பூவுலகைப் பார்த்தாள்.

ரயில் பிரயாணம் கூட அவளுக்கு முதலாவதுதான். புதுமைகள் அனைத்தும் ஒன்று 'கூடி அவனது உள்ளத்துக்குப் புத்துணர்ச்சியை அளித்துக் கொண்டிருந்தன. உல்லாச உணர்வு, உருத் தெரியாமல் இளைத்திருந்த அவளது உடலுக்குள்ளிருந்து பொங்கு புனலெனப் பெருகிக் கொண்டிருந்தது. யாராவது பிச்சைக்காரன் உருக்கமான குரலில் ஏதாவது கேட்டுக் கொண்டு வந்தால், அவளது இரக்கம் நிறைந்த இதயம், தன்வசமிழந்துவிடும். பெட்டியைத் திறந்து ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் எது கிடைத்தாலும் இளம் பாலகர்களுக்கே இயல்பான உல்லாச உணர்வுடன் எடுத்துப் போடுவாள். அது தொலைவில் உள்ள முக்தி நெறியை அநுபவ வாயிலாக அருகில் அழைக்கும் உபாயமோ, என்னவோ?

உண்மையில் அன்றையப் பொழுது அவளைப் பொறுத்தவரை முக்தி நெறி அருளும் நன்னாளாகவே இருந்தது. முக்திநெறியை அணுக வேண்டுமானால், அதன் பலனை நுகர வேண்டுமானால், தன்னைச் சார்ந்திருக்கும் உலகத்தின்—அதாவது அக்கம் பக்கத்துச் சூழ்நிலையின்—துயரைத் துடைக்க வேண்டும். சித்திபெற வேண்டுமானால் சாதனை அவசியம் அல்லவா? கண்ணுக்கு எட்டிய தூரம் வரை, துக்கத்தையும் தைன்யத்தையும் அண்டவிடாது துரத்துவது ஒரு சாதனைதானே? அக்கம் பக்கத்தில் அவற்றின் நடமாட்டமோ அறிகுறியோ இல்லாமல் செய்தால்தானே முக்தி சித்திக்கும்? எனவே, கரை உடைந்து படித்துறை மூழ்கிவிட்டது போன்று

வேணியைத் திடீரென்று நோய் பிடித்துக் கொண்டது. இயன்றவரை நோய்க்கான சிகிச்சை அளித்தோம். பலப்பல டாக்டர்களைக் கூப்பிட்டுக் காண்பித்தோம். விதம் விதமான 'பேடெண்ட்' மருந்துகள் வீட்டை நிறைத்தன. நோயைக் காட்டிலும் நோய்க்கான சிகிச்சையே பெரிதாகப் போய்விட்டது. தொடர்ந்து ஒன்றரை வருஷம் அளித்த சிகிச்சைக்குப் பிறகும் கூட, அவளுடைய உடம்பு தேறவில்லை. நாளுக்கு நாள் இளைத்து எலும்பும் தோலுமாகி விட்டது. அவள் உடல் நலத்துக்கு ஒருவேளை ஊர் மாற்றம் உதவலாம் என்று வைத்தியம் பார்த்த டாக்டர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

இப்படியாக, திருமணத்துக்குப் பின் முதல் தடவையாக வேணி புக்ககத்தை விட்டு வெளியே புறப்பட்டாள். எங்கள் பெரும் குடும்பத்திலே நாங்கள் இருவரும் திருட்டுத்தனமாகப் பிறருக்குத் தெரியாமல் எப்பொழுதாவது சந்தித்துக் கொள்வோம். வீட்டில் ஏதாவது காரியமாக இங்குமங்கும் வளைய வர நேரும்பொழுது, எதிர்ப்பட்டால் கேலி செய்து கொள்ளவோ, சுருக்கச் சுருக்க இரண்டொரு வார்த்தைகள் பேசிக் கொள்ள முடிந்தால் பேசிக் கொள்ளவோ செய்வோம். இல்லாவிட்டால் இல்லை. பொதுவாக அபிநயம், சமிக்ஞை, முத்திரை ஆகியவற்றின் மூலமே எங்கள் உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டியது.

தோன்றிய உலகத்தில், இடையறுது ஓடும் அன்பு வெள்ளத்தினூடே மிதந்தவாறு நாங்கள் இருவரும் ஆனந்த யாத்திரையைத் தொடங்கினோம். அந்த அன்பு யாத்திரையிலே நானிலம் நலமுற்றுத் திகழவேண்டுமானால், தானமும் தாட்சிண்யமும் தாராளமாகப் புழங்க வேண்டும். சூழ்நிலையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தால்தானே அது நிறைவேற இயலும்? உலகத்தின் கட்டுத் திட்டங்களும், பாச பந்தங்களும் வேணியைப் பொறுத்தவரையில் அறுந்து ஒழிந்து விட்டனவாகவே தோன்றின. இடமோ, வலமோ, கீழோ, மேலோ எங்குமே மாமனார் - மாமியார், மைத்துனர் - ஓரகத்தி, நாத்தி போன்றவர்களின் பாராவோ, கட்டுக்காவல் திட்டங்களோ இடையாது. அவளும் நானும் மட்டுமே இருந்தோம். உலக மனைத்துமே, எங்களது விடுதலை இன்பத்தில் ஒத்துழைத்துக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.



விலாசபுரி ஸ்டேஷனில் வண்டி மாற்ற வேண்டியிருந்தது. அடுத்த வண்டிக்கு ஆறு மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. வேணிக்கு இது அசௌரியமாக இருக்குமோ என்று எண்ணினேன். ஆனால் அன்று வேணிக்கு எதுவுமே அசௌகரியமாகத் தோன்றவில்லை. எனது சிக்கலைத் தனது உற்சாகத்தைக் கொண்டு ஒருபுறம் ஒதுக்கித் தள்ளி விட்டாள். "தங்கினால் போயிற்று! ஆறு மணி நேரம்தானே? வீண் கவலை எதற்கு? எதையாவது பார்த்துப் பொழுதை ஓட்டி விடலாமே!" என்றாள்.

அவளது மனம் இன்பத்தாமரையின் இதழ் விரித்து ஆடியது. வழியில் எழுந்த வேணுநாதம் அடிக்கொருமுறை இன்ப வாரிதியிலே நினைக்கச் செய்து கொண்டிருந்தது. அதனால் அவளுக்கு, இடையில் இவ்வளவு நேரம் தங்கவேண்டியிருக்கிறதே என்ற எண்ணமோ, சீக்கிரம் போய்ச் சேரவேண்டுமே என்ற துடிப்போ தோன்றிச் சித்தத்தைச் சிதைக்கவில்லை.

"மகிழ்ச்சி, புல்லரிப்பு என்பவை இவ்வளவு விந்தையானவையா? மழைக் காலத்து முளையென ஆயிரமாயிரம் உருவம் எடுத்து அதி அற்புதமாகக் கிளைக்கக் கூடியவையா?

பிரயாணிகள் தங்கும் விடுதியின் கதவை அடிக்கொருதரம் திறந்து பார்ப்பாள். அதோடு கையோடு கையாக அதிசயமான பொருளைக் கண்டுவிட்டதைப்போல என்னைக் கூவி அழைத்துக் கூறுவாள்: "அதோ......அதோ பாருங்கள், குதிரை வண்டியை! குதிரை என்ன ராஜநடை போடுகிறது, பாருங்கள்! இதோ...இதோ பார்த்தீர்களா? கன்றுக்குட்டி! என்ன அழகு; ஆகா! என்ன அழகு! எப்படித் துள்ளிக் குதிக்கிறது, பார்த்தீர்களா? அதோ பாருங்களேன்! தாய்ப் பசுவின் கண்களிலே எப்படிக் குமிழியிட்டுக்கொண்டு வருகிறது வாத்சல்யம். பாருங்கள்!...... இன்னும்... இன்னும் ...இதோ பாருங்கள்! மரத்தோப்புக்கு அருகில் சின்னச் சின்ன வீடுகள் எவ்வளவு அழகாயிருக்கின்றன! இவற்றில் எல்லாம் ஸ்டேஷன் உத்தியோகஸ்தர்கள் இருப்பார்கள்; இல்லையா? ஆகா! ஸ்டேஷனுக்கு அருகில் இருக்கும் இவர்கள்தான் எவ்வளவு சுகசாலிகள்; பாக்கியசாலிகள்!"

வாய் ஓயாத அவளது பேச்சு எனக்குப் பயத்தை உண்டுபண்ணியது. அப்படித் திறந்த வாய் மூடாமல் அவள் பேசி நான் பார்த்ததில்லை. அதோடு உடல் நலம் வேறு சரியாக இல்லை. நான், அவள் பேசாமல் இளைப்பாறினால் நல்லது என்று எண்ணினேன். அதனால் ஒரு பெஞ்சியில் படுக்கையை விரித்துத் தட்டிப் போட்டேன். "இதோ பார்! அதிகமாக அலட்டிக் கொள்ளாதே. பேசாமல் படுத்துக்கொள். உடம்புக்கு ஆகாது!" என்று அவளிடம் கூறி விட்டு வெளியே புறப்பட்டேன்.

பக்கத்திலிருந்த புத்தகசாலைக்குச் சென்று ஒரு நவீனம் வாங்கிக்கொண்டு திரும்பி வந்தேன். எத்தனையோ பாசஞ்சர் வண்டிகளும் கூட்ஸ் வண்டிகளும் பிளாட்பாரத்தை விட்டுப் புறப்பட்டுப் போயின. நவீனத்தில் மூழ்கிவிட்ட நான் வெகு நேரம் கழித்துத்தான் திரும்பிப் பார்த்தேன். வேணி பிரயாணிகள் தங்கும் விடுதியின் கதவைத் திறந்து கொண்டு நின்றிருந்தாள். நான் அவளைத் திரும்பிப் பார்த்ததுதான் வியாஜம்; "இதோ பாருங்கள். ஒரு விஷயம் சொல்ல வேணும்!" என்று என்னைத் தன் அருகில் வருமாறு அழைத்தாள்.

நான் எழுந்து அவளருகில்சென்றேன். அவள் என்னை உள்ளே அழைத்துச் சென்றாள். உள்ளே ஒரு மேற்கத்திப் பெண் நிற்பதைக் கண்டேன். என்னைப் பார்த்ததும் அவள், "கும்பிடுகிறேனுங்க, எசமான்!" என்றாள். பிறகு மெதுவாக அறைக்கு வெளியே சென்று ஒருபுறமாக நின்றுகொண்டாள்.

அவள் பக்கம் சுட்டிக் காட்டி வேணி சொன்னாள்: "இவள் பெயர் ருக்மிணி. இவள் புருஷன் இங்குதான் ரயில்வேயில் கூலி வேலை செய்கிறானாம். எதிர்த்தாற்போல் அதோ கிணறு தெரிகிறது, பாருங்கள்! அதற்குப் பக்கத்தில் உள்ள குவார்ட்டரில்தான் இவர்கள் இருக்கிறார்களாம். பல வருஷங்களுக்கு முன்னால் இவர்களது கிராமத்தில் பெரிய பஞ்சம் ஏற்பட்டதாம். ஜமீன்தார் பாவ—புண்ணியம் உணராத பெருங் கொடுங்கோலராயிருந்தாராம். அதனால் இருந்த ஏழு ஏக்கர் நிலத்தை விட்டு விட்டு இவர்கள் இங்கே ஓடி வந்து விட்டார்களாம்!"



நான் அவள் பேச்சுக்கு இடையே குறுக்கிட்டு, "உன் ருக்மிணியின் கதை ரொம்ப ரொம்ப நீளமாயிருக்கும்போல் இருக்கிறதே: சுருக்கமாகச் சொல்லு. வண்டி வந்துவிடப் போகிறது!" என்றேன் சிரித்துக் கொண்டே.

வேணிக்குக் கடுங்கோபம் வந்து விட்டாற் போலிருந்தது. அவள் கண்களை உருட்டி, வேண்டுமென்றே பொய்க் கோபத்தை வருவித்துக் கொண்டு, "முடியாது, முடியாது. நான் சுருக்கமாகச் சொல்ல முடியாது. இன்றுகூட ஆபீஸ் போக வேண்டிய அவசரமா, என்ன? நான் மெதுவாகத்தான் சொல்லுவேன். நீங்கள் கேட்டுத்தான் ஆக வேண்டும்!" என்றாள்.

எனக்குப் படிப்பதில் இருந்த ஆர்வம் அவலமாகி விட்டது. வேறு வழியின்றி வேணியின் வாய்மொழியாக ரயில்வே கூலியின் நீண்ட பெருங் கதையைக் கேட்டே தீரவேண்டியிருந்தது. கருத்துரையைக் கதையின் முடிவிலே தான் கேட்க முடிந்தது. அது கைக்காசுக்குப் பெரும்செலவு வைக்கும் விஷயமாக இருந்தது. கூலியின் பெண்ணுக்குத் திருமணம் ஆகவேண்டுமாம். அதற்கு நகைநட்டுகள் செய்து போட வேண்டுமாம். கூலி பணத்துக்கு எங்கே போவான்? நகை நட்டோ செய்தே ஆகவேண்டும். அதற்கோ பணம் தேவையாயிருந்தது. இந்தக் கவலையினால் ருக்மிணி ஒட்டி உலர்ந்து போய் விட்டாள். கதையைக் கூறி, நிலைமையை விளக்கி, "இவளுக்குக் குறைந்த பட்சம் இருபத்தைந்து ரூபாயாவது நீங்கள் கொடுத்தாக வேண்டும்!" என்று வேணி முடிவாகக் கூறினாள்.

வேணியின் இந்த உதார குணத்தைக் கண்டு, நான் அயர்ந்து போய் விட்டேன். ருக்மிணி யாரோ, எவளோ? அவளிடமா இவ்வளவு இரக்கம்! வேணியின் கபடு-சூது அறியாத தன்மையை என்னவென்று சொல்வது? ருக்மிணிக்கு ஒரேயடியாக இருபத்தைந்து ரூபாயைத் தூக்கிக்கொடுக்கச் சொன்னால்...? இந்தப் பிடிவாதம் விந்தையாக இல்லையா? அந்த இக்கட்டிலிருந்து தப்புவதற்காக, "என்னிடம் சில்லறை நோட்டாக இல்லையே! நூறு ரூபாய் நோட்டாக அல்லவா இருக்கிறது!" என்றேன்

"இருந்தால் என்னவாம்? இத்தனை பெரிய ஸ்டேஷனில் நூறு ரூபாய் நோட்டுக்குச் சில்லறை கிடைக்காதா, என்ன? எங்கேயுமே நூறு ரூபாய்க்குச் சுலபமாகச் சில்லறை கிடைக்குமே?" என்று பழைய மாதிரியே அவள் படபடத்தாள்.

"சரி! சில்லறை மாற்றிக் கொடுக்கிறேன்!" என்று வேணியிடம் சொல்லி விட்டு, நான் அந்தப் பெண்மணியை என்னோடு தொலைவுக்கு அழைத்துச் சென்றேன். வாயில் வந்தபடியெல்லாம் திட்டி விட்டு, "சாதுவான பிரயாணிகளையெல்லாம் நீ ஏமாற்றிப் பிழைக்கிறாயா? இரு, இரு! இப்பொழுதே சென்று ஸ்டேஷன் மாஸ்டரிடம் உன்னைப் பற்றிப் புகார் கொடுக்கிறேன். உங்களையெல்லாம் வேலையை விட்டு நீக்கவில்லை என்றால் கேள்!" என்று அவளைக் கடிந்து கொண்டேன்.

அவள் அழத் தொடங்கி விட்டாள். மன்னிப்பு கோரிக் கால்களில் விழுந்தாள். நானும் அவள் கையில் இரண்டு ரூபாயைத் திணித்துவிட்டு நகர்ந்தேன்.

* * *

அப்புறம் மெயில் வந்தது. ஏறினோம். புறப்பட்டோம். இந்தக் கதையெல்லாம் எதற்கு? ஜோஷ்னை நினை

மாற்றத்தை உத்தேசித்து வந்த வேணி இரண்டு மாதங்கள் இருந்தாள். இடைவிடாமல் எந்த ஊசியோ சிகிச்சைகள் செய்துங்கூட என்னால் அவள் உயிரைக் காப்பாற்றிப் பிடித்து வைத்துக் கொள்ள முடியவில்லை. வாழ்க்கைக் கோயிலைக் கும்மிருட்டாக்கி விட்டுக் குலவிளக்குப் பெண் அணைந்து விட்டது.

வேணி தனது கடைசி மூச்சின் பொழுது என் காலைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். பாததூளியை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டாள். அப்புறம் மிகவும் உருக்கமான குரலில் கூறினாள் :

''நான் என் வாழ்நாளில் எல்லாவற்றையும் மறந்தாலும் மறந்து விடுவேன். ஆனால் இந்தக் கடைசி இரண்டு மாதங்களை எந்த நாளும் மறக்க மாட்டேன். என்றென்றும் இதன் நினைவு என் உள்ளத்தில் தூண்டாத அணையா விளக்கெனச் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். எனது இந்தக் கடைசி இரண்டு மாதங்களில் தாங்கள் அமிர்தவர்ஷமே வர்ஷித்து விட்டீர்கள். நெகிழ்ந்த உள்ளத்துடன், இந்த இரண்டு மாதங்களையும் நினைவுத் திரையில் பதித்துக் கொண்டே நான் தங்களிடம் விடை பெறுகிறேன்!''

வேணி போய் விட்டாள், நிறை மனத்தோடு. பேரின்ப உணர்வை ஊன்று கோலாக்கிக்கொண்டு



பரிபூரணானந்தப் பாதையிலே மடமடவென்று முன்னேறி விட்டாள். ஆனால் நான்...? ஏ உள்ளுறை தெய்வமே! எந்த இரண்டு மாதத்தில் நான் அமிர்த வர்ஷமாக வர்ஷித்தேன் என்று வேணி சொன்னாளோ, அந்த இரண்டு மாதகாலத்தில்தான் அவளது இரக்கத்துக்கும் உள்ளோடியாக ஓடிக் கொண்டிருந்த தாட்சிண்யத்துக்கும் ஊறு செய்திருக்கிறேன்; ஏமாற்றி மோசடி செய்து பிழைத்திருக்கிறேன். அதுவும் எதற்கு? கேவலம் இருபத்தைந்துரூபாய்களுக்கு! அற்பத் தொகைக்கு! இன்று நான் ருக்மிணிக்குலட்சம் ரூபாய் கொடுத்தாலும், அதனால் எனக்கு ஏற்பட்ட களங்கத்தைக் களைய முடியாது. கறையை நீக்கமுடியாது. எந்த இரண்டு மாதங்களை வேணி தனது அமுத நினைவெனப் போற்றிப் பொத்தி எடுத்துச் சென்றிருக்கிறாளோ, அதனுள்ளே எனது கபடம் என்னும் கருநாகம்சுற்றிச் சுருண்டு படுத்திருக்கிறது என்பது பாவம், வேணிக்கு என்ன தெரியும்?

விலாசபுரி ஸ்டேஷன் வந்ததும் நான் இறங்கி விட்டேன். என் ஆத்மாவுக்கு நிம்மதியே கிட்டவில்லை. நான் ருக்மிணியைத் தேடிக்கொண்டு புறப்பட்டேன் நான் ஒவ்வொருவராகப் பார்த்து, ''ருக்மிணி எங்கே? ருக்மிணி எங்கே?'' என்று கேட்டேன். இந்தக் கேள்வியைக் கேட்கும்

உ

முருகா

கிருபானந்தவாரியார் சுவாமிகள்

பொன் விழா



சமய ஒழுக்க சன்மார்க்க நன்னெறிகளை இமய முதல் கடலுக்கப்பாலும் சென்று இன்தமிழால், பாடி விளக்கிப் பணியாற்றும் பெரியார் பொன்விழாவிற்கு, நாடி நன்னிதி யளிக்க நந்தமிழ் மக்களே! முந்துங்கள்!! உங்களாலியன்ற பணத்தை உடனடியாக அனுப்பி, ஓங்கு புகழ் வளர்ப்பீர்களாக!

★

பொன் விழா மதுரையில்

3-9-58 முதல் 17-9-58 முடிய நடைபெறும்

ஜெ. மு. குருநமசிவாயன்
பொன்விழா பொருட்காப்பாளர், மதுரை

காகிதம் விலை ஏறியும்கூட மலிவான விலையிலே அரிய புத்தகம்

மகாகவி பாரதியார்

கவிதைகள்


நான்காம் பதிப்பு. முன் பதிப்புகளில் வராத புதிய கவிதைகள் 13. 400 பக்கங்கள். முத்து முத்தான எழுத்துக்களில் அச்சு. வெள்ளைக் காகிதம். **விலை ரூ. 1-75**
தபால் செலவு 75 ந. பை. வி. பி. கிடையாது. மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்புக.

கம்ப ராமாயணம் 1. ரூ. 2; அரபுக் கதைகள் 2, ரூ. 1-50; அரபுக் கதைகள் 3. ரூ. 1-50; காய்கறித் தோட்டம் ரூ. 1-25. இவைகள் கைவசம் உள்ளன

★

சக்தி காரியாலயம் 1000 விளக்கு சென்னை - 6

மெட்ரிக் முறை என்பது என்ன ?



மெட்ரிக் முறையில் மீட்டர் என்பது அடிப்படை நீட்டல் அளவு. இந்த மீட்டரிலிருந்து உண்டான அளவுகளைக் குறிக்கும் முறை மெட்ரிக் முறை என்று பெயர் பெற்றது. எல்லா தசாம்ச முறைகளிலும் 10 ஆல் பெருக்கி அல்லது வகுத்து மற்ற அளவுகளைக் கணக்கிடுகிறோம். மெட்ரிக் முறையிலும் இப்படியே.

மெட்ரிக் முறையில் டெகா(பத்து தடவை), ஹெக்டா (10 x 10 = 100 தடவை), கிலோ (10x10x10 = 1000 தடவை) என்னும் சொற்களை முன்னால் இணைத்து அடிப்படை இலக்கத்தின் பெருக்கங்களைக் குறிப்பிடுகிறோம். அது போலவே, டெசி (1/10), சென்டி (1/100), மில்லி (1/1000) என்னும் சொற்களை முன்னால் இணைத்து கீழ்வாய் இலக்கங்களைக் குறிப்பிடுகிறோம்.

மெட்ரிக் முறை எடைகளும் அளவுகளும் 1958 அக்டோபரிலிருந்து அமுலுக்கு வருகின்றன

மெட்ரிக் நீட்டல் அளவுகள்

நீளக்கணக்கின் அடிப்படை அளவு
மீட்டர்
சுமார் 40 அங்குலம்
1 கிலோ மீட்டர் = 5 பர்லாங் தூரம்

கீழ்வாய் இலக்கங்கள்


10 மில்லிமீட்டர்	=	1 சென்டிமீட்டர்
10 சென்டிமீட்டர்	=	1 டெசிமீட்டர்
10 டெசிமீட்டர்	=	1 மீட்டர்

பெருக்கங்கள்

10 மீட்டர்	=	1 டெகாமீட்டர்
10 டெகாமீட்டர்	=	1 ஹெக்டாமீட்டர்
10 ஹெக்டாமீட்டர்	=	1 கிலோமீட்டர்

2

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது



சென்ற மாதம் ராஜாஜி ஹைதராபாத்துக்குச் சென்றிருந்த போது, ஹைதராபாத், செகந்திராபாத் தமிழர்கள் ராஜாஜிக்கு அமோகமாக வரவேற்பு அளித்துக் கௌரவித்தார்கள். ஹைதராபாத் பாரதி சங்கம், தென் இந்திய பண்பாட்டுக் கழகம் முதலிய சங்கங்கள் அளித்த வரவேற்பின்போது ராஜாஜி பேசுவதை மேலே பார்க்கலாம்.

ஒவ்வொருவரும், வியப்பினால் விரிந்த கண்களுடன் என்னையே பார்க்கத் தொடங்கி விட்டார்கள், பித்தன் என்று எண்ணிக் கொண்டு.

கடைசியில் நான் வெகு சிரமப்பட்டு நினைவுப்படுத்திக் கொண்டு, "ஜம்ரு ஜம்ரு என்று இங்கே ஒரு கூலி இருந்தானே, அவனது மனைவி அவள்...." என்று கூறினேன்.

" அவர்களா? அவர்கள் இப்பொழுது இங்கே இல்லையே!" என்று சொல்லிக் கையை விரித்து விட்டார்கள் கூலிகள்.

வேறு விவரம் ஒன்றும் அவர்கள் மூலம் தெரியாமற் போகவே நான் ஸ்டேஷன் மாஸ்டரிடம் சென்று, "இங்கே ஜம்ரு என்று ஒரு கூலியும் அவன் மனைவியும் இருந்தார்களே, அவர்கள் இருவரும் எங்கே போனார்கள் என்று தயவுசெய்து தங்களால் சொல்ல முடியுமா?" என்று கேட்டேன்.

"போம், ஐயா, போம்! எங்களுக்கு வேறு வேலை இல்லையா? ஜம்ருவாவது? கிம்ருவாவது? கூலியையெல்லாம் தெரிந்து வைத்துக் கொள்ள எங்களுக்கு யாரும் கூலி தரவில்லை!" என்று கொள்ளாக வெடித்தார். அதற்கு மேல் அந்த இடத்தில் நிற்க முடியுமா?

நான் டிக்கட் பரிசோதகரை அணுகிக் கேட்டேன். எனது கவலைதோய்ந்த முகத்தைக் கண்டு அவருக்குக் கருணை பிறந்ததோ, என்னவோ?

" ஒரு மாதமாக அச் சீமான்கள் இங்கே இல்லை. அவர்கள் டார்ஜீலிங்குக்கோ அராகானுக்கோ போய் விட்டார்கள்!" என்றார் டிக்கட் பரிசோதகர் குத்தலும் குறும்பும் தொனிக்க.

"நான் கேட்கக் கேட்க ஜனங்கள் எரிந்து விழலாயினர். என்னை அவர்கள் பைத்தியம் என்று எண்ணி விட்டார்களோ, என்னவோ?

எந்த மனிதனிடம் இந்த உலகில் யாருக்குமே எந்த வேலையும் இல்லையோ, அவனிடம் இன்று எனக்கு மிகப் பெரும் வேலை இருக்கிறது என்பதை நான் அவர்கள் தொண்டைக்குக் கீழே எப்படி இறக்குவது? நான் செய்த மோசடிக்குப் பிராயச் சித்தம் அவனால்தான் ஆக வேண்டும். மோசடி காரணமாக உள்ளத்தை அழுத்தும் பெருஞ்சுமையை அவனால்தான் இறக்க முடியும் என்பதை எப்படி விண்டு விளங்க வைப்பது?

'எனது இந்தக் கடைசி இரண்டு மாதங்களில் நீங்கள் அமுத வர்ஷமே வர்ஷித்து விட்டீர்கள்' என்று வேணி கடைசியாகச் சொல்லிப் போனாளே, அந்த நினைவு என் உள்ளத்தை விட்டு அகலாது. அது என் உள்ளத்தை முள்ளாகக் குத்திக் கொண்டிருக்கும்; மலையாக அழுத்திக் கொண்டிருக்கும். ருக்மிணி வந்து அந்தச் சுமையை இறக்கி உள்ளத்திலே தைத்துவிட்ட முள்ளைப் பிடுங்கி எறியாத வரையில், மலையாக அழுத்தும் சுமையை எடுத்து எறியாத வரையில் எனக்கு நிம்மதி கிடையாது; கிடையவே கிடையாது.

— 'நவநீத்'திலிருந்து ஈ. வீ.

நிகழ்ச்சிக் குறிப்புகள்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகளின் ஆக்ஞையை முன்னிட்டு நாகபுரி தென்னிந்திய ஆஸ்திக மஹாஜனங்கள் சென்ற மூன்று வருஷங்களாக ஸ்ரீ வியாச பூஜா மஹோத்ஸவத்தை நடத்தி வருகிறார்கள். இவ் வருஷமும் திருவெண்காடு, ஸ்ரீ டி. கே. முத்துசுவாமி சாஸ்திரிகள் ஜூன்மாதம் முதல் தேதி ஆரம்பித்து, இரவு எட்டு மணி முதல் பத்து மணி வரை "ஸ்ரீ மஹாபாரதத்தை" 60 பகுதிகளாகத் தொகுத்து உபன்யாசம் செய்தார்கள். ஸ்ரீ சாஸ்திரிகளது ஸமஸ்கிருத பாண்டித்தியமும், வேதாந்த நியாய மீமாம்ஸா சாஸ்திர ஞானமும், உயர்ந்த நாவன்மையும், தமிழ் நடையும் ஆஸ்திகர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன.

இவ்விழாவை முன்னிட்டு ஜூலை மாதம் 13ந் தேதி காலை கிருஷ்ணன் கோவிலில் புருஷசூக்த யக்ஞம் நடந்தது. பல ஏழைகளுக்கு அன்னமும் அளிக்கப்பட்டது.

★

இலங்கையில் கல்லடி உப்போடை இ. கி. ச. பெண்கள் பாடசாலையில் "விபுலாநந்தர் நினைவு விழா" சிறப்பாக நடந்தது. விழாவுக்கு சுவாமி நடராஜானந்தா அவர்கள் தலைமை வகித்தார்.

"சுவாமி விபுலானந்தர் துறவி, விஞ்ஞானி, புலவர் மட்டுமல்ல ஓர் தீர்க்கதரிசியும் கூட; ஏனெனில் அடிகளார் தேச நிலைக்கேற்ப வருங்காலத்தை உணர்ந்து நம் நாட்டுக்கு நற்பணி புரிந்தார்" என்று அவர் தம் பேச்சில் கூறினார்.

விழாவில் வெளியிட்ட "தங்கை" பத்திரிகையின் "விபுலானந்தர் நினைவு மலரை"ச் சமர்ப்பித்துப் பேசும்போது, திரு ஆர். ராசதுரை "விபுலானந்த அடிகளார் தமிழுக்குச் செய்த சேவைக்கு இதுபோல் எத்தனை நினைவு மலரை வெளியிட்டாலும் ஈடாகாது" என்று குறிப்பிட்டார்.

விழாவில் செல்வி க. மகேஸ்வரி, செல்வி பொ. அருளம்மா, செல்வி அன்னலட்சுமி, செல்வி மூ. பூமணிதேவி ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

சுவாமி விபுலானந்த அடிகள் புனைந்த சில பாடல்களைச் சங்கீத பூஷணம் திரு. க. தங்கராசா உணர்ச்சி பொங்கப் பாடினார். நினைவு தினத்தை யொட்டி நடந்தேறிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்குத் தலைவர் பரிசுகளை வழங்கினார்.

★

ஒரிஸ்ஸா மாநிலத்திலுள்ள தால்சேர் நிலக்கரிச் சுரங்கத் தமிழர் மன்றத்தின் சார்பாக ஆகஸ்டு 15, 16 தேதிகளில் "பராசக்தி" 'வாழ்வு எங்கே?' 'அனார்கலி' முதலிய நாடகங்கள் சிறப்பாக நடைபெற்றன. இந் நாடகத்துக்குத் திரளாக மக்கள் வந்து குழுமியிருந்தனர். முதல் நாள் நாடகத்தில் கலந்து கொண்ட உயர் நிர்வாகி திரு ஜே. எல். கபூர் அவர்கள் இம் மன்றம் நீடூழி வாழ்ந்து சுரங்கத் தமிழர்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபட வேண்டுமென்று கோரினார்.

சுதந்திர தின விழாவையொட்டி நடைபெற்ற அக் கொண்டாட்டங்களில் எல்லா மொழி மக்களும் கலந்து கொண்டது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

★

டேராடூன் தேசிய கலாசார இயக்கத்தின் ஆதரவில் கடந்த ஜூலை மாதம் 23-ந் தேதி டில்லி ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் அதிபரான சுவாமி ஸ்ரீ ரங்கநாதானந்தாஜி 'உலகின் கண் தற்சமயம் தெய்வீக நெறிக்கு ஏற்பட்டுள்ள இடுக்கண்கள்' என்பதைப் பற்றி அரிய உரை நிகழ்த்தினார். ஆகஸ்ட் மாதம் 7ந்தேதி நியூயார்க் வேதாந்த சமாஜத்தின் தலைவரான சுவாமி ஸ்ரீ பவித்ரானந்தாஜி, 'மேல் நாடுகளில் வேதாந்தத்தின் எழுச்சி' எவ்வாறு என்பதைப் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்.

இவ்விரண்டு நாட்களிலும் ஸ்ரீமதி லலிதா நாகராஜன் தம்முடைய பாணிக்கேற்ப சமஸ்கிருத சுலோகங்களும், இனிய பஜன் பாடல்களும் பாடிச் சபையோரைப் பக்திக் கடலில் மூழ்கடித்தார்.

★

பம்பாய் வாழ் தமிழர்களுக்கு இலக்கியப் பணி புரிந்து வரும் பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார் கடந்த ஜூலை மாதத்தைச் "சொற்போர் மாத"மாக நடத்தித் தமிழ் அன்பர்களுக்கு அறிவு விருந்தளித்தனர். பகுத்தறிவுக்கு வளர்ச்சி அளிக்கும் பொருள்களைப் பற்றிய சொற்போர்கள் முறை 6, 13, 20, 27 தேதிகளில் நடந்தன. இவற்றுள் சினிமாக் கலையைப் பற்றிய சொற்போருக்கு ஸ்ரீமான் ஜூர்வர் சீதாராமன் அவர்கள் தலைமை வகித்துப் பெருமை தந்தார். இந்த நிகழ்ச்சிகளிலெல்லாம் பல சங்க அங்கத்தினர்களும் கலந்து கொண்டதுடன், தமிழன்பர்கள் திரளாக வந்திருந்து உற்சாகத்துடன் கலந்து கொண்டு நடத்தித் தந்தனர்.

மேலும் ஜூலை 21-ம் தேதி முதல் 24-ம் தேதி முடிய அமெரிக்கச் செய்தி ஸ்தாபனத்தார் சங்க மண்டபத்தில் அளித்த 'செய்திப்பட' நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்றன. அதுசமயம் பல்வேறு கல்வி ஸ்தாபனங்களிலிருந்து மாணவர்களும் சுற்றுப்புறத்திலே வசிக்கும் மக்களும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு பேராதரவு அளித்தார்கள்.

★

சுதந்திர தினக் கொண்டாட்டத்தைத் தாவணகிரி நகரத் தமிழர்கள் நல உரிமைச் சங்கத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினர். ஸ்ரீ கோதண்டராம் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, விழாவுக்குத் தலைமை வகித்தார். சுதந்திர தினக் கொண்டாட்டத்தையொட்டிப் பேச்சு, பாடல் போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

எனது கதை

பென்சில்

கௌசிகன்

எட்டாவது தடவையாகச் சீனு தன் புதுப் பென்சிலைச் சீவினான். சீவச் சீவ அது உடைந்து கொண்டே இருந்தது. சீனுவுக்கு ஆத்திரம். அதை இரண்டாக முறித்துப் போடப் போனான். அப்போது ஒரு குரல், "சீனு! என்மீது ஏன் ஆத்திரப்படுகிறாய்? நீ வாங்கிய பென்சில் நல்லதில்லை" என்றது. சுற்றுமுற்றும் பார்த்தான். யாருமில்லை.

"உன் கையிலுள்ள நான்தான் பேசுகிறேன்" என்று உருண்டோடி நின்று பேசியது பென்சில். சீனுவுக்கு ஒரே வியப்பு. "நாலணா கொடுத்தல்லவா வாங்கினேன்" என்றான் சீனு.

"அணா கொடுத்தால் ஆயிற்றா? அது சரி! என்னை எப்படிச் செய்கிறார்கள் என்றாவது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டது பென்சில்.

"இது தெரியாதா? மரமும் கரியும் தானே நீ" என்றான் சீனு. பென்சில் சிரித்தது. "நான் பிறந்த கதையைக் கேள். ரொம்ப ரஸமாக இருக்கும். நான் மேல்நாட்டில் பிறந்தவன். இந்தியாவிலும் இப்போது எங்கள் இனத்தவரை உருவாக்குகிறார்கள். எங்கள் உடல் உறுதியானதும் ஆனால் கனமற்றதுமான மரத்தால் ஆனது. அநேகமாக நாங்கள் 'பைன்' என்ற ஒருவகை மரத்தாலேயே செய்யப்படுகிறோம். சில பென்சில்களைச் சீவிவிட்டு முகர்ந்து பார்த்தாயானால் கம்மென்று ஒரு வாசனை அடிக்கும். இது 'பைன்' மரத்தின் அற்புதமான வாசனை.

"வெறும் மரம் மட்டும் பென்சிலாகி விடுமா? மரத்துக்குள் ஏதாவது வைத்தால்தானே அது பேப்பரில் கோடு இழுக்கும். ஆனால் நீ நினைப்பது போல் பென்சிலுக்குள் இருக்கும் கறுப்பான பாகம் கரியல்ல. சிலர் எங்களை 'லெட் பென்சில்' என்பார்கள். அதன்படி பார்த்தால் எங்கள் உடலின் நடுவிலே உள்ள எழுதும் பொருளில் 'லெட்' (ஈயம்) இருப்பதாக நினைப்பது தவறு. என் உடலில் ஈயமே கிடையாது. 'கிராபைட்' என்ற ஒருவகை தாதுப் பொருள் தான் என்னுள் இருப்பது. நிலக்கரியைப் போன்ற ஒன்று. பளபளவென்று ஜ்வலிக்கும். உயர்ந்த மலைகளிலிருந்து உருண்டு விழுந்து அடர்ந்த காடுகள் உயர்ந்த கணவாய்கள் வழியே அசுர வேகத்தோடு ஓடும் நதிகளின் பாதையிலே பூமிக்கு அடியிலே ஆழத்திலே இந்தத் தாதுப் பொருள் கிடைக்கும்.

"இந்த கிராபைட் மட்டும் பென்சிலாகி விடாது. இதற்குக் களிமண்ணும் தேவை. சாதாரணக் களிமண்ணல்ல; உயர்ந்த களிமண். 'பென்சில் என்ன செங்கல்லா? களிமண் எதற்கு?' என்று நீ கேட்கலாம். என் உடலின் நடுவிலுள்ள கிராபைட் உறுதியாகவும் நன்றாகவும் இருக்கக் களிமண் தேவை. எங்கள் உடலின்மீது 'H' என்றும் 'B' என்றும் 'HB' என்றும் போட்டிருப்பதைப் பார்த்திருப்பாயே. இதற்கு என்ன பொருள் என்று நீ எப்போதாவது சிந்தித்ததுண்டா? பென்சிலிலே களிமண் அதிகம் கலந்திருந்தால் எழுதுவதற்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். வெள்ளையாக எழுதும். அழுத்தி எழுத வேண்டும். 'B' என்று போட்டிருந்தால் அது மிருதுவாக எழுதும்; கறுப்பாக இருக்கும், களிமண் குறைவாகக் கலக்கப்பட்டிருக்கிறது என்று பொருள். 'H' என்று போட்டிருந்தால் அழுத்தி எழுத வேண்டும். மங்கலாக எழுதும். களிமண் கலவை அதிகம் என்று தெரிந்துகொள்.

"என்னை உருவாக்க, மரம், கிராபைட், களிமண் இவைமட்டும் போதாது. நான் முழு உருப் பெற இன்னும் சில பொருள்களும் தேவை. கோந்தும், 'கிரீஸ்' என்ற ஒருவகை எண்ணெய்ப் பொருளும் வேண்டும். கிராபைட் அணுக்கள் ஒன்று சேரவும், பொற பொற வென்று நொறுங்கிப் போகாதிருக்கவும் கோந்து கலக்கப் படுகிறது. இந்தப் பொருள்களெல்லாம் ஒன்றாகி, பேப்பரில் வழவழப்பாக எழுத 'கிரீஸ்' உதவுகிறது. கிரீஸ் சேர்க்காவிட்டால் நான் எழுதுவது மங்கலாகவும் ஒழுங்காக இல்லாமல் விட்டு விட்டும் இருக்கும்.

"இத்தனை சாமான்களும் எப்படி ஒன்று சேர்க்கப்படுகின்றன? பெரிய மரத்திலிருந்து உருண்டையானதும், அறுபட்டை வடிவமானதுமான எங்கள் உடலை எப்படி உருவாக்குகிறார்கள்?



அதன் நடுவே நீ காணும் கரி போன்ற இந்தக் கரிய நிறக் கலவையை எப்படி வைக்கிறார்கள் என்றெல்லாம் உனக்குத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

''கிராபைட், களிமண், மரம், கோந்து, கிரீஸ், வார்னிஷ், அலுமினியம் இத்தனை பொருள்களையும் கொண்டு மனிதர்களின் கடுமையான உழைப்பினால் நான் உருவாக்கப்படுகிறேன். உலகத்திலே உன்னைப் போல எத்தனை குழந்தைகள் இருக்கிறார்கள். அத்தனை குழந்தைகளுக்கும் 'பென்சில்' விநியோகம் செய்தாக வேண்டுமானால், மனிதர்கள் குடிசைத் தொழிலாக இதைச் செய்தால் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. அப்படிச் செய்யப்படும் நான் விலை உயர்ந்தவனாகவும் இருப்பேன். ஆகவே என்னை உருவாக்க யந்திரங்களின் உதவியை நாடுகிறார்கள் மனிதர்கள்.

''பென்சில் தொழிற்சாலைக்குப் போயிருக்கிறாயா? அங்கே விதம் விதமான யந்திரங்கள் விந்தையான காரியங்களைக் கன வேகமாகச் செய்து கொண்டிருப்பதைக் காண்பாய். 24 மணி நேரத்தில் 3 கோடி பென்சில்களை உற்பத்தி செய்யும் யந்திரசாலைகள் இருக்கின்றன.

''தொழிற்சாலையின் ஆரம்பத்தில் ஒரு யந்திரம் கிராபைட்டையும் களிமண்ணையும் சரியான அளவில் கலந்து கொண்டிருக்கும். மறு கோடியில் பளபளக்கும் பென்சில்களை அட்டைப் பெட்டிக்குள் அடைத்துத் தள்ளிக் கொண்டிருக்கும் இன்னொரு யந்திரம். களிமண்ணும், கிராபைட்டும் மரமும் உடனே இப்படிப் பென்சிலாக உருப் பெற்று விடுவதில்லை. இடையிலே எத்தனை வித மாற்றங்கள். அப்பப்பா!

''சொல்கிறேன் கேள். முதலில் கிராபைட்டையும் களிமண்ணையும் மெல்லிய பொடியாக்கி அத்துடன் கோந்தைக் கலந்து மறுபடியும் இந்தக் கலவையை நன்றாக அரைப்பார்கள். இந்தக் கலவையிலே காற்றுக் கொப்புளங்களும், தூசுதும்புகளும் இருக்கும்; இவைகளை நீக்கினால்தான் நான் ஒழுங்காக எழுதுவேன். இல்லாவிட்டால் அடிக்கடி என் முதுகெலும்பு உடைந்து போகும். நீயும் என்னை அடிக்கடி சீவிக் கொண்டிருக்க வேண்டும். காற்றுக் கொப்புளங்களையகற்ற இந்தக் கலவையைப் பெரிய யந்திரத்தின் உதவியால் அழுத்தி உருளையான வார்ப்புகளைத் தயாரிக்கிறார்கள். தூசிகளை அகற்ற, இந்த வார்ப்புகளை நுண்ணிய துவாரங்களை உடைய சல்லடைகள் மூலமாக வேகமாக அழுத்துகிறார்கள். அழுத்துவதனால் கிடைக்கும் நூல் இழை போன்ற கலவைக்கம்பிகள் மறுபடியும் மிகப் பெரிய உருளை போன்ற வார்ப்புகளாக்கப்படுகின்றன.

''இந்தப் பெரிய வார்ப்பிலிருந்து மெல்லிய கம்பி போன்ற எழுதும் பாகம் எப்படி உருவாக்கப்படுகிறது? உன் அம்மா 'தேன்குழல்' பிழிய மாவை உருட்டி நாழிக்குள் போட்டு அழுத்துகிறாள். உருண்டையான மாவு எப்படித் தேன்குழலாக உருமாறுகிறதோ அப்படித்தான் இந்தப் பெரிய வார்ப்புக் குழாய்கள். மெல்லிய துவாரங்களுள்ள தகட்டை நோக்கி வேகமாக அழுத்தப்படுகிறது. இப்படி அழுத்தும்போது கலவை பிதுங்கி, கம்பி போன்ற நீண்ட குச்சிகள் கிடைக்கின்றன. இதைத் தகுந்த அளவுகளில் ஒரு யந்திரம் வெட்டும் மற்றொரு யந்திரத்தால் இது காய வைக்கப்படும். இன்னொரு யந்திரம் — இது ஒரு உஷ்ண அடுப்பு—இந்தக் குச்சிகளைச் சுட்டுக் கெட்டியாக்கும். கெட்டியாக்கிய குச்சிகளை 'கிரீஸ்'ல் மூக்கி எடுப்பார்கள். இப்போது என் உடலின் நடுவேயுள்ள பாகம் எழுதத் தகுதி வாய்ந்த குச்சிகளாகி விடுகிறது.

''இனி மரங்கள் எப்படி என் உடலாகின்றன என்பதைச் சொல்கிறேன். பெரிய மரங்களை யந்திரம் சிறு சிறு பலகைகளாகச் செதுக்கும். மற்றொரு யந்திரம் இந்தப் பலகைகளின் நடுவே ஆறு பள்ளங்களை நீளமாகக் கோடு போலச் செதுக்கும். இந்தப் பள்ளங்களின் இடையே கிராபைட் கலவைக் குச்சிகளை வைத்து இதேபோல் பள்ளமாக்கப்பட்ட மற்றொரு பலகையால் இதை மூடுவார்கள்; இந்த இரண்டு பலகையும் பசையினால் கலபமாகப் பிரிக்கமுடியாதபடி உறுதியாக ஒட்டப்படும். அதாவது ஆறு பென்சில்கள் ஒன்று சேர்ந்த ஒரு பலகை. இந்தப் பலகையை ஒரு யந்திரம் தனித்தனியாக-ஒவ்வொன்றின் நடுவேயும் ஒரு கிராபைட் குச்சி இருக்கும்படி வெட்டிப் பிரிக்கும். பிறகு என் உடல் உருண்டையாகவோ அல்லது பட்டை தீர்க்கப்பட்டதாகவோ இழைக்கப்படும்.

''நான் பிறந்து விட்டேன். இனி நான் ஆடை உடுத்தி அழகுபடுத்திக் கொள்ள வேண்டாமா? என்மீது விதம் விதமான வர்ணங்கள் பூசும் ஒரு யந்திரம். கடைசியாக என்மீது எழுத்துக்களை அலுமினிய தகடால் பொறிக்கும் ஒரு யந்திரம். உன் அப்பாவின் டிராயரிலுள்ள யானை மார்க் பென்சில் இப்படி உருவானதுதான். அதன்வெட்டுவாயைக் கவனி. இரண்டு பாதியான மரத்துண்டை ஒன்று சேர்த்த அடையாளம் தெரியும்பார்'' என்று சொல்லித் தன் கதையை முடித்தது பென்சில்.

சீனுவும் தன் அப்பாவின் யானை மார்க் பென்சிலை எடுத்து ஆர்வத்தோடுபார்த்தான்.

சென்ற இதழில் வெளியான வேடிக்கை விளையாட்டுகளுக்கு விடைகள்

ஒரு விளையாட்டு

2 ந. பைசாவை 6க்கு, 10 ந. பைசாவை 3க்கு
2 ந. பைசாவை 5க்கு, 10 ந. பைசாவை 4க்கு
2 ந. பைசாவை 2க்கு, 10 ந. பைசாவை 1க்கு
2 ந. பைசாவை 7க்கு, 10 ந. பைசாவை 5க்கு
2 ந. பைசாவை 8க்கு, 10 ந. பைசாவை 3க்கு
2 ந. பைசாவை 5க்கு, 10 ந. பைசாவை 2க்கு

இவை எவை?

1. எலெக்ட்ரிக் பல்ப் – உச்சித் தோற்றம்.
2. ஃபுக்குக் கன்றுகுட கேக் – பின்புறப் பக்கவாட்டுத் தோற்றம்.
3. பேப்பர் கிளிப் – உச்சித் தோற்றம்.
4. அழுக்-கைப்பிடியின் நுனி முகம் பார்க்க.
5. சுத்திக்கோல்-முனையின் உச்சிப் பார்வை.
6. டீக்கோப்பை – கீழ்த் தோற்றம்.

மூன்று நண்பர்கள்

3. மாயமாக மறைந்தார்!

அந்த மனிதரின் விநோதமான வேண்டுகோள் மணிக்கு வியப்பையும் திகைப்பையும் அளித்தது. ஆனால் அவர் தோற்றமும் பார்வையும் பேச்சும் ஏனோ மணிக்கு அவரிடம் ஒரு நம்பிக்கையை — அவர் யோக்கியமானவர் என்ற எண்ணத்தை உண்டாக்கி விட்டன. ஆகவே அவர் விருப்பப்படியே அவருக்கு உதவுவதாகச் சொல்லி விரைவில் திரும்பி வருவதாக விடைபெற்றுக் கொண்டான். மணியினிடம் இப்போது டார்ச்லைட் விளக்கு இருந்ததால் நிலவறையிலிருந்து வெளியேறும் வழியைக் கண்டு பிடிப்பது சுலபமாக முடிந்தது.

நிலவறையை விட்டு வெளியே வந்த மணி அதன் மூடியான மரப் பலகையைத் தேடி அதை மூடி விட்டுக் கிளம்பினான். அவன் நினைவில் இப்போது கிட்டுவும் பட்டுவும் தான் வந்து நின்றார்கள். கிட்டு அவன் பள்ளிக்கூடத் தோழன். முதல் வகுப்பிலிருந்து இதுவரையில் ஒன்றாகவே படித்து வந்தார்கள் இருவரும். கிட்டுவின் தங்கை பட்டு இரண்டு வயது சிறியவள். இவர்களுக்கு ஒரு வகுப்பு கீழே படித்து வந்தாள். கிட்டுவும் பட்டுவும் மணியின் உயிர் நண்பர்கள். கிட்டுவின் அப்பா பெரிய உத்தியோகஸ்தர். வெள்ளைக்காரக் கம்பெனி ஒன்றின் மானேஜர். அடிக்கடி அவர் வெளியூருக்குச் சென்று விடுவார்.

கிட்டுவின் வீடு பெரிய பங்களா. கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் தனி அறையே உண்டு. அவர்கள் அப்பா தன் குழந்தைகளுக்குச் சகல வசதிகளும் அளித்திருந்தார். எந்த விஷயமானாலும் மணி கிட்டுவிடம்தான் சொல்லுவான். அவனைக் கலக்காமல் எதையும் செய்ய மாட்டான். நள்ளிரவு நேரமாகி விட்டதே, நம்மைக் காணாமல் அம்மா திட்டுவாளோ என்ற சிந்தனைகூட அவனுக்கு இல்லை. நிலவறையில் அநாதரவாக ஆபத்தான நிலையில் கிடக்கும் மனிதனுக்கு உதவ வேண்டும் என்ற ஒரே சிந்தனைதான் அவன் உள்ளத்தில் இப்போது நிறைந்திருந்தது. வேகமாக நடந்தான். முழங்காலில் பட்ட அடி ரணமாக வலித்தது. நொண்டி நொண்டி நடக்கலானான். அவன் மனம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. ஒவ்வொரு நிழலிலும் யாரோ ஒளிந்து கொண்டிருப்பது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது மணிக்கு. எங்கோ தூரத்தில் ஒரு பூனை கத்தியது. மணியின் நெஞ்சத் துடிப்பே நின்று விட்டது. இன்னும் வேகமாக நடக்கலானான்; இல்லை, முழங்கால் வலியையும் பொருட்படுத்தாமல் ஓடலானான்.

கிட்டுவின் வீட்டுக் காம்பவுண்டைத் தாண்டி உள்ளே போனதும் நாய் 'டைகர்' உறுமிக் கொண்டு ஓடி வந்தது. ஆனால் மணி என்று தெரிந்ததும் அது வாலைக்



குழைத்துக் கொண்டு அவனைச் சுற்றிச் சுற்றி வரலாயிற்று. மணி அதன் தலையைத் தடவிக் கொடுத்து விட்டுக் கிட்டுவின் அறையை நோக்கி நடந்தான். கிட்டுவின் அப்பா ஊரில் இல்லை என்பது மணிக்குத் தெரியும். ஆகவே கிட்டுவின் அம்மாவின் தூக்கத்தைக்கெடுக்க விரும்பாத மணி தன் நண்பனை மட்டும் எழுப்ப விரும்பினான். கிட்டு படுக்கும் அறை மாடியில் இருந்தது. பங்களாவின் மேற்புறத்திலுள்ள அந்த அறைக்கு 'பால்கனி' உண்டு. கீழே இருந்து 'பால்கனி'யை ஒட்டினாற்போல் புஷ்பக் கொடி படர்வதற்கு இரும்பு வலை பின்னப் பட்டிருந்தது. அதன் மூலமாக ஏறினால் பால்கனியை அடைந்து கிட்டுவின் அறைக் கதவைத் தட்டி அவனை மட்டும் எழுப்பலாம். ஆனால் இரவு வேளையில் அன்னியர் வீட்டில் அப்படித் திருடனைப்போல் ஏறுவது தவறு என்றாலும் ஆபத்துக்கு அதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்ற முடிவுக்கு வந்தான். தவிர, மணி அந்த வீட்டில் வித்தியாசமின்றிப் பழகுபவன்.

கொடிக் கம்பி வழியே பால்கனியை அடைந்த மணி அறைக் கதவைத் தட்டினான். சிறிது நேரம் வரையில், யாதொரு வித பலனுமில்லை. ஆனால் மணியும் விடவில்லை. தொடர்ந்து தட்டவே கிட்டுவின் அறைக்குள் விளக்கு பிரகாசித்தது. அதைத் தொடர்ந்து கதவும் திறக்கப்பட்டது. தன் நண்பன் மணியை அந்த வேளையில், உடல், உடை முழுதும் புழுதி படிந்த கோலத்தில் கண்ட கிட்டு திகைத்துப் போய் விட்டான்.

"என்னடா மணி, இது என்ன கோலம்?"

"எல்லாம் விவரமாகச் சொல்கிறேன். உள்ளே வா" என்றான் மணி, தணிவான குரலில். இதற்குள் பட்டுவும் இவர்கள் சம்பாஷணையைக் கேட்டு எழுந்து விட்டாள். கிட்டுவின் படுக்கையில் உட்கார்ந்தபடி மணி நடந்த விவரங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் சொன்னான். கிட்டுவும் பட்டுவும் வியப்பினால் திறந்த வாய் மூடாமல் மணியின் சாகஸங்களை யெல்லாம் கேட்டார்கள்.

கிட்டு அடிக்கடி "டேய், மணி! நானும் உன்னோடு வரவில்லையே என்று எனக்கு எத்தனை வேதனையாக இருக்கிறது, தெரியுமா?" என்றான். சாகஸச் செயல்கள் புரியவேண்டும் என்று கிட்டுவுக்கும் வெகு நாட்களாகவே ஆசை. காயம்பட்ட மனிதன் உதவிவேண்டி நிலவறைக்குள் கிடக்கும் செய்தியை மணி விவரிக்கக் கேட்டதும் கிட்டு துள்ளி எழுந்தான்.

"மணி! இதுவரையில் உன் பங்குக்கு நீ வீரச் செயல்கள் புரிந்து விட்டாய். அந்த மனிதனை அங்கிருந்து வெளியேற்றிக் காப்பாற்றுவது இனி என்னுடைய பொறுப்பு" என்று சொல்லிவிட்டுக் கிளம்புவதற்குத் தயாரானான் கிட்டு.

"அண்ணா! நானும் உன்னோடு வருவேன்" என்றாள் பட்டு.

"நீயா? சேச்சே! இது பெண்கள் வேலை இல்லை, தெரிந்ததா? நீ சுகமாகத் தூங்கு! போ" என்றான் கிட்டு.

ஆனால் பட்டு தூங்குவதற்குத் தயாராக இல்லை. "கிட்டு! நம் ஒப்பந்தத்தை மறந்து விட்டாயா?" என்றாள் பட்டு முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு. "நானும் உன்னோடு வரத்தான் வருவேன். உனக்கு உள்ள தைரியம் எனக்கும் உண்டு" என்றாள்.

அண்ணன் தங்கைக்குள் ஒரு ஒப்பந்தம். எந்த விஷயத்திலும் ஒருவரை யொருவர் விட்டுக் கொடுக்கக் கூடாது. எங்கும் எதற்கும் சேர்ந்தேதான் போக வேண்டும். அதன்படி கிட்டு தன்னுடன் பட்டுவும் வருவதற்குச் சம்மதிக்கும்படியாயிற்று.

கிட்டு தன் திட்டம் என்ன என்பதை மணிக்கு விளக்கினான். ரங்கசாமி என்பவன் கிட்டுவுடைய அப்பாவின் பழைய டிரைவர். இப்போது டாக்ஸி ஓட்டிப் பிழைத்து வந்தான். ரங்கசாமிக்குக் கிட்டுவிடமும் பட்டுவிடமும் உயிர். இவர்களுக்காக எதையும் செய்வான். அவன் வீடு அருகில் தான் இருந்தது. அவனைப் போய் எழுப்பி அவன் டாக்ஸியில் புலித்தேவன் தோப்புக்குப் போய் அவன் உதவியுடன் நிலவறையிலுள்ள மனிதனை வெளியேற்றி இரவு ரங்கசாமியின் வீட்டிலேயே அவருக்கு அடைக்கலமளிப்பது—இதுதான் கிட்டுவின் திட்டம்.

பட்ட சிரமம் தீரத் தன் படுக்கையிலேயே படுத்துத் தூங்கும்படி மணிக்குச் சொல்லி விட்டுப் பட்டுவுடன் கிளம்பினான் கிட்டு. நேரே ரங்கசாமியின் வீட்டுக்குப் போய் அவனை எழுப்பி விஷயத்தைச் சுருக்கமாக விளக்கியதும் அவனும் நிமிஷமும் தாமதிக்காமல் இவர்களுடன் கிளம்பி விட்டான். அவன் டாக்ஸியும் புலித்தேவன் தோப்புக்குப் பத்தே நிமிஷத்தில் பறந்து வந்து நின்றது. மணி சொல்லி இருந்த அடையாளப்படி நிலவறைக்குள் செல்லும் வழியை மூடியுள்ள பலகையைக் கண்டு பிடிக்க அவர்களுக்கு அதிக நேரமாக வில்லை. ரங்கசாமி தன்னுடன் ஒரு பாட்டரி விளக்கையும் கொண்டு வந்திருந்தான். மூவரும் அதற்குள் இறங்கித் தேடுவதிலும் சிரமம் ஏற்படவில்லை. மணி கூறியபடி எல்லாம் சரியாக இருந்தது. ஆனால் அங்கு எந்த மனிதரையும் காணவில்லை! ஹரிக்கேன் விளக்கும் இல்லை. அதனருகில் அடிபட்ட மனிதரையும் காணவில்லை. இது கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் ஏமாற்றமாக இருந்தது. மணி பொய் சொல்லி இருக்க மாட்டான். அப்படியானால் அந்த மனிதன் என்ன ஆனான்? (தொடரும்)

பொங்கிவரும் பெருநிலவு

பத்தாம் அத்தியாயம்

நீறுபூத்த நெருப்பு

அடடா! நாம் விமலாவைப் பார்த்து எவ்வளவு நாட்களாகி விட்டன. நடராஜன்தான் அவளைச் சற்று அலட்சியம் செய்தான் என்றால் அதற்காக நாமும் அவளைக் கவனிக்காமல் இருக்க வேண்டுமா என்ன? வாருங்கள், போய்ப் பார்க்கலாம்.

அந்தப் பெரிய வீட்டில் ஒவ்வொரு அறையாக அவளைத் தேடுகிறோம். வீடு முழுவதும் தேடி விட்டு அவளைக் காணோம் என்று நிச்சயம் செய்து கொண்டு வெளியே வருகிறோம். எங்கே போயிருப்பாள்? ஒருவேளை? ஆம்! அப்படித்தான் இருக்க வேண்டும்! வழக்கமாகத் தன் ஆசை அத்தானுடன் அளவளாவும் தோட்டத்தின் அந்த மூலைக்குத்தான் அவள் போய் இருக்க வேண்டும்.

அந்த இடத்தை நெருங்கும்போதே ஏதோ பேச்சுக் குரல் கேட்கிறது. விமலாதான் பேசிக் கொண்டிருக்கிறாள். 'அத்தானுடன் பேசும்போது, நமக்கு அங்கு என்ன வேலை? திரும்பி விடுவோமா?' என்று தயங்குகிறோம். ஆனால் ஒரு சந்தேகம் எழுகிறது, நம் மனத்தில். 'விமலாவின் குரல் மட்டும் தானே கேட்கிறது? நடராஜன் குரல் ஒலி கேட்கவில்லையே?' இன்னும் சற்று அருகே சென்று பார்த்தால், நமக்குத் தூக்கிவாரிப் போடுகிறது!

அதோ அந்த மேடையில் உட்கார்ந்து கொண்டு தனக்குத்தானே பேசிக் கொண்டிருக்கும் அந்தப் பெண் யார்? சர்வாலங்கார பூஷிதையாக அமர்ந்திருக்கும் அவளைச் சற்றுக் கூர்ந்து பார்த்த பிறகுதான் விமலா என்பதை அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது.

இதை யெல்லாம் பார்த்த பிறகு நம்முடைய ஆவல் அதிகமாகிறது. அவள் நம்மைப் பார்த்து விடாமல் ஜாக்கிரதையாக அவளை நெருங்குகிறோம். இப்போது அவள் பேசுவது தெளிவாகக் காதில் விழுகிறது!

"விமலா! என் கண்ணே! இதோ பார்! எதற்காக என்னை இப்படி ஓயாமல் துன்பப்படுத்துகிறாய்?"

சிறிது நேரம் மௌனம் நிலவுகிறது.

"கடந்த ஐந்து நாட்களாக என்னுடன் நீ பேச மாட்டாயா என்று ஏங்கிப் பரிதவிக்கிறேனே. உனக்கு ஈவிரக்கம் இல்லையா?"

மறுபடியும் சிறிது நேரம் மௌனம். விமலா கோபமாகத் தலையை மட்டும் வேறு பக்கம் திருப்பிக் கொள்கிறாள்.

"இதோ பார்! நீ வேறு ஒன்றும் பேச வேண்டாம்! ஒரே ஒரு முறை உன் பவழ வாயைத் திறந்து 'அத்தான்' என்று அழைத்துவிடு. அதுவே எனக்குப் போதும்" என்கிறாள். இப்போது அந்த முகத்தில் கெஞ்சும் பாவம் மிளிர்கிறது.

அடுத்த கணம் கைகளை வேகமாக இறுகக் கட்டிக் கொண்டு ஒரு மிடுக்குடன் எழுந்து நின்று வேறு புறம் திரும்பிக் கொள்கிறாள்.

"உன்னுடைய கணவன் என்ற உரிமையுடன் கேட்கிறேன், விமலா! பேசுவாயா? மாட்டாயா?"

இப்போது அந்தக் குரலிலும் முகத்திலும் கோபத்தின் சாயல் தோன்றியிருப்பதைக் காண்கிறோம்.

ஆத்திரத்துடனேயே பதிலும் வருகிறது. "அந்த மாயமோகினியைப் போய் அதிகாரம் பண்ணுங்கள்! அவள் பேசுவாள் உங்களுடன்!"

விமலா கோபத்தோடு வேகமாக நடந்து செல்வது போல் சிறிது தூரம் நடக்கிறாள். திடீரென்று நின்று, "அத்தான்! அத்தான்! போய் விடா

கி. ராஜேந்திரன்



நீர்கள், அத்தான்!'' என்று வருந்திக் கேட்டுக் கொள்கிறாள். திரும்ப வந்து அந்த ஆசனத்தில் சோகமே உருவாக உட்கார்ந்து விடுகிறாள்.

வியப்புடன் நின்று கொண்டிருக்கும் நாம் அந்த விசித்திரமான செயல்களைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் சிறிது பின்னோக்கிப் போக வேண்டும்.

மகளின் தலையை இழைய இழைய வாரிப் பின்னி விட்டுக் கொண்டிருந்தாள் மரகதம்மாள். ''முடிந்து விட்டதா?'' என்று விநாடிக்கொரு முறை கேட்டுக் கொண்டிருந்தாள் விமலா.

''நல்ல பெண்ணடி நீ! எந்த ரயிலுக்குப் போக இப்படி அவசரப்படுகிறாய்?'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள் மரகதம்மாள்.

பின்னல் முடியப் போகும் சமயம் சடாரென்று இழுத்துக் கொண்டு எழுந்து சென்றாள் விமலா. அதே சமயம் பூக்கூடை நிறையச் சாமந்திப் பூக்களுடன் உள்ளே நுழைந்தாள் பொன்னம்மாள்.

''மரகதம்! விமலாவுக்கு இந்தப் பூவை அடுக்கித் தலையைப் பின்னி விடேன்'' என்றாள்.

''சாதாரணமாக ஜடையைப் பின்னுவதற்குள்ளாகவே பாடாகப் படுத்தி வைக்கிறாள் இந்தப் பெண். பூ வேறு வைத்துப் பின்ன வேண்டுமாக்கும்.''

''அதெல்லாம் ஒன்றும் இல்லை. நான் சொன்னால் உடனே கேட்டு விடுவாள்.''


''எதற்கு மாமி இதெல்லாம்? திடீரென்று இப்போது என்ன அலங்காரம் வேண்டிகிடக்கிறது?'' என்றவாறே வாசல் புறத்தை நோக்கி நகர்ந்தாள் விமலா.

''விமலா! இங்கே வா! வா என்றால் வந்து விடு!''—வருங்கால மாமியார் என்ற உரிமையுடன் அன்புக் கட்டளையைப் பிறப்பித்தாள் பொன்னம்மாள்.

வேண்டாவெறுப்பாகத் திரும்பி வந்து உட்கார்ந்தாள் விமலா. அவ்வளவுதான்; இரண்டு தாயார்களுமாகச் சேர்ந்து அவளுக்கு அலங்கரிக்க முற்பட்டு விட்டார்கள். பூ வைத்துப் பின்னுவதில் ஆரம்பித்த அது ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக வளர்ந்து கொண்டே போயிற்று.

தலையின் பின்புறத்திலே ராக்கொடி வைத்து, பின்னலில் திருகுப் பூ செருகி, நெற்றியில் சுட்டியைச் சூட்டி அதன் அருகே சூரிய சந்திரர்களையும் அணிவித்தார்கள். மூக்கிலே புல்லாக்கு, காதிலே மாட்டல், கழுத்திலே விதம் விதமான சங்கிலிகள், காசு மாலை, விரல்களில் மோதிரங்கள், இடுப்பிலே ஒட்டியாணம், வளையல்கள், கொலுசு என உச்சந் தலைமுதல் உள்ளங்கால் வரை நகை அலங்காரம் செய்தார்கள்.

இதுவரையில் சிரமப்பட்டுத் தன் வெறுப்பைக் காண்பித்துக் கொள்ளா



மல் இருந்த விமலா, அதற்கு மேல் தாங்க முடியாமல் "ஏன் அம்மா இப்படிச் சித்திரவதை செய்கிறீர்கள்?" என்றாள்.

அவளுடைய மனவேதனை தாய்மார்களுக்கு எப்படித் தெரியும்? எப்போதும் கலகலப்பாக இருக்கும் அத்தான் பத்துப் பன்னிரண்டு நாட்களுக்கு மேலாகத் தன்னுடன் முகம் கொடுத்துப் பேசவில்லை என்பதை அவர்களிடம் எப்படி வாய்விட்டுச் சொல்வது?

"அலங்காரம் செய்தால் சித்திரவதையாகுமா, விமலா? இன்னும் சில நாட்களில் கல்யாணப் பந்தலில் இதைப் போல் அலங்கரித்துக் கொண்டுதானே



உட்கார வேண்டும்? நாள்கூட நிச்சயித்தாகி விட்டது. அன்றைக்குக்கூட இப்படித்தான் அசடாக இருப்பாயோ?'' என்று கேட்டாள் பொன்னம்மாள்.

திருமணத்துக்குப் பொன்னம்மாள் நாள் பார்த்து வந்தது விமலாவுக்குத் தெரிந்துதான் இருந்தது. ஆனாலும் இப்போது அதைப் பற்றிப் பேசியதும் வெட்கம் அவளைச் சூழ்ந்தது. தலையையும் உடலையும் எப்படியெல்லாமோ கோணிக் கொண்டாள். ''எப்போதோ நடக்கப் போகும் கல்யாணத்துக்கு இப்போது எதற்காக மாமி அலங்காரம்?'' என்று கேட்டுக் குழைந்தாள்.

''எப்போதோ என்ன? எண்ணி இரண்டு மாதங்கள்கூட இருக்காது. மணக்கோலத்தில் நீ எப்படி இருப்பாய் என்று பார்க்க எனக்கு ஆசை! பொய் சொல்லாமல் சொல்லு! உனக்கே அந்த ஆசை இல்லையா, என்ன?''

விமலாவை இப்போது வெட்கம் பிடுங்கித் தின்றது. மாமி பொல்லா



தவர்! 'அலங்காரம் எதற்கு? அலங்காரம் வேண்டாம்!' என்றெல்லாம் அவள் வெளிப்படையாகச் சொல்லி வந்த போதிலும் உள்ளுக்குள்ளே அந்த ஆசை நீறுபூத்த நெருப்பாக அடங்கிக் கிடக்கத்தான் செய்தது! மாமி தன்னுடைய வார்த்தைகளால் சாம்பலை நீக்கி அனலைத் தூண்டி விட்டாள்.

அலங்காரம் தொடர்ந்து நடந்தது: எடுப்பான பட்டுச் சரிகை ரவிக்கை அணிவித்துப் புதுப் புடவை உடுத்தினார்கள். அத்துடன் நிற்கவில்லை! செம்பஞ்சுக் குழம்பினால் காலிலே நலங்கிட்டார்கள். சந்தனத்தை வாரிக் கழுத்திலும் கைகளிலும் உற்சாகமாகப் பூசினார்கள்! வெற்றிலை மடித்து வாய் நிறையக் குதூகலத்துடன் சிரித்துக் கொண்டே திணித்தார்கள்!

தனித்திருக்கும் வாய்ப்பைப் பெற்ற பிறகு விமலா தன்னையே நிலைக்கண்ணாடியில் பார்த்துக் கொண்டாள். சாமுத்திரிகா லட்சணங்கள் அனைத்தையும் குறைவறப் பெற்றிருந்த அந்தக் கட்டழகியின் கண்கள் கலங்கின.

'அத்தானின் காதல் மொழியைக் கேட்கக் கொடுத்து வைக்காத இந்தச் செவிகளுக்குக் காதணி வேறா? அவருடைய கரங்கள் பற்றாத இந்த விரல்களுக்கு மோதிரங்கள் ஒரு கேடா? உச்சி முகராத நிலையிலே கட்டி எதற்கு? அவர் உன்னைத் திரும்பிக்கூடப் பார்ப்பது இல்லை! உன்னுடைய அலங்காரத்துக்கும் பயனே இல்லை!'

விமலா ஓடினாள். தன்னிடமிருந்தே, தன் உள்ளத்தில் எழுந்த எண்ணங்களிடமிருந்தே ஓடினாள். தோட்டத்துக்குச் சென்று அத்தானுடன் தனிமையில் பேசும் இடத்தில் அமர்ந்தாள்.

மழை பெய்து ஓய்ந்திருந்தது. ஆனால் வானம் இன்னமும் இருண்டுதான் இருந்தது. எந்த நிமிஷமும் பொத்துக் கொண்டு மழை கொட்டுக் கொட்டென்று கொட்டித் தீர்த்துவிடும் போலத் தோன்றியது. தன் உள்ளத்தைப் போல் வானம் இருண்டிருப்பதாகத் தோன்றியது விமலாவுக்கு. அவள் எதிரிலே படர்ந்திருந்த சம்பங்கிக் கொடியின் இலைகளில் மழை நீர் இன்னமும் தேங்கி நின்றது. சொட்டுச் சொட்டாக அவை கீழே உதிர்ந்து கொண்டிருந்தன. தன்னைப் பார்த்துக் கண்ணீர் விடுவதாக எண்ணினாள் விமலா. பலத்த காற்றினாலும் அடை மழையினாலும் தரையில் சாய்ந்து கிடந்த செடிகள் கூடத் தன்னுடைய நிலையைக் கண்டு வெட்கித் தலை சாய்த்திருப்பதாக நினைத்தாள் அவள்.

தன்னுடைய உள்ளத்தில் எழுந்த எண்ணங்களிடமிருந்தே அவள் தப்பித் தோட்டத்துக்கு ஓடி வந்தபோதிலும் வேறுவேறு விதங்களிலே அந்த எண்ணச் சுழல்கள் மாறி மாறி மனத்தில் இடம் பெற்றுக் கொண்டே வந்தன.

தனக்கும் அத்தானுக்கும் திருமணம் நடந்து விட்டதாகவே தீர்மானித்துக் கொண்டாள். மணப்பந்தலிலே அவனைக் கடைக்கண்ணால் பார்த்தாள். தீயை வலம் வந்தாள். திருமாங்கல்யத்தை அணிந்து கொண்டாள். இரவில் காதலால் மெய்யுருக அவன் கரங்களைக் கண்ணிலே ஒற்றிக்கொண்டு பெருக்கெடுத்த உஷ்ணமான கண்ணீரால் அதனை நனைத்தாள். ஆனால் இவ்வளவுக்கும் ஒரு வார்த்தைகூட அவனிடம் பேசவில்லை!

அவன் அதனை முதலில் ஊடல் எனக் கொண்டாள். நாளாக ஆக, ஆக, அவள்

மௌனம் அவனுக்குப் புரியவில்லை. இன் சொல்லுக்காக ஏங்கினான், இறைந்தான் குழைந்தான், கோபித்தான்.

'அந்த மாயமோகினியைக் கண்டதிலிருந்து என்னை உதாசீனம் செய்தீர்கள் அல்லவா? அப்போது நான் அடைந்த வேதனையை இப்போது நீங்களும் அனுபவியுங்கள்' என்று கறுவினாள் அவள்.

ஆனால் உண்மையாகவே அவன் கோபித்துக் கொண்டு போனதும் கல்லாகச் சமைந்தது போல் உட்கார்ந்து விட்டாள். எல்லாம் விமலாவின் கற்பனையிலேதான்!

கற்பனை தொடருகிறது; சோகமே உருவாக இருந்த அவள் முகத்தில் திடீரென்று ஒரு மலர்ச்சி. "வந்து விட்டீர்களா, அத்தான்?" என்று கேட்டுக் கொண்டே எழுந்திருக்கிறாள்.

அப்போது நிஜமாகவே செடிகள் சிறிது சலசலக்கின்றன.

எல்லையற்ற ஆர்வத்துடன் திரும்பிப் பார்த்த விமலா அங்கே மணிசேகரன் நிற்பதைக் கண்டாள்.

கற்பனை சிதறிப் போயிற்று. ஏதோ இன்ப நினைவு. துன்பமும் கலந்த கனவு.

"அத்தான் வரவில்லை, விமலா! நான் தான் வந்தேன்" என்றான் மணிசேகரன்.

"எதற்காக?"

"மணப்பெண்ணைப் பார்க்கத்தான்."

"நான் ஒன்றும் மணப்பெண் இல்லை."

"'வருங்கால மணமகள்' என்று வேண்டுமானால் மாற்றிச் சொல்கிறேன். உன் அம்மா கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாள், 'இந்தப் பெண் நகைகளையெல்லாம் போட்டுக் கொண்டு எங்கேயோ போய் விட்டாளே' என்று. நடராஜனுக்கு மட்டும் ஒரு தரம் காண்பித்து விட்டு அவிழ்த்து வைத்துவிடு! திருஷ்டி பட்டுவிடப் போகிறது."

"கண்பட்டு என் மீது இனிமேல் ஒன்றும் ஆகப் போவதில்லை. எனக்கு வரவேண்டிய துன்பமெல்லாம் ஏற்கனவே வந்தாகி விட்டது" என்றாள் விமலா மிகுந்த விரக்தியுடன்.

"எனக்குக்கூட இதிலெல்லாம் நம்பிக்கை கிடையாது. ஆனால் ஏனோ தெரியவில்லை, இந்தக் கோலத்தில் உன்னைப் பார்க்கும்போது இதெல்லாம் நீடித்து இருக்க வேண்டுமே என்று பதைப்பு உண்டாகிறது."

இந்தச் சமயத்தில், "மணி! மணி!" என்று அழைத்துக் கொண்டே வந்தான் நடராஜன். "நல்ல ஆளப்பா நீ! விமலாவைத் தேடி வர உன்னை அனுப்பினால் அப்புறம் உன்னைத் தேட நான் அல்லவா வரவேண்டியிருக்கிறது?"

"இதோ வந்து கொண்டே இருக்கிறோம்" என்றான் மணி.

அப்போதுதான் விமலாவைக் கவனித்த நடராஜன், "இது என்ன வேஷம்?" என்று கேட்டான்.

"வேஷம்தான் நடராஜா! மண வாழ்க்கை என்னும் நாடகத்துக்கு ஒத்திகை நடக்கிறது. நீயும் இந்த பாண்ட், ஷர்ட் எல்லாவற்றையும் அகற்றி விட்டு ஜரிகை வேஷ்டியையும் அங்கவஸ்திரமும் தரித்து வந்தால் ஜோடிப் பொருத்தம் பார்த்து விடலாம்" என்று சொன்னான் மணிசேகரன் உற்சாகமாக.

"என்ன உளறுகிறாய்? யார் இப்படியெல்லாம் உன்னிடம் பேசியது?"



"ஓஹோஹோ! மாப்பிள்ளை ஸாருக்கு ஒன்றுமே தெரியாது போலிருக்கிறது. திருமண நன்னாளைக்கூட மாமி நிச்சயம் செய்து விட்டாள், நடராஜா! ஏற்பாடுகளையெல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன். நீ ஒன்றுக்கும் கவலைப் படாதே!" என்றான் மணி.

"ஏய்! வாயை மூடு" என்று இரைந்து கத்திவிட்டு வீட்டை நோக்கி விரைந்து நடந்தான் நடராஜன்.

"அம்மா! அம்மா!" என்று அவன் உரக்கக் கத்துவதைக் கேட்டு விட்டு ஓடி வந்தாள் பொன்னம்மாள்.

"யாரைக் கேட்டுக் கொண்டம்மா நாள் பார்த்தீர்கள்?"

"அப்பாடா! இவ்வளவுதானா? இதற்காகவா இத்தனை ஆர்ப்பாட்டம்? மாப்

பின்னேயே கல்யாண காரியங்களில் ஈடுபட முடியுமா? என்ன? வீட்டில் பெரியவர்கள்தான் நான் பார்த்து ஏற்பாடுகளைக் கவனிப்பார்கள். இந்த வீட்டில் பெரியவளாக நான்தானே இருக்கிறேன்?'' என்ருள் பொன்னம்மாள்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. இப்போதைக்கு நான் கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை. அந்த எண்ணத்தைக் கைவிடுங்கள்'' என்ருன் நடராஜன் பிடிவாதமாக.

தோட்டத்திலிருந்து அவனைப் பின் தொடர்ந்து வந்து இதையெல்லாம் கேட்டுக் கொண்டே இருந்த மணிசேகரன் சிந்தனையில் ஆழ்ந்தான். விமலா நிதானமாக உள்ளே சென்று தான் அணிந்திருந்த நகைகளையெல்லாம் ஒவ்வொன்ருகக் கழற்ற ஆரம்பித்தாள்.

பதினேராம் அத்தியாயம்

அலை ஓயாதோ!

திறந்திருந்த சன்னல் வழியாக முழுத் திங்களைப் பார்த்தாள் நிர்மலா. தகதகவென்று ஒளிரும் தங்கத் தாம்பாளத்தைப் போல உதயமானுன் பூரண சந்திரன். குளிர்ந்த கதிர்களை அருவியாகப் பொழிந்து நிர்மலாவை நீராட்டினுன். உச்சியிலே விழுந்த அமுத நிலவு முகத்தில் வழிந்து உடலெங்கும் பரவி நனைத்தது.

குவளை மலர்களையொத்த அவளுடைய கண்கள் குறுகுறுப்பான பார்வையுடன் எதையோ அல்லது யாரையோ சுழன்று சுழன்று தேடின. ஜன்னலையும் வாசல் கதவையும் கைக்கடிகாரத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே இருந்தாள். அந்த நீண்ட அறையில் குறுக்கேயும் நெடுக்கேயும் நடந்து நடந்து காலத்தைப் போக்க முயன்ருள். பின்னர் சற்று நின்று, மார்போடு அணைத்து வைத்திருந்த கதிர்வேலனின் அன்புப் பரிசான அந்தக் கைக்குட்டையை எடுத்துக் கைகளில் வைத்துக் கொண்டாள். மானின் மருட்சியுடன் நாலாபுறமும் ஒரு கள்ளப் பார்வையைச் செலுத்தி விட்டு யாரும் பார்க்கவில்லையென்று நிச்சயம் செய்து கொண்டு அதனிடம் கொஞ்சிக் குலவினுள். உள்ளத்தில் பொங்கிய உவகை அவளை ஆடக்கூட வைத்து விட்டது.

'வண்ணத் தோகை விரிக்கும் மயில், நடனம் பயில வேண்டுமானுல் இங்கே தான் வர வேண்டும். பஞ்சவர்ணக் கிளிகள் கிள்ளை மொழி பேச என்னிடம் கற்கட்டும்! மாடப் புருக்கள் மடப்பத்தினை அறிய விரைந்து வரட்டும்! அன்னங்கள் நடை பயில விரும்பினுல், இந்த நிர்மலாவிடம் கெஞ்சிக் கேட்கட்டும்!' என்றெல்லாம் எண்ணியது யௌவனப் பருவத்தின் திரட்சியும் பூரிப்பும் மிகுந்து நின்ற அந்த எழில் மிக்க இன்ப உருவம்.


தன் உள்ளத்திலே பொங்கிப் பெருகிப் பெருக்கெடுத்து ஓடிய இளமைத் துடிப்பென்னும் ஆற்று நீரை அணை கட்டித் தடுத்து நிறுத்தியிருந்தாள் நிர்மலா. இந்நாள் வரையில் அந்த அணை சிறிதுகூடப் பழுதுபடாமல் ஓங்கி நின்று அவளைக் காத்து வந்தது. 'நோயாளிகளுக்குச் செய்யும் தொண்டு' என்னும் வடிகால்களை அமைத்து அதன் வழியே அணைக்கட்டில் தேங்கி நின்ற நீரை அமைதியாகப் பாயச் செய்து வந்தாள். ஆனுல் கதிர்வேலன் அந்தப் பலமான அணையைத் தன் பார்வையினுலேயே தகர்த்து எறிந்து விட்டான். 'பொலபொல' வென்று அது உதிர்ந்து விட்ட பிறகு கட்டுக்கடங்காமல் கரைகளை உடைத்துக் கொண்டு பாய்ந்தது ஆறு.

அந்த வெள்ளத்தை எதிர்த்துப் போராட முடியாமல் சளைத்துப் போய் மூச்சுத் திணற மூழ்கிக் கொண்டிருந்தாள் அவள். இவ்வளவிலும் இன்பம், இன்பம், இன்பம்தான்.

இவ்வளவு இன்ப உணர்ச்சிகளை இது வரை அனுபவித்தறியாத அவளுக்கு அவற்றைத் தனித்துத் தாங்குவதே கடினமாக இருந்தது. அந்தச் சுமையைக் குறைக்க, அதில் பங்குகொள்ளக் கதிர்வேலனை எதிர்நோக்கி விநாடிகளை எண்ணிக் கொண்டிருந்தாள்

நிலாவின் சந்தன நிறம் மறைந்து பால் போன்ற வெண்ணிலாவாக மாறியது. தனது ஆசைநாயகிகளான தாரகைகளுடன் வானவெளியில் உல்லாசமாகப் பவனி வந்தான் அவன். திடீரென்று மேக மண்டலத்துக்குள் மறைந்து கொள்வான். 'தன் கணக்கிலடங்காத காதலிகள் சிலருடன் லீலைகள் புரிவதை மானிடர் பார்க்கக் கூடாது என்பதற்காக மேகத் திரையா?' நிர்மலா பெருமூச்செறிந்தாள்.

சந்திரனுடைய அந்த விளையாட்டு அவள் உள்ளத்தில் பிரேமை பொங்கச் செய்தது. ஏதேதோ எண்ணங்கள் இன்பக் கிளர்ச்சியை உண்டாக்கின.



வெளியே போக
ல்லது உள்ளே இருக்க
ஸிந்து
உயர்ந்த ஸ்லிப்-
இன் பாதரட்சை,
கறுப்பு வெல்வெட்
டிலும் ரோஜாநிற
அலங்காரத்
திலும். நடுத்தர
மான வெட்ஜ்
மௌல்டு செய்த
அடிப்பாதம்.
நீவா
கம்பள நிறம், பழுப்பு
அல்லது கறுப்புத் தோல்
கலிபோர்னியா
பிப்-டோ பாதரட்சை,
அழகான துளைச் சித்
திரத்துடன். தோல்
அடிப்பாதம்.
Bata
ED BY BATA SHOE CO PRIVATE LIMITED



சென்னை விளம்பரதாரர்கள் சங்கத்தின் ஆகஸ்ட் மாதக் கூட்டத்துக்கு ராஜாஜி பிரதம விருந்தினராக அழைக்கப் பட்டிருந்தார். மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற அந்தக் கூட்டத்துக்கு, சங்கத்தின் தலைவர் திரு சங்கரலிங்கம் தலைமை வகித்து, ராஜாஜியை வரவேற்றுப் பேசினார். அந்தக் கூட்டத்தில் ராஜாஜி 'டில்லி ராஜ்ய சபைக்கும், ராஜ்யங்களிலுள்ள மேல் சபைகளுக்கும் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையில் மாறுதல் செய்ய வேண்டும். நாட்டில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களை அங்கத்தினர்களாகப் பொறுக்க வேண்டும்' என்ற புதிய கருத்தை வெளியிட்டார். விளம்பர ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் பத்திரிகையாளர்களும் விஜயம் செய்து கூட்டத்தைச் சிறப்பித்தனர். சங்கத்தின் உதவித் 'தலைவர், திரு வெங்கடாச்சாரியார் நன்றியுரை கூறினார்.

இனி நேரப் போவதை நினைத்து ஆசை, திரைகடலாகக் கொந்தளிக்க; அதற்குக் காத்திருக்க நேர்ந்ததைக் குறித்துஏக்கம் மிக, தளர்ந்து போனாள்.

'கதிர்வேலனின் நிறைமதி முகம் என் அகத்தை விட்டு அகலாமல் இருந்து கொண்டு ஏன் துன்புறுத்த வேண்டும்? இன்னும் எத்தனை நேரம் அவருக்காகக் காத்திருப்பது? இந்த நீளிரவுக்கு ஒரு முடிவே இல்லையா?'

முன்பு எப்போதோ அவள் கேட்டிருந்த ஒரு இசைத்தட்டு இப்போது நினைவு வந்தது. நர்ஸிங்ஹோமில் மற்றவர்களுக்குக் கேட்காதபடி கம்மிய குரலில் அந்தப் பாடலைப் பாடினாள்.

திரைகடல் தூங்காதோ அம்மா?—
அலை ஓயாதோ?
திரைகடல் தூங்காதோ அம்மா?

விரிகடர் கதிர் வடிவேலன்
நிறைமதிமுகம் என் அகம் நீங்காதோ?
பேரிடர்தரும் நீள் இரவும்
பெயராதோ அம்மா? அலைஓயாதோ?
(திரைகடல்)

வன்மமோ என்மேல்? என்ன வஞ்சமோ?
தன்மம் இதுவோ? தயையும் இலையோ?
அன்புதான் அமுதோ? நஞ்சமோ?
அறிவாயோ அம்மா? அலைஓயாதோ?
(திரைகடல்)

இந்தச் சிரஞ்சீவிப் பாடலை ஒரு முறை இரு முறை பல முறைகள் பாடிப் பாடி அமைதியைத் தேடினாள் நிர்மலா.

நீல நிறக் கோடுகள் ஓடிய, மென்மை பொருந்திய, வெண்மையான கரங்களில் நெற்றியையும் கண்களையும் அழுத்தமாகப் பதித்து இருளை வரவழைத்துக் கொண்டாள்.

தூக்கத்துக்கும் விழிப்புக்குமிடையே உள்ள ஒரு நிலைக்கு அவள் தன்னை அறியாமல் போய்க் கொண்டிருந்தபோது 'கலகல' வென்ற கேலிச்சிரிப்பைக் கேட்டுத் துள்ளி எழுந்தாள்.

ஒரு கையை இடுப்பில் வைத்து, மற்றொரு கையினால் அவள் முகத்தை நோக்கி ஒரு விரலை ஆட்டியபடியே இயல்பாக நகைத்துக் கொண்டு நின்றான் கதிர்வேலன்.

வெட்கத்தால் முகம் சிவக்க, யாரேனும் விழித்துக் கொள்வார்களோ என்ற பயம் உந்த "தயவுசெய்து உரக்கச் சிரிக்காதீர்கள்" என்று பணிவன்புடன் கேட்டுக் கொண்டாள் நிர்மலா.

"போன தடவை இங்கு வந்தபோது ஒரு நர்ஸ் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். இன்றைக்கு நீயே தூங்கி வழிகிறாய்! எனக்கு மட்டும் உடம்புக்கு ஏதாவது வந்தால் இந்த நர்ஸிங்ஹோம் இருக்கும் திக்கிலேயே தலையை வைத்துப் படுக்க மாட்டேன்."

"உங்கள் உடம்புக்கு ஒன்றுமே வரவும் வேண்டாம். நர்ஸிங்ஹோமுக்கோ அல்லது ஆஸ்பத்திரிக்கோ நீங்கள் போகவும் வேண்டாம்."

"நான் இன்று வருவதாகச் சொல்லியிருந்தேனே. அதைக் கூடவா மறந்துவிட்டு நிம்மதியாகத் தூங்குகிறாய்?"

"அதை எண்ணி எண்ணித்தான் நான் சோர்ந்து போய்ச் சற்றுக் கண்ணயர்ந்து விட்டேன்."

"என்னை நினைத்துப் பார்த்துக்கொண்டிருந்தால் உனக்குச் சோர்வா ஏற்படுகிறது? அப்படியானால் நான் இப்பொழுதே திரும்பிப் போகிறேன்."

"இல்லை, இல்லை! உங்களைக் காணாததால் ஏற்பட்ட மனச் சோர்வு உடலையும் வருத்தி விட்டது."

"இப்போது அது நீங்கிவிட்டதோ?"

"கதிரவனைக் கண்டதும் பனிப்படலம் நீங்க வேண்டியதுதானே?"

"இருக்கலாம். ஆனால் நான் உதயமானதால் இரவு பகலாக வில்லை. நிர்மலா! வெளியே நிலவு காய்கிறது. நீ உள்ளே மின்சார விளக்குக்கு அடியில் புழுங்குகிறாய். வா போகலாம்."

திடீரென்று நிர்மலாவுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. அதை நிவர்த்தி செய்துகொள்ள விரும்பி, "போவோம். ஆனால் அதற்கு முன்னால் ஒரு சந்தேகம். நீங்கள் எப்படி உள்ளே நுழைந்தீர்கள்?" என்று கேட்டாள்.

"போன தடவை அனுமதி கேட்டுக் கதவு வழியாக நுழைந்து வந்தேன். இந்த முறை உரிமையோடு ஜன்னல் வழியாக ஏறிக் குதித்து விட்டேன்!"

'எப்படித் திரும்பவும் வெளியே செல்லப் போகிறீர்கள்?' என்று நிர்மலா கேட்பதற்கு இடம் வைக்காமல், "அதே வழியாகத்தான் திரும்பப்போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே ஜன்னல் வழியாக வெளியே தோட்டத்தில் குதித்து விட்டான் கதிர்வேலன். திரும்பி, நிர்மலாவின் பக்கமாகக் கற்பாறை போன்ற வலிமை மிக்க தன் கரங்களை நீட்டினான்.

'இதுஎன்னவேடிக்கை? என்னவிளையாட்டு, குழந்தைகளைப்போல? காதல் கொண்டு விட்டால் வயது மறந்து போகுமா? விசித்திரமான காரியங்களைச் செய்யச் சொல்லுமா? முப்பதடி நடந்து சென்றால் வாசற் கதவு இருக்கிறது. அதை விட்டு விட்டு....முப்பது அடி நடக்கும் வரை காத்திருக்க , முடியாது! அவ்வளவு நேரத்தை வீணாக்கக் கூடாது!'

லாகவமாக அவளுடைய இடையைத் தாங்கி இறக்கி விட்டான் கதிர்வேலன்.

சற்றுத் தூரத்தில் ஓங்கி வளர்ந்திருந்த ஒரு மரத்தை நோக்கி அவர்கள் இருவரும் நடந்து சென்றார்கள்.



"சுகுமாரனைப் பார்த்தாயா, நிர்மலா? என்னைப்பற்றி ஏதாவது சொன்னாரா?" என்று கேட்டான் கதிர்வேலன்.

"அடுத்த மாதம் இரண்டாம் தேதி இலங்கைக்குப் புறப்படுகிறார்களாம்."

"வேறு ஒன்றுமே சொல்லவில்லையா?"

"அன்றைக்கு வேறு எதுவும் சொல்லவில்லை. ஆனால் நேற்று மறுபடியும் என்னைப் பார்க்க வந்தார். உங்களைப் பற்றிக் கேட்டார். நான் இன்னும் உங்களைப் பார்க்கவில்லை என்று தெரியப்படுத்தினேன். 'அவனிடம் மணிசேகரன் என்ற பெயரில் 'பாஸ்போர்ட்' வாங்குவதற்கு ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல்லு' என்றார்."

கதிர்வேலன் மெல்லச் சிரித்தான். "நல்ல மனிதர்! ஏமாற்று வித்தையில் என்னையே தோற்கடித்து விடுவார் போல் இருக்கிறதே?"

இந்த சம்பாஷணையினால் நிர்மலா சஞ்சலமடைந்து விட்டாள். அவனால் சிரிப்பை ரசிக்க முடியவில்லை.

"நான் ஒன்று கேட்கிறேன். கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?"

"எதற்கு வேண்டுமானாலும் நான் துணிந்து விடுவேன். ஆனால் உன்னிடம் கோபித்துக்கொள்ள எனக்குத் தைரியம் ஏது?"

"நீங்கள் என்ன தொழிலில் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் எதற்காகவோ போலீஸுக்குப் பயந்து ஒளிகிறீர்கள் என்று மட்டும் உணர்கிறேன். இப்படி எத்தனை நாட்களுக்கு வாழ்வது?"

"அது என் சொந்த விஷயம்" என்றான் கதிர்வேலன் கடுமையாக.

நிர்மலா அவனை ஏறிட்டுப் பார்த்தாள். "அதில் எனக்குப் பங்கு கிடையாதா?" என்றாள்.

"உண்டு. ஆனால் இப்போது அதைப் பற்றிப் பேசி நேரம் கடத்த வேண்டாம். தண்மதி விரிக்கும் வெள்ளி நிலவு வீணாகிறது, நிர்மலா!"

"போலீஸாரிடம் நீங்கள் பிடிபட்டு விட்டால் என்னைச் சூழும் இருளைச் சந்திரசூரியர்கள் சேர்ந்து வந்தாலும் கூட அகற்ற முடியாதே!"

"நிர்மலா! இந்தத் தொழிலில் நான் எப்படி நுழைந்தேன் என்று சொல்ல முடியாது. அது இன்னொருவர் ரகசியம். ஆனால் ஏன் விடாமல் இன்னும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறேன் என்று மட்டும் சொல்ல முடியும்.

"சாதாரணமாக எல்லோரையும் போல் காரியாலயத்துக்குச் சென்று ஆறு மணி நேரம் நாற்காலியைத் தேய்த்து விட்டுத் திரும்புவது என் மன நிலைக்கு ஒத்து வராது. கைகட்டிச் சேவகம் செய்ய என்னால் முடியாது. வெற்றியும் தோல்வியும், வீரமும் கோழைத்தனமும், வியப்பும் ஏமாற்றமும், சண்டையும் சமாதானமும் நிறைந்துள்ள இந்த வாழ்க்கையில் நான் பழகி விட்டேன். இனிமேல் என்னை மாற்றுவதற்கு முடியாது. உன்னால் கூட முடியவே முடியாது!" என்றான்.

வேறுபுறமாகத் திரும்பிக் கொண்டாள் நிர்மலா. தாழ்ந்திருந்த மரக்கிளை ஒன்றில் முழங்கையை ஊன்றிக் கன்னத்தில் விரல்களைப் பதிய வைத்துக் கொண்டாள். கதிர்வேலனின் மறுமொழியில் இருந்த அழுத்தம் அவளுக்கு மிகுந்த துயரத்தை அளித்தது. கண்களை நீர்ப்படலம் மறைத்தது.

அவளுக்கு மிக அருகில் நெருங்கி வந்து இடக் கரத்தைக் கிளையில் ஊன்றிக் குனிந்தான் கதிர்வேலன்.

"நிர்மலா! இன்னும் சில நாட்களில் நான் இலங்கைக்குப் போய் விடுவேன். அதற்கு முன்னால் உன்னை மறுபடியும் சந்திக்க முடியுமோ, முடியாதோ? கிடைத்த சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடவேண்டாம். எங்கே! இப்படித் திரும்பி என்னைப் பார்!"

அவனுடைய அருகாமையை உணர்ந்தாள் நிர்மலா. அவன் மூச்சுக் காற்று அவளுடைய காதருகே சுருண்டு தொங்கிய கேசத்தை அலைத்தது. அவளுடைய கைகளுக்கும் மரக்கிளைக்கும் இடையில் உண்டான சிறிய வளையத்துக்குள் திரும்பினாள் அவள்.

பொங்கி வந்த பெருநிலவு மரத்தின் இலைகளால் வடிகட்டப்பட்டு மேலும் தெளிவு பெற்று அவள் வதனத்தை ஆசை தீரத் தழுவியது.

தோட்டத்தில் இருந்த மரம், செடி கொடிகளெல்லாம் ஆடாமல் அசையாமல் நின்றன. அவற்றின் இலைகள்கூடச் சலசலக்கவில்லை. காற்றும் நின்று விட்டது. எங்கும் ஒரே அமைதி.

உயிருள்ள ஜீவராசிகள், உயிரற்ற ஜடப் பொருள்களெல்லாம் அந்த நிலவெண்ணும் மதுவில் மயங்கிக் கிடந்தன.

இரு உள்ளமாகிய சுனைகளிலிருந்தும் ஏராளமாகக் காதல் ஊறிப் பிரவாகமாக ஓடியது. கங்கையும் யமுனையும் போல் அந்தக் காதல் வெள்ளம் பாய்ந்து சென்று, இனிப் பிரிக்க முடியாதபடி ஒன்றோடொன்று இரண்டறக் கலந்து முன்னேறி ஓடியது.

நூற்றுக்கணக்கான விதங்களிலே அந்தக் காதலை வெளிக்காட்ட விரும்பினார்கள் அவர்கள். ஆனாலும் ஒன்றுமே செய்ய முடியாதபடி இனம் தெரியாத ஒன்று அவர்களைத் தடுத்து நிறுத்தியது.



எதையோ நினைத்துக் கொண்டவளைப் போல வாய்விட்டுச் சிரித்தாள் நிர்மலா.

"என்ன நிர்மலா? எதற்குச் சிரிக்கிறாய்?" என்று கேட்டான்.

"உங்களை எண்ணித்தான்! வாசல் 'கேட்'டைப் பூட்டி வைத்திருக்கிறது. மதில் சுவர் ஏறிக் குதித்து வந்தீர்கள். நர்ஸிங் ஹோமிலும் முன் கதவு சாத்தித் தாளிடப்பட்டிருக்கிறது. சன்னலைத் தாண்டி வந்தீர்கள், கள்வனைப்போல!"

"ஆமாம், கள்ளனைப் போல்தான் வந்தேன். அதனாலென்ன? அதற்காக நீ இப்படிச் சிரிப்பானேன்?"

"கள்வனைப் போல வந்தும் இங்கிருந்து ஒன்றையும் திருடிச் செல்லவில்லையே? எந்தப் பொருளையும் கவராமலே திரும்பப் போகிறீர்களே?"


"நிர்மலா! உன் உள்ளத்தைக் கூடவா நான் கவரவில்லை?" என்று கேட்டான் கதிர்வேலன்.

நிர்மலாவின் கண்களில் கண்ணீர் ததும்பி விடும் போல் இருந்தது. நாத் தழுதழுக்க, "உண்மைதான். பத்திரமாக வைத்துப் பாதுகாத்து வந்த என் உள்ளத்தைக் கவர்ந்துதான் விட்டீர்கள்." என்றாள்.

அவள் நெஞ்சின் ஆழத்திலிருந்து தன் நிலையை எண்ணி ஒரு விம்மல் வெளிப்பட்டது. கதிர்வேலனிடமிருந்து அதை மறைத்து, மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டு நர்ஸிங் ஹோமை நோக்கி நடந்தாள்.

டைரக்டர் சுகுமாரன் விரும்பியபடியே ஒரு காகிதத்தில் 'மணிசேகரன்' என்று கையெழுத்திட்டு விட்டுப் பிரிந்து சென்றான் கதிர்வேலன். (தொடரும்)

இந்தக் கதையில் வரும் காட்சியை இவ்வார அட்டைச் சித்திரமாக அளிக்கிறார் கலைஞர் லதா.



அதிர்ஷ்டத்தையே நம்பி இருக்க வேண்டாம்

நீங்கள் உங்கள் மோட்டாருக்கு விரும்பும் எண்ணெயின் பிராண்டின் பெயரைக் குறிக்காமல் பொதுவாகக் கேட்பது மோட்டார் ஓட்டும் ஆபத்துக்களில் ஒன்று. உங்கள் மோட்டார் இயந்திரத்துக்கு நீங்கள் மதிப்புக் கொடுப்பதாயிருந்தால் இந்த ஆபத்தில் சிக்கிக் கொள்ளவே கூடாது. எப்போதும் காஸ்ட்ராலையே கேட்டு வாங்குங்கள். அப்போதுதான் சென்ற ஐம்பது வருஷங்களுக்கு மேலாக நுண்கலை முன்னேற்றங்கள் ஒவ்வொன்றையும் அடைந்திருக்கும் எண்ணெய் உங்களுக்குக் கிடைக்கிறது என்பது நிச்சயமாகும். உங்களது கார் உற்பத்தியாளர் அங்கீகரிக்கும் எண்ணெய் இதுவே. 'எண்ணெய்களுள் தலை சிறந்தது' என்பதுடன் எந்த வயதுக் கார் எஞ்சினுக்கும் பொருத்தமானது காஸ்ட்ரால்.

காஸ்ட்ரால்

என்ற பெயரைக் குறிப்பிட்டே
எப்போதும் கேளுங்கள்

Castrol

எண்ணெய்களுள் தலை சிறந்தது

சி. சி. வேக்பீல்டு & கோ., லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக இயங்கச் சக்தியை யளித்து வருகிறது.



காஞ்சிபுரம் என்றால் பட்டுப் புடவை நினைவுக்கு வரும்; பண்ருட்டி என்றால் வர்ண வேலைப்பாடுகள் அமைந்த மண் பொம்மைகள் நினைவுக்கு வரும்; சேலம் என்றால் மாம்பழம் நினைவுக்கு வரும்; நெல்லூர் என்றால் நல்ல அரிசி நினைவுக்கு வரும். அதே போல், தமிழ்ப் பட உலகில் எம். ஜி. ராமச்சந்திரன் என்றால், கத்திச் சண்டை, குதிரை சவாரி, மன்னர் ஆட்சி, மக்கள் புரட்சி — முதலியவைகளை யெல்லாம் கொண்ட படம் நினைவுக்கு வரும்.

"நாடோடி மன்னன்" படத்திலும் மேற் கூறியவைகளெல்லாம் வருகின்றன. இந்தப் படம் எம். ஜி. யார் பிக்சர்ஸுக்காக, எம். ஜி. ஆரால் தயாரிக்கப்பட்டு, எம். ஜி. ஆர். டைரக்ஷனில் உருவான வெற்றிப் படம்.

படத்தின் முன் பகுதி பெரிய தேவாலயங்களில் கொண்டாடப்படும் திருவிழாக் காலங்களில் நகரும் தேர் மாதிரி மெதுவாக நகர்கிறது. பின்பகுதி மளமளவென்று ஓடுகிறது. இடைவேளைக்குப் பிறகு வரும் காட்சிகள் வண்ணக் காட்சியாக, 'கேவாகலர்'ரில் அற்புதமாகத் தயாரிக்கப் பட்டிருக்கின்றன.

அரசனின்றியிருந்த இரத்தினபுரியின் அரசனாக, அரச குடும்பத்தைச் சேர்ந்த மார்த்தாண்டனை மன்னனாக்க முயற்சி நடக்கிறது. ராஜகுரு அதற்குத் தடையாக இருக்கிறார். தம் கைப்பாவையாக ஆடக் கூடிய பிங்கலனுக்கு முடிசூட்ட விரும்புகிறார். பிங்கலன் மாண்ட பழைய மன்னனின் சகோதரன். மன்னர் ஆட்சியை அகற்றி மக்களாட்சியை நிறுவ ஆர்வம் கொண்ட வீராங்கன் ஒரு நாடோடி. அவனுக்கும் மார்த்தாண்டனுக்கும் அதிசயிக்கத் தக்க விதத்தில் இருந்த உருவ ஒற்றுமைதான் இந்தப் படத்தின் சிக்கல்களுக்கும், திடுக்கிடும் சம்பவங்களுக்கும், போருக்கும், சதித்திட்டங்களுக்கும் அடிப்படையாக அமைகிறது.

மார்த்தாண்டன், வீராங்கன் என்னும் இரு வேறு இயல்புகள் கொண்ட இரண்டு பாத்திரங்களையும் எம். ஜி. ராமச்சந்திரன் ஏற்று மிகத் திறமையாக நடிக்கிறார்.

எம். ஜி. ராமச்சந்திரன் இதுவரையில் நடித்த படங்களையெல்லாம் நான் ஒரு முறை நினைத்துப் பார்த்தேன். பல்வேறு உணர்ச்சிகளைக் காட்டும் பாத்திரங்களை ஏற்று நடிக்கும் சந்தர்ப்பங்கள் நிறைய கிடைத்திருக்கின்றன. ஆனால், கத்திச் சண்டைக்கும், குதிரை சவாரிக்கும், புரட்சிப் பிரசங்கங்களுக்கும் இடையில் அவருக்கு உணர்ச்சி பொங்க நடிப்பதற்கு அவகாசம் இருந்ததில்லை. காதல் காட்சிகளில்கூட அவர் அதிகமாக ஈடுபட்டுத் தம்மைமறந்து நடித்ததில்லை. அவர் நடிக்கும் படங்களைப் பார்க்கும் ரசிகப் பெரு மக்களுக்கும் மேற்கூறிய ஆவேசக் காட்சிகளைப் பார்த்துவிட்டு, மற்றவைகளைப் பற்றி அதிகமாகப் பொருட்படுத்துவதற்கு அவகாசம் இருந்ததில்லை.

"நாடோடி மன்னன்" உண்மையிலேயே, எம். ஜி. ராமச்சந்திரனைப் பொறுத்த வரையில் புரட்சிகரமான படம்தான். அடுக்கடுக்கான சம்பவங்களுக்கு இடையில் இரு பாத்திரங்களை ஏற்று அவர் சக்கைப்போடு போட்டிருக்கிறார். புரட்சி நடவடிக்கைகளுக்காகச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட வீராங்கன் பாடும் "தூங்காதே தம்பி தூங்காதே" என்ற பாட்டு ஆரம்பித்ததுமே படம் களை கட்டி விடுகிறது. பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம் இயற்றியிருக்கும் அந்தப் பாட்டும் கேட்பதற்கு நன்றாயிருக்கிறது.

மார்த்தாண்டனைப் போலவே இருந்த வீராங்கனை அமைச்சரும் தளபதியும் மன்னனாக்குகின்றனர். ராணி மனோகரியும் வீராங்கனைத் தன் மணாளன் மார்த்தாண்டனென்றே நம்பி விடுகிறாள். உள்ளத்தில் பெருகும் காதலையெல்லாம் கொட்டி அவனை வரவேற்கிறாள்.

அப்பொழுது வீராங்கன் நெருப்பை மிதித்தவன்போல் பதறுகிறான். அந்தக் கட்டத்தில் எம். ஜி. ராமச்சந்திரன் நடிப்பு உணர்ச்சியுடன் மிகவும் நன்றாயிருக்கிறது.

அவரது கத்திச் சண்டைகளைப் பற்றியும், இதர போர்ச் சாகஸங்களைப் பற்றியும் தனித்தனியாக எடுத்துச் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. எல்லாம் அபாரமாயிருக்கின்றன.

காணாமற் போன ராஜகுமாரி ரத்னாவையும், சிறை வைக்கப்பட்டிருந்த மன்னன்

காந்தன்

மார்த்தாண்டனையும் கண்டுபிடித்துக் கொண்டு வரும் நோக்கத்துடன் வீராங்கன் கன்னித் தீவுக்குச் செல்லுகிறான். அங்கே ராஜகுமாரி ரத்னாவும் கிடைக்கிறாள். அவளது காதலும் கிடைக்கிறது.

வீராங்கன்—ரத்னா காதல் காட்சிகளும், ரத்னாவின் கனவில் தோன்றும் இன்பக் காட்சிகளும் அபாரம். கேவா கலரில் தயாரிக்கப் பட்டிருக்கும் மேற்படி காட்சிகள் காண மனோரம்யமா யிருக்கின்றன.

இந்தப் படத்தில் வரும் நடனக் காட்சிகள் மிகக் கவர்ச்சியாயிருக்கின்றன. பல நடன நிகழ்ச்சிகள் புகுத்தப்பட்டதா யிருந்தாலும் அலுப்புத் தட்டுவதாயில்லை. ராஜா, ராணி வருகிற கதைகளில் இது ஒரு சௌகரியம். நடன நிகழ்ச்சியை எங்கே புகுத்தலாம் என்று யோசிக்கவே வேண்டியதில்லை. ராஜ சபை, அரண்மனை நந்தவனம், அந்தப்புரம் முதலிய எல்லா இடங்களும் நடனத்துக்குரிய இடங்கள் தான். கண்ணைக் கவரும் வண்ணக் காட்சிகளில் நடனங்கள் நன்றாகவே யிருக்கின்றன.

கன்னித் தீவுக் காட்சிகள், அங்கே மன்னன் மார்த்தாண்டன் சிறைப்பட்டிருந்த சிறைச்சாலை, அதில் திடீரென்று புகுந்த மாபெரும் வெள்ளம், ராஜகுமாரி ரத்னாவும் வீராங்கனும் தப்ப முயன்றபோது மலைப்பாதையில் அமைக்கப்பட்டிருந்த கயிற்றுப்பாலம் அறுந்த காட்சி, அதில் நடந்த வாள்போர், கன்னித் தீவு அரண்மனை கோலாகலத்தில் ஆழ்ந்திருந்த போது நடந்த பெரும் சண்டை — முதலியவைகளெல்லாம் மறக்கமுடியாத காட்சிகள்.

வெள்ளப் பெருக்கைக் காட்டும் தூரக் காட்சிகளெல்லாம் உள்ளத்தில் உவகைப் பெருக்கை ஊட்டுவனவா யிருக்கின்றன. மேற்படிக் காட்சிளெல்லாம் அற்புதமாய்ப் படமாக்கப் பட்டிருக்கின்றன.

புரட்சி கோஷ்டியைச் சேர்ந்த மதனாவாக நடிக்கும் பானுமதி பழம் பெரும் நடிகை. சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு நினைவில் இருத்திக் கொள்ளும் விதத்தில் மிகவும் நன்றாக நடித்திருக்கிறார். சொந்தக் குரலில் நன்றாகப் பாடியும் இருக்கிறார்.

எம். என். ராஜம் ராணி மனோகரியாக வந்து உணர்ச்சி பொங்க நடித்திருக்கிறார்.

இந்தப் படத்தின் ஹாஸ்யப் பகுதி சந்திரபாபுவின் சாகஸமும் திறமையும் கூடிய நடிப்பினால் நன்கு பிரகாசிக்கிறது.

பிங்கலனாக வரும் எம். என். நம்பியார் ஒரு வில்லன். ராஜகுரு பி. எஸ். வீரப்பா ஒரு வில்லன். நம்பியார் வழக்கமான மிடுக்குடன் அட்டகாசமாக நடித்திருக்கிறார்.

பி. எஸ். வீரப்பாவுக்கு ராஜகுரு வேஷம் மிகவும் பொருத்தமா யிருக்கிறது.

பி. சரோஜாதேவி ரத்னாவின் பாகம் ஏற்று நடனமாடி, காதலித்து, காதலனுடன் நெடுந்தூரம் நடந்து வண்ணக் காட்சி முழுவதிலும் வளைய வளைய வருகிறார்.

நாடோடி மன்னன் கதை, எம்ஜியார் பிக்சர்ஸ் கதை இலாகாக் குழுவினர்களான ஆர். எம். வீரப்பன், வித்வான் வே. லக்ஷ்மணன், எஸ். கே. டி. சாமி ஆகியவர்களால் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

கவிஞர் கண்ணதாசனும், ரவீந்திரனும் கதைக்கேற்ற வசனத்தை அழகாக எழுதியிருக்கின்றனர். வசனம் எதுகை, மோனைகளுடன் தமிழ்ப் பண்புடன் அழகாக ஒலிக்கிறது. அடுக்காகவும், மிடுக்காகவும் அமைந்து தொந்தரவு படுத்தாத வசனத்தைப் பாராட்ட வேண்டியதுதான்.


கணிசமாக நீண்டிருக்கும் படமாதலால் பதினொரு பாடல்கள் இருப்பது சிரமமாக இல்லை. பாடல்களின் கனத்தைப் படத்தின் பல நூறு அடிகள் வெகு சுலபமாகத் தாங்கிக் கொண்டு விடுகின்றன!

ஒரு நடிகர் படாதிபதியாக மாறிப் படம் தயாரிப்பதென்றால் அதில் எத்தனையோ சிரமங்கள் இருக்கின்றன. அந்தச் சிரமம் போதாக்குறைக்குப் படத்தில் இரண்டு வேடம் தாங்கும் சிரமத்தையும் எம். ஜி. ராமச்சந்திரன் ஏற்றிருக்கிறார்.




இதுவும் போதாக்குறைக்குப் படத்தின் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்று மிகவும் வெற்றிகரமாகச் செய்திருக்கிறார். அதற்காக அவரை எவ்வளவு வேண்டுமானாலும் புகழ்ந்து போற்றிப் பாராட்டலாம்.

கண்ணுக்கும் கருத்துக்கும் இனிக்கும் வண்ணக் காட்சிகளுக்காகவும், வீரதீர சாகசப் போராட்டங்களுக்காகவும், மனத்தைக் கவரும் நடனத்துக்காகவும், கண்ணிருக்குள் நடக்கும் காதல் காட்சிக்காகவும், அபாரமான காட்சி ஜோடனைகளுக்காகவும், நல்ல நடிப்புக்காகவும் நாடோடி மன்னன்படத்தைப் பலரும் பார்க்கலாம்.



ன்றுக்கென்றே மற்றொன்று தயாரித்தது -

ந்த பருவ நிலையிலும், எந்த ரஸ்தா லும் அபாயமின்றி செல்லக்கூடியது



இணைபிரியாத ஜோடி—இதுவரை தயாரிக்க முடியாத காத தன்மை வாய்ந்த டயர் மற்றும் தேயாத வயர்-க்ட் பிரேக் லைனிங். அபாயமான வளைவுகள், ா வியரில் ஈரமான மலைப்பாதையில் இறங்குதல் இவை ான்ற சந்தர்ப்பங்களில், எளிதில் இயங்கக்கூடியதும், சயமாகப் பிடிக்கக்கூடியதுமான பிரேக் அவசியம். ர்ஸ்டோனில் மட்டுமே இவ்விரண்டு அம்சங்களும் ள்ளன — நியூ பயர்ஸ்டோன் டிலெக்ஸ் சாம்பியன் ர் மற்றும் பயர்ஸ்டோன் வயர்-பாக்ட் பிரேக் னிங் -- அபாயமின்றி செல்லுவதற்கென்றே மிகுந்த ஜினியரிங் திறனுடன் தயாரிக்கப்பட்டவை.

பயர்ஸ்டோன்
வயர்-பாக்ட் பிரேக் லைனிங்



Firestone

பயர்ஸ்டோன்

நியூ டிலக்ஸ் சாம்பியன்
ட்யூப்லெஸ் அல்லது ட்யூபுள்ளது

ா நிம்மதியுடன் பிரயாணம் செய்வதற்கென்றே தயாரித்த டயர்

அகில இந்தியக் கைத்தொழில் போர்டு

வணிக – தொழிலியல் அமைச்சகம்

தேசீய டிசைன் போட்டி - 1958

மேற்படி போர்டு, தேசீய டிசைன் போட்டி ஒன்றை ஏற்படுத்தி யிருக்கிறது. இந்தியாவிலுள்ள ஓவியர்களும், கைத்தொழில் கலைஞர்களும் இதில் கலந்து கொள்ளலாம்.

அனுப்பப்படும் டிசைன் (அ) சித்திரமாக இருந்தால், தாளில் 16"×12" அளவுக்குக் குறையாமலும், எந்தப் பொருளிலும் பிரதி செய்யக் கூடியதாகவும் இருக்க வேண்டும்; (ஆ) அல்லது சொந்தக் கற்பனையோடு செய்யப்பட்ட கைத்தொழில் பொருளாக இருக்க வேண்டும்.

டிசைன்கள் இந்தியப் பண்பாட்டையும் சூழ்நிலையையும் பின்னணியாகக் கொண்ட சொந்தக் கற்பனைகளாகவும் அழகுக்கும் உபயோகத்துக்கும் ஏற்றவைகளாகவும் இருக்க வேண்டும்.

கீழ்க்கண்ட தொழில்கள் சம்பந்தமான டிசைன்களும் பொருள்களுமே வரவேற்கப் படுகின்றன.

(1) கையச்சு, கைச்சாய வேலைத் துணிகள் :

(அ) குழந்தைகளுக்கான துணிகள், ஆடைகள், திரைகள், கரைகள், சேலைகள் முதலியவைகளுக்கான டிசைன்கள்.

(ஆ) அலங்கார ஆடைகள் தட்டு முட்டுச் சாமான்களுக்கு பரம்பரை தையல் கலைப்பாணியில் அமைந்த இழை வேலை (எம்பிராய்டரி)க்கான டிசைன்கள்

(2) மண் பாத்திரங்கள் :

(அ) வீட்டு உபயோகத்துக்கேற்ற மண், கல் பாத்திரங்களுக்கானடி சைன்.

(ஆ) பாத்திரங்களின் மேற்பரப்பைச் செதுக்கியோ களி மண் அப்பியோ செய்யும் சிற்பக வேலை டிசைன்கள். (உயரம் 18-க்கு மேல் இருக்கக்கூடாது)

(3) பொம்மைகள் :

(அ) எந்தப் பொருளாலும் செய்யப்படலாம். (உயரம் 18" க்கு மேல் இருக்கக் கூடாது)

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பகுதியிலும் இரண்டிரண்டு பிரிவுகள் உண்டு. (அ) தாளில் வரையும் டிசைன். (ஆ) பொருளாகவே செய்து காட்டப்படுகிற டிசைன். ஒவ்வொரு பிரிவுக்கும் 4 பரிசுகள். முறையே ரூ. 1,000/, ரூ. 500/-, ரூ. 250/-, ரூ. 250/- என்ற விகிதத்தில் உண்டு.

பரிசு பெறும் எல்லா டிசைன்களும் பொருள்களும் போர்டின் உரிமையாகிவிடும். பொருள்களாகச் செய்யப்பட்டுள்ளவைகளுக்கு உரிய விலை மதிப்பு குறிப்பிட வேண்டும்.

டிசைன்களெல்லாம், 'டிப்டி டைரக்டர் (டிசைன்ஸ்), அகில இந்தியக் கைத்தொழில் போர்டு, ஜனபத், புது டில்லி' என்ற முகவரியில் 1959 ஜனவரி 15-ம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். கீழ்க்கண்ட இடங்களில் நேரிலும் கொண்டு கொடுக்கலாம்.

1. வட்டார டிசைன் நிலையம்,
   35, யூனியன பார்க், பாலி மில், கார், பம்பாய் - 21
2. வட்டார டிசைன் நிலையம்,
   8, சர்ச் தெரு, பெங்களூர் – 1
3. வட்டார டிசைன் நிலையம்,
   பெண்கள் கூட்டுறவு தொழில் விடுதி லிமிடெட்
   உதயவில்லா, காமர்ஹட்டி, 24, பர்காணுக்கள், மேற்கு வங்காளம்
4. வட்டார டிசைன் நிலையம்,
   43, ஒக்ளா தொழில் எஸ்டேட், ஒக்ளா, புது டில்லி

மற்ற விவரங்கள், 'டிப்டி டைரக்டர் (டிசைன்ஸ்) அகில இந்தியக் கைத்தொழில் போர்டு, புது டில்லி' என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

DA 58/187

பரிசுக் கடிதம்

'அவாரா'



குடியிருக்க ஒரு வீட்டுக்காக, நாயாக, பேயாக ரங்கமணி அலைந்து கொண்டிருந்த பொழுதுதான் பராபரியாக அந்தச் செய்தி அவன் செவிகளில் விழுந்தது. 'மருதிநத்தெரு 12-ம் நெம்பர் வீடு காலியாக இருக்கிறது! வீட்டுச் சொந்தக்காரரான முத்துசாமிக்குத் தெரிந்தவரான கோபாலசாமியிடமிருந்து சிபாரிசுக் கடிதம் வாங்கிச் சென்றால் வீடு கிடைக்க வழியுண்டு!'

இது போதாதா, ரங்கமணிக்கு? கோபாலசாமியை அவனுக்கு நன்றாகத் தெரியும். நேரே அவரிடம் செல்ல வேண்டியது; அவரைக் காக்காய் பிடித்து ஒரு சிபாரிசுக் கடிதம் வாங்கிக் கொள்ள வேண்டியது. அத்துடன் வீட்டுப் பிரச்னைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டியது

கடந்த ஆறு மாதங்களாக, வீட்டுக்காக அவன் அலைந்த அலைச்சல், சுற்றிய தெருக்கள் ஒரு நாய் சுற்றியிருக்குமா என்பது சந்தேகமே. கல்யாணமாகி ஆறு மாதங்களாகியும், மனைவியை ஊரிலேயே விட்டு விட்டு, 'கல்யாணம் பண்ணியும் பிரும்மச்சாரி' வாழ்வு வாழ்ந்து வருவது, வீடு கிடைக்காத ஒரே காரணத்தினால்தான். கருமமே கண்ணாகி, வீட்டுக்காக அவன் கடந்த ஆறு மாதங்களாக அலைந்து வந்த அலைச்சலுக்குச் 'சரியான பலன்தான் கிட்டியிருக்கிறது.

அவனுடைய நண்பன் நாகராஜன்தான் மருதிநத் தெரு வீட்டைப் பற்றிக் கூறியது. 'தனி வீடாம். வாடகையும் மலிவுதானாம். வீட்டுக்காரர் தங்கமானவராம். ஆனால், 'அந்தத் தங்கமான மனிதர் தம் வீட்டை மிகவும் வேண்டியவர்களுக்கு மட்டுமே விடுவதாக இருக்கிறார்' என்ற வெடிகுண்டையும் தூக்கிப் போட்டு விட்டான் அந்தப் பொல்லாத நண்பன்.

அவன் அவ்வாறு கூறியதும் ஒரு விதத்தில் நன்மைக்குத்தான். 'திடுதிப்'பென்று நேராக முத்துசாமியிடமே போய் நின்று அவர் நான் பின்தெரியாத அவனுக்கு வீட்டைக் கொடுக்க மறுத்து விட்டால்? ஆனகையால், அவருக்கு மிகவும் வேண்டியவரான கோபாலசாமியைச் சந்தித்து, ஒரு சிபாரிசுக் கடிதம் வாங்கிக் கொண்டு சென்றால், காரியம் சுலபத்தில் முடிந்து போய் விடுகிறது.

செய்தி கிடைத்த மறு விநாடியே நேராக அம்பு போல், கோபாலசாமியை நோக்கித்தான் சென்றான் ரங்கமணி. அவனைக் கண்டதும் புன்முறுவலுடன் வரவேற்ற கோபாலசாமி விஷயத்தைக் கேட்டதும் சிரித்தார்

''இந்தக் காலத்தில், வேலைக்குத்தான் சிபாரிசுக் கடிதம் வேண்டுமென்றால் வீட்டுக்குக் கூடவா? உம்...சரி, தருகிறேன்!'' என்றார், ரங்கமணி ஊரிலே விளைந்தது என்று சொல்லிக் கொண்டு வந்து கொடுத்த படி என்னை வாங்கிக் கொண்டு! 'காக்காய் பிடிப்பதற்கு' முன் என்னென்ன செய்ய வேண்டுமென்பதெல்லாம் ரங்கமணிக்குத் தண்ணீர் பட்டபாடு!

கடிதத்தை எழுதி முடித்து, ரங்கமணியிடம் கொடுத்தார் கோபாலசாமி. மரியாதைக்காக ஒரு போலிக் கும்பிடு போட்டு விட்டு வெளியே வந்தவன், அவசரம் அவசரமாகக் கடிதத்தைப் பிரித்தான். அதில் அவர் எழுதியிருந்தது இதுதான்:

''இந்தக் கடிதம் கொண்டு வரும் ரங்கமணியை எனக்கு ரொம்ப நாட்களாகத் தெரியும். ரங்கமணிக்கே உங்கள் வீட்டை வாடகைக்கு விடவும்.''—கீழே கோபாலசாமியின் கையொப்பம்.

உள்ளத்திலே உற்சாக வெள்ளம் புரண்டோட, வீடு கிடைத்து, அப்போதே மனைவியுடன் தனிக் குடித்தனம் நடத்தத் தொடங்கி விட்டதாகக் கனவு கண்டுகொண்டே மருதிநத் தெருவை நோக்கிக் கால்களை ஓட்டினான்.

மணி மூன்று!

சொல்லி வைத்தாற்போல் மருதிநத் தெரு 12-ம் நெம்பர் வீட்டுக்கு முன் வந்து நின்றான் ரங்கமணி. வாசற்படியில் காலடி வைத்தவனை, உள்ளிருந்து வந்த பெண் எதிர்கொண்டு அழைத்தாள்.

''இதுதானே முத்துசாமியின் வீடு?''—தொண்டையைக் கனைத்துக் கொண்டு கம்பீரமாகக் கேட்டான் அவன்.

''ஆமாம், நீங்கள்...?''—அந்தப் பெண் பார்வையிலே கேள்விக் குறி தோன்ற அவனைப் பார்த்துக் கேட்டாள்.

அந்தப் பெண் ஒரு கணம் தயங்கினாள்; ''அவர் வந்து...இல்லையே...வெளியே...''

''அதனாலென்ன? அவரில்லா விட்டால் என்ன? நீங்கள்தான் இருக்கிறீர்களே! அவர் நண்பர் கோபாலசாமி சிபாரிசுக் கடிதம் கொடுத்திருக்கிறார். நான் வீட்டைப் பார்க்கலாம் அல்லவா?''

''ஓ! தாராளமாகப் பார்க்கலாம்.''

அந்தப் பெண் முன்னே செல்ல அவன் பின்னே விட்டினுள் சென்றான்.

''இதுதான் வராந்தா போலிருக்கிறது!'' வாசல் அறையை ஒட்டி நீண்டிருந்த இடத்தைச் சுட்டிக் காட்டியவாறு கூறினான்;

அந்தப் பெண் மேலும் கீழும் தலையாட்டியவாறு முன்னால் நடந்தாள்.

"பார்த்தவுடனே தெரிகிறது. இது படுக்கையறை என்று."

அந்தப் பெண் நாணத்துடன் இலேசாகச் சிரித்துக் கொண்டாள்.

'உம். கல்யாணமாகாத பெண். அதனால் தான் வெட்கத்துடன் சிரித்துக் கொள்கிறாள்' என்று நினைத்தவாறு மேலே நடந்தான்.

"இது சமையல் அறையா? புகை போக்கியில் புகை சரியாகப் போகுமா?" என்று ஒரு கேள்வியைத் தூக்கிப் போட்டான்.

அந்தப் பெண் நிமிர்ந்தாள். "என்னைக் கேட்டால்......? இதற்குமுன் நானா குடியிருந்தேன்? என்னை வந்து கேட்கிறீர்களே?"

"ஓ...மன்னிக்கவும். இது உங்க அப்பாவைக் கேட்க வேண்டிய கேள்வி. இதற்கு முன் குடியிருந்தவர்களையெல்லாம் நான் எங்கே என்று தேடுவது?" என்றவாறு கொல்லைப் பக்கம் நடந்தான்.

"குழாயிலே நாள் முழுவதும் தண்ணீர் வருமா?" என்றவாறு குழாயைத் திறந்தான். 'கொய்' என்று சத்தம் வந்ததே தவிர, தண்ணீர் வரவில்லை.

"நாள் முழுவதும் தண்ணீர் வர, இது என்ன ஜீவநதியா? காலையில் மூன்று மணி நேரம், மாலையில் மூன்று மணி நேரம் மட்டும் தண்ணீர் வரும்!" என்றாள் அவள்.



"அது போதும், இதோ கிணறு கூட இருக்கிறதே. அடேயப்பா! தண்ணீர் பாதாளத்தில் இருக்கிறதே......ஒரு ஆள் ஆழம் தண்ணீராவது இருக்குமா?" என்று கேட்டான் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தவாறு.

"இறங்கிப் பார்த்து விடுவானேன்? எதற்கு வீண் சந்தேகம்?" — அவள் சிரித்துக் கொண்டே கூறினாள்.

"இறங்கி விடுவேன்! திரும்ப ஏறத்தான் தெரியாது!" என்றவாறு, வீடு பிடித்துவிட்ட பெருமிதத்துடன் வாசலுக்கு வந்தான்.

"அப்போ நான் வர்றேன். வேறு யாராவது வந்து வீட்டைத் தட்டிக் கொண்டு போய்விடப் போகிறார்களே என்று ஓடோடியும் வந்திருக்கிறேன். அப்பாவைத்தான் பார்க்க முடியவில்லை. இந்தாருங்கள், கோபாலசாமி கொடுத்த சிபாரிசுக் கடிதம்! மறக்காமல், அப்பா வந்ததும் கொடுத்து விடுகிறீர்களா?" என்று கேட்டபடியே கடிதத்தை எடுத்து நீட்டினான் ரங்கமணி.

கடிதத்தை வாங்கிப் படித்தவள், ஒரு நிமிஷத்துக்குப் பிறகு, "உம்......கொடுத்து விடுகிறேன்" என்றாள்.

"அப்பாவை நாளைக்குப் பார்க்கலாம். இல்லையா?" என்றான் ரங்கமணி.

"நாளைக்கா? அப்பாதான் அவசர காரியமாகச் சின்னச் சேலம் வரைக்கும் போயிருக்கிறாரே!" என்றாள் அவள் ஆச்சரியத்துடன்.

"சின்னச் சேலமா? சேலத்துக்குப் போட்டியாக அப்படி ஒரு ஊர் இருக்கிறதா, என்ன?" என்று கூறியவன், "அப்படியானால் அவரை எப்போ பார்க்கலாம்?" என்று கேட்டான்.

"சனிக்கிழமை வருகிறார்: அன்றைக்கு வந்தால் அவரைப் பார்க்கலாம்......"

"உம்...சரி...கடிதத்தை மட்டும் மறக்காமல் கொடுத்து விடுங்கள்......" என்று ஒரு முறைக்கு இரு முறையாகக் கூறிவிட்டு, அந்த வீட்டை விட்டுக் கிளம்பினான் அவன்.

சனிக்கிழமை வந்தது! வீட்டுச் சனியனை விரட்டியடித்து விட்டோம் என்ற மகிழ்ச்சியில், வீட்டுக்காரரைக் கண்டு பேசி, அட்வான்ஸ் கொடுத்துவிட்டு வரலாம் என்று புறப்பட்டான் ரங்கமணி.

ஏற்கனவே தன் மனைவிக்கு, 'வீடு கிடைத்து விட்டது: சீக்கிரம் வந்து அழைத்துப் போகிறேன்' என்று கடிதமும் போட்டுவிட்டான்.

'மருதித் தெரு 12-ம் நெம்பர் வீட்டில் காலடி எடுத்து வைத்ததுமே, வீட்டுக்காரர் தம்மைத் தடபுடலாக வரவேற்பார்; கோபாலசாமியின் கடிதம் அவ்வளவு தூரம் வேலை செய்திருக்கும்' என்று அகமகிழ்ந்துகொண்டே வீட்டையடைந்தான்.

வராந்தாவிலே ஒரு குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. வீட்டுக்காரரின் பேரனாக இருக்கும் என்ற நினைப்பில், "பாப்பா! தாத்தா இருக்கிறாரா?" என்று கொஞ்சலுடன் கேட்டான்.

"தாத்தாவா......? இங்கே தாத்தாவும் இல்லே, பாட்டியுமில்லே...அம்மாவும் அக்காவும்தான் இருக்காங்க......" என்று பதிலளித்தது அந்தக் குழந்தை.

"அம்மாவும் அக்காவுமா......? இது என்னடா பெரிய தர்மசங்கடமாகப் போய் விட்டது! அம்மாவும், அக்காவும் புதுசா எங்கிருந்து வந்து முளைத்தார்கள்?' என்று அவன் மனத்துக்குள் பலவாறு எண்ணிக் குழம்பிக்கொண்டிருக்கையில், வாசற்படியில் தடிச் சத்தம் கேட்டது.

ரங்கமணி திரும்பினான்!

வீட்டுக்காரர் முத்துசாமி, தடியும் தானுமாக உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்.

அவரைப் பார்த்தவுடனேயே, அவர்தான் வீட்டுக்காரர் என்பதைக் கண்டு கொண்டான் அவன். "வரணும், வரணும்! நான்தான் ரங்கமணி. என்னைக் கோபாலசாமி அனுப்பினார். இந்த வீட்டை எனக்கு விடுவதற்காக......" அவன் முடிக்கவில்லை. அதற்குள் வீட்டுக்காரர், "கோபாலசாமிக்கு என்ன பைத்தியமா? நாலு நாளைக்கு முன்பு தான், ஒரு பெண் பிள்ளைக்கு வீட்டை விடும்படி சிபாரிசுக் கடிதம் கொடுத்து அனுப்பினான். சரின்னு 'அது'க்கு வீட்டை விட்டுட்டேன். இன்னைக்கு வந்து உங்களை..." என்றார் ஒன்றும் புரியாமல்.

"என்னது? பெண் பிள்ளைக்கு வீட்டை விடும்படியா? இந்த வீட்டையா?" என்று ஒன்றும் புரியாமல் குழம்பினான் அவனும்.

"ஆமாம், ஐயா! பொண்ணுக்குத்தான்: அவங்க குடி வந்து நாலு நாட்கள் ஆகின்றன. அதோ வர்றதே 'அது'தான்; அது.

அதனுடைய அம்மா, இந்தக் கொழந்தை மூன்று பேர்களும்தான் வந்திருக்காங்க!''

வீட்டுக்காரர் கட்டிக் காட்டிய திசையில் பார்வையைச் செலுத்தினான் அவன். அடுத்த கணம்...? 'ஷாக்' அடித்தது போல், தூக்கி வாரிப் போட்டது அவனுக்கு.

'ஆ! இவளா இந்த வீட்டுக்குக் குடி வந்திருப்பவள்! அப்படியானால் இவள்......இவள் இந்த வீட்டுக்காரரின் பெண் இல்லையா?'

ஆமாம், வீட்டுக்காரர் கட்டிக் காட்டிய பெண் வேறு யாருமில்லை. அன்று அவளிடமிருந்து சிபாரிசுக் கடிதத்தை வாங்கிக் கொண்டவளேதான்!



'' போய் வேறே வீடு பாரும். இதைத்தான் வாடகைக்கு விட்டாயிற்றே!'' என்றவாறு வீட்டுக்காரர் நடந்தார்.

'ஆஹா! எப்படிப்பட்ட ஏமாற்றம்? அதுவும் யாரால்? கேவலம் ஒரு பெண்ணால்! அந்தச் சிபாரிசுக் கடிதத்தைத் தனக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொண்டு, தன்னை மண் கவ்வச் செய்து விட்டாளே!' சிந்தித்தவாறு நடந்து கொண்டே அவன் தெருக் கோடிக்கு வந்திருப்பான்.

அதற்குள் ஒரு பிஞ்சுக் குரல் '' மாமா, மாமா!'' என்று பின்னாலிருந்து அழைத்தது. யார் தன்னைக் கூப்பிடுகிறது என்று அவன் திரும்பிப் பார்த்தான்.

திரும்பியவன் தன்னை நோக்கி, அந்த வீட்டு வராந்தாவில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை வருவதைக் கண்டு திடுக்கிட்டான். ஓடிவந்த குழந்தை அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டு, ''இதை அக்கா உங்களிடம் கொடுக்கச் சொன்னாள்'' என்று மொழிந்தவாறு, திரும்பி வேகமாக ஓடியதைக் கண்டதும் அவன் திகைப்பு இன்னும் அதிகமாகிவிட்டது.

குழப்பத்துடன் அந்தக் கடிதத்தைப் பிரித்தான். அதில் என்ன எழுதியிருக்குமோ என்று அவன் உள்ளம் பலவாறு எண்ணித் தவித்தது. மறுபடியும் தன்னை அவள் ஏதாவது சிக்கலில் மாட்டி வைத்து விடுவாளோ என்று பயந்துகொண்டே கடிதத்தில் கண்களை வேகமாக ஓட்டினான் ரங்கமணி.

'' திரு ரங்கமணி அவர்களுக்கு,

தங்களிடம் வீட்டுக்காரரின் பெண் போல் நடித்ததற்கு மன்னிக்கவும். ஒரு வருடமாக வீட்டுக்காக அலைபவள் நான். தற்செயலாக இந்த வீடு காலியாக இருப்பதைக் கேள்விப்பட்டு, அன்று வீடு பார்க்க வந்தேன். நான் வீட்டைப் பார்த்து விட்டு வெளியே வரும் பொழுதுதான் நீங்கள் வந்தீர்கள். என்னையே வீட்டுக்காரரின் பெண் என்று நினைத்து, நீங்கள் கவாரீனத்துடன் உள்ளே நுழைந்தபோது, எனக்கு வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருந்தது: ஆதலால் நீங்கள் கேட்ட கேள்விகளுக்குத் தமாஷாகப் பதில் சொன்னேன்: கடைசியில் நீங்கள் கொடுத்த கடிதத்தைக் கண்டபிறகுதான் எனக்கு அந்த எண்ணம் உண்டாயிற்று. அந்தச் சிபாரிசுக் கடிதத்தை நானே உபயோகப் படுத்திக் கொண்டால் என்ன? பெயர்ப் பொருத்தம் எனக்கு உதவி செய்தது. என் பெயரும் ரங்கமணிதான்! உடனே வீட்டுக்காரர் சின்னச் சேலம் போயிருப்பதாக ஒரு 'கப்஬ா' விட்டேன். நீங்கள் ஏமாந்து, இந்தப் பக்கமே தலைகாட்டவில்லை; அந்தக் கடிதத்தைக் கொண்டு, இந்த வீட்டை அடைவதற்கு அப்புறம் சிரமம் ஏதும் இருக்கவில்லை. உங்கள் உதவியினால்தான் எனக்கு இந்த வீடு கிடைத்தது. என்னைத் தங்கள் உடன் பிறந்த சகோதரியாக நினைத்து, நான் தந்த இந்த ஏமாற்றத்துக்கு மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சீக்கிரமே உங்களுக்கு வேறு வீடு கிடைக்க ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். ஆனால் ஒன்று. மற்றொரு முறையும் நீங்கள் இம்மாதிரி ஏமாறாமல் இருக்க வேண்டுமே!

— ரங்கமணி''

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே பெயரைச் சூட்டிய பெரியவர்களைத் திட்டிக் கொண்டே, அந்தப் பெண்ணின் சாமர்த்தியத்தைப் புகழ்ந்தவாறு, வேறு வீடு தேடும் படலத்தில் இறங்கத் தன்னை ஆயத்தம் செய்து கொண்டான் அவன்! இன்னும் யாரிடம் சிபாரிசுக் கடிதம் வாங்கினால் வீடு கிடைக்கும் என்ற வேட்டையில் முழுமூச்சோடு இறங்கினான்.



11. நீரிழிவு (2)

சரீரத்தில் கபத்தையும் மேதஸ் என்னும் கொழுப்பையும் அதிகரிக்கச் செய்யும் ஆகாரவிஹாரங்களை ஏற்றல்; சரீரத்துக்குச் சிறிதும் உழைப்பே இல்லாமல் கட்டிலில் படுத்தபடியோ அல்லது ஈஸிசேரில் சாய்ந்தபடியோ நாளைப் போக்குவது. ஒரு முழ உயரம் பஞ்சு மெத்தை; அதன் மேல் ஒன்றரை முழ உயரம் திண்டு;—இவற்றின் மேல் உட்கார்ந்தபடியுமின்றி, படுத்த படியுமின்றி அமைந்த 'உத்தியோக சயனத்தில்' — பாதிக் கண்ணை மூடிய படியும் — முழுக் கண்ணும் மூடாத நிலையிலுமாக உறக்கமும் விழிப்பும் கலந்த அல்லது மாறி மாறி ஏற்படும் இரண்டுங்கெட்ட நிலையில் — தமது மத்தள வயிற்றை இடையிடையே இலேசாகத் தடவிக்கொண்டு, 'ஓடு மீன் ஓட ஒரு மீன் வருமளவும் வாடிக் கிடக்கும்' முழுச் சோம்பேறி வாழ்வு — கவலையே இல்லாத மன நிலைமை; அளவற்ற செல்வநிலை; களிப்பு; பகல் உறக்கம்; அதிக உறக்கம்; பெருந்தீனி; சிலவகை மதுபானங்களைச் சேவித்தல் முதலிய காரியங்களால் இந்த நீரிழிவு ரோகம் உண்டாகிறது.

சனிக்கிழமை விரதம்; ஷஷ்டி விரதம்; கிருத்திகை விரதம்; அமாவாசை விரதம் என்று பாதி நாள் [உண்ணு] விரதங்களும் மிகுந்த நாளை உபவாசமும் இருந்து நாளைக் கழிக்கும் நம்மவருள் இந்த வியாதி ஏற்படுவது ஏன்? நாம் உண்பதற்காக வாழ்பவரல்லவே! உயிரை உடலுடன் நிறுத்திக் கொள்வதற்காக உண்ணவே போதுமான வருவாய் இல்லாதவராயிற்றே! நமக்கு ஏன் இந்நோய் வருகிறது என்கிறீர்களா?

இருளன் முத்தன் என்னும் முத்துச்சாமியின் மகன் 'தும்பி'யைக் கல்கி வாசகருக்கு அறிமுகப்படுத்த விரும்புகிறேன். அதே மூச்சில் எங்களூர் ஜமீன்தார் அன்ன முத்தையாவின் மகன் சின்ன முத்தையாவையும் அறிமுகப் படுத்தி விடுகிறேன். தும்பியும் சின்ன முத்தையாவும் ஒரே நாளில் ஒரே மணி ஒரே நிமிஷம் ஒரே விநாடியில் பிறந்தவர்கள். இரண்டு பேருக்கும் ஒரேவித ஜாதகம். இருவருக்கும் 5 கிரகங்கள் உச்சம்— ராஜயோகம், ராஜராஜ யோகம், ராஜாதி ராஜயோகம் என்று இப்படியெல்லாம் அமைந்திருந்தது ஒரு பெரிய ஆச்சரியம். இருபதாவது வயதிலிருந்து இருவருக்கும் மஹா யோக சக்கிர மஹாதசை ஆரம்பம். இனி என்னதான் நடக்கிறதோ பார்ப்போம் என்று ஊரில் இருந்தவரெல்லாம் ஆவலுடன் காத்திருந்தனர்.

சின்ன முத்தய்யனுக்குக் கலியாணமாயிற்று. அவ்வகையில் ஒரு ஐம்பது ஏக்கரா பூமி நஞ்சை புஞ்சையும்—இன்னும் நகைநட்டு, ரொக்கம்-பட்டுபீதாம்பரங்களும் வந்து குவிந்தன. ஊரிலுள்ளவர் அவனைச் சின்ன எசமான் என்று அழைக்கலாயினர். இரண்டு மூன்று வருஷங்களுக்குள் தூர பந்து ஒருவர் வாரிசு இல்லாமல் காலமாகிவிட்டதால் சின்ன முத்தய்யனுக்கு அனந்தர வாரிசு என்று மேலும் ஒரு 15 வேலி நிலம் காவேரிப் பாசனத்தில் கிடைத்தது. அத்துடன் ஒரு பங்களா, வில் வண்டி, மயிலைக் காளைகள் என்று இப்படி வந்து சேர்ந்தன. ஊரிலுள்ளவர் சின்ன முத்தய்யனை 'இளைய ஜமீன்' என்று அழைக்கலாயினர். இப்படி இருக்கையில் ஒரு நாள் சின்ன முத்தய்யன் ஒரு சிப்பிபோ, சோப்போ, பல்பசையோ வாங்கினான். அதில் ஒரு அதிர்ஷ்டச் சீட்டு நம்பரும் அடங்கி இருந்தது. அவ்வளவுதான். சின்ன முத்தய்யனுக்கு முதல் பிரைஸ் ஒரு மோட்டார் கார் வந்தது. ஊரிலுள்ளோர் சின்ன முத்தய்யனை 'இளைய ராஜா!' என்று அழைக்கத் தலைப்பட்டனர். இப்படியாக இருந்தது சின்ன முத்தய்யனின் மஹாயோக சக்ரமகா தசையின் வைபவம்.

தும்பிக்கோ...! இருபதாவது வயதில் கல்யாணமாயிற்று. குள்ளி கட்டுமஸ்தான சரீரம் பெற்றவள். ஊரிலுள்ளவருக்கு அரிசிக்காகக் கைக்குத்தல் வேலையில் தும்பிக்கு உற்ற துணையாய் உழைப்பாள். மூன்று கல நெல்லைக் குத்தி அரிசி வேறு, தவுடு வேறு, நொய் வேறு, நொசுக்கு வேறு என்று பிரித்து அளந்து கொடுத்து மும்மடங்கு கூலியைப் பெறுவதற்கு உதவுவாள்.

வயற்காட்டுப் புறங்களில் காட்டெலியைப் பிடிக்கத் தும்பி எலி வலையைத் தோண்டினால் பத்து பதினைந்து எலிகள் ஒன்றாய்க் கிடைக்கும். கௌதாரியைப் பிடிக்க ஒரு கண்ணியைக் கட்டினானால் கால் மணிக்குள் கௌதாரி, காடை

மைனா, அணில் என்று ஒரு கூடை நிறைந்து விடும். தும்பியின் மகர யோக சுக்ரமகாதசை இப்படி. இதே போலத்தான் நம் நாட்டிலுள்ளவருக்கும் சுக போகமும், உடற் பருமனும், ஊளைச் சதையும், இந்த 'டயாபிடிஸ்' என்னும் நீரிழிவும் ஏற்படுகின்றன.

ஆடி மாதம் 20 தேதியாகி விட்டதே! இதுவரையில் ஒரு புஞ்சை மழைகூடப் பெய்யவில்லையே என்று துக்கப்படுகிறான் உழவன். திடீரென்று வந்து பெய்யும் மழை. திடீரென்று பெய்த இம் மழையால் என்ன விபரீதம் விளைகிறது, தெரியுமா? கிணறு துரவுகளெல்லாம் குமுறி இடிந்து விழுந்து கிணறே தூர்ந்துபோகிறது. மிகப் பெரு நஷ்டம்.

அதிக ஏழைமையில் ஒரு சிறிது வசதி ஏற்பட்டாலும் அதன் விளைவும் இவ்விதந்தானிருக்கும். நீரிழிவுதானா வரும்? பைத்தியமே கூடப் பிடிக்கலாமே! சம்பளம், பஞ்சப்படி, பட்டணப்படி—இப்படி அப்படி என்று மொத்தத்தில் மாதம் ரூ. 72·50 சம்பளம் வாங்கும் ஒரு குமாஸ்தா, தனக்குச் சம்பளம் போதவில்லை என்று சங்கடப்படுகிறான்.

இப்படிப் பற்றுக்குறையில் கஷ்டப்படும் குமாஸ்தாக்களில் — அரைமாதச் சம்பளத்துக்கு அதிகமான தொகை கொடுத்து வாங்கிய "ஷூ"வை அணிந்து வருபவர் பலர் இருக்கின்றனர்.

இவரிடம் இல்லாமை ஒரு பக்கமும், வீண் விரயம் ஒரு பக்கமும் இருக்கின்றன அல்லவா? இதே நிலைதான் இந்த டயாபிடிஸ் என்ற ரோகத்திலும் ஏற்படுகிறது. பலம், சகிப்புத்தன்மை இவைகளில்லாமல் ஒருபுறம் சரீர தாதுக்கள் வாடி வதங்கி மெலிந்து நலிந்து தேய்வுறும். ஒருபுறம் இவற்றைச் சரீரத்துக்குக் கொடுக்கக் கூடிய இனிப்புச் சுவையின் வாயிலாய்ப் பிறந்த சத்துப் பொருள்கள் அவ்விதம் உபயோகமாகாது. வழி தப்பிச் சிறு நீரில் கலந்து விரயமாகிக் கொண்டும் இருக்கும்.

இந்நிலையை எப்படிச் சரிக்கட்டுவது? உதாரணத்துக்காகச் சொன்ன ஊதாரிகுணக் குமாஸ்தாவுக்குச் சம்பளத்தை உயர்த்த வேண்டியது மிகவும் அவசியம். அவருடைய பஞ்சப்படி, பட்டணப்படி எல்லாவற்றையும் உயர்த்த வேண்டியதுதான். அதனாலென்ன பயன்? அவர் தினம் இரண்டு முறை முக மினுக்கிகளை உபயோகிக்கத் தலைப்படுவார். சினிமாவுக்குச் சற்று உயர்ந்த வகுப்பில் சென்று, வரும் வழியில் பனியில் வறள்வார். இப்படிப்பட்ட போக்குள்ளவருடைய பற்றுக்குறை, திரவியக்

கோளாறு, பொருளாதார நெருக்கடி முதலியவை ஒருநாளும் தீராது. வருவாயைத் தக்க முறையில் - தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள உபயோகிக்கவும் — எதிர்பாராத செலவினங்கள் ஏற்படுமானால் அந்த நிலைமையைச் சமாளிப்பதற்காக முன்கூட்டியே சிறிது மிச்சப்படுத்தி வைக்கவும் பழகிக் கொள்ள வேணும்.

நீரிழிவு என்னும் டயாபிடிஸிலும் நோயாளிக்குத் தனி ஆகாரங்கள் மூலம் கிடைக்கப் பெறும் — இனிப்புச் சுவையினத்தின் இறுதியான ரஸாயனப் பொருள்களைத் திறம்படச் சமைக்கவும் சரீர தாதுக்களுக்குப் பயன்படும் தரத்தில் அவற்றை ஏற்றுச் சேமித்து வைத்துக்கொள்ளவும் பரிணை (Metabolism) சக்தியைச் சீர்ப்படுத்த வேண்டும்.

கோதுமை, கேழ்வரகு போன்றவற்றை ஆகாரமாக உபயோகித்தால், அவற்றின் வாயிலாகக் கிடைக்கும் இனிப்புச் சுவையினத்தின் இறுதி ரஸாயனப் பொருள்கள் நீரிழிவில் மிகவும் நல்ல பயனை அளிக்கும். இவற்றுக்குக் கபம் மேதஸ் (Fat) என்னும் சரீர தாதுக்களை அதிகப்படுத்தும் இயல்பு இல்லை. ஆனாலும் பலம், சகிப்புத் தன்மை இவற்றை அதிகப்படுத்தும் இயல்பு உண்டு. சத்துள்ள பாகம் சரீரத்தின் தாதுக்களில் ஒன்றிக் கொள்ளும் இயல்பு உள்ளவைகளேயன்றி, வழி தப்பிச் சரீரத்திலிருந்து வெளியே களையப்படமாட்டாத சிறப்புக் குணமும் பெற்றவை. பச்சைப் பயறு, அவரைப் பிஞ்சு, ஆவாரம்பூ, தேன், நெல்லிக் கனி ஆகியனவையும் மஞ்சள், மரமஞ்சள், லொத்து ஆகியவையும் இவ்வினத்தைச் சேர்ந்தவை. ஏற்கெனவே ஓரளவு கபமும் மேதஸ் என்னும் தாதுவும் அதிகரித்திருப்பின், அதன் விளைவாக நீரிழிவு ஏற்பட்டிருப்பினும் அவ்வகை கபமேதஸ்களைக் குறைப்பதிலும் சிறுநீரிலுள்ள இனிப்பைப் போக்குவதிலும் தேன் முதலியவை ஆகாரமாகவும் மருந்தாகவும் உதவி புரிகின்றன.

மேலும் இவ்வகை கபமேதஸ்களையும் ஊளைச் சதையையும் போக்கச் சரீரப் பிரயாசைதரத்தக்க உடலுழைப்பு, உபவாசங்கள், மனக் கவலை, பகல் உறக்கத்தைத் தவிர்த்தல், இரவு கண் விழித்தல் முதலிய விசாரங்களும் நல்லவை.

நடுத்தர வயதுள்ளவருக்கு ஊளைச் சதை போடத் தொடங்கும்போதே விழிப்புடன் மேற்சொன்ன ஆகாரங்களையும், விகாரங்களையும் ஏற்பது இந் நீரிழிவு ரோகத்துக்கு வருமுன் காக்கும் வகையில் செய்யும் முயற்சியாகும்.

விட்டகுறை

சங்கவல்லி என்ற அந்தக் கிராமத்தை எட்டியதுமே தில்லைநாயகத்தின் மன அரங்கில் ஓர் ஆனந்தப் பரபரப்பு ஏற்பட்டது. 'வந்த காரியம் சித்தியாகுமா? ஸ்தபதியார் ஆயுசோடு இருப்பாரா?' என்ற எண்ணங்களையெல்லாம் மனத்திலே ஓடவிட்டுக் கொண்டே அந்தி வானத்தைப் பார்த்தார். விக்கிரக வார்ப்புக்காக உருக்கிவிட்ட தும்பொன் குழம்பைப்போல் செவ்வானம் தகதகத்துக் கொண்டிருந்தது. தில்லைநாயகத்தின் உள்ளத்தில் 'உலைக்கூடம்' எழுவதுபோலிருந்தது. ஒரு தரம் கண்களை மூடி, இருள் தந்த பகைப் புலனுக்குள் எழுந்து நின்று ஆடும் அந்தத் தில்லையுள்கூத்தன் தூக்கிய திருவடியை மனத்தால் தரிசித்துவிட்டுக் குளத்தின் படித்துறைக்குள் இறங்கினார். கரையை ஒட்டிச் சுற்றிவர மண்டியிருந்த தாழம் புதரிலிருந்து 'கம கம' வென வந்து



கொண்டிருந்த நறுமணமும், அந்திப் பொழுதில் தொகுதி தொகுதியாக நீர் மொண்டு செல்லும் கிராமத்துப் பெண்களின் கால் மெட்டி எழுப்பிய 'ஜிலுங், ஜிலுங்' என்ற சத்தமும் இத்தனை நாட்களும் இல்லாதபடி அவருடைய மனத்தை அங்கங்கே தொட்டு உலுப்பி விட்டுச் சென்றன! குளத்து நீரில் அந்தி பூஜைக்காக இறங்கியவர் இருள் கவிய ஆரம்பித்ததையும் உணராமல் அப்படியே நின்று விட்டார். உணர்வு மீண்டதும் பழைய பரபரப்பு வந்து தொட்டது. அவசரம் அவசரமாக நியமங்களை முடித்து விட்டுக் கரையேறினார். நின்ற இடத்தில் விலகியிருந்த பாசிப் படலம் திரும்பவும் நீர்ப்பரப்பை மூடிவிட்டிருந்தது. 'திருச்சிற்றம்பலம்' என்று மெல்ல உச்சரித்து விட்டு ஊருக்குள் சேர்ந்த ஒற்றையடித் தடத்தைப் பின்பற்றினார். சூழ்நிலையின் நிச்சலனம் அவரைப் பூச்சாண்டி காட்டியது. நடக்கும்போது நெஞ்சுக்குள் ஏதோ 'ஜிலுங், ஜிலுங்' என்று ஜிலுங்குகிற மாதிரி ஒரு பிரமை! பிரமையா? இல்லை; கணநேரம் நின்று மடியில் வைத்திருந்த பட்டுப் பையைத் தொட்டுப் பார்த்தார்; சதங்கை இரண்டும் பத்திரமாக இருந்தன;



அவற்றை எடுத்துச் சத்தமிடாதபடி விபூதிச் சம்புடத்துக்குள் அமுக்கி விட்டு மேலே நடந்தார் இல்லைநாயகம்-அந்த யௌவன ஞானி!

★

எட்டாத பொருளின்மேல் ஆசை வைப்பதில்—காதல் கொள்வதில் ஓர் இன்பம் இருக்கத்தான் செய்கிறது. அதிலும் 'எட்டாத' பரம்பொருளிடம் காதல் கொண்டு விட்டால் அந்த இன்பத்துக்கு எல்லையுண்டா? 'இது வெற்றி, இது தோல்வி' என்று எளிதில் கணிக்க முடியுமா அந்தக் காதல் முயற்சியை? குமரியன்னை கண்ணுதல் முதல்வனைக் காதலித்தாள். என்ன ஆயிற்று. காலம் காலமாக அந்த காதல் உள்ளத்தோடு இன்னும் நின்று கொண்டிருக்கிறாள்! சூடிக்கொடுத்த சுடர்க் கொடி பாவை [illegible] பன்னகச் [illegible] வரித்தாள். [illegible]

சிலே அடைந்தவள் அவள்! இந்த நிரந்தர தத்துவம் மனித குலத்தின் வழிவழிச் சொத்து என்பதற்குச் சான்றாக இரண்டு இதயங்கள் இருந்தன. அந்த இரண்டும் இந்த உலகத்தில் ஒரே ஒரு நெஞ்சுக்குள் அடித்துக் கொண்டிருந்தன. அந்த ஒரு நெஞ்சு இப்போது, தாமரைக் குளமும் தோப்பும் துரவுமாக இயற்கை அன்னை கொலு வீற்றிருக்கும் கங்க வல்லியின் சிற்பசாலைத்தெருவுக்குள் நுழைந்து கொண்டிருந்தது......

*

"இதுதான் மாசிலாமணித் தாத்தா வீடு" என்று சொல்லித் தில்லைநாயகத்தை முற்றத்தில் விட்டு விட்டுச் சிட்டாய்ப் பறந்து சென்றது அந்த 'வழிகாட்டி'-எட்டு வயதுச் சிறுமி! அவள் ஓடிப்போய் விட்டாள். ஆனால் அவள் குதிகால்கள் கிளப்பி விட்டுப்போன பாதசரத்தின் 'கலீர், கலீர்' என்ற ஒலி ஏனோ அவர் நினைவில் நிரந்தரமாக நின்றது!

ஸ்தபதியின் வீட்டுக் கதவு பாதி திறந்திருந்தது. அதன் வழியே புன்னைக்காய் எண்ணெய் விளக்கின் மங்கிய தங்கநிறப் பிரகாசத்துடன் தங்கப் பொடியின் நறும் புகையும் எட்டிப் பார்த்தன. கிழவர் விளக்குக்கு முன்னே கண் பனித்து உட்கார்ந்து கொண்டு "இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே..." என்று உருகிக் கொண்டிருந்தார்.

'திருச்சிற்றம்பலம்' என்று முற்றத்தில் நின்றபடியே கூறினார் தில்லைநாயகம். அந்தச் சத்தத்தைக் கேட்டுக் கதவை விரியத் திறந்தார் ஸ்தபதியார். இளமையும் பக்திக் கனலும் தெறிக்கும் கலை பொருந்திய முகத்தோடு யாரோ ஒரு சிவநேசச் செல்வர் வெளியே நின்று கொண்டிருப்பதைக் கண்டு, "வாருங்களேன் உள்ளே" என்று அழைத்தார். பழுத்த பழமாகத் தோற்றமளிக்கும் ஸ்தபதியாரின் புலன்களின் தீக்ஷண்யத்தைக் கண்டு அதிசயித்த தில்லைநாயகம் வீட்டுக்குள் வந்து சேர்ந்தார்.

"பெரியவர்களைத் தரிசிக்க முடிந்தது அடியவன் பாக்கியம்!" என்று கூப்பிய கரத்துடன் அவர் எதிரே அமர்ந்தார் தில்லை. ஸ்தபதியார் அவர் முகத்தைக் கூர்ந்து கவனித்தார்.

"எனக்கு இலங்கை; காங்கேசன்துறையிலிருந்து ஒரு திருப்பணி விஷயமாகத் தமிழ் நாட்டுக்கு வந்தவன் ஆறு மாதங்களாக அலைகிறேன். வெற்றிலை மண்டபத்திலிருந்த ஒரு பெரியவர் என்னைத் தங்களிடம் வழிப்படுத்தினார்..." என்றார்.

"என்ன விஷயம்?" என்ற பாவனையில் அவரைப் பார்த்தார்.

"கோயில் திருப்பணி முடிந்து ஆறு மாதங்களாகி விட்டன. கருப்பக்கிருகம் இன்னும் சூனியமாகவே இருக்கிறது. அதில் பிரதிஷ்டை பண்ண நடராஜ மூர்த்தியின் திருவுருவத்தைப் பஞ்ச உலோகத்தில் பெரியவர்கள் கைப்பட வார்த்துத் தரவேண்டும்."

பெரியவரின் கைவிரல்கள் தசாங்கப் பொடியைத் தரையிலே சிந்தின! அவர் மௌனம் தில்லைநாயகத்தைப் படபடக்கச் செய்தது.

"பெரியவர்கள் கருணைகூர வேண்டும்: இறைவன் கட்டளையாக..."

"நல்லது! சித்தம் அதுவானால் இந்தக் கிழவன் என்ன சொல்லக் கிடக்கிறது; என் வைராக்கியத்தையே உருக்கிப் பொடிப் பொடியாக்கி விட்டது உங்கள் குரல். அவள் என்று மறைந்தாளோ, அன்றே என் கை விரல்கள் செத்துப் போய்விட்டன என்று எண்ணியிருந்தேன். அதற்கு இன்னும் உயிர் இருக்கிறது போலிருக்கிறது! முப்பது நாட்கள் கழித்து வாருங்கள், 'நடராஜனை' வார்க்கலாம்" என்றார் ஸ்தபதியார், தூபக் காலில் அகிற்பொடியைத் தூவிக் கொண்டே.

தில்லைநாயகத்தின் நெஞ்சு குளிர்ந்தது. 'திருச்சிற்றம்பலம்' என்று ஜபித்தவண்ணம் குத்துவிளக்கைக் கும்பிட்டார். வீட்டுக்குள் நறுமணப் புகை வளையங்கள் மண்டலித்து நின்றன. இருவரிடையேயும் கொஞ்ச நேரத்துக்கு ஆழ்ந்த மௌனம் நிலவியது. ஆனால் ஒரே தூபக் காலிலிருந்து கிளம்பிய நறும் புகையில் இருவருடைய உள்ளங்களும் பூர்வாசிரம மணத்திலே தோய்ந்து நின்றன என்பதை அவர்கள் ஒருவர்க்கொருவர் எங்ஙனம் புரிந்து கொள்ள முடியும்?

*

"தாத்தா! இந்தத் தீவு எனக்குக் கசந்து விட்டது. நாளைக்கே ஊருக்குப் புறப்படலாம்!" என்று கூறிய வண்ணம் கால் சதங்கையைக் கழற்றி அவர் முன்னால் வீசி எறிந்தாள் இந்துமதி.

கிழவருக்குப் பகீரென்றது.

"இந்தா! என்னம்மா இது?"

"ஆமாம், தாத்தா! இந்தப் பாலைவனத்தில் யார் இருப்பார்கள், ஊருக்குப் போய் விடலாம்!...என் பாதங்கள் இந்த மண்ணில் நிற்கவே கூசுகின்றன. 'ஜதி' தவறுகிறது! இந்தச் சலங்கையும் வேண்டாம்; சஞ்சலமும் வேண்டாம்!..." சொல்லும் பொழுதே இந்துவின் கயல்விழிகள் நீந்தின!

கிழவருக்கு ஒரே புதிராக இருந்தது.

பார்க்கும் இடமெங்கும் பசுமை போர்த்த இந்த மரகதத் தீவு — இயற்கையன்னையின் எழில் பூரணமாகத் தவழும் ஈழத்துத் தமிழ் மண் அதற்குள் பாலைவனமாகி விட்டதா? எத்தனை தடவைகள் அவளே நாட்டின் வளப்பத்தைப் புகழ்ந்து கூறியிருக்கிறாள்! அவளா இப்படிப் பேசுகிறாள்?

கிழவர் காரணம் கேட்டார்; பேத்தி கண்ணீரைத்தான் சிந்தினாளே யொழிய, பதில் பேசவில்லை. 'சரி, புறப்படு' என்று அவளை அழைத்துக் கொண்டு கப்பலேறினார் கிழவர். கலையுலகின் சிகர உச்சியைப் போய்த் தொடப் போகிறாள் பேத்தி என்ற நினைப்பில் காணாத கனவுகளையெல்லாம் கண்டு கொண்டிருந்த அவருக்குப் பெரியதோர் ஏமாற்றமாக இருந்தது அவள் செயல். கவலை மலைபோல் அவர் உள்ளத்தில் அசையாது அமர்ந்து விட்டது. ஆனால் இந்துமதி என்ன நிலையில் இருந்தாள்? அவள் உள்ளத்தில் பெரும் புயல் வீசியது. தாத்தாவோடு முகம் கொடுத்துப் பேசாமல் தன்னை விட்டு விலகி அப்பால் சென்றுகொண்டே யிருக்கும் அந்தக்

அனஸின்

தலைவலி, ஜலதோஷம், ஜுரம் மற்றும் தசைவலிகளிலிருந்து நிவாரணமளிப்பதில் சிறந்தது

ஏனெனில் அதில் நான்கு மருந்துகள் சேர்ந்துள்ள



வைத்திய விஞ்ஞானிகள், 'அனஸின்' என்பது வலியை அகற்றும் தீவிர சக்திவாய்ந்த அநேக மருந்துகளின் சரியான விகிதாச்சார கலவை என்று கூறுகிறார்கள். அது வேறெந்த ஒரே மருந்து கலவையைவிட அதிதுரிதமாயும், அபாயமின்றியும், நிச்சயமாயும் நிவாரணமளிக்கிறது என்று ஞாபகத்தில் வையுங்கள்! 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்பிற்கு ஒப்பான விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலவையாகும். ஆகவே 'அனஸின்', தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைவலிகளிலிருந்து துரிதமாயும், முற்றிலும் குணமளிப்பதில் சிறந்தது. எப்பொழுதும் வீட்டில் 'அனஸின்' வைத்திருங்கள்.

GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD. REGISTERED USER

K. 67 (R) TAM.

கொடிய நிலை — நிலைப்பரப்பைக் கப்பலின் தளத்தில் நின்று பார்த்தவாறே விம்மி வெடித்தாள்!

அந்த சமயம் சமுக் கடற்கரையில் அலைகள் வந்து மோதும் தன்னந்தனியான பாறை யொன்றின்மேல் அமர்ந்து நிர்மலமான அடிவானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் ஒரு இளைஞன். அவன் நெற்றியிலே துலங்கிய பால் வெண்ணீறும் நாவிலே ஒலித்த திருமந்திரமும் அவன் பக்தி நெஞ்சத்தை அலை பரப்பின. அந்த அலை வட்டத்துக்குள் ஒரு பெண்ணின் 'காதல்' வந்து மோதியபோது எத்தனை மின்னல்கள் மின்னிவிட்டன!



ஆல்விடோன் பானத் தயாரிப்பு ஸ்தாபனம் தனது முதலாண்டு விழாவைத் தாசப்பிரகாஷ் ஹோட்டலில் வெகு விமரிசையாகவிருந்துபசாரத்துடன் கொண்டாடியது. இந்த ஸ்தாபனத்தின் பாகஸ்தர்கள் திரு தங்கராஜ், திரு கோவிந்தசாமி, மானேஜர் திரு பாக்யம், ஸ்பென்ஸர் கம்பெனி மானேஜர் பி. ஹெர்பர்ட் ஆகியவர்களோடு நிதி மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம் காட்சி யளிப்பதைப் படத்தில் காணலாம்.

அன்று இருவருமே எதிர்பார்க்கவில்லை; ஆனால் சந்தித்து விட்டார்கள். விதி என்றும், விட்டகுறை என்றும் அதைத்தான் சொல்கிறார்களோ, என்னவோ?

அன்று இலங்கைச் சிவன் கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் இந்துமதியின் நாட்டியம் நடந்து கொண்டிருந்தது. கூட்டமெல்லாம் நாட்டியம் பார்த்துக் கொண்டிருந்ததால் மூல ஸ்தானத்தில் சாந்தி நிலவியிருந்தது. அந்த நிம்மதியான சூழ்நிலையிலே கருப்பக் கிருகத்துள் இறைவனை அண்டி நின்று தரிசித்து விட்டு வெளியே வந்தான் அவன். ஆயிரக்கால் மண்டபத்தின் கோலாகலம் அவனைக் கவர்ந்து இழுத்தது. எட்டிப் பார்த்தான்; நாட்டியம்!

''யாரோ ஓர் இளம்பெண் ஆடல் வல்லாள் அபிநயம் பிடித்துக் கொண்டிருக்கிறாள்; மின்னல் போன்ற உடல், கன்னல் போன்ற குரல்! ஆண்டவன் அவளுக்குச் சகல நலன்களையும் அருளட்டும்!'' என்ற பொது நோக்கோடு கூட்டத்தை விட்டு விலக யத்தனித்தான். ஒரு விநாடி, ஒரேயொரு விநாடி அவன் பார்வை இரத்தினக் கம்பளத்திலே ஜதி தவறாமல் துரிதகதியில் துடித்துக்கொண்டிருந்த அவள் பாதங்களில் சென்று லயித்தது. அவ்வளவுதான்! ஆடாமல், அசையாமல் இமையாமல் நின்று விட்டான். கண்ணுக்கு முன்னால் இளம் பெண்ணின் தோற்றம் மறைந்து, ஈரேழு புவனத்தையும் ஆடிக் கொண்டே ஆட்டுவிக்கும் அண்ணல் நடராஜமூர்த்தியின் நிருத்தியக் கோலம் வந்து ஆடியது. அவன் கண்கள் ஆனந்த வெள்ளத்தைப் பெருக்கின. அன்றிரவு அவன் நிம்மதியாகத் துயில் பயின்றான்.

ஆனால் இந்துமதிக்கு அந்த இரவு எப்படி இருந்தது, தெரியுமா? சொல்லாமல் வந்து கொல்லாமல் கொன்றது! தூக்கம் அவளை நெருங்கவே வெட்கப்பட்டது. வானத்திலே அமுத மயமான ஒளியைப் பொழியும் நிலவின் சீதளக் கதிர்கள் செந்தழலின் சாற்றைப் பிழிந்து மேலே தெளிப்பதைப் போல அவள் பொன்னுடலை வருத்தின. மேன்மாடிக்குச் சென்று நிம்மதியில்லாமல் உலாவினாள். பாதங்கள் இரண்டும் படபடத்தன.

மறுநாள் இந்து எதிர்பார்த்தாள்; ஏமாறவில்லை! இளைஞன் வந்து எல்லாருக்கும் முன்னதாகவே இடம் பிடித்துக் கொண்டான்.

அடுத்தநாளும் எதிர்பார்த்தாள். அவளுடைய 'ஆசை' நிறைவேறியது! பின்னொரு நாளும் தேடினாள். இளைஞன் தவறாது வந்திருந்தான், இஷ்ட தெய்வத்தைப் பூஜிக்க வரும் பக்தனைப் போல! அந்த நாட்களில் எல்லாம் அரங்கத்திலுள்ளோர் ஆடற்கலையின் அற்புத நிலைகளைக் கண்டு களித்தனர். அவள் ஆடினால் அரங்கமே ஆடியது. ஆனால்?......

அன்றிரவு ஆடல் முடிந்து வீடு திரும்பிய இந்து, ''பெரிய ஓதுவாமூர்த்தி சில புதுப் பதிகங்கள் கற்றுக்கொள்ள வரச் சொல்லியிருக்கிறார்கள். என் குரலினிமையை இன்று வெகுவாகப் புகழ்ந்தார்கள். போய் விட்டு வந்துவிடுகிறேன், தாத்தா!'' என்று விடை பெற்றுக் கொண்டு நடன மண்டபத்துக்கு ஓடோடியும் வந்தாள், உடைகளைக் கூட மாற்றிக் கொள்ளாமல்.

என்ன விந்தை! அந்த இளைஞன் இன்னும் அங்கேயேதான் உட்கார்ந்திருந்தான். ஆயிரம் தூண்களோடு ஆயிரத்து ஒன்றாவதாக! அவன் கண்கள் நிஷ்டையில் இருந்தன. இதழ்க் கோணங்களில் ஏதோ முணுமுணுப்பு.

இந்துவின் உள்ளத்தில் நாணமும் அதனை விஞ்சும் அளவுக்கு மகிழ்ச்சியும் தாண்டவமாடின. தன்னையே மறந்த நிலையில் அவன் முன்னால் வந்து நின்று கால் சதங்கைகளைக் 'கலீர், ஜில்லும்' என்று ஓசைப்படுத்தினாள். அவன் கண்களைத் திறந்தான். அப்பப்பா! அந்தக் கண்களிலேதான் எத்தனை பிரகாசம்! அழல் ஆடி அங்கை சிவந்த பெருமானின் தேஜஸ் அவன் முகத்தில் சுடர் விட்டது!

''சுவாமி...!'' என்றாள் இந்து.

''ஆம்! சுவாமி தரிசனத்துக்காகத்தான் வந்தேன். உன் நடனத்திலே அதைப் பூரணமாகக் கண்டேன். ஆடும் உன் பாதங்களுக்குத் தில்லையுள்—ஆடும் பெருமான் அருள் புரிவாராக'' என்றவாறே எழுந்து நடந்தான்.

''நில்லுங்கள்; நாம் தனிமையில் இருப்பது உங்கள் உள்ளத்துக்கு உவகை தரவில்லையா, சுவாமி?'' என்றாள்.

''தனிமையா? இதோ ஆயிரம் பேருக்கு நடுவேயல்லவா இருக்கிறோம்''

''கல்தூண்களையா சொல்கிறீர்கள்!''

''கல்லுக்குள் இறைவன் இல்லையா?''



இந்திய சர்க்கார் மந்திரி திரு பி. கோபால ரெட்டி இந்தியாவிலேயே மிகப் பெரிய பட்டுத் தொழிற்சாலையான பங்களூர் சீதாலக்ஷ்மி துணி ஆலைக்கு விஜயம் செய்தார். ஆலையின் அதிபர் திரு கே. சீனிவாசலு மந்திரிக்கு யந்திரங்களைப் பற்றி விவரித்துக் கொண்டிருப்பதைப் படத்தில் பார்க்கலாம்.

''என்ன சுவாமி, என் ஆடல் உங்களைப் பரவசப்படுத்தவில்லையா என்று கேட்டால் என்னென்னவோ சொல்கிறீர்களே?...''

'' 'உங்களை' என்று நீ யாரைக் குறிப்பிடுகிறாய்?'' என்றான் அவன்.

''உங்களைத்தான்!'' என்று அன்போடு அவன் கரங்களைப் பற்றப் போனாள் இந்துமதி. அவன் திடுக்கிட்டுப் பின்வாங்கினான். உடல் விதிர்விதிர்த்தது. ''கடவுளே!'' என்றான்.

''நான் என் இதயத்தை உங்களிடம் பறி கொடுத்துவிட்டேன்; நீங்கள் என் தெய்வம்!''

''நானுந்தான் உன்னிடம் என் இதயத்தைப் பறி கொடுத்திருக்கிறேன். ஆனால் 'நீ' என்று நான் குறிப்பிடுவது 'உன்னை' யல்ல. நீ ஆடும் பொழுது உன் ஆத்மாவுக்குள்ளிருந்து கொண்டு என் அகக் கண்களுக்குப் புலனாகும் அம்பலவாணனை, ஆடும் எம் இறைவனை, அந்த நடராஜமூர்த்தியை...''

''சுவாமி!...''

''நான் துறவி. இகலோக இன்பங்களில் எனக்கு நாட்டமில்லை...''

''நானும் என் பாச பந்தங்களினின்றும் விடுபட்டுத் தங்களோடு வந்து விடுகிறேனே?''

''முடியாது. இந்த ஜென்மத்தில் நீயும் நானும் ஒன்று சேர முடியாது.''

''அப்படியானால் விண்ணுலகில் ஒன்று கூடுவோம் என்கிறீர்களா?''

எதிர்பாராத இந்தக் கணையால் அடிபட்டு மயங்கிய அவன் ''ஆண்டவன் சித்தம் அது வானால் நாம் யார் தடுப்பதற்கு? நீ கலங்காமல் போய் வா'' என்று விடை கொடுத்தான். இந்துமதி காலைத் 'திக் திக்' கென்று வைத்துக் கொண்டு நடந்தாள். கோயிலின் சரவிளக்குகள் ஒளிச் சொட்டுகளைக் கீழே சிந்திக் கொண்டிருந்தன.

அவன் நடன மகாலைவிட்டு வெளியே வந்தான். கால்களில் ஏதோ இடறியது. திடுக்கிட்டுக் குனிந்தான்! இந்துமதி உகுத்த இரண்டு கண்ணீர்த் திவலைகளைப் போல் இரு சதங்கைகள் 'ஜலங்' என்று குலுங்கிட்டன!

★

சிங்கவல்லி கிராமத்தில்......

மாசிலாமணி ஸ்தபதியார் நிஷ்டை கலைந்து எழுந்தார். தில்லைநாயகம் விடைபெற்றுக் கொண்டு போய் வெகு நாழிகையாயிற்று என்று தெரிய வந்தது. அவர் சுமத்தி விட்டுப் போயிருந்த புதிய பொறுப்பு நினைவுக்கு வந்ததும் உடம்பில் புதியதோர் உற்சாகமும் தெம்பும் சுரந்ததை உணர்ந்தார்.

அவருடைய உலைக்கூடத்துக்கு அன்றி விருந்து உயிர் பிறந்தது. நாலாம்படையும் தூசிதும்புகளும் மண்டிக்கிடந்ததைத் துடைத்துத் துப்புரவாக்கினார்; குருவ மண்ணையும் செங்காவியையும் சலக்கிச் சுவர்களைத் தீற்றினார். ஒரு நல்லநாளில் பிரதிமை செய்வதற்கு வேண்டிய தேன் மெழுகை உருக்கிவைத்தார்; முப்பது நாட்களுக்குள் மெழுகிலே நடராஜமூர்த்தியின் தாண்டவக் கோலம் அற்புதமான கலையழகோடும் காம்பீர்யத்தோடும் உருவாகியது. திருவாசியின் நுண்ணிய வேலைப்பாடுகளை, முகத்தின் அருட்பாவனையை எல்லாம் மெல்லிய மூங்கைக்குச்சியின் துணையால் ஸ்தபதியாரின் கலை விரல்கள் அருமையாகச் செய்து முடித்தன. பின்பு தரமான மண்ணால் பிரதிமையைச் சுற்றிக் 'கருக்' கட்டினார். அதாவது மெழுகுச் சிலையைச் சுற்றி மண்ணைப் பூசிப் பூசி முழு வடிவத்தையும் மறைக்கும்படி 'மண்கரு' தயாராகும். பின்னர் அது பக்குவமாக நிழலிலேயே காய வைக்கப் பெற்று இறுதியில் உலையிலிட்டு வெதுப்பப் படும். அப்பொழுது பிரதிமையின் மெழுகு உருகி, கருவின் அடிப்பாகத்திலுள்ள துவாரத்தின் வழியாக வெளியே வடிந்துவிடும்; பின்னர் உலோகக் குழம்பை உருக்கி வார்க்கும் பொழுது, மெழுகு நின்று வடிவம் தந்த இடங்களிலெல்லாம் உலோகக் குழம்பு சென்று சென்று பாய்ந்து சிலை உருவாகும்! இந்த அரிய கலையை நம் தமிழ் நாட்டில் பண்டுதொட்டே பரம்பரை பரம்பரையாக வளர்த்து வந்திருக்கிறார்கள். அவர்களின் வழித்தோன்றல்களில் ஒருவரான மாசிலாமணி ஸ்தபதியார் சாஸ்திர முறைப்படி நடராஜர் சிலையை வார்ப்பதற்காக எல்லா ஏற்பாடுகளையும் பழுதின்றிச் செய்து முடித்து விட்டு, உலோகம் உருக்குவதற்கு நாளை எதிர்பார்த்ததோடு தில்லைநாயகத்தின் வரவையும் மிகுந்த ஆவலோடு எதிர்நோக்கியிருந்தார்.

தில்லைநாயகமும் க்ஷேத்திராடனங்களை முடித்துக் கொண்டு வந்தார். உலைக்கூடத்துத் துருத்திகள் விம்மின! கருவை மணலில் வாகாகப் புதைத்து வாற்றுவாயைச் சரிக்

கட்டினார் ஸ்தபதி. தீ நாக்குகள் உலையின் கரிமூட்டத்தைத் தங்க மயமாக்கிக் கொண்டிருந்தன. "ஈசனே!" என்று துதித்த வண்ணம் பஞ்ச உலோகங்கள் நிறைந்த குகையை (உருக்கும் மட்கலசத்தை) தகதகக்கும் உலையில் பக்தி சிரத்தையோடு வைத்துத் தீக்கங்குகளால் மூடினார் ஸ்தபதி. தில்லைநாயகம் துருத்தியை முழக்குவதில் ஈடுபட்டிருந்தார். உள்ளத்தில் கிளர்ந்த ஆவேசத்தால் காரியங்கள் 'விறுவிறு' வென்று நடந்தன. ஸ்தபதியார் மெல்ல உலைக்குறட்டினால் கிரமூட்டத்தை விலக்கிப் பார்த்தார். பஞ்ச உலோகங்களும் உருகிக் குகைக்குள் சுழன்றன! கசடுகள் அற்றுப் போவதற்காகக் கொஞ்சம் படிக்காரப் பொடியைத் தூவினார். கண்ணாடி போல் உலோகம் தெளிந்தது. ஆனால்?...

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டார் தில்லைநாயகம்.

"இல்லை. ஒரு வீசக்கடை மேழ இறங்கி விட்டதே. இன்னும் கொஞ்சம் உலோகம் வேண்டுமே!" என்றார் ஸ்தபதியார்.

தில்லைநாயகத்துக்கு ஒரே திகைப்பாக இருந்தது. குகை ஆறிவிடக்கூடாது; பஞ்ச உலோகத்தில் ஓர் உலோகத் துண்டை எங்கே போய்த் தேடுவது?

சட்டென்று அவர் உள்ளத்திலே ஒரு மின்னல் துவண்டது. விறுவிறு வென்று ஏதோ ஆவேசம் வந்தவரைப் போல் மடியிலிருந்த விபூதிச் சம்புடத்தைத் திறந்து அதற்குள் அடக்கம் செய்து வைத்திருந்த இரு வெண்கலச் சதங்கைகளையும் எடுத்து ஸ்தபதியாரின் கையிலே கொடுத்தார்.

சதங்கைகளைக் கையிலே வாங்கியதும் ஸ்தபதியாரின் உள்ளம் ஒரு குலுங்குக் குலுங்கியது. கண்களில் நீர் திரையிட்டது. உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு அவைகளைக் குகையில் இட்டார். சதங்கைகள் பஞ்ச உலோகக் குழம்பில் சங்கமித்தன!

"நன்றாகத் தெளிந்து விட்டது! தூக்கி வார்க்கலாமே" என்று துரிதப்படுத்தினார் தில்லைநாயகம். இருவரும் எழுந்து நின்று, பக்கத்துக்கொன்றாக உலைக் குறடுகளினால் குகையைத் தூக்கி அதிஜாக்கிரதையாகக் கருவில் வார்த்தனர். உலோகக் குழம்பு தங்கு தடையின்றிப் புதுப் புனல்போல் பாய்ந்து சென்று 'இறைவனை'ப் படைத்தது!

மறுநாள் நன்கு ஆறிய பிறகு கருவை உடைத்துப் பார்த்த பொழுது தில்லைநாயகத்திடம் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஸ்தபதியாரோ பாசபந்தமற்ற ஞானியைப் போல் ஒரு புன்னகையை மட்டும் இலேசாக மின்னவிட்டார்.

விக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டு கண்களில் ஆனந்தக் கண்ணீருடன் புறப்பட்ட தில்லைநாயகம் தற்செயலாக உலைக்கூடத்தின் ஓர் மூலையில் ஆணியொன்றில் மாட்டப்பட்டிருந்த பொருளைப் பார்த்து விட்டு அதிர்ச்சியடைந்து போய் நின்றார். அதே பாதச் சதங்கைகள்! உதிர்ந்து விழுந்த இரண்டு சதங்கைகளுக்கும் இடம் விட்டு அப்படியே சுவரில் தொங்கிக் கொண்டிருந்தன! புரியாத புதிரோடு தில்லைநாயகம் ஸ்தபதியாரைப் பார்த்த போது அவர் கண்களில் துளிர்த்துத் தெறிக்கத் தயாராக நின்ற இரண்டு கண்ணீர்த் துளிகளைத்தான் காண முடிந்தது!

★

இலங்கையில் காங்கேசன் துறை புதிய கோயிலின் ஆலாட்சி மணிகள் 'ஓம், ஓம்' என்று முழங்கின. சரஞ்சரமாகத் தீப அலங்காரங்களும் மாவிலைத் தோரணங்களும் நிறைந்து மங்கள அழகுடன் பொலிந்தன.

உச்சிமேல் கூப்பிய கைகளுடன் அஞ்சலி செய்த வண்ணம் உள்ளம் நெக்குருக நடராஜ மூர்த்தியின் எதிரே நின்று கொண்டு அந்தக் கோலாகலக் காட்சியை அள்ளிப் பருகினார் தில்லைநாயகம். சிலையின் தூக்கிய திருவடியிலிருந்து 'ஜல் ஜல்' என்ற நாதம் பாய்ந்து வந்தது போல் ஒரு பிரமை! கனீரென்ற குரலில் பாடினார்:

"சாட வெடுத்தது தக்கன் தன்
வேள்வியிற் சந்திரனை
வீட எடுத்தது காலனை நாரண
னுன் முகனுந்
தேட எடுத்தது தில்லையுட்
சிற்றம்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதமன்றோ
நம்மை ஆட்கொண்டதே"

சாஷ்டாங்கமாகத் தரையில் விழுந்தார் தில்லைநாயகம். கூடி நின்ற பக்தர்கள் பரபரப்போடு ஓடிவந்தனர். "......பாதமன்றோ நம்மை ஆட்கொண்டதே" என்ற முணுமுணுப்புடன் அவருடைய இதழ்கள் நிரந்தரமாக மூடிக் கொண்டன! ஆனால் அவர் முணுமுணுத்த 'நம்மை'யுள் அடங்கிய 'அம்மை'யை யார் அறிவார்கள்?



பம்பாய் ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்சஸ் ஸ்தாபனத்தார் தயாரித்த 'மினி ரேடார்' சமையல் சாதனங்களைச் சமீபத்தில் பொதுமக்களுக்கு அறிமுகப் படுத்தினர். இந்தியாவிலே தயாரிக்கப்பட்ட இந்தச் சமையல் சாதனத்தில் உணவு தயாரிக்கப்படுவதை விருந்தினர் பார்வையிடுகின்றனர்.



வஸந்தத்தின் புத்துணர்ச்சி

உங்களுக்கு இன்றும்..என்றும்

மிக்க கீர்த்தி வாய்ந்த காஷ்மீர் பொக்கே
உங்கள் உடலுக்கு இளவேனிற்காலை
யின் புத்துணர்ச்சியளிக்கிறது...
அதைக் குளிர்ச்சியாகவும்
வாசனை திகழவும்
வைக்கிறது.



காஷ்மீர் பொக்கே

டால்கம் பௌடர்

ஆண்கள்
விரும்பும்
சுகமணத்துடன்

மக்ளீன்ஸ்

வர்ணப் போட்டி

இவ்வளவுதே கலந்து! கொள்ளுங்கள்!

நூற்றுக்கணக்கான பரிசுகளைக்
கட்டாயம் பெறுங்கள்!

படித்துப் பாருங்கள்

சதாங்கம்

மற்றெந்த ஜீவராசிகளிடமும் இல்லாத பெருங் குணம் மனிதனுக்கு இருக்கிறது. மனிதன் எந்த விஷயத்தையும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறான். தனக்குத் தெரியாத விஷயம் இந்த உலகத்திலேயே இருக்கக் கூடாது என்று எண்ணுகிறான். இருவர் பேசும்பொழுது, 'உனக்குத் தெரியாது', 'உனக்கென்ன தெரியும்?' என்பது போன்ற பேச்சுக்கள் அடிபடுவதையும், தான் அதிகம் தெரிந்தவன் போல் பேசுவதையும் காண்கிறோம். அது மட்டுமா? சரிவரத் தெரிந்து கொள்ளாமலே பல விஷயங்களைப் பற்றிப் பெரிதாக அளப்பதையும் காண்கிறோம்.

ஆனால் புகழ் பெற்ற ஆசிரியை ஸ்ரீமதி குமுதினி அவர்கள் தொகுத்துள்ள 'சதாங்க'த்தின் பிரதி ஒன்று கையில் இருந்துவிட்டால், ஆதார பூர்வமாகவே அரிய பெரிய விஷயங்களைப் பற்றிப் பேசலாம்.

'நமது நாட்டில் தொடங்கிச் சில விஞ்ஞானக் குறிப்புகள்' வரை 12 பெரும் பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு பல விஷயங்களைத் தெளிவாகவும், எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் எழுதியிருக்கிறார்.

நமது நாட்டின் செல்வ நிலையைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமா? தாதுப் பொருள்களைப் பற்றிப் புரிந்துகொள்ள வேண்டுமா? விளைபொருள்களின் விவரங்களை அறிய வேண்டுமா? கால்நடைகளைக் கணக்கெடுக்க வேண்டுமா? நாட்டில் என்ன என்ன மொழிகளெல்லாம் வழங்கி வருகின்றன என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? சரித்திரக் குறிப்புகள், இதர நாட்டில் இந்தியர்கள், கோடை வாசஸ்தலங்கள், எதைப் பற்றி அறியவேண்டுமென்றாலும் 'நமது நாடு' என்னும் பிரிவைப் புரட்டிப் பார்த்தால் போதும்: சுருக்கமாகவும், விளக்கமாகவும் தெரிந்து கொள்ளலாம்.

காரியாலயக் குறிப்பு என்னும் பகுதியைப் பார்த்தோமானால், சர்வ தேசிய நாணய மாற்றம், டெலிபோன், டிரங்க், தபால், தந்தி, கோர்ட்டுச் செலவு, ரிஜிஸ்தர் பதிவுச் செலவு, வருமான வரி ஆகியவை சாங்கோபாங்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

எளிய சிகிச்சை, மூலிகை மருந்துகளின் குணங்கள் என்ற தலைப்பில், வைத்தியரை நாடிப் போகாமலேயே, வீட்டில் இருந்த வண்ணம் கைபக்குவமாகச் செய்து கொள்ளக் கூடிய வைத்திய முறைகள் காணக் கிடக்கின்றன.

வீட்டுக் குறிப்பில், சமையற் கலை சம்பந்தமான விஷயங்கள் வெகு நேர்த்தியாக வகைப்படுத்தப்பட்டு, நாக்கில் நீர் ஊறும் வண்ணம் கூறப்பட்டிருக்கின்றன. 217ம் பக்கத்தில் எலுமிச்சை-கார ஊறுகாய் போடும் விதத்தை வர்ணிக்கும்பொழுது பெருங்காயம் 2 படி என்று குறிக்கப்பட்டிருக்கிறது. பெருங்காயம் படிக் கணக்கில் கொடுக்கப் படுவதில்லையாதலால், விஷயமறிந்த வாசகர்கள் 2 பலம் என்றே திருத்தி வாசித்துக் கொள்வார்கள்.

உபயோககரமான இத்தனை விஷயங்களை ஒன்றுசேர்த்து, உவந்து படிக்கும் வகையில் அளித்த ஆசிரியையும், பதிப்பகத்தினரும் பாராட்டுக்குரியவர்கள். ஆயிரம் விஷயங்களை அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் இந்த அருமையான நூலின் விலை ரூ. 6.

பூகம்பம்

இந்த உலகத்தில்தான் எத்தனை வகை மனிதர்கள்! ஒருவருக்கு நல்லது செய்யப் போய், அவர் தன்னைத் தவறாக எடுத்துக் கொள்கிறார் என்றால், 'நமக்கு எதற்கு இந்த வம்பு?' என்று ஒதுங்கிப் போகிறவர்கள் எத்தனையோ பேர்! யார் எப்படி எடுத்துக் கொண்டாலும், 'நன்மையே செய்ய வேண்டும். அவர்கள் நம்மை அலட்சியப்படுத்துகிறார்களே என்பதற்காக நாம் சும்மா இருந்துவிடக் கூடாது' என்று கருமமே கண்ணாயிருப்பவர்கள் எத்தனையோ பேர்!

இப்படியாகப் பலதரப்பட்டவர்கள் வாழும் உலகத்திலே அமீர் என்னும் சிறுவன் இரண்டாவது வகையைச் சேர்ந்தவன்.

அவனது எசமானர் ராய் நைஷ்டிகப் பிரும்மச்சாரியாக இருந்தவர். நாகர்குலத்து அழகு ராணியின் அழகிலே மயங்கி மனத்தைப் பறி கொடுத்து ஸீதா என்னும் குழந்தைக்குத் தந்தையானார்.

அழகு ராணி நாகர்குல வழக்கப்படி, வேற்றுமை நாடி, நாகர் குலத்துக்கு இழுக்கைத் தேடித் தந்தவளாகக் கருதப்பட்டுச் சிதையேறி உயிர் துறக்கிறாள்.

அவளது எண்ணப்படி, குழந்தையைத் தாம் வளர்த்து வாழ்விக்க விரும்புகிறார் ராய். நாககுல மக்களோ, அந்தக் குழந்தையைத் தங்கள் அழகு ராணியாகத் தேர்ந்தெடுத்துப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுகிறார்கள்.

தனது எசமானரின் எண்ணத்தை ஈடேற்றும் பணியிலே இறங்கிய அமீர் எத்தனை எத்தனையோ இன்னல்களுக்கு ஆளாகிறான். தனது எசமானர் இறந்தபின்னரும் ஸீதாவைக் காப்பாற்றி நல்வாழ்வு வாழ வைக்க விரும்புகிறான். அருமைத் தங்கையென வளர்த்த சீதாவின் வாயினாலேயே எத்தனையோ சுடுசொற்களைக் கேட்கிறான். இருந்தாலும் தன் உறுதி தளராமல், அவன் நன்மையிலேயே நாட்டமாயிருக்கிறான்.

அமீர் சொல்வது போல அமைந்திருக்கும் இந்தக் குறுநாவலை எழுதியவர் மாயாவி. கதையின் நிலைக்களன், வங்காளம் அஸ்ஸாமுமாக அமைந்து பூகம்பத்துக்கு உகந்த இடம் என்பதைப் பறைசாற்றுகிறது. விலை ரூ. 2.

பிரசுரம் :— அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை—4.



வளையல்க்கவன்

ஜி. கே. பொன்னம்மாள்

இரவெல்லாம் கொட்டிய மழை விடியும் சமயந்தான் சற்று ஓய்ந்திருந்தது. இருந்தாலும் இலேசாகத் தூறிக் கொண்டுதான் இருந்தது. தன் குடிசை ஓரத்தில், கோணிப் பையால் உடம்பை மூடிக் கொண்டு படுத்திருந்த முத்தம்மாள் போர்வையை உதறி விட்டு எழுந்து உட்காருவதற்கு முயன்றாள். தலைவலியும் ஜுரமும் அவளை எழுந்திருக்க வொட்டாமல் படுக்கையில் தள்ளின.


'காலை ஆறு மணிக்கெல்லாம் அந்தப் புளிய மரத்தடியில் போய் உட்கார்ந்து வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டுமே? இப்படிப் படுத்துக்கிடந்தால் நம் வயிறும் வாடிவிடுமே? ஏழைகளுக்கெல்லாம் ஏன்தான் இப்படி உடம்புக்கு வருகிறதோ? தள்ளாத வயதில் ஒரு பெண்ணை வளர்க்க வேண்டிய பொறுப்பு வேறு வந்து விட்டதே!'

இப்படி யெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கும்போது. இடுப்பில் இட்டிலிக் கூடையுடன் புன்னகை தவழச் செங்கமலம், "ஆயா! நான் போய் வரட்டுமா? நீ இன்று மழையில் அலைய வேண்டாம்" என்று குரல் கொடுத்ததைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனாள் முத்தம்மாள். அவள் மனத்தில் ஒருவித பயம் புகுந்து கொண்டது.

"வேண்டாம், செங்கமலம்! காலம் கெட்டுக் கிடக்கிறது. வயதுப் பெண் வியாபாரத்துக்குப் போக வேண்டாம். கூடையைக் கீழே வை. நானே போகிறேன்" என்று கூறி எழுந்திருக்க முயன்றாள்.

"நீ அலட்டிக் கொள்ளாதே ஆயா! காலம் நம்மை என்ன செய்து விடும்? நாம் இருக்கிறபடி இருந்தால் நமக்கொன்றும் பயமில்லை. நானே போகிறேன்" என்று பிடிவாதமாகப் புறப்பட்டு விட்டாள் செங்கமலம்.

தன் பேத்தியின் பிடிவாத குணத்தை நன்கு தெரிந்து கொண்டிருந்த கிழவி "சரி! சொல்லுகிறேன், கேளு. அந்த ரிக்ஷாக் காரனுக்கு நாலு இட்டிலி கொடு. பணம் உடனே தந்து விடுவான். மண்டபத்துச் சாமியாருக்கு இரண்டு இட்டிலி கொடு. அவரிடம் பணம் கேட்காதே. மாதக் கடைசியில் கொடுத்து விடுவாரு. வாடிக்கைக்காரர்களிடம் மரியாதையாகப் பேசி நடந்து கொள்ளு. உன் வாயாடித்தனம் வியாபாரத்துக்கு உதவாது. சைக்கிளில் ஒரு தம்பி வரும். நல்லசிவம் என்று பேரு. இந்தப் பேட்டையில் போக்கிரி அவன். அது கேட்ட பணியாரத்தை உடனே கொடுத்துவிடு. துட்டு, கிட்டு கேட்காதே" என்று தனது வாடிக்கைக்காரர்களை அறிமுகப் படுத்திக்கொண்டே போனாள்.



கோத்ரெஜ் ஸ்தாபனத்தார் பம்பாய் கிரிக்கெட் கிளப்பில் ஆகஸ்டு 12ந் தேதி நவீன குளிர் சாதன இயந்திரத்தைப் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு அறிமுகப் படுத்தினர். கோத்ரெஜ் ஸ்தாபனத்தின் டைரக்டர்கள் திரு எஸ். பி. கோத்ரெஜ், டாக்டர் பி. பி. கோத்ரெஜ், பிரசார மானேஜர் திரு பி. கே. கரஞ்சியா முதலியவர்களைப் படத்தில் காணலாம்.

அதை நின்று கேட்கப் பொறுமையற்ற செங்கமலம், "சரி, ஆயா! நான் பார்த்துக் கொள்கிறேன். நீ அலட்டிக்காதே" என்று கூறிவிட்டு ரஸ்தாவில் 'விர்'ரென்று நடந்தாள். நல்ல வேளையாக மழை நின்று, ஆகாயத்தில் கருமேகம் நீங்கி ஆதவன் தன் பொன் முகத்தைக் காட்டப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தான்.

புளிய மரத்தடியில் கிடந்த சருகு இலைகளைக் காலால் ஒதுக்கி விட்டுக் கடவுளை மனத்தில் வேண்டிக் கொண்டே கூடையை இறக்கினாள் செங்கமலம். அப்பொழுதுதான் சற்றுத் தூரத்தில் இருந்த பிள்ளையார் கோயில் அவள் கண்ணில் பட்டது. பிள்ளையார் கோயிலுக்குச் சென்று "அப்பனே, விநாயகா! இன்று வியாபாரம் நல்லபடியாக நடக்கட்டும். உன் முன் காலணா கற்பூரம் வாங்கி ஏற்றி விடுகிறேன்" என்று வேண்டிக் கொண்டாள்.

கூடையைத் திறந்து, சட்டினிக் கிண்ணத்தை வெளியே எடுத்தாள். தோசை, இட்டிலி, ஆப்பம் என்று வரிசையாக அடுக்கி வைத்தாள். முதல் முதலாக வியாபாரத்துக்கு வந்திருக்கிறோம், ஆயாவிடமிருந்து நல்ல பெயர் வாங்கிவிட வேண்டும் என்று மனத்தில் நினைத்துக் கொண்டாள்.

"தங்கச்சி! நாலு ஆப்பம் கொடு" என்று வெகு சுவாதீனமாக, தன் முன்னால் நின்றவனைப் பார்த்து விட்டு, 'இவன்தான் ரிக்ஷாக்காரக் கந்தனாக இருக்க வேண்டும்' என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

வேகமாக இலையில் ஆப்பத்தை வைத்துச் சற்றுத் தாராளமாகச் சட்டினியை ஊற்றி அவன் முன்னால் வைத்தாள். "ஆயாவுக்கு உடம்பு சரி இல்லையா?" என்று கேட்டவாறு தன் காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு மூன்றணாவை அவள் கையில் கொடுத்து விட்டுப் போய் விட்டான் கந்தன்.

அருளைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, கூடையை மூன்று முறை சுற்றி விட்டுத் தன் சுருக்குப் பையில் வைத்துக் கொண்டாள். எப்படியோ மோப்பம் பிடித்துக் கொண்டு வந்து சேர்ந்த ஒரு சொறி நாய் அவளையே சுற்றிச் சுற்றி வந்தது. 'பாவம்! உனக்கும் பசிதான். இட்டிலி சாப்பிடப் பணம் வேண்டும் என்று உனக்குத் தெரியவா போகிறது?' என்று குழந்தைத் தனமாக எண்ணமிட்டுக் கொண்டே, கூடையிலிருந்து ஒரு இட்டிலியை எடுத்து நாயை நோக்கிப் போட்டாள். நாய் வாலை ஆட்டியவாறு பாய்ந்து இட்டிலியைக் கவ்விக் கொண்டது.

"நன்றாயிருக்கிறது. நாய் வந்தால், கல்லை விட்டு அடிச்சுத் துரத்தாமே இப்படியா முழு இட்டிலியைத் தூக்கிப் போடுவாங்க? நீ வியாபாரம் செஞ்சு உருப்பட்டாற்போலத் தான்" என்று அட்டகாசமாகப் பேசியபடியே வந்தாள், கட்டட வேலையில் கையாளாக வேலை பார்த்து வரும் மருகி.

"பாவம், வாயில்லாப் பிராணி, போகிறது. உங்களுக்குத் தோசை தரவா?" என்று வியாபாரத்தில் இறங்கினாள் செங்கமலம். மணி பத்து அடிப்பதற்குள் கூடை அனேகமாகக் காலியாகி விட்டது. கையில் இரண்டு ரூபாய்ச் சில்லறையும் சேர்ந்து விட்டது. 'வியாபாரம் ஒன்றும் அப்படிக் கஷ்டமான விஷயம் இல்லை. இதற்குத்தானா ஆயா, இப்படி அலுத்துக் கொள்ளுகிறாள்' என்று அவள் நினைத்தாள்.


குனிந்து சில்லறையை எண்ணிக் கொண்டிருந்த செங்கமலம் திடீரென்று தன் முன்னால் சுருட்டு வாசனை வந்ததைக் கண்டு தலை நிமிர்ந்தாள். ஆஜானுபாகுவாகக் கறுப்பு நிறத்தில், கழுத்தில் மைனர் செயினும், மஸ்லின் ஜிப்பாவுமாக ஒருவன் நிற்பதைக் கண்டாள். அப்பொழுதே, இவன்தான் ஆயா சொன்ன போக்கிரியாக இருக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டாள். சுருக்குப் பையை முடிச்சுப் போட்டு இடுப்பில் செருகிக் கொண்டு, "என்ன வேண்டும்?" என்றாள் அழுத்தமாக.

புகைந்து கொண்டிருந்த சுருட்டைத் தூர எறிந்து விட்டு, "இரண்டு தோசை, நாலு இட்டிலி" என்றான். இலையை எடுத்தவளுக்குத் திடீரென்று ஆயா சொன்னது நினைவுக்கு வந்தது. 'இவன் பணம் தரமாட்டான் போலிருக்கிறதே!' என்று நினைத்துக் கொண்டு, "அது சரி! துட்டுக் கொண்டு வந்திருக்கீங்களா? இன்று நான் முதல் முதலாக வியாபாரம் செய்கிறேன். யாருக்கும் கடன் தர முடியாது" என்றாள் கண்டிப்பாக.

ஒரு நிமிஷம் அவளது கண்டிப்பான குரலைக் கேட்டு அப்படியே அயர்ந்து நின்று விட்டான்

நல்லசிவம். "இதோ பாரு அம்மே! இந்த நல்ல சிவம், இத்தனை காலமாக, பணம் கொடுத்துப் பலகாரம் சாப்பிட்டவன் இல்லே. தெரியுமா? எடு. சீக்கிரம்" என்றான் அதிகாரக் குரலில்.

"இதை ரொம்பப் பெருமையாகச் சொல்லிக்கொள்கிறாயே? பெண் பிள்ளை, நாங்கள் உழைத்துச் சாப்பிடுகிறோம். ஒரு ஆண்பிள்ளை இனாமாகச் சாப்பிட்டு விட்டு உடம்பை வளர்க்க அவமானமாக இல்லே? என்னிடம் பணம் கொண்டு வந்தால்தான் பலகாரம். இனாமெல்லாம் கிடையாது" என்று அடித்துப் பேசி விட்டுக் கூடையை மூடி வைத்தாள்.



தஞ்சைக்கு ராஷ்டிரபதி ராஜேந்திரப்பிரசாத் விஜயம் செய்த போது அவரது குழுவினருக்கு விருந்துபசாரம் செய்யும் பாக்கியம் ஆனந்தா லாட்ஜ் திரு கிட்டப்பா அவர்களுக்குக் கிடைத்தது. ஜனாதிபதிக்கு அவர் ஜவ்வாது மாலை அணிவித்து மகிழ்கிறார்.

நல்லசிவத்தின் கண்கள் கோபத்தால் சிவந்தன. உடல் நடுங்கியது. 'எத்தகைய அவமானம்? தன்னிடம் இதுவரையில் யாரும் இப்படிப் பேசினது கிடையாது. வெற்றிலைப் பாக்குக் கடைக்காரர் கூடச் சோடா என்றாலும், கலர், சிகரெட்டு எதுவாக இருந்தாலும் தாராளமாகக் கொடுத்து விடுவார். காசைக் கேட்க மாட்டாரே. கூடை வியாபாரம் செய்யும் எந்தப் பெண்களும் தனக்கு இல்லை என்று சொல்ல மாட்டார்களே. இந்தப் பெண்ணுக்கு எத்தனை ஆணவம்?' என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே, பக்கத்தில் வியாபாரம் செய்து கொண்டிருந்த முனியம்மா, "அட என்ன தம்பி? அந்தப் பெண் அறியாதது. நீ இப்படி வா. உனக்குப் பிடிக்குமே" என்று தேங்காய்ப்பால் ஊற்றி இடியாப்பம் செய்து கொண்டு வந்திருக்கிறேன்" என்று நல்லசிவத்தைத் தாஜா செய்து அழைத்தாள்.

வாயில் போட்ட இடியாப்பம் இனிப்பதற்குப் பதிலாகக் கசந்தது நல்லசிவத்துக்கு. சீக்கிரம் சாப்பிட்டு விட்டுச் செங்கமலத்தை ஒருமுறை ஆத்திரத்துடன் திரும்பிப் பார்த்து விட்டுப் போய் விட்டான். அந்தப் பார்வையில் எத்தனையோ பொருள் நிறைந்திருந்தது. அவன் தலை மறைந்ததும் முனியம்மா, பொல பொலவென்று பிடித்துக் கொண்டாள். "அடி, பாவிப் பெண்ணே! அந்தப் போக்கிரியிடம், வம்புக்குப் போகிறாயே? உனக்குப் புத்தி இருக்கிறதா? அவன் கறுவிக்கிட்டுப் போயிருக்கிறான். அவன் காபம் எப்படி முடியுமோ? உன்னால் எங்களுக்கும் தொல்லை ஏற்படாமல் இருக்கணும். ஏது இட்டிலியைக் கொடுத்து அனுசரித்துப் போகாமல், சண்டையை விலைக்கு வாங்கிக் கொள்கிறாயே?" என்றாள்.

"வாயை அடக்கிப் பேசுங்க. நான் ஒன்றும் வம்புக்குப் போகல்லே. அந்த ஆள் அநியாயமாகக் கேட்டால் நான் ஒத்துக்க முடியாது. இப்படித் தாஜா பண்ணித்தான் அவனை நீங்க கெடுத்திட்டீங்க. என்னால் அப்படி விட்டுக் கொடுக்க முடியாது" என்றாள் செங்கமலம் ரோஷத்துடன்.


"எப்படியாவது, நாசமாகப் போ. எனக்கு என்ன?" என்று தன் இடத்துக்கு விரைந்தாள் முனியம்மா.

வியாபாரத்தை முடித்துக் கொண்டு, காலிக் கூடையுடன் குடிசையை நோக்கி நடந்து கொண்டிருந்த செங்கமலத்தின் மனத்தை ஒரு பாரம் அழுத்தியது. தன் பக்கம் நியாயம் இருந்தாலும், நாளை அந்தப் போக்கிரி என்னவெல்லாம் தொல்லைகள் தரப் போகிறானோ என்ற ஒருவித அச்சமும் மனசை அரித்துக் கொண்டிருந்தது.

முத்தம்மாள் படுக்கையில் புரண்டு கொண்டே இருந்தாள். பேத்தியைப் பார்த்த பின்தான் அவளுக்கு உயிர் வந்தது. சில்லறையை அவளிடம் கொடுத்து விட்டு, அடுப்பைப் பற்ற வைத்துக் கிழவிக்குக் கஞ்சி போட்டாள். மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, கிழவியின் அருகில் சாவகாசமாக உட்கார்ந்தாள் செங்கமலம். கிழவி ஒவ்வொரு வாடிக்கைக்காரர்களைப் பற்றியும் விசாரித்துக்கொண்டே இருந்தாள். நல்லசிவத்திடம் சண்டை போட்டதைக் கிழவியிடம் சொல்லாமல் மறைத்து விட்டாள் செங்கமலம். தன் பேத்தியின் திறமையை நினைத்துப் பார்த்த போது, பெருமையாகத்தான் இருந்தது கிழவிக்கு.

"அடி பெண்ணே! காலையிலிருந்து உனக்கு நல்ல அலைச்சல். உறியில் நாரத்தங்காய் ஊறுகாய் வைத்திருக்கிறேன். ஜில்லென்று பழைய சோற்றைப் போட்டுக் கொண்டு சாப்பிடு" என்று அன்புக் கட்டளை யிட்டாள்.

பனிச்சென்ற செங்கமலத்தின் சிவந்த முகமும், துடுக்கான பேச்சும், சுருண்ட தலை மயிரும், பருவ மங்கைகளுக்கேற்பக் காணப்பட்ட அழகும், கூடிய சீக்கிரமே, இவளை நல்ல பையனாகப் பார்த்துக் கலியாணம் செய்துவைத்துவிட வேண்டும் என்ற நினைப்பைத்தான் முத்தம்மாளுக்குத் தூண்டின.



பிரபல தொழில் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும், விஞ்ஞானிகளும் புது டில்லியில் நவீன முறைப்படி பருத்திக்கொட்டை எண்ணெய் சுத்திகரிக்கும் முறையைக் கண்டு களித்தனர். இந்தப் புது ரசாயன முறையைப் பரிசோதனை மூலம் செய்து காட்டியவர்கள் புதுடில்லி பேராசிரியர் திரு டி. ஆர். சேஷாத்திரியும் அவரது குழுவினரும். வனஸ்பதி தயாரிப்பதற்கு இந்த நவீன எண்ணெய் பெரிதும் பயன்படுமாம்.

மறு நாள் பொழுது விடிந்ததும், வழக்கம் போல், புளியமரத்தடியில் கூடையுடன் உட்கார்ந்து விட்டாள் செங்கமலம். வழக்கப்படி வந்த ரிக்ஷா கந்தனும், மருதியும், தன்னிடம் இட்டிலி சாப்பிடாமல், முனியம்மாள் கூடையருகே சென்றது எதனால் என்றுதான் செங்கமலத்துக்குத் தெரியவில்லை. யோசித்துப் பார்த்ததில் ஒரு வேளை நல்லசிவத்தின் போதனையாக இருக்குமோ என்று தோன்றியது. முனியம்மா சிரிக்கச் சிரிக்கப் பேசியவாறு வியாபாரத்தில் கவனமாக இருந்தாள். 'சீ! எதற்காக இப்படிச் சிரித்து மகிழ்கிறாள்' என்றுதான் செங்கமலத்துக்குத் தோன்றியது.

பழக்கப்பட்ட சொறி நாய் மட்டும் செங்கமலத்திடம் சுற்றிக் கொண்டிருந்தது. தாராளமாக, இரண்டு இட்டிலியை, அந்த நாய்க்குப் போட்டு விட்டு, அந்த வாயில்லாப் பிராணி சாப்பிடுவதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் செங்கமலம்.

''அப்பாடா! என்ன வெய்யில்?'' என்று அலுத்துக் கொண்டே, ஒருவன் மூட்டையைக் கீழே இறக்கி விட்டுத் துண்டைத் தரையில் விரித்து உட்கார்ந்து விட்டான். அவன் மூட்டையைப் பார்த்ததுமே, அவன் வளையல் வியாபாரி என்று தெரிந்து விட்டது, செங்கமலத்துக்கு. வளையல் என்றால், எந்தப் பெண்களுக்கும் தனி ஆசை தானே? அவன் முன்னால் இரண்டு இட்டிலியும், குடிக்கக் குளிர்ந்த தண்ணீரையும் வைத்துவிட்டு, ''நல்ல வளையலாக இருக்கிறதா, ஐயா! சாப்பிட்டுவிட்டு வளையலைக் காட்டுங்கள்'' என்று பேச்சுக் கொடுத்தாள்.

சட்டினியில் தோய்த்த இட்டிலியை வாயில் போட்டுக்கொண்டு, ''நீ கேட்காவிட்டாலும் சொல்ல வேண்டும் என்றுதான் இருந்தேன். இப்படி அருமையாக இட்டிலி செய்த கைக்கு வளையல் போடத்தான் வேண்டும். தங்க வளையல் போட வேண்டும். ஆனால் இந்த ஏழை வளையல் வியாபாரியிடம் கண்ணாடி வளையல்தான் இருக்கிறது'' என்றான் இலேசாகச் சிரித்துக் கொண்டே.

அவன் பேச்சைக் கேட்டு அவள் முகம் சிவந்து விட்டது. 'எத்தனை குறும்பாகப் பேசுகிறார்!' என்று நினைத்தாள். ''இந்த அருமையான இட்டிலி விலை போகாமல் கூடையில் அப்படியே இருக்கிறதே. இப் பொழுதுதான் வந்தாயா?'' என்று கேட்டான் அந்த வியாபாரி.


பதில் பேச முடியாமல் செங்கமலத்துக்கு துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. சமாளித்துக் கொண்டு, ''இப்பொழுது தான் வந்தேன்'' என்றாள் செங்கமலம். ஆனால் முனியம்மாள் கூடையை உதறிவிட்டுப் புறப்பட்டு விட்டதை ஜாடையாகச் செங்கமலம் கவனிக்காமல் இல்லை. வளையல்காரன் மூட்டையைப் பிரித்தான். பச்சை, நீலநிற வளையல்கள் கண்ணைப் பறித்தன. வளையலின் அழகை ரசித்துக் கொண்டிருக்கும் போதே தூரத்தில் சைக்கிள் மணிச் சத்தம் கேட்டுத் திகைத்தாள் செங்கமலம். வெகு வேகமாக நல்லசிவம்தான் சைக்கிளில் வந்தான். வந்த வேகத்தில் செங்கமலத்தின் இட்டிலிக் கூடையில் முன்சக்கரம் மோதிக் கூடை கவிழ்ந்து இட்டிலி யெல்லாம் தரையில் விழுந்து நாலா பக்கமும் உருண்டு ஓடின. வேணுமென்றே சைக்கிளைக் கூடையின் மேல் மோதிவிட்டு எள்ளி நகையாடினான் நல்லசிவம்.

கஷ்டப்பட்டு அருமையாகச் செய்த இன் பண்டம் மண்ணில் சிதறிக் கிடப்பதைக் கண்டு செங்கமலத்தின் வயிறு பற்றி எரிந்தது. செங்கமலம் கோபத்தால் பெண்புலியாக மாறினாள். ''அடப் பாவி! உனக்குக் கண் அவிந்து போச்சா? வேண்டுமென்றே இப்படி அநியாயம் செய்யும் நீயும் ஒரு ஆண் பிள்ளையா?'' என்று சீறினாள்.

''அப்படித்தான் செய்வேன். நீ என்ன செய்து விடுவாய்? நேற்று என்னிடம் துடுக்காகப் பேசினாயே, அப்போ நீ யோசித்திருக்க வேண்டும். இந்த நல்லசிவத்தை மதிக்காதவர்கள் யாரும் இந்தப் பேட்டையில் நிம்மதியாக வாழ முடியாது'' என்று கொக்கரித்தான் நல்லசிவம்.

இதற்குள் கூட்டம் சேர்ந்து விட்டது. வளையல்காரன், ''என்னப்பா, இது? பெண் பிள்ளையிடம் வம்பு. மரியாதையாக அவள் நஷ்டத்தைக் கொடுத்து விடு'' என்றான்.

''அட சும்மா இரு ஐயா. நடுவிலே நியாயம் பேச வந்திட்டாரு. எனக்கு ஒன்றும் தெரியாது. ஏதோ சைக்கிள் மோதிடிச்சு. அதற்கு நான் ஏன் நஷ்டம் கொடுக்கணும்?'' என்றான் நல்லசிவம்.



Exhibition

பரிசுகளாக ரூ. **8,000** பெறுக

2-வது உஷா தையல் & எம்பிராய்டரி பொருட்காட்சி

தையல் கலையையும், சித்திரத் தையல் கலையையும் இந்த நாட்டில் செழிக்கச் செய்வதற்காக நாடு முழுவதும் விரிவான ஒரு போட்டி ஏற்படுத்தியுள்ளோம். இதில் அனைவரும் கலந்து கொள்ளலாம். இதற்குப் பிரவேசக் கட்டணம் கிடையாது.

போட்டிக்கு நீங்கள் குழந்தைகளுக்கான உடுப்புகள், ரவிக்கை, அல்லது சோளி பஞ்சாபி உடுப்புகள், மேஜை விரிப்புகள், மெத்தை உறைகள், கைப்பைகள், துணியினால் செய்த பொம்மைகள், டிகோஸி, சேலை, பூவேலை செய்த உருவப் படங்கள், இதர படங்கள் முதலியவற்றை அனுப்பி வைக்கலாம்.

வந்து சேர வேண்டிய கடைசி தேதி **30-9-58**

உஷா

தயாரிப்பாளர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்


தையல் மெஷின்

ஜே இன்ஜினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட், கல்கத்தா

அதைக் கேட்டு, ''அடப் பாவி! உன் செய்கையைக் கடவுள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். பொய் வேறு பேச வந்துவிட்டாயே? உனக்கு இதற்கு அந்தக் கோயிலில் இருக்கும் பிள்ளையார் நல்ல தண்டனை கொடுப்பார்!'' என்று கண்ணீருக்கிடையே சாபமிட்டாள் செங்கமலம்.

''தண்டனை கொடுப்பாரா பிள்ளையார்? நன்றாகக் கொடுக்கட்டும். ஆனால் அது உனக்கு நான் தரும் தண்டனை போல் இருக்காது'' என்று சவால் விட்டான் நல்லசிவம்.

இதைக் கேட்ட வளையல்காரன் வெகுண்டு எழுந்தான். ''மானம் கெட்டவனே! ஒரு பெண்ணிடமா பெருமை அடித்துக் கொள்கிறாய்? வை, பணத்தைக் கீழே!'' என்று அவன் சட்டையைப் பற்றினான்.



சண்டை வலுத்தது. இருவரும் அடித்துக் கொண்டார்கள். தெருவில் கட்டிப் புரண்டார்கள். இந்தச் சண்டையில் வளையல் மூட்டை தொறுங்கியது. என்ன இருந்தாலும், நல்லசிவத்துடன் வெகு நேரம் சண்டை போட வளையல்காரனால் முடியவில்லை. அவன் மூக்கில் ரத்தம் சொட்டத் தரையில் விழுந்தான். நல்லசிவம் சைக்கிளை எடுத்துக் கொண்டு விரைந்தான்.

வளையல்காரன் மெதுவாக எழுந்து உட்கார்ந்தான். கூடையிலிருந்து சிதறிய இட்டிலியை 'கிடைத்தது கிடைத்தது' என்று அந்தச் சொறி நாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தது. பல இடங்களில் கண்ணாடி வளையல்கள் உடைந்து சிதறிக் கிடந்தன. ''என்னால் உங்களுக்கு எத்தனை நஷ்டம்?'' என்றாள் செங்கமலம் கண்ணீருக்கிடையே.

''போகிறது. அந்தப் பயலை நான் ஒரு கை பார்த்துக் கொள்கிறேன். நீ வீட்டுக்குப் போ'' என்று முகத்தைத் துண்டால் துடைத்துக் கொண்டான் வளையல் வியாபாரி.

அழுதுகொண்டே வந்த பேத்தியைப் பார்த்து முத்தம்மாள் பதறிவிட்டாள். நடந்ததை யெல்லாம் செங்கமலம் சொன்னதும் ''நான் அப்போதே சொன்னேனே, கேட்டாயா?'' என்று அங்கலாய்த்தாள்.

அன்று எல்லாம் எத்தனை சொல்லியும், செங்கமலம் சாப்பிடவே இல்லை. இப்படியும் அநியாயம் நடக்கிறதைக் கடவுள் பார்த்துக் கொண்டிருக்கிறாரே என்று பொருமினாள்.

பொழுது விடிந்தால் மறுபடியும் வியாபாரத்துக்குப் போக வேண்டுமே என்ற நினைப்பே அவளுக்குக் கசப்பாக இருந்தது. நல்லவேளையாகக் கிழவி ''இனிமேல் நீ போக வேண்டாம். நான் போய்வருகிறேன்'' என்று சொல்லிவிட்டாள்.

மனச்சோர்வை மாற்றிக்கொண்டு கடைக்குப் போய் எண்ணெய் வாங்கி வரலாம் என்று கிளம்பினாள் செங்கமலம். வழியில் திடீரென்று மழை பிடித்துக் கொண்டது. இடியும், மின்னலும் கண்ணைப் பறித்தன. ஓட்டமும் நடையுமாக அந்த விநாயகர் கோயிலில் தஞ்சம் புகுந்தாள் செங்கமலம். கோயில் ஒரே இருட்டில் மூழ்கியிருந்தது. விநாயகர் விக்கிரகத்தைப் பார்த்த செங்கமலத்துக்கு அழுகை வந்துவிட்டது.

''விநாயகரே! இன்று காலையில் இந்த அநியாயமெல்லாம் உன் முன்னால்தானே நடந்தது. நீ கல்லாக, எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே!'' என்று வருத்தப்பட்டாள்.

மழைச்சாரல் அடிக்கவே, கோயிலுக்குள் நுழைந்தாள். இரண்டு பலம் பொருந்திய கைகள் அவளைத் தீண்டுவதை உணர்ந்தது. திரும்பிப் பார்த்தாள். நல்லசிவம் விகாரமான முகத்துடன், பல்லை இளித்துக்கொண்டு தன்னை நெருங்கியிருப்பதைப் பார்த்தாள்.

''நன்றாக என்னிடம் அகப்பட்டுக் கொண்டாய்'' என்ற அவ... விடமிருந்து திமிறிக் கொண்டு கோயிலுக்கு வெளியே ஓடி வந்தாள். ''சீ! உனக்கு வெட்கமாயில்லை?'' என்று கூச்சலிட்டாள். பின்னால் வந்த நல்லசிவம் சிங்கம், மான்மேல் பாய்வதுபோல் அவன்மேல் பாய்ந்தான். ''விநாயகப் பெருமானே! என் மானத்தைக் காப்பாற்றிவிடு'' என்று வேண்டினாள் செங்கமலம்.

அப்பொழுதுதான் அந்த அதிசயம் நடந்தது. மழைக்காகத் திண்ணை ஓரத்தில் ஒண்டிக் கொண்டிருந்த அந்தச் சொறி நாய் 'வள்' என்று குரைத்துக் கொண்டே நல்லசிவத்தின்மேல் பாய்ந்தது. அந்த நாய் தன் சக்திக்கு மீறிய வேகத்துடன் நல்லசிவத்தின் காலைக் கடித்துப் பல இடங்களில் காயப்படுத்தியது. எத்தனை பலசாலியாக இருந்தாலும் எதிர்பாராத விதமாக நாயின் தாக்குதலால் அயர்ந்து போனான் நல்லசிவம். நாய் விடாமல் அவனைத் துரத்தியது. செங்கமலத்துக்கு நன்றிப் பெருக்கால் கண்ணில் நீர் நிறைந்தது. மழை சற்றுஓய்ந்தது. மெதுவாகக் குடிசையை நோக்கி நடந்தாள்.

தன் குடிசை முன் போலீஸ் ஆள் ஒருவன் நிற்பதைப் பார்த்து, ''கடவுளே! இன்னும் புதிய ஆபத்து என்ன வரப்போகிறதோ?'' என்று பயந்தாள். குடிசையை அடைந்ததும் போலீஸ் உடைக்குள்ளிருந்து புன்முறுவல் செய்த அந்தப் பழகின முகம், அந்த வளையல்காரனுடையதுதான் என்று தெரிந்து கொண்டாள். ''நீங்கள் வளையல் விற்பவர் தானே ...?'' என்று உளறினாள்.

''சரியாய்ப்போச்சு. நான் போலீஸ் கான்ஸ்டபிள். நேற்று உன்னுடன் வம்பு செய்த அந்தக் கேடியைப் பிடித்துவிட்டேன். அவனை மூன்று மாதங்களாகத் தேடிக் கொண்டிருக்கிறோம். உன் தயவால் ஆள் கிடைச்சுப் போச்சு. இதோ உனக்கு வளையல், நேற்றே கொடுக்க முடியவில்லை'' என்றான். செங்கமலத்துக்கு வெட்கம் வந்து விட்டது.

அவள் கையில் வளையலைப் போட்டான் முருகன் என்ற செங்கமலத்தின் உள்ளம் கவர்ந்த போலீஸ்காரன்.

ஆனந்தத்தால் செங்கமலத்தின் கண் நிறைந்தது. மனத்தால் தனக்கு இத்தகைய பாக்கியமளித்த விநாயகரை வாழ்த்தினாள்.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam


ஆரோக்கியத்தை
விரும்புவோர்
எப்பொழுதும் லைப்பாய்
உபயோகித்தே நீராடுவார்
விளையாடும்போதும்சரி, வேலை
செய்யும்போதும் சரி, அழுக்கி
லிருந்து நாம் தப்ப முடியாது.
நம் ஆரோக்கியத்திற்கு நிரந்
தரமாக ஆபத்து விளைவிக்கும்
நோய்க் கிருமிகள் அழுக்கில்
இருக்கின்றன. அக் கிருமி
களைக் கழுவிக் களைந்து உங்கள்
ஆரோக்கியத்தைப் பாதுகாப்
பது லைப்பாய் சோப்.
LIFEBUOY
SOAP
அன்றாடம் லைப்பாய் சோப்
தேய்த்துக்குளித்து உங்கள்
ஆரோக்கியத்தைக் காத்
துக் கொள்ளுங்கள்.

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



சிறு குழந்தையும் அறிந்த உண்மை...

ரின்ஸோ வெளுப்பது அதிவெண்மை

விவேகமுள்ள தாய்மார்கள் சலவைக்கு உபயோகிப்பது ரின்ஸோ. வெள்ளைத் துணிகளை அதிவெண்மையாகவும் வர்ணத் துணிகளை அதிகப் பிரகாசமாகவும் வெளுக்கும் சோப் பவுடர் அதுதான். சக்தி வாய்ந்த ரின்ஸோவின் நுரை, மறைந்துள்ள அழுக்குகளையும் அறவே அகற்றிவிடுகிறது. ரின்ஸோ சலவை செய்முறை உங்களுக்கு வேலையும் இலகுவாவதோடு நேரமும் மிச்சம். குடும்பத்தின் சகல துணிகளுக்கும் ரின்ஸோ உபயோகியுங்கள்.



உங்கள் வேலையை இலகுவாக்குவதற்கென்றே

தயாரிக்கப்பட்ட அற்புத சோப் பவுடர்

R. 18-50 TM

லீவர் லிமிடெட் தயாரிப்பு